# பள்ளிக் கல்வித் துறை

## I.கொள்கை

எப்பிறப்பு ஆயினும் ஏமாப்பு ஒருவற்கு
மக்கட் பிறப்பின் பிறிது இல்லை – அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்.

– அறநெறிச்சாரம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் கல்வியே முன்னிலை வகித்து வருகிறது என்பற்கு எடுத்துக்காட்டு, 2016–17 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித்துறைகென ரூ. 24,130 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதே ஆகும். இத்துறைக்கான ஒதுக்கீடு 2011–12 ஆம் ஆண்டிலிருந்து 2016–17 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுடன் சேர்ந்து மொத்தம் ரூ 1,10,323 கோடி தொகையினை எட்டியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வியும், அவர்கள் எளிதில் சென்று வரும் வகையில் பள்ளி வசதியும் அளிப்பதற்கு அதிமுக்கியத்துவம் அளித்துள்ளார்கள் என்பதே இதற்கு எடுத்துக்காட்டாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தரமான கல்வியினை உறுதி செய்யும் நோக்கத்துடன் பள்ளிக் கல்வித் துறை பயணிக்க வேண்டிய பாதையினை அனைத்து அம்சங்களும் உள்ளடக்கிய பல்முனை அணுகு முறைகளை மேற்கொண்டு வகுத்துள்ளார்கள். பள்ளி

வசதி, உள்கட்டமைப்பு, போதுமான ஆசிரியர்கள், தரமான உள்ளடக்கம், ஆசிரியர்களுக்கான திறனை மேம்படுத்துதல், வகுப்பறை செயல்பாடு மற்றும் கற்றல் செயல்பாடுகளை கணினி மற்றும் மின்மியமாக்குதல் போன்றவை பள்ளிக் கல்வித்துறையில் முதன்மையான கூரிய கவனம் செலுத்தப்படும் பகுதிகளாகும்.

அனைத்து குடியிருப்பு பகுதிகளிலும் பள்ளி வசதி செய்யப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு புவியியல் தகவல் முறையினை பயன்படுத்தி பள்ளி வரைப்படம் வாயிலாக பள்ளி வசதி செய்யும் முயற்சியினை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் கடந்த ஐந்து ஆண்டுகளில், 221 தொடக்கப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு, 112 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலை பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் ஒரு படிநிலை முன்னேறி நெடுந்தொலைவில் ஒதுக்கமாயுள்ள பகுதிகளுக்கும் பள்ளி வசதி கிடைக்கப் பெற வேண்டுமென்பதை உறுதி செய்வதற்காக மலைப் பிரதேசமான கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 5 உண்டு உறைவிடப் பள்ளிகளை தொடங்கி வைத்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வனப்பகுதிகள் மற்றும் புதிதாக பள்ளி வசதி செய்து கொடுப்பதற்கு தகுதி பெறாத வசிப்பிடங்களில் வாழும் குழந்தைகளின் நலன் கருதி அவர்களுக்கு வாகனம் மற்றும் வழித்துணை வசதி போன்ற புதுமையான செயல்முறைத் திட்டங்களை

தொடங்கியுள்ளார்கள். இம்முன் முயற்சியின் காரணமாக 3.09 இலட்சம் குழந்தைகளுக்கு பள்ளி கற்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து கிடைக்கப் பெற வேண்டுமென்பதில் பள்ளிக் கல்வித்துறை உறுதிபூண்டுள்ளது. 2011–12 ஆம் ஆண்டிலிருந்து, பள்ளிகளுக்கு தேவையான புதிய பள்ளிக்கட்டிடங்கள், கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், குடிநீர் வசதி, மாணவ மாணவிகளுக்கென தனித்தனி கழிப்பறைகள், சுற்றுச்சுவர், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான சாய்வுதளம் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்காக ரூ.4166 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள் மேல் உள்ள அக்கரையின் காரணமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிகளுக்கு கழிப்பிட வசதி உடனே அளிக்கவேண்டுமென ஆணையிட்டார்கள், அதன் விளைவாக 11,698 கழிப்பிடங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளன, 10,779 செயல்படாத கழிப்பிடங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. பள்ளிகளில் உள்ள கழிப்பறை சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டுமென்பதை உறுதி செய்வதில் தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இக்கழிப்பிடப் பராமரிப்பு பணிகள் பள்ளிக் கல்வித் துறையால் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து அதற்கென ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போதுள்ள ஆசிரியர் – மாணவர் விகிதம் பள்ளிகளின் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் தொடர்ந்து உரிய காலத்தில் தெரிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மைக்கு சான்றாக

விளங்குகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 74,316 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இது ஒப்பளிக்கப்பட்ட 79,354 பணியிடங்களுக்கு 94 விழுக்காடாக உள்ளது. இதன் மூலம் தொடக்க, நடுநிலை பள்ளிகளில் 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர், இடைநிலையில் 26 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் மற்றும் மேல்நிலையில் 37 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. போதுமான எண்ணிக்கையில் பாட ஆசிரியர்கள் மற்றும் மொழிப்பாட ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதற்கு ஆசிரியர் தேர்வுமுறைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறதென்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. மேலும், ஆசிரியர்களுக்கு ஆரம்ப நிலையில் அளிக்கப்படும் பயிற்சியிலேயே அவர்கள் நேரடியாக வகுப்பறை கற்பிப்புப் பணிக்கு ஆயத்தமானவர்களாக ஒருங்கிணைவது உறுதி செய்யப்படுகிறது. மேலும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பணியிடைப் பயிற்சி மற்றும் குறிப்பிடப்பட்ட பாடம் சார்ந்த பயிற்சி, அவர்கள் சம்பந்தப்பட்ட பாடத்தில் நாளது தேதியிலான வளர்ச்சியை நன்கறிந்தவர்களாக்க உதவுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவர்கள் தாங்கள் கல்வி கற்றலுக்கு தொழில்நுட்பத்தினை நன்கு பயன்படுத்தி கொள்ள தெரிந்தவர்களாக விளங்க வேண்டுமென்பதில் உறுதி பூண்டுள்ளார்கள். இதன் காரணமாக 2011–12 ஆம் கல்வியாண்டிலிருந்து, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. இது குழந்தைகளுக்கு இளம்வயதிலேயே தங்களது கல்வி கற்றலுக்கு தொழில் நுட்பத்தினை

பயன்படுத்திக் கொள்வதற்கான பழக்கத்தினை அவர்களது மனதில் பதிவு செய்கிறது. ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் தொடர்புடைய பாடங்களில் பல்வேறு நிலையில் பயில்பவர்களுக்னெ மின்மியமாக்கப்பட்ட பாடத் தொகுப்புகளை பள்ளிக் கல்வித் துறை உருவாக்கியுள்ளது. அண்மையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையினால் உருவாக்கப்பட்ட புதுமையான செயலியை (application) தொடங்கி வைத்தார்கள். இதன் மூலம் மாணவர்களுக்கு நவீன தொழில் நுட்பமான "பட உட்கிரகிப்பு தொழில்நுட்ப செயலி" (Image Recognition Application Technology) என்பதை பயன்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கற்றல் செயல்பாட்டில் புகுத்தப்பட்ட புதுமையான இம்முறை மாணவர்களிடையே பாடப் புத்தகங்களுக்கு அப்பாற்பட்டு படிப்பதற்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்துள்ளது. பாடப்புத்தகங்கள் அடங்கிய இப்பொதிவுகள் அவ்வப்போது மறு ஆய்வு செய்யப்பட்டு அதன் தரத்தை உயர்த்துவதுடன் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள வளர்ச்சியினையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இத்தகைய தொடர் செயல்பாடு மூலமாக அரசால் வெளியிடப்படும் பாடப் புத்தகங்கள் அனைத்து தரப்பினரது வரவேற்பினைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளியில் படிக்கும் பல இலட்சம் மாணவர்களுக்கு சிறந்த கல்வி அளிக்கப்படுவது உறுதி செய்வதற்கு தேவையான எந்த ஒரு நடவடிக்கையானாலும் அதனை தவற விடாது மேற்கொண்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு குழந்தையும் தனது கனவை நனவாக்குவதற்கு

கல்வி கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுப்பதற்கு தேவையான செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

| |
|---|
| ‘‘இன்றியமையாத் தன்மை வாய்ந்த கல்வியை அனைவரும் கற்க வேண்டும்; கல்லாதவர்களே இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை ஆக்க வேண்டும்’’.<br>**– மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள்** |
| *ஆதாரம்: ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணை மற்றும் மாணவ, மாணவியருக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை* ***(13.12.2012)*** |
| *“...Education is a powerful tool for human progress and empowerment. It is also a strong driver of social thinking and transformation. True education should emphasize achievement of human resource development in its entirety and thereby augment the Nation’s richest asset”.*<br>**- Hon’ble Chief Minister of Tamil Nadu** |
| Source: Convocation Address delivered at the 155th Annual Convocation of University of Madras on 17.08.2013 |

## II.நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண்.43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் **2016–17** ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.**24,129.85** கோடியாகும். இதில் திட்டப் பணிகளுக்கு ரூ.**6421.22** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

| **2016–17 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு** | | | | | |
|---|---|---|---|---|---|
| | **கணக்குத் தலைப்பு** | | **திட்டப் பணிகள்** | **திட்டத்தில் சேராதது** | **மொத்தம்** |
| *வருவாய் பகுதி* | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | – | 309.89 | 309.89 |
| 2059 | பொதுப் பணிகள் | | – | 3735.00 | 3735.00 |
| 2202 | பொதுக் கல்வி | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 303758.59 | 859284.05 | 1163042.64 |
| | 2 | இடைநிலைக்கல்வி | 232964.04 | 893856.15 | 1126820.19 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 600.00 | 141.01 | 741.01 |
| | 5 | மொழி வளர்ச்சி | 2.52 | 1503.79 | 1506.31 |
| | மொத்தம் – பொதுக் கல்வி | | **537325.15** | **1754785.00** | **2292110.15** |
| 2204 | போட்டி விளையாட்டுக்களும், இளைஞர் நலப் பணிகளும் | | 522.11 | 193.39 | 715.50 |
| 2205 | கலையும், பண்பாடும் | | 0.02 | 9251.81 | 9251.83 |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | | 19295.60 | 47.24 | 19342.84 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | | – | 240.81 | 240.81 |
| 2251 | தலைமைச்செயலகம் – சமூகப் பணிகள் | | – | 655.97 | 655.97 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிகர மொத்த வருவாய்ப் பகுதி | | **557142.88** | **1769219.11** | **2326361.99** |
| ***மூலதனச் செலவு பகுதி*** | | | | |
| 4202 | மூலதனச் செலவு | 84992.51 | 0.00 | 84992.51 |
| மொத்த மூலதனப் பகுதி | | **84992.51** | **0.00** | **84992.51** |
| Loan Section | | | | |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | – | 14.91 | 14.91 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | – | 0.49 | 0.49 |
| மொத்த கடன்கள் பகுதி | | – | **15.40** | 15.40 |
| **நிகர மொத்தம்** | | **642122.44** | **1839894.29** | **2411369.90** |
| **கூட்டுக – திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின் கீழ்)** | | | | 1615.88 |
| **மானியக் கோரிக்கை எண்.43–ன் நிகர மொத்தம்** | | | | **2412985.78** |

# தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII)
# மாநில புத்தாக்க நிதி

| வ. எண் | திட்டம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குழந்தைகள் சுலபமாக பயன்படுத்தும் வண்ணம் கழிவறைகளை உருவாக்குதல் | **578.85** |
| 2 | ஆரம்பப் பள்ளிகளில் கதை மையங்களை ஏற்படுத்துவதன் மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை வலுப்படுத்துதல் | **397.62** |
| 3 | செயல்வழி கற்றலை விரிவுபடுத்த வழிவகை செய்தல் | **46.60** |
| 4 | தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் அனைத்தையும் ஒருங்கேபெற்ற தகவல் மற்றும் தொழில்நுட்ப முறையினை பயன்படுத்தி திறன்மிகு வகுப்பறைகளை உருவாக்குதல் | **37.44** |

| | | |
|---|---|---|
| 5 | கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்களை மேம்படுத்துதல் | 171.00 |
| 6 | பிம்பம் கண்டறிதல் நிரலி மூலம் கற்றலை மேம்படுத்துதல் | 121.75 |
| 7 | தனிக்கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான ஆரம்ப கட்ட குறைதீர்வு மையங்கள் | 154.00 |
| 8 | செயற்கைக்கோள் மூலம் கல்வி கற்பித்தலுக்கென செயற்கைகோளுடன் தொடர்பு மையங்கள் ஏற்படுத்துதல் | 64.06 |
| 9 | 518 அரசு பெண்கள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுகாதாரக்குட்டைகளை எரிக்கும் மின்பொறி நிறுவுதல் | 25.00 |
| 10 | 13 மாவட்டங்களில் உள்ள மாதிரி பள்ளிகளில் இயற்கையாகவே மக்கும் தன்மையிலான கழிவறைகள் அமைத்தல் | 453.60 |
| | **மொத்தம்** | **2049.92** |

# III. கொள்கை மற்றும் திட்டங்கள்

## 1. நலத்திட்டங்கள்

### 1. அறிமுகம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாய கல்வி அளிக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் தங்கள் பள்ளிப்படிப்பை தடையின்றி நிறைவு செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்ற உயரிய நோக்கில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு முன்னோடி மாணவர் நலத்திட்டங்களை கீழ்க்கண்டவாறு நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

### 1.1. மடிக்கணினி வழங்குதல்

விலையில்லா மடிக்கணினி **2011–12** ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் **12** ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால் மாணவர்களுக்கு எண்ணிய தொழில்நுட்பம், வலைதள வளங்கள் மற்றும் ஒலி–ஒளி கல்வி குறுந்தகடுகளை பயன்படுத்த இயலுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் **5.40** இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் **4722.79** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வியாண்டிலும் தொடர 1080 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.2 சிறப்பு ஊக்கத் தொகை**

அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சிறப்பு ஊக்கத்தொகை அறிமுகப்படுத்தப்பட்டு 2011–12 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.1500, 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.1500, 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.2000 ஆம் சிறப்பு ஊக்கத் தொகையாக தமிழ்நாடு மின் விசை நிதி நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு மேல்நிலைக்கல்வியானது முடிந்தவுடன் அவர்களுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் ஆண்டுக்கு சராசரியாக மொத்தம் 21.49 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் 1810.09 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வி ஆண்டில் தொடர 381 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.3. நான்கு இணைச் சீருடைகள்வழங்குதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவர்கள் அனைவருக்கும் விலையில்லா 4 இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன. 2011–12 ஆம் ஆண்டில் ஒரு இணைச்சீருடையானது இரு இணை சீருடையாகவும், 2012–13 ஆம் ஆண்டில் நான்கு இணைச் சீருடையாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்கியுள்ளார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 47.85 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் 1697.89 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வியாண்டில் தொடர 409.30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.4. கம்பளிச் சட்டை வழங்குதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க 2013–14 ஆம் கல்வி ஆண்டு முதல் மலைப் பகுதியில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா கம்பளிச் சட்டை வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1.03 இலட்சம் மாணவ/மாணவியர்கள்

பயன்பெறும் வகையில் மொத்தம் **11.54** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், **2016–17** ஆம் கல்வியாண்டில் தொடர **3.71** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.5.பாடப்புத்தகங்கள் வழங்குதல்**

அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் **1** முதல் **12** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் விலையில்லாமல் வழங்கப்படுகிறது. **2012–13** முதல் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு மற்றும் முப்பருவமுறை அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து பள்ளிகளில் தமிழ்வழி, ஆங்கில வழி மற்றும் இதர மொழி வழியில் **1** முதல் **9** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பருவம் I, பருவம் II, பருவம் III என முப்பருவ முறையிலும் மற்றும் **10** முதல் **12** ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் முழு ஆண்டுக்குமான விலையில்லா பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு இப்புத்தகங்கள் ஒவ்வொரு கல்வி ஆண்டும் / பருவமும் பள்ளி தொடங்கும் நாளிலே வழங்கப்பட்டுவருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக **96.25** இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் **998.79** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வியாண்டிலும் தொடர 264.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.6. நோட்டுப்புத்தகம் வழங்குதல்

விலையில்லா நோட்டுப்புத்தகம் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 2012–13 ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 75.60 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 426.54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வியாண்டிலும் தொடர 107.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.7. கல்வி உபகரணப் பொருட்கள் வழங்குதல்

*<u>விலையில்லா புவியியல் வரைபடம்</u>*

2012–13 ஆம் கல்வியாண்டு முதல் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா புவியியல் வரைபடம் வழங்கப்படுகிறது. கடந்த நான்காண்டுகளில் 74.45 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் 23.13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வியாண்டில் தொடர 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*விலையில்லா புத்தகப்பை*

**2012–13** ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் **1** முதல் **12** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா புத்தகப்பை வழங்கப்படுகிறது. கடந்த நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக **95.52** இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் **388.99** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், **2016–17** ஆம் கல்வியாண்டில் நடைமுறைப்படுத்த **115.11** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*விலையில்லா கிரையான்/வண்ணபென்சில்*

**2012–13** ஆம் கல்வியாண்டு முதல் **1** மற்றும் **2** ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா கிரையான்கள் மற்றும் **3** முதல் **5** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா வண்ணபென்சில்கள் வழங்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக **33.96** இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் **24.03** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், **2016–17** ஆம் கல்வியாண்டில் தொடர **6.47** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*<u>விலையில்லாக் கணித உபகரணப்பெட்டிகள்</u>*

**2012–13** ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும் பள்ளிகளில் **6** முதல் **10** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லாக் கணித உபகரணப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக **23.51** இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் **27.75** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், **2016–17** ஆம் கல்வி ஆண்டில் தொடர **9.38** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.8. காலணி வழங்குதல்**

**2012–13** ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் **1** முதல் **10** ஆம் வகுப்பு வரை மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா காலணி வழங்கப் படுகிறது. கடந்த நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக **75.60** இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் **352.76** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், **2016–17** ஆம் கல்வியாண்டில் தொடர **120.07** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.9. மிதிவண்டிகள் வழங்குதல்

ஆண்டுதோறும் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் **11** ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் பிற்பட்டோர் நலத் துறை வாயிலாக பிசி/ எம்.பி.சி மாணவர்களுக்கும் ஆதிதிராவிட நலத் துறை வாயிலாக எஸ்சி/ எஸ்டி மாணவர்களுக்கும் பள்ளிக் கல்வித் துறை வாயிலாக பொதுப் பிரிவு மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் **6.4** இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் **1009.93** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டம், **2016–17** ஆம் கல்வியாண்டிலும் தொடர **245.07** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.10. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் சத்துணவுத் திட்டம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ், **1** முதல் **10** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக கடந்த ஐந்தாண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு **48.3** இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் மூலம் செயல் படுத்தப்படுகிறது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.11. பேருந்து பயண அட்டை**

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தாங்கள் பயிலும் பள்ளிக்கு எளிதில் வந்து செல்வதற்கு வசதியாக பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் போக்குவரத்து துறைமூலம் செயல் படுத்தப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 17.51 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.12. வருவாய் ஈட்டும் தாய்/ தந்தையை இழந்த மாணவர்களுக்கான துயர் துடைப்பு நிதி உதவி**

மரணமடைந்த அல்லது விபத்து காரணமாக நிரந்தர முடக்கம் அடைந்ததன் காரணமாக வருவாய் ஈட்டும் பெற்றோரை (தாய்/ தந்தை) இழக்க நேரிடும் மாணவர்களுக்கான துயர் துடைப்பு நிதியுதவித் திட்டமாகும். இவ்வாறான எதிர்பாராத சூழ்நிலையினால் குழந்தைகளின் கல்வி எவ்விதத்திலும் பாதிக்கக் கூடாது என்பதில் அரசு தீவிரமாக உள்ளது. அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும்

பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ரூ.50,000 நிதி உதவியாக அளிக்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2014–15 ஆம் ஆண்டு முதல் இந்நிதியுதவித் தொகையை ரூ.50,000 யிலிருந்து ரூ.75000 ஆக உயர்த்தியுள்ளார்கள். இத்தொகையானது மாணவர்களின் பெயரில் பொதுத் துறை நிறுவனத்தில் வைப்பு நிதியாக செலுத்தப்படுகிறது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.13. பள்ளிகளில் வேலை வாய்ப்பிற்கான பதிவு**

2011–12 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்து செல்லும் மாணவர்கள் தங்களின் சான்றிதழ்களை வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து அவர்களின் மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ்களுடன் வேலைவாய்ப்பு பதிவு அட்டையையும் சேர்த்து பள்ளிகளிலேயே பெற்றுக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. இப்பதிவு முறையினால் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் சான்றிதழ்கள் 100 சதவீதம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்படுவது உறுதி செய்யப் படுகின்றது.

இத்திட்டம், 2016–17 ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.14. சாதி / இருப்பிட / வருமானச் சான்று வழங்குதல்

10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்குப் பள்ளித் தலைமை ஆசிரியர் மூலமாக சார்ந்த வருவாய் வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியரிடமிருந்து சாதி / இருப்பிட / வருமானச் சான்றுகள் பெற்று வழங்கப் படுகின்றன. **2013–14** ஆம் ஆண்டு முதல் **6** ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. **2015–16** ஆம் கல்வியாண்டு முதல் இணைய வழியில் விண்ணப்பம் பெறப்பட்டு இச்சான்றிதழ்கள் வழங்கப்படுவது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டம், **2016–17** ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 2. தொடக்கக் கல்வி / அனைவருக்கும் கல்வி இயக்கம்

### 2.1. முன்னுரை

குழந்தைகள் பல்வேறு துறைகளிலும் களங்களிலும் அறிவு வளர்ச்சி பெறச் சிறந்த கருவியாகத் திகழ்வது கல்வி. குழந்தைகளின் அறிவுக்கண்ணைத் திறந்து அறிவார்ந்த மனவெழுச்சி சமநிலை உடையவர்களாகவும் வாழ்வில் சமூகச் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாகவும் கல்வி உருவாக்குகிறது. மேலும், குழந்தைகளை முழு ஆளுமைத்திறன் உடையவர்களாகவும் ஆரோக்கியமான மனப்பான்மை மற்றும் நற்பண்புகள் உடையவர்களாகவும் உருவாக்குவதே கல்வியின் முதன்மை நோக்கமாக உள்ளது. குழந்தைகளின் வாழ்வில் தொடக்கநிலைக் கல்வி மிகவும் இன்றியமையா மற்றும் முக்கியப்பங்கினை வகிக்கிறது. அடிப்படைத்திறன்களான மொழியறிவு மற்றும் எண்ணறிவு, படைப்பாற்றல் திறன், கருத்துப் பரிமாற்றத் திறன் ஆகியவற்றோடு ஆக்கப்பூர்வமான சிந்தனைத்திறன் குழந்தைகளிடம் ஊக்குவிப்பதற்கான வாய்ப்புகளை தொடக்கக் கல்வி வழங்குகிறது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2009ன் அடிப்படையில் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்க தமிழக அரசு பெருமுயற்சி

மேற்கொண்டு வருகிறது. 6 வயது முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 100 விழுக்காடு பள்ளி வசதி அளிப்பதோடு அவர்களின் உடல், பண்பாடு, சமூகம் மற்றும் நுண்ணறிவுத்திறன்களுடன் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்தலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்காகும்.

தொடக்கக்கல்வியின் நோக்கங்களை அடையும் பொருட்டு, பள்ளிவசதி, சேர்க்கை தக்கவைத்தல், உள்கட்டமைப்பு வசதி, தரமேம்பாடு மற்றும் புதுமையான கற்றல்–கற்பித்தல் உத்திகள் ஆகிய கூறுகளிலும் குழந்தைகளுக்கு தேவையான உரிமங்களை வழங்குவதிலும் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கல்வி குழந்தைகளின் ஆர்வத்தையும் விருப்பத்தையும் தூண்டுவதாக இருப்பதோடு கல்வித் தரத்தை மேம்படுத்துதலிலும் கவனம் செலுத்தப் படுகிறது.

**2.2.** தொடக்கக் கல்வியின் நோக்கங்கள்

- 100 விழுக்காடு பள்ளிவசதியினை உறுதி செய்தல்
- 6 வயது முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்
- பள்ளியில் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளையும் தக்கவைத்தல்

- அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் தரமான கல்வியை வழங்குதல்

- பல்வேறு கடினச் சூழல்களிலிருந்து வரும் குழந்தைகள், விளிம்புநிலைப் பகுதிகளிலிருந்து வரும் குழந்தைகள், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளையும் (CWSN) உள்ளடக்கி, அவர்களுக்கு ஏற்றதொரு கற்கும் சூழலைப் பள்ளிகளில் உருவாக்குதல்

- அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி மற்றும் கல்விசார் திறன்களைவளர்த்தல்

- அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் மற்றும் கணக்கிடும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல்

- அனைத்துப் பள்ளிகளிலும் தரமான கல்வி வழங்க தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி உறுதி செய்தல்

- பள்ளியில் சேராத குழந்தைகள், இடம்பெயர்ந்த தொழிலாளர் குழந்தைகள், சாலையோரக் குழந்தைகள், இடைநின்ற குழந்தைகள் மற்றும் இன்னபிற குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பதில் சிறப்புக் கவனம் செலுத்துதல்

## 2.3. சேர்க்கை

சமூக–பொருளாதாரத் தடைகளைத் தாண்டி, அனைத்துப் பிரிவுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 100 விழுக்காடு மாணவர் சேர்க்கைக்காகப் புதிய பள்ளிகளைத் திறத்தல், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துல், உண்டு உறைவிடப் பள்ளி அமைத்தல், பள்ளிக்குவரப் போக்குவரத்து வசதி மற்றும் பாதுகாவலர் வசதி ஏற்படுத்துதல், ஆங்கில வழிப் பிரிவுகளை துவக்குதல் முதலியவற்றுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

## 2.4. நலத்திட்டங்கள்

தமிழகத்தில் மட்டுமே குழந்தைகளுக்கு அதிக உரிமைகளை வழங்கி சமூக–பொருளாதாரத் தடைகள் மற்றும் இடையூறுகளையும் நீக்கி குழந்தைகள் கற்றலுக்கான புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்திய நாட்டிலேயே தமிழகம் மட்டுமே தொடக்க நிலையில் உண்மையான இலவச மற்றும் கட்டாயக்கல்வியை வழங்கி குழந்தைகள் தொடக்கக் கல்வியைத் தொடர்ந்து கற்கும்வண்ணம் பின்வரும் விலையில்லா நலத்திட்டங்களை வழங்கி உறுதுணை செய்து வருகிறது. அவை¦

- பாடநூல்கள்
- நோட்டுப் புத்தகங்கள்
- நான்கு இணைச்சீருடைகள்
- மலைப்பகுதிக் குழந்தைகளுக்கான வெப்ப ஆடைகள்
- சத்தான மதிய உணவு
- புத்தகப் பைகள்
- **1** மற்றும் **2**ஆம் வகுப்புக் குழந்தைகளுக்கு வண்ணம் தீட்டும் குச்சிகள்
- **3** முதல் **5**ஆம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு வண்ணப் பென்சில்கள்
- **6** முதல் **8**ஆம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு நிலவரைபடநூல்கள்
- **6** முதல் **8**ஆம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்குக் கணித வடிவியல் பெட்டிகள்
- காலணிகள்
- கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகள்

- வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மற்றும் நிரந்தர முடக்கம் அடைந்த பெற்றோரின் குழந்தைகளுக்கு நிதியுதவி

## 2.5. பள்ளி வசதி

அனைத்து குழந்தைகளுக்கும் தொடக்க கல்வியை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் அருகிலேயே பள்ளிகள் இருத்தல் மிகவும் அவசியமானதாகும். தமிழ்நாடு இலவசக் கட்டாய கல்வி உரிமை விதிகள், 2011ன்படி, ஒவ்வொரு குடியிருப்பிலும் 1 கி.மீ. தொலைவிற்குள் தொடக்கப்பள்ளியும், 3கி.மீ தொலைவிற்குள் நடுநிலைப் பள்ளி இருக்க வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வரையறையின்படி, பள்ளிவசதி ஏற்படுத்த வேண்டிய குடியிருப்புகளை கண்டறிய புவியியல் தகவல் முறைமை ஓர் விவரமறியும் கருவியாக பயன்படுத்தப்பட்டது. அனைவருக்கும் தொடக்கக்கல்விக்கான பள்ளி வசதி கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

- புதிய தொடக்கப்பள்ளிகளை தொடங்குதல்
- தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல்


- மக்கள் தொகை பரவலாக உள்ள குடியிருப்புகளில் உண்டு உறைவிடப் பள்ளிகளை தொடங்குதல்
- பள்ளிகள் திறக்க வாய்ப்பு இல்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு போக்குவரத்து/ பாதுகாவலர் வசதிகளை அளித்தல்.

**2.6. புவியியல் தகவல் முறைமை**

2012–13ஆம் ஆண்டு புவியியல் தகவல் முறைமை மையம் தோற்றுவிக்கப்பட்டது. "SCHOOLGIS" திட்டப்பணி மூலம் 2005–06ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இடம்சார் அடுக்குகள் – கிராமங்கள், தாலுக்கா, மாவட்டம், நீர்நிலைகள், முக்கிய ஆறுகள், முக்கிய சாலைகள், இருப்பு பாதைகள், ஊரக குடியிருப்புகள், நகர்புற குடியிருப்புகள், பள்ளிகள், கல்வி அலுவலகங்கள், முக்கிய இடங்கள் மற்றும் முக்கிய ஓடைகள் ஆகியவை இடம் பெற்றன. 2012–13ஆம் ஆண்டில் இவைகள் குறித்த தகவல்கள் மேம்படுத்தப்பட்டது.

ஆண்டுதோறும் புவியியல் தகவல் முறைமையுடன் UDISE இணைக்கப்பட்டு பள்ளிகளில் உள்ள உட்கட்டமைப்பு, கழிவறை மற்றும் குடிநீர் வசதிகள் அறிய பயன்படுத்தப்படுகிறது. புவியில் தகவல் முறைமையை பயன்படுத்தி மாநிலத்தில் தற்போது செயல்படும் பள்ளிகள், குடியிருப்புகள் மற்றும் புதிய பள்ளிகள்

தொடங்கப்பட வேண்டிய குடியிருப்புகளையும் காட்சிப்படுத்த இயலும்.



படம் – 1 தமிழ்நாடு புவியியல் தகவல் முறைமை வரைப்படம் – பள்ளிகள்

### 2.6.1. எளிமையான வலைதள மைய – புவியியல் தகவல் முறைமை 2015–16

*அ. இடையகம் (Buffer) மற்றும் மையகோடுகள்(Hubline)*

2014–15ஆம் ஆண்டுவரை புவியியல் தகவல் முறைமை, சிறப்பு பயிற்சி பெற்ற நபர்களால் மட்டுமே பயன்படுத்த கூடிய நிலையில் இருந்த இம்முறைமை, 2015–16ஆம் ஆண்டில், அனைவரும் எளிதாக பயன்படுத்திடும் வகையில் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இலவச கட்டாய கல்வி உரிமைச்சட்டம் விதிகள், 2011ன்படி தமிழகத்தில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் தொடக்கப்பள்ளி, 3 கி.மீ தொலைவில் நடுநிலைப் பள்ளி வசதியை

கண்டறிய இடையகம் (Buffer) மற்றும் மையகோடுகள் (Hubline)மூலம் இடம்சார் முடிவு ஆதரவு அமைப்பு (SDSS) உருவாக்கப்பட்டுள்ளது.

*ஆ. கூகுள் எர்த் மூலம் சரிபார்த்தல்*

பள்ளிகள் மற்றும் குடியிருப்புகளின் துல்லியமான அமைவிடங்கள் தேசிய தகவலியல் மையத்துடன் ஒருங்கிணைந்து, வலைதள இடையகம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது புவியியல் தகவல் முறைமையில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை அடுக்குகளாக கூகுள் எர்த் – சேடிலைட் பார்வை மற்றும் கூகுள் எர்த் – தெரு பார்வை வழங்கப்பட்டுள்ளன. பள்ளி பெயர், அமைவிடம், குடியிருப்புகள் மற்றும் மாவட்ட, ஒன்றிய ஊராட்சிகளின் எல்லைகள், மற்றும் காடுகளின் எல்லைகள் துல்லியமாக அறிய இம்முறையில் அமைக்கப்பட்டுள்ள மேல் அடுக்குகள் பயன்படுகின்றன.




படம் – 2 கூகுள்எர்த் – ஒரு பள்ளியின் சேடிலைட் பார்வை

**2.6.2. பள்ளி வரைபட தகவல்கள் 2015–16**

புவியியல் தகவல் முறைமை மூலம் பெறப்படும் தகவல்களை சரிபார்த்து உறுதி செய்ய ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் பள்ளிவரைப்பட தகவல் சேகரிப்பு பணியும் – களஆய்வும் மேற்கொள்ளப்படுகிறது. தொடக்க மற்றும் நடுநிலையில் குடியிருப்பு வாரியாக மக்கள் தொகை, பள்ளி வயது குழந்தைகள் **(6–14)**, பள்ளி செல்லும் குழந்தைகள் **(6–14)** பள்ளி செல்லா குழந்தைகள் **(6–14)**, சிறப்புகவன குழந்தைகள், அரசு / அரசு நிதி உதவிபெறும் / தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களுடன் பள்ளி வசதியில்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் பள்ளிக்கு செல்ல மேற்கொள்ள வேண்டிய உத்திகள் குறித்த விவரங்கள் பெறப்படுகிறது.

**2.6.3. புவியியல் தகவல் முறைமை – விளைவுகள்**


தமிழகத்தில் **92,234** ஊரக மற்றும் நகர்புற குடியிருப்புகள் உள்ளன. இவற்றுள் **89,945** குடியிருப்புகளுக்கு அரசு/அரசுநிதி உதவி பெறும் தொடக்கப்பள்ளி வசதியும், **91,037** குடியிருப்புகளுக்கு அரசு / அரசுநிதி உதவி பெறும் நடுநிலைப் பள்ளி வசதியும் உள்ளது. அனைத்து குடியிருப்புகளில் உள்ள பள்ளி வயது குழந்தைகளுக்கான பள்ளி வசதி முழுமையாக வழங்கப்பட்டுள்ளதை புவியியல் தகவல் முறைமை மூலம் அறிய முடிகிறது.




படம் – 3. புவியியல் தகவல் முறைமை வரைப்படம் – புதிய பள்ளிகள் தேவைக்கான மையக்கோடுகளுடன் கூடிய குடியிருப்புகளின் அமைவிடம்

**2.7. புதிய பள்ளிகள் தொடங்குதல்**

**2011–12, 2012–13** மற்றும் **2013–14** ஆகிய ஆண்டுகளில் மத்திய திட்ட ஒப்புதல் குழு புதிய பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்காவிடினும், கட்டாய தேவையின் அடிப்படையில் **54** குடியிருப்புகளில் பள்ளி வசதி மேம்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில அரசின் நிதியிலிருந்து **2013–14** ஆம் ஆண்டு புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்கினார்கள். **2011–12** முதல் **2015–16** ஆம் ஆண்டு வரை **221** புதிய தொடக்கப் பள்ளிகளும் **112** தொடக்கப்பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.





படம் – 4 புவியியல் தகவல் முறைமை வரைப்படம்
2015–16ல் தொடங்கப்பட்ட புதிய பள்ளிகள்

## 2.8. பள்ளி வசதி விகிதம் – முன்னேற்றம்

தேவையான எண்ணிக்கையில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தொடங்குதல் மற்றும் தரம் உயர்த்துதலால் **2012–13** ஆம் ஆண்டில் தொடக்க நிலையில் **97.77**% ஆக இருந்த பள்ளி வசதி விகிதம் **2015–16**ல் **98.30**%ஆக முன்னேற்றம் அடைந்துள்ளது. இதேபோன்று, நடுநிலையில் **2012–13**ஆம் ஆண்டு **98.50**%ஆக

இருந்த பள்ளி வசதி விகிதம் **2015–16** ஆம் ஆண்டில் **98.98**%ஆக முன்னேற்றம் அடைந்துள்ளது.


வரைபடம் **–1.** தொடக்க நிலையில் பள்ளி வசதி




*ஆதாரம் : பள்ளி வரைபட தகவல்கள் மற்றும் புவியியல் தகவல் முறைமை*

எளிதில் செல்ல இயலாத தொலைதூர குடியிருப்புகளுக்கும் தமிழ்நாட்டில் பள்ளி வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளதனை இம்முன்னேற்ற விகிதம் பிரதிபலிக்கிறது.

வரைபடம் –2. நடுநிலையில் பள்ளி வசதி




*ஆதாரம் : பள்ளி வரைபட தகவல்கள் மற்றும்*
*புவியியல் தகவல் முறைமை*

**2.8.1. உண்டு உறைவிடப் பள்ளிகள் வாயிலாக பள்ளி வசதி**

தொலைதூரப் பகுதிகளில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தலை உறுதி செய்வதற்காக, பரவலான மக்கள் தொகை, மலை மற்றும் அடர்ந்த வனங்களில் உள்ள பகுதிகளிலும் நகர்ப்புறத்தின் நலிவுற்ற குழந்தைகளுக்காகவும், தெருவோரக் குழந்தைகளுக்காகவும், பெரியோரின் பாதுகாப்பில்லாமல் வாழும் குழந்தைகளுக்காகவும், ‘‘விதிவிலக்கான நடவடிக்கையாக’’ உண்டு உறைவிடப் பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 100 குழந்தைகள் பயிலுவதற்கான தகுதி கொண்ட 5 உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தும்படி 2014–15ஆம் வருடம் ஆணையிட்டார்கள். அதன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூன்று உண்டு உறைவிடப் பள்ளிகளும் நீலகிரி மாவட்டத்தில் இரண்டு உண்டு உறைவிடப் பள்ளிகளும் துவங்கப்பட்டுள்ளன. இது தொலைதூர பகுதிகளில் வாழும் 500 குழந்தைகள் பள்ளி வசதி பெறுவதற்கு உதவி புரிந்துள்ளது.

இது முதற்கொண்டு உண்டு உறைவிடப் பள்ளிகளை நடத்துவதற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு ரூ 3.65 கோடி ஒதுக்கீடு செய்கிறது. உண்டு உறைவிடப் பள்ளிகளில் தற்போது பயிலும் குழந்தைகளில் 50 சதவீதத்திற்கு மேல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பை சார்ந்தவர்களாவர்.

***வெற்றிக்கதை – உண்டு உறைவிடப் பள்ளி***

*வால்பாறையில் உள்ள கள்ளர் குடியிருப்பு, உடுமந்தரை, பரமன்குடி, நேமல்குடி போன்ற குடியிருப்பு பகுதிகள், மக்கள் அடர்த்தி குறைவாக உள்ள பகுதிகளாக உள்ளதால், இக்குடியிருப்புகளில் புதிய பள்ளிகள் தொடங்க இயலாது. மேலும் வெள்ளிமுடி, கருமுட்டி, கீழ்புனஞ்சி, நெடுங்குன்றம் மற்றும் மண்ணப்பள்ளி போன்ற குடியிருப்புகளில், உயர் தொடக்கப் பள்ளி வசதி இல்லை. வால்பாறையில் இவ்வுறைவிடப்பள்ளி*

*அமைக்கப்பட்டதால் 50 மலைவாழ் இனத்தினைச் சேர்ந்த குழந்தைகள் இடைநிற்றல் இல்லாமல் பள்ளிக் கல்வியினை தொடர்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.*

### 2.8.2. போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகள் வாயிலாக பள்ளி வசதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 2012–13 ஆம் ஆண்டில் போக்குவரத்து வசதி வழங்குதலை அறிவித்தார்கள். பள்ளி தொடங்க இயலாத, மக்கள் அடர்த்தி குறைவாக உள்ள பள்ளி வசதியற்ற குடியிருப்புகளிலும், பள்ளிக் கட்டிடத்திற்கான நில வசதி இல்லாத குடியிருப்புகளிலும் உள்ள மாணவர்களுக்கு போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதியை இத்திட்டம் உறுதி செய்தது. இது ஒரு புதிய அணுகுமுறையாக அமைந்துள்ளது.

முதன் முறையாக, 2012–13 ஆம் கல்வியாண்டில் 8 மாவட்டங்களில், பள்ளி வசதி இல்லா 360 குடியிருப்புகளில் வாழும், 4857 குழந்தைகளுக்கு அவர்கள் பள்ளி சென்று வர வாகன வசதி செய்திட ரூ.1.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2013–14 ஆம் ஆண்டில் போக்குவரத்து வசதி மற்றும் பாதுகாவலர் சேவைகளை தொலைதூர மற்றும் மக்கள் அடர்த்தி குறைவாக உள்ள பள்ளி வசதியற்ற குடியிருப்புகளில் வாழும் பள்ளி குழந்தைகளுக்கும் வழங்கிட அறிவித்தார்கள். ரூ.13.82 கோடி செலவில்,

ஆண்டொன்றுக்கு சராசரியாக பத்தாயிரம் குழந்தைகளுக்கு மேல் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தார்கள் என்பதை பின்வரும் அட்டவணை வெளிப்படுத்துகிறது. **60** சதவீதத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆவர்.

அட்டவணை – போக்குவரத்து / பாதுகாவலர் வசதி

(2012–13 முதல் 2015–16 வரை)

| ஆண்டு | குடியிருப்பு–களின் எண்ணிக்கை | குழந்தை–களின் எண்ணிக்கை | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் | நிதி ஒதுக்கீடு (கோடி) |
|---|---|---|---|---|
| **2012–13** | **360** | **4857** | **3070** | **1.46** |
| **2013–14** | **1133** | **15485** | **8296** | **4.65** |
| **2014–15** | **1287** | **14749** | **8427** | **4.42** |
| **2015–16** | **990** | **10924** | **6487** | **3.29** |
| மொத்தம் | | | | **13.82** |

ஆதாரம் : ஆய்வு அறிக்கைகள்

***வெற்றிக்கதை – போக்குவரத்து வசதி***

*நீலகிரி மாவட்டத்தில் முதுமலை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி இப்பகுதியைச் சுற்றியுள்ள புலியாலம், முண்டக்கரை, மேல்நாகம்பள்ளி மற்றும் காப்பூர் குடியிருப்புப் பகுதிகளில் வாழும் 100 குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் கல்வித்*

தேவைகளை பூர்த்தி செய்கிறது. காட்டு நாக்யர், பனியார் போன்ற பழங்குடியினரும், மவுந்தடன் செட்டி போன்ற மற்ற சமூகப் பிரிவை சார்ந்தவர்களும் இங்கு வசிக்கின்றனர். புலிகள், சிறுத்தைகள், கரடிகள், ஓநாய்கள், கழுதைப்புலிகள் மற்றும் கொடிய விஷமுள்ள பாம்புகள் ஆகியவற்றின் வாழ்விடமாகவும் இப்பகுதிகள் அமைந்துள்ளன. போக்குவரத்து வசதி வழங்கப்பட்டதன் விளைவாக வனவிலங்குகளின் பயம் காரணமாக பள்ளியை விட்டு இடைநின்ற **45** குழந்தைகள் பயமின்றி பாதுகாப்பாகவும், தொடர்ந்து பள்ளிக்கு வந்து செல்கின்றனர்.



படம் – **5** குழந்தைகளுக்கு வழங்கப்படும் போக்குவரத்து வசதி

## 2.9. ஆங்கிலவழிக் கல்வி

பொறியியல், மருத்துவம், மேலாண்மை, தொழில்நுட்பக் கல்வி முதலிய உயர் கல்விகள் அனைத்தும் ஆங்கில வழியிலேயே கற்பிக்கப்படுவதனால், பெற்றோர்கள் ஆங்கில வழிக் கற்றலினை பெரிதும் விரும்புகிறார்கள். மேலும், போட்டிமிக்க இவ்வுலகில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஆங்கில மொழித்திறன் ஓர் அளவுகோலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்ட தமிழக அரசு, 2012–13 ஆம் கல்வியாண்டு முதல் அரசு தொடக்கக் கல்விப் பள்ளிகளில் ஆங்கிலவழிப் பிரிவுகளைத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் பெற்றோர்களிடையே பெருத்த வரவேற்பினை பெற்று, ஆங்கில வழிப்பிரிவுகளில் சேர்க்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்க வழி வகுத்துள்ளது. இதுவரை ஆங்கில வழிப் பிரிவுகளில் 3,32,590 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆங்கிலவழியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசின் இம்முயற்சி சிறப்பானதென்பதை மாணவர் சேர்க்கை எண்ணிக்கை உயர்வு மற்றும் ஆங்கில மொழியில் அடைவு மாநில அளவிலான அடைவு ஆய்வில் (SLAS) நிரூபித்துள்ளது உண்மையே அன்றி வெறும் புகழ்ச்சியில்லை.

## 2.10. நலத்திட்டங்களின் பயனாக குறியீடுகளின் முன்னேற்றம்


குறிக்கோளினை எய்திட நடைமுறையில் உள்ள கல்வி முறையின் தற்போதைய நிலை அல்லது மாற்றத்தினை அளக்கும்

கருவியாக கல்வி தரம் குறித்த குறியீடுகள் அமைந்துள்ளன. நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள செயல்பாடுகளின் மூலம் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவாக நிகரச் சேர்க்கை விகிதத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் இடைநிற்றல் விகிதத்தில் வீழ்ச்சியையும் பின்வரும் வரைபடங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

## 2.10.1.நிகரச் சேர்க்கை விகிதம் (NER)

ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் நிகரச் சேர்க்கை விகிதம் (NER) = ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் வகுப்புக்கேற்ற வயதுடைய மாணவர்களின் எண்ணிக்கை / **6** முதல் **14** வயதுடைய பள்ளி வயது குழந்தைகள்

வரைபடம் – 3 நிகர சேர்க்கை விகிதம்




| | தொடக்க நிலை | நடு நிலை |
|---|---|---|
| 2001-02 | 93.00 | 90.00 |
| 2006-07 | 99.29 | 98.25 |
| 2011-12 | 99.63 | 98.88 |
| 2015-16 | 99.85 | 99.11 |

*ஆதாரம் : U -DISE & EER*

- தொடக்க நிலை வகுப்புகளில் **2001–02** ஆம் ஆண்டில் **93** விழுக்காடாக இருந்த நிகரச் சேர்க்கை விகிதம் **2006–07**இல் **99.29** விழுக்காடாக உயர்ந்து, **2015–16**இல் எப்போதும் இல்லாத அளவிற்கு **99.85** விழுக்காடாக மேலும் அதிகரித்துள்ளது.

- நடுநிலை வகுப்புகளில் **2001–02**ஆம் ஆண்டில் **90** விழுக்காடாக இருந்த நிகரச் சேர்க்கை விகிதம் **2006–07**இல் **98.25** விழுக்காடாக அதிகரித்து, **2015–16**இல் **99.11** விழுக்காடாக மேலும் அதிகரித்துள்ளது.

### 2.10.2. மொத்த சேர்க்கை விகிதம் (GER)

$$\text{ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம்} = \frac{\text{ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை}}{\text{6 முதல் 14 வயதுடைய பள்ளி வயது குழந்தைகள்}}$$

இவ்விகிதம் பெரும்பாலும் **100** சதவிகிதத்தை விட கூடுதலாக இருக்கும் என்பதனை கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.


| அட்டவணை – 2 மொத்த சேர்க்கை விகிதம் (2011–12 முதல் 2015–16 வரை) | | | |
|---|---|---|---|
| ஆண்டு | மாணவர்களின் சேர்க்கை வகுப்பு (1 முதல் 8 வரை) | 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு பள்ளி வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம் |
| 2011-12 | 97,76,252 | 92,66,980 | 105.50 |
| 2012-13 | 96,78,564 | 91,16,715 | 106.16 |
| 2013-14 | 93,96,441 | 89,83,715 | 104.59 |
| 2014-15 | 92,52,467 | 87,46,272 | 105.79 |
| 2015-16 | 92,36,192 | 86,85,761 | 106.33 |

வகுப்பு 1 முதல் 8 வரை உள்ள வயது வரம்பு குறைவாக அல்லது அதிகமாக உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையும் இதில் கணக்கில் கொள்ளப்படும். எனவே, மாணவர்களின் சேர்க்கை தனித்து மதிப்பீடு செய்யாமல் அந்தந்த ஆண்டுகளுக்கான குறிப்பிட்ட வகுப்புகளில் சேர தகுதியுடைய குழந்தைகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டு தீர்வு நோக்குதல் வேண்டும்.

### 2.10.3. இடைநிற்றல் விகிதம்

- தொடக்கநிலை வகுப்புகளில் 2001–02இல் 12 விழுக்காடாக இருந்த இடைநிற்றல் விகிதம், 2011–12இல் 0.95 விழுக்காடாகக் குறைந்து 2015–16இல் 0.90 விழுக்காடாகக் மேலும் குறைந்துள்ளது.

வரைபடம் – 4. இடைநிற்றல் விகிதம்




| | தொடக்க நிலை | நடு நிலை |
|---|---|---|
| 2001–02 | 12.00 | 13.00 |
| 2006–07 | 1.91 | 4.08 |
| 2011–12 | 0.95 | 1.74 |
| 2015–16 | 0.90 | 1.55 |


*ஆதாரம்: :U –DISE& Cohort*

- நடுநிலை வகுப்புகளில், 2001–02இல் 13 விழுக்காடாக இருந்த இடைநிற்றல் விகிதம் 2006–07இல் 4.08 விழுக்காடாகக் குறைந்து, 2015–16இல் 1.55 விழுக்காடாக மேலும் குறைந்துள்ளது.

### 2.10.4. நிறைவு விகிதம்

- தொடக்க நிலை வகுப்புகளில் 2001–02இல் 64 விழுக்காடாக இருந்த நிறைவு விகிதம், 2006–07இல் 86.55 விழுக்காடாக உயர்ந்து, 2015–16இல் 98.26 விழுக்காடாக மேலும் அதிகரித்துள்ளது.

வரைபடம் – 5. நிறைவு விகிதம்




| | தொடக்க நிலை | நடு நிலை |
|---|---|---|
| 2001–02 | 64.00 | 68.00 |
| 2006–07 | 86.55 | 88.57 |
| 2011–12 | 97.43 | 93.52 |
| 2015–16 | 98.26 | 96.59 |

*ஆதாரம்: :U –DISE& Cohort*

- தொடக்க நிலை வகுப்புகளில் **2001–02**இல் **64** விழுக்காடாக இருந்த நிறைவு விகிதம், **2006–07**இல் **86.55** விழுக்காடாக உயர்ந்து, **2015–16**இல் **98.26** விழுக்காடாக மேலும் அதிகரித்துள்ளது.


- நடுநிலை வகுப்புகளில் **2001–02**இல் **68** விழுக்காடாக இருந்த நிறைவு விகிதம், **2006–07**இல் **88.57** விழுக்காடாக உயர்ந்து, **2015–16**இல் **96.59** விழுக்காடாக மேலும் அதிகரித்துள்ளது.

### 2.10.5. மாணவர் சேர்க்கையில் பாலின விகிதம்

**2015–16**இல் தொடக்கநிலை வகுப்புகளில் மொத்த மாணவர் சேர்க்கையில் **51.22** விழுக்காடு மாணவர்களும், **48.78** விழுக்காடு மாணவிகளும் (வரைபடம் – 6), நடுநிலை வகுப்புகளில் **51.28** விழுக்காடு மாணவர்களும், **48.72** விழுக்காடு மாணவிகளும் கல்வி பயின்று வருகிறார்கள் (வரைபடம் – 7).

வரைபடம் – 6


மாணவர் சேர்க்கையில் பாலின விகிதம் தொடக்க நிலை




*ஆதாரம்: U-DISE*

வரைபடம் – 7

மாணவர் சேர்க்கையில் பாலின விகிதம் நடுநிலை




*ஆதாரம்: U-DISE*

## 2.11.தரமான ஆசிரியர்களை நியமித்தல்


ஆசிரியர் தொழிலானது குழந்தைகளுக்கு கல்வியில் ஊக்கமளிப்பதாகவும் ஆர்வமூட்டுவதாகவும் நல்லொழுக்க திறன்கள் மற்றும் தன்னம்பிக்கையினை வளர்ப்பதாகவும் அவர்களது திறன்மிக்க செயல்களை ஊக்குவிப்பதாகவும் இருத்தல் வேண்டும். மாணவர்களிடையே அறிவுசார் திறன்களை வளர்ப்பது தான் ஆசிரியரின் தலையாய கடமையாகும். ஒரு பள்ளியில் திறன்மிக்க ஆசிரியர் இருப்பது கல்வித் தர முன்னேற்றத்தின் அறிகுறியாகும். ஆசிரியர் பணி நியமனத்திற்கு தமிழ்நாட்டில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. கற்பித்தலில் ஆர்வமும் மனப்பான்மையும் திறமையும் உடைய தகுதியான ஆசிரியர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். கடந்த 5 ஆண்டுகளில், 11,459 இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் 1,373 பட்டதாரி ஆசிரியர்கள் நேரடி தேர்வின் மூலம் நியமித்ததில்

ஆசிரியர் மாணவர் விகிதம் கட்டாய உரிமைச்சட்ட வரையறையைக் காட்டிலும் சிறப்பான நிலையில் உள்ளன.

## 2.12. ஆசிரியர் – மாணவர் விகிதம் (TPR)

**2011–12**இல் ஆசிரியர்–மாணவர் விகிதம் தொடக்கநிலை வகுப்புகளில் **1:27**ஆகவும், நடுநிலை வகுப்புகளில் **1:29** ஆகவும் இருந்தது. இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட தொடக்கநிலை வகுப்புகளில் **1:30** ஆகவும், நடுநிலை வகுப்புகளில் **1:35** ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆசிரியர் மாணவர் விகிதம் தமிழ் நாட்டில் **2015–16**இல் தொடக்கநிலை வகுப்புகளில் **1:25** ஆகவும், நடுநிலை வகுப்புகளில் **1:24** ஆகவும் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

வரைபடம்– 8 ஆசிரியர்–மாணவர் விகிதம்





| | 2001-02 | 2006-07 | 2011-12 | 2015-16 |
|---|---|---|---|---|
| தொடக்க நிலை | 41.00 | 30.00 | 27.23 | 25.16 |
| நடு நிலை | 49.00 | 38.00 | 29.30 | 24.67 |

*ஆதாரம்: U-DISE*

## 2.13. தக்க வைத்தல்

பள்ளியில் சேர்க்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் தக்கவைத்தலே தொடர் பெரு முயற்சியாய் இருப்பினும், சில குழந்தைகள் பள்ளியிலிருந்து இடைநின்று விடுகிறார்கள். இவர்களுக்காக உண்டு உறைவிடப் சிறப்புப் பயிற்சி மையங்கள், இணைப்பு சிறப்பு பயிற்சி மையங்கள், கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா, உண்டு உறைவிடப் பள்ளிகள் மூலமாக போதிய பயிற்சி அளித்து முறையான பள்ளிகளில் நேரடி சேர்க்கை மூலம் தொடக்கக் கல்வியைத் தொடர்ந்து முடிக்கும் வகையில் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தொடக்க நிலை மற்றும் நடுநிலை அளவில் மாணவர்களின் தக்கவைத்தல் விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டு **99.10** விழுக்காடு மற்றும் **98.45** விழுக்காடாக உள்ளது.

வரைபடம் – 9 தக்க வைத்தல் விகிதம்




| | தொடக்க நிலை | நடு நிலை |
|---|---|---|
| 2001-02 | 88.00 | 87.00 |
| 2006-07 | 98.09 | 95.92 |
| 2011-12 | 99.05 | 98.26 |
| 2015-16 | 99.10 | 98.45 |

*ஆதாரம்: U-DISE*

## 2.14. இடைநிற்றலை குறைப்பதற்கான சிறப்பு பயிற்சி செயல்பாடுகள்

மேற்குறித்துள்ள பல்வேறு செயல்திட்டங்கள் பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகளின் எண்ணிக்கை குறைவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் மனித வள மேம்பாட்டுத் துறை **2014–15** ஆம் ஆண்டில் இந்திய அளவில் தொடக்கக் கல்வியில் இடைநின்ற குழந்தைகளை மதிப்பிட மனிதவள மேம்பாட்டுத்துறை நடத்திய கணக்கெடுப்பின்படி பெரிய மாநிலங்களான கர்நாடகம் **(1.49%)**, கேரளா **(0.82%)**, மற்றும் ஆந்திரா **(0.91%)** உடன் ஒப்பிடும் போது தமிழ் நாடு (**0.**66%) மிகக் குறைவாகும். தமிழ்நாட்டில் உள்ள பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகளின் சதவீதம் அகில இந்திய அளவான **2.97%**விட மிகக் குறைவாகும்.

அட்டவணை – **3**
பள்ளி செல்லா குழந்தைகள் மற்றும் இடைநிற்றல் சதவிகிதம்
**2011–12** முதல் **2015–16** வரை

| ஆண்டு | கண்டறியப்பட்ட பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கை | பள்ளியில் சேர்க்கப்பட்டவர்கள் | இடைநிற்றல் சதவிகிதம் | |
|---|---|---|---|---|
| | | | தொடக்க நிலை | நடு நிலை |
| **2011–2012** | 63178 | 55758 | 0.95 | 1.74 |
| **2012–2013** | 53832 | 47684 | 0.93 | 1.70 |
| **2013–2014** | 51447 | 46737 | 0.95 | 1.65 |

| | | | | |
|---|---|---|---|---|
| **2014–2015** | 43024 | 42245 | 0.94 | 1.58 |
| **2015–2016** | 43455 | 42443 | 0.90 | 1.55 |
| *ஆதாரம் : UDISE மற்றும் மாதாந்திர அறிக்கை* | | | | |

இலவசக் கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி **1** முதல் **8** வகுப்பு வரை வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்கை வழங்கப் படுகிறது. **6** வயதுக்கு மேற்பட்டு பள்ளிக்கு செல்லாமல் உள்ள குழந்தைகள் அல்லது தொடக்க நிலைக் கல்வியை முடிப்பதற்கு முன்பாகவே எந்த வகுப்பில் இடைநின்றாலும் அத்தகைய குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதற்கு பிரிவு – **4** வழிவகை செய்கிறது.

**6** முதல் **14** வயதுடைய இடைநின்ற குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பதற்கு அரசு தொடர்ந்து பல்வேறு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. **2011–12**ல் **63,178** இடைநின்ற குழந்தைகள் கண்டறியப்பட்டனர். இந்த எண்ணிக்கை **2015–16** ஆம் ஆண்டில் **43,455** ஆக குறைந்துள்ளது. கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட **43,455** இடைநின்ற குழந்தைகளில் **42,443** குழந்தைகள் மேற்குறிப்பிட்ட பல்வேறு செயல்பாடுகள் மூலமாக பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறப்புப் பயிற்சி மையங்களில் சேர்க்கப்படும் குழந்தைகளுக்கு கற்றல் அடைவுத்திறன் அடிப்படையில் வகுப்பிற்கேற்ற சிறப்புப் பயிற்சி

இணைப்பு பாடத்தின் மூலம் அளிக்கப்பட்டு தொடர்ந்து முறையாக வகுப்புகளில் மீள சேர்க்கப்படுகின்றனர்.

**2015–16** ஆம் ஆண்டில் இடைநின்ற குழந்தைகளை கண்டறிய வீடு வாரியான கணக்கெடுப்பு ஏப்ரல் – மே **2015**, அக்டோபர் **2015** மற்றும் ஜனவரி **2016** ஆகிய மூன்று நிலைகளில் நடத்தப்பட்டது. மாநிலத்திலுள்ள அனைத்து குடியிருப்புப் பகுதிகளிலும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கணக்கெடுப்பின் போது ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / தெருவோர சிறார்கள் / ஆதி பழங்குடியினர் / சீர்மரபினர் / நாடோடிகள் அதிகம் வாழும் பகுதி / குடிசைப் பகுதி / நகர்புற புதிய குடியிருப்புகள் மற்றும் இடம்பெயர்ந்தோர் அதிகமுள்ள உள்ள குடியிருப்புகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

### 2.14.1. இடைநிற்றலை குறைப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்

- குடியிருப்புப் பகுதியில் 100% சேர்க்கையை உறுதி செய்ய பள்ளி மேலாண்மைக் குழு / கிராமக் கல்வி குழுவை ஈடுபடுத்தி விழிப்புணர்வு பேரணி நடத்துதல்.



படம் – **6.** கடைகளில் கணக்கெடுப்பு பெருந்துறை, ஈரோடு மாவட்டம்

- இடைநின்ற குழந்தைகள் உள்ளிட்ட அனைத்து குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் உள்ள உரிமைகள் குறித்த குறும்படத்தினை ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்பட்டு, குழந்தைகளுக்காக வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது/




படம் – 7 கிராம சபா கூட்டம் மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம்

- கிராம, வட்டார மற்றும் மாவட்டஅளவில் சேர்க்கை பேரணி. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் மூலமாக கிராம சபா / மகிலா சபா / வார்டு சபா கூட்டங்கள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு மூலமாக சமூக விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

- மாணவர்கள் சேர்க்கை மற்றும் மீள பள்ளிகளில் சேர்க்கும்போது ஏற்படும் பிரச்சனைகளை மாவட்ட ஆட்சியர் நடத்தும் மக்கள் தொடர்பு கூட்டத்தில் விவாதித்தல் .

- மாவட்ட ஆட்சியர் அனைவருக்கும் கல்வி இயக்க மாவட்டக் குழு தலைவராகவும் இருப்பதால் பிறத்துறைகளை குறிப்பாக தொழிலாளர் நலத்துறை, சமூக நலத்துறை சுகாதாரத் துறையை ஒருங்கிணைப்பதற்கும் பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகளைக் கண்டறிதல், சேர்க்கை மற்றும்

மீளப் பள்ளியில் சேர்க்கையை உறுதி செய்வதற்கும் உறுதுணையாக உள்ளது.

- பள்ளியில் சேர்த்த குழந்தைகளை தக்கவைத்தலுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.




படம் – **8.** குழந்தை தொழிலாளர் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தல்



படம்–9. திருவாரூர் பேரணியின் ஒரு பகுதி

- 1 முதல் 4 வகுப்பு வரை செயல்வழி கற்றல் அட்டைகள் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப் படுகிறது. 5 முதல் 8 வகுப்புகளுக்கு முப்பருவ பாடப்புத்தங்கள் பயன்படுத்தப்படுகிறது.



படம் – 10 எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழி கற்றல் வகுப்பறை

- 12 ஆம் வகுப்பு மற்றும் ஆசிரியர் பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற கல்வி தன்னார்வலர்கள் மூலம் சிறப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. சிறப்பு பயிற்சி பெறும் குழந்தைகள் மற்றும் தொடர்ந்து முறையாக பள்ளிகளுக்கு வராத குழந்தைகளுக்கு தேவையான வழிகாட்டுதலும் ஆலேசானைகளும் ஆலோசகர்கள் மூலம் வழங்கப் படுகின்றன.

- பள்ளிக் கல்வித் துறையில் செயல்படும் உளவியல் ஆலோசனை ஊர்திகளுடன் சமூக நலத்துறை மற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு துறையின் கீழ் செயல்படும் ஆலோசகர்களை கொண்டும் ஆலோசனை வழங்கப் படுகிறது.

- 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள மெதுவாக கற்கும் மாணவர்கள் மற்றும் இடைநின்றவர்களின் கல்வித் தேவையை தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடத்தில் மேம்படுத்தும் வகையில் சிறப்பு கட்டகங்கள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்ககத்தால் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

- ஒருங்கிணைந்த மாவட்ட பள்ளிக் கல்வி சார் விவரங்கள் உள்ளிட்ட கண்காணிப்பு கருவிகள் பகுப்பாய்வு செய்யப் படுகின்றன. முந்தைய கல்வியாண்டில் 1–8 வகுப்பில் உள்ள மாணவர் சேர்க்கை, நடப்பு கல்வியாண்டில் 2 – 9 வகுப்பின் சேர்க்கையுடன் ஒப்பிடப்பட்டு, குறைந்திருப்பின், பள்ளிப் பார்வையின் போது ஆசிரியர் பயிற்றுநர்கள் இடைநின்ற குழந்தைகளை கண்டறிந்து உடனடியாக அவர்களை பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

### 2.14.2. இடைநின்றோரை கண்காணிக்க மென்பொருள்

மீளப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட இடைநின்ற குழந்தைகளை கண்காணிப்பதற்கு மூன்று தகவல்கள் உள்ளடங்கிய மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் புகைப்படத்துடன் கூடிய குழந்தைகள் விவரங்கள், பருவ அடிப்படையில் தொடர் மதிப்பீடு மற்றும் அதிகாரிகள் கண்காணிப்பு விவரம் ஆகியவை அடங்கியுள்ளது. இடைநிற்றல் கண்டறியப்பட்டால் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதி செய்வதற்கு அக்குழந்தைகளின் விவரங்கள் குழந்தைகள் உதவி மையத்திற்கு (child help line)பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**43,455** இடைநின்ற குழந்தைகளின் பல்வேறு கல்விச் செயல்பாடுகளுக்கு **2015–16** ஆம் ஆண்டில் **20.66** கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

## 2.15. சிறப்பு நிகழ்வுகள்

*திண்டுக்கல் : "அடைய முடியாததை அடைதல்"*

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மலைப்பகுதியில் மண்திட்டு குடியிருப்பில் "மலராசு" என்ற மலைவாழ் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். மாவட்ட அனைவருக்கும் கல்வி இயக்க மாவட்ட அலுவலர்கள் வனத்துறை, வருவாய் துறை, காவல் துறை, தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பெற்றோர்களை பலமுறை சந்தித்து இடைவிடாத முயற்சிக்குப் பிறகு மலைவாழ் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். மனநல ஆலோசகர் மூலம் இக்குழந்தைகளுக்கு மனநல உதவி வழங்கப்பட்டது. தற்சமயம் கற்றல் திறன்கள் மற்றும் தன்சுத்தம் பேணுதல் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மனித வள மேம்பாட்டுத் துறை இந்திய அரசு பிரதிநிதி மண்திட்டு பகுதியில் செயல்படும் உண்டு உறைவிடப் சிறப்பு பயிற்சி மையத்தை பார்வையிட்டு அதன் செயல்பாடுகளை பாராட்டி உள்ளார். அவருடைய குறிப்புரையில்

"***இடைநின்ற மலைவாழ் மாணவர்களை மீண்டும் பள்ளிக்கு கொண்டு வர மாவட்ட அனைவருக்கும் கல்வி இயக்க அதிகாரிகளின் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகள் மிகவும் பாராட்டுக்குரியது***" என பாராட்டியுள்ளார்.



படம் – 11. 09.07.2015 அன்று மனித வள மேம்பாட்டு துறை பிரதிநிதி, விஜயாபுரம் உண்டு உறைவிட மையத்தை பார்வையிடுதல்

## 2.15.1. எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்ட / நோய் தொற்றுள்ள குழந்தைகளுக்கான செயல்பாடுகள்

இந்தியாவில் 1 சதவீதம் மற்றும் அதற்கும் அதிகமாக எச்.ஐ.வி. நோய் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பெரம்பலூர் மாவட்டம் ஒன்றாகும். எச்.ஐ.வி. நோயால் பெற்றோர்கள் பாதிக்கப்படும்போது அவர்களின் குழந்தைகள் மற்றும் உடன்

பிறந்தவர்கள் உறவினர்களால் நிராகரிக்கப்பட்டு, கைவிடப்பட்ட நிலையில் தெருக்களில் விடப்படுகின்றனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் செஞ்சேரியில் செயல்படும் தொண்டு நிறுவன உண்டு உறைவிடப் பயிற்சி மையத்தின் மூலம் 100 எச்.ஐ.வி பாதிக்கப்பட்டோர் அல்லது தொற்று உள்ள குழந்தைகளுக்கு தங்கும் வசதியுடன் ஒரு நாளைக்கு 4 வேளை சுத்தமான சரிவிகித உணவு வழங்கப்பட்டு முறையான பள்ளிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். சுகாதாரத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் முறையாக தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

செஞ்சேரி உண்டு உறைவிட மையத்திலிருந்து முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர்

| | | |
|---|---|---|
| 1 | ஒன்பதாம் வகுப்பு படிப்பவர்கள் | 10 |
| 2 | பத்தாம் வகுப்பு படிப்பவர்கள் | 8 |
| 3 | கல்லூரியில் படிப்பவர்கள் | 10 |

### 2.15.2. இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி

ஒடிசா, வங்காளம், ஜார்க்கண்ட் மற்றும் ஆந்திரா மாநிலம் ஆகிய பல மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு தொழிலாளர்கள்

தங்கள் குழந்தைகளுடன் வருகின்றனர். இக்குழந்தைகள் பேசும் மற்றும் எழுதும் மொழி, அருகாமைப்பள்ளியில் இல்லாததால், இக்குழந்தைகள் பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, இவ்வாறு இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளின் தொடர் கல்வி பாதிக்காத வகையில் கருணையுடன் பரிசீலித்து தமிழக முதலமைச்சர் "இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தாய்மொழி பாடம் கற்பிக்கப்படும்'' என சட்டசபையில் அறிவித்தார்கள். பிற மாநில தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இவர்கள் மொழி தெரிந்த கல்வி தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டு பாடம் கற்பிக்கப்படுகிறது.



படம் – **12.** ஒடியா புத்தகங்களுடன் குழந்தைகள்

**2015–16** ஆம் ஆண்டில் பிற மாவட்டம்/மாநிலத்தில் இருந்து இடம்பெயர்ந்த **5,089** தொழிலாளர்களின் குழந்தைகளில் **4,933** குழந்தைகள் வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளனர். **71** கல்வி தன்னார்வலர்கள் பிற மாநில இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் அவர்களுடைய தாய்மொழியில் பாடம் கற்பிக்க நியமிக்கப்பட்டுள்ளனர். **865** பெங்காலி, **2802** ஒடியா, **594** ஹிந்தி மற்றும் **226** தெலுங்கு மொழிப் பாடப்புத்தகங்கள் இக்குழந்தைகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. இக்குழந்தைகளின் நலனுக்காக ரூபாய் **1.04** கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.15.3. பிற மாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்குதல்

இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஒரு சில மாதங்களில் பணி முடிந்த பிறகு மீண்டும் தங்கள் சொந்த மாநிலத்திற்கு திரும்புகின்றனர். இவ்வாறு சொந்த மாநிலம் திரும்புவோரின் குழந்தைகளின் தொடர் கல்வி பாதிக்காத வகையில் இருமொழி மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படுவதால் அக்குழந்தைகள் எந்த மாநிலத்திற்கு சென்றாலும் தடையின்றி கல்வி கற்க ஏதுவாக உள்ளது.

மேலும், இக்குழந்தைகள் தங்கள் மாநிலத்திற்கு சென்றவுடன் பள்ளியில் சேர்ந்ததை உறுதி செய்ய சுயமுகவரி அஞ்சல் அட்டை வழங்கப்படுகிறது. இவ்வஞ்சல் அட்டையில் மாணவர்கள் தொடர் கல்விக்கு சேரும் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் கையொப்பம் பெற்று இவ்வஞ்சல் அட்டையை மீள அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

### 2.16. கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV)

கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம் என்பது கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் உள்ள பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற 10 முதல் 14 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதியோடு கல்வியை அளிக்கும் சிறப்புத் திட்டமாகும்.

தற்போது தமிழகத்தில் 14 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் 61 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 31 பள்ளிகள் 100 பெண் குழந்தைகள் தங்கி பயிலக்கூடிய மாதிரி I வகை பள்ளிகளாகவும், 30 பள்ளிகள் 50 பெண்

குழந்தைகள் தங்கி பயிலக்கூடிய மாதிரி II வகை பள்ளிகளாகவும் செயல்பட்டு வருகின்றன.

**2011–12** முதல் **2015–16** வரை இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ள மாணவிகளின் எண்ணிக்கையை பின்வரும் அட்டவணை வழங்குகிறது.

| அட்டவணை – **4**<br>கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டத்தின் மூலம் பயனடைந்த மாணவிகள் **(2011 –2016)** | | |
|---|---|---|
| வ.எண். | கல்வியாண்டு | பயன்பெற்றோர் எண்ணிக்கை |
| 1. | 2011-12 | 4471 |
| 2. | 2012-13 | 4461 |
| 3. | 2013-14 | 4507 |
| 4. | 2014-15 | 4633 |
| 5. | 2015-16 | 4614 |

மாணவிகளுக்கு தையல், எம்பிராய்டரி, கைவேலைப்பாடு பொருட்கள், மரபு வழி அல்லாத திறன்களான மண்புழு உரம் தயாரித்தல், பைண்டிங், லேமினேஷன் மற்றும் ஆன்லைனில் பயணச்சீட்டை பதிவு செய்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும் கணினி கல்வி, விளையாட்டு பயிற்சி,

யோகா மற்றும் கராத்தே (தற்காப்பு கலை) ஆகியவற்றிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் ஒரு மாதத்திற்கு ரூ.100/– ஊக்கத் தொகையாக அஞ்சலக சேமிப்பு கணக்கில் வைப்பு தொகையாக செலுத்தப்படுகிறது.இப்பள்ளியில் தங்கி பயிலும் காலம் வரை ஒவ்வொரு மாணவிக்கும் காப்பீட்டு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.62/–பிரீமிய தொகையாக செலுத்தப்படுகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் கல்விக்காக ஆண்டிற்கு சுமார் ரூபாய் 20 கோடி செலவிடப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளியில் பயிலும் எட்டாம் வகுப்பு மாணவிகள் தேசிய திறனறி கல்வி உதவித் தொகை வழங்கும் தேர்வு எழுதுவதற்கு ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். இத்தேர்விற்கு தயாராகுவது குறித்து மாணவிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இத்தேர்வில் 2014–15 ஆம் கல்வி ஆண்டில் 34 மாணவிகளும் 2015–16 ஆம் கல்வி ஆண்டில் 35 மாணவிகளும் வெற்றி பெற்றுள்ளனர். இது பாராட்டுக்குரிய சாதனையாகும். மேலும் கேஜிபிவி பள்ளியில் பயிலும் பிற மாணவிகளையும் இத்தேர்வு முடிவு ஊக்குவிப்பதாக உள்ளது. எட்டாம் வகுப்பை முடித்த மாணவிகள் தங்கள் கல்வியை தொடரும் வகையில் ஒன்பதாம் வகுப்பில் முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். மேலும் அவர்களுக்கு விடுதி வசதிகள், அனைவருக்கும் இடைநிலை

கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் பெண்கள் விடுதிகள் மற்றும் நலத்துறை விடுதிகளில் தங்கும் வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது.

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் மீளாய்வு குழுவினர், விழுப்புரம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா பள்ளிகளை பார்வையிட்டு பள்ளிச் செயல்பாடுகள், மாணவிகள் மற்றும் ஆசிரியைகளை பாராட்டியுள்ளனர்.

2015–16 கல்வியாண்டில் எட்டாம் வகுப்பை முடித்த 1,547 மாணவிகளில் 1,536 மாணவிகள் ஒன்பதாம் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒன்பதாம் வகுப்பில் கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா பள்ளி மாணவிகளின் 100 சதவிகித சேர்க்கையை ஒன்பதாம் வகுப்பில் உறுதி செய்ய மாநில அரசு முயற்சிகள் மேற்கொண்டுவருகிறது.

### 2.16.1. கராத்தே போட்டிகளில் கேஜிபிவி பள்ளி மாணவிகளுக்கு கிடைத்த வெற்றி

கடலூர் மாவட்ட கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா பள்ளி மாணவிகள் தேசிய அளவில் நடைபெற்ற கராத்தே போட்டியில் பங்குபெற்றனர். 10 முதல் 11 வயதினருக்கான போட்டியில் ஒரு மாணவி முதலிடத்தையும், 12 முதல் 13 வயதினருக்கான போட்டியில், இரண்டு மாணவிகள் இரண்டாம்

மற்றும் மூன்றாம் இடங்களையும் வென்றுள்ளனர். தருமபுரி மாவட்டம் பர்கூரில் 06.12.2015 அன்று நடைபெற்ற பள்ளிகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் வேப்பனபள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா பள்ளியில் பயிலும் 15 மாணவிகள் பங்கேற்று 6 மாணவிகள் பரிசுகளை பெற்றுள்ளனர். பங்குபெற்ற 15 மாணவிகளும் பாராட்டப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாணவிகளின் வாழ்க்கையில் பல்வேறு கடினமான பொருளாதார சிக்கல்கள் இருந்தாலும் அவர்கள் தங்கள் திறமையை தேசிய அளவில் நிருபிக்கும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

## 2.17. தரம் மேம்பாடு

அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வியுடன் பள்ளிவசதி, சேர்க்கை மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதே தலையாய நோக்கமாகும். தற்போது தொடக்க நிலையில் ஏறத்தாழ 100 சதவிகித சேர்க்கை, பள்ளிவசதி மற்றும் அடிப்படை வசதிகள் வழங்கப்பட்ட நிலையில் கடந்த 4 வருடங்களில் தரமான கல்வியை வழங்குவதற்கு சிறப்பு கவனம் அளிக்கப்பட்டு வருகிறது.


### 2.17.1. தரம் கண்காணிப்பு கருவிகள்

பள்ளி அளவில் ஒவ்வொரு பருவத்திலும் மாணவர்களின் வருகை மற்றும் அடைவுநிலை தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறையில் பதிவு செய்யப்படுகிறது. மாணவர்களின் வருகை விகிதம்

மற்றும் அடைவுநிலை விகிதம் குறுவள மையம், வட்டார வளமையம் மற்றும் மாவட்ட அளவில் தொகுத்து ஆராயப்படுகிறது. அடைவு நிலையில் பின்தங்கியுள்ள மாணவர்களை அடையாளம் கண்டு, தேவையான குறைதீர் கற்பித்தல் பாடவாரியாகவும், வகுப்பு வாரியாகவும் வழங்கப்பட்டு அவர்களின் அடைவு நிலையை உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மாணவர்களை பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்கவைத்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகளின் மூலம் மாணவர்கள் வருகை அனைத்து வகுப்புகளிலும் **95** சதவிகிதத்திற்குமேல் அதிகரித்துள்ளது. வருகையில் இவ்வதிகரிப்பு கற்றல் அடைவு நிலைகளில் உள்ள வளர்ச்சி மூலம் தெளிவாக அறியப்படுகிறது.

வரைபடம் **– 10.** பருவம் **1** – மாணவர்களின் அடைவுத்திறன் வகுப்பு**–5**




| | வ.ம | தொ.ம | வ.ம | தொ.ம | வ.ம | தொ.ம | வ.ம | தொ.ம | வ.ம | தொ.ம |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தமிழ் | | ஆங்கிலம் | | கணிதம் | | அறிவியல் | | சமூகவியல் | |
| A | 80.11 | 55.82 | 74.91 | 52.34 | 79.75 | 54.37 | 81.57 | 56.87 | 80.01 | 56.60 |
| B | 17.29 | 34.42 | 21.69 | 36.75 | 17.44 | 35.53 | 14.28 | 32.40 | 16.63 | 33.66 |
| C | 2.60 | 9.76 | 3.40 | 10.91 | 2.81 | 10.10 | 4.14 | 10.15 | 3.36 | 9.74 |

*ஆதாரம்: அகஇ மாதாந்திர அறிக்கை*


### 2.17.2. குறிப்பிட்ட கால அளவிலான மதிப்பீடு

குழந்தைகளின் அடைவு நிலையை கண்காணிக்கும் பொருட்டு குறிப்பிட்ட கால அளவிலான மதிப்பீட்டினை மாநில அரசு செயல்படுத்தியதன் வாயிலாக, பள்ளிகள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மதிப்பீடு முறைப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து குழந்தைகளும் அடிப்படை மொழித்திறனையும் எளிய கணக்குகளும் தீர்வு காணுவதிலும் மாணவர்கள் திறன் பெற்றுள்ளதை உறுதி செய்வதே இம்மதிப்பீட்டின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்த மதிப்பீடு இரண்டு கட்டங்களாக நடத்தப்படுகிறது. 2013–14 ஆம் ஆண்டு முதல் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முதல் கட்டமாகவும், பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இரண்டாம் கட்டமாகவும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வாசித்தல், எழுதுதல், மற்றும் கணித அடிப்படைத் திறன்கள் சோதிக்கப்படுகிறது. அனைத்து அரசு மற்றும் நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இம்மதிப்பீடு செய்யப்படுகிறது. குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்படும் மதிப்பீட்டின் முடிவுகள் மூன்று வருடங்களுக்குரிய ஒப்பீடு பின்வருமாறு

வரைப்படம் – 11. மாணவர்களின் அடைவுநிலை




*ஆதாரம்: அகஇ மாதாந்திர அறிக்கை*

2013–14 ஆண்டிலிருந்து 2015–16 வரை நடத்தப்பட்ட இந்த மதிப்பீட்டு முடிவானது, துவக்க வகுப்புகளில் தமிழ் வாசித்தலில் 74% லிருந்து 85%ஆகவும், தமிழ் எழுதுதலில் 66%லிருந்து 79%ஆகவும், ஆங்கில வாசித்தலில் 59%லிருந்து 73%ஆகவும், ஆங்கிலம் எழுதுதலில் 52%லிருந்து 67%ஆகவும், மேம்பாடு அடைந்துள்ளது. இதுபோன்ற மதிப்பீடு நடுநிலை மாணவர்களுக்கும் நடத்தப்படுகிறது. வருடத்தின் முதலிலும், இறுதியிலும் நடத்தப்படும் இம்மதிப்பீடு மாணவர்களின் கல்வி திறனை உயர்த்துவதற்கு, ஆசிரியர்களுக்கு உறுதுணையாக உள்ளது.

## 2.17.3. தரத்தினை உயர்த்துவதற்கு காரணியாக உள்ள முப்பருவக் கல்வி முறை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்ட சபையில் 26.08.2011 அன்று அறிவித்தற்கிணங்க தமிழ்நாட்டில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை 2012–13 கல்வியாண்டிலும் 9 ஆம் வகுப்பிற்கு 2013–14 கல்வியாண்டிலும் முப்பருவக்கல்வி முறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

மாநில அளவிலான அடைவு தேர்வு ஆய்வுகளின்படி மாணவர்களின் அடைவுத் திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் பாடப்பகுதிகள் வழங்கப்பட்ட போதிலும் முப்பருவக் கல்வி முறையால் மாணவர்களின் புத்தகச்சுமை குறைந்ததோடு மட்டுமல்லாமல் கற்றலிலும் கூடுதல் கவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 2.17.4. ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை உள்ள மாணவர்களுக்கு பதிவுப் பையுறை வழங்குதல்

முப்பருவமுறை, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு வகுப்பறையிலும் மாணவர்கள் பொருள் புரியாமல் மனப்பாடம் செய்யும்முறை மாறி, கருத்துகளை முழுமையாகப் புரிந்து கற்க வாய்ப்புகள் வழங்கப் பட்டு வருகின்றன. மாணவர்களின் முன்னேற்றத்தை, தொடர்ந்து கண்காணித்து அவற்றைப் பெற்றோரிடம் பகிர்ந்து கொள்ளும் வகையில் மாணவர்களின் செயல்களைப் பதிவு செய்து கோப்புகளில் பராமரிக்க உதவும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு நிதி உதவி

பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பதிவுப் பையுறை (Port folio) வழங்குவதற்கான திட்டத்தினை அறிவித்தார்கள். மாணவர்களின் புத்தாக்கப் படைப்புகள், கலைப் பொருள்கள், சிறப்பான செயல்பாடுகள் ஆகியவை பதிவுப் பையுறைகளில் தொகுத்து வைக்கப்பட்டு ஆண்டு முழுவதும் பராமரிக்கப்பட உள்ளன. 2016–17 ஆம் கல்வி ஆண்டு முதல் பதிவுப் பையுறைகள் பள்ளிகளில் பயன்பாட்டிற்கு வரவுள்ளன. இதன்மூலம் ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களின் படைப்புகளை பார்வையிட்டு அவர்களை ஊக்கமூட்டி ஆர்வத்துடன் இத்தகு படைப்பாற்றல் செயல்களில் தொடர்ந்து ஈடுபட அவர்களை ஊக்குவிக்க முடியும்.




படம் – 13 பதிவுப் பையுறை

### 2.17.5. எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் – படைப்பாற்றல் கல்வி முறை

எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் மற்றும் படைப்பாற்றல் கல்வி முறைகள் குழந்தை மையக் கற்றல் கற்பித்தல் முறைகளாகும். ஒவ்வொரு குழந்தைக்கும் தரமானக் கல்வியை உறுதி செய்கின்றன. வகுப்பறையில் சுதந்திரமாகச் செயல்படவும் ஆசிரியர் வழிகாட்டுகிறார். மேலும் இக்கற்றல் முறைகள் குழந்தைகளை ஒருங்கிணைத்துக் கற்றல் திறன்களை முழுமையாக அடைய உதவுகின்றன. உயர்நிலைத் திறன்களை உள்ளடக்கியதாகவும் இவை அமைந்துள்ளன. கலந்துரையாடல், குழுவிவாதம், சிந்தித்து செயல்படுதல், செயல்திட்டம் உற்று நோக்கல் ஆகிய பல்வேறு செயல்பாடுகளின் வாயிலாகக் குழந்தைகள் தங்கள் அறிவை விரிவு செய்கிறார்கள். படித்தல், எழுதுதல் மற்றும் கேட்டல் திறன்களை வளர்ப்பதற்கும் இக்கல்வி முறைகளில் இன்றியமையாத இடம் அளிக்கப்பட்டுள்ளது.

முப்பருவக் கல்விமுறை 2012 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட பாடநூல்களின் அடிப்படையில், முப்பருவமாகப் வகுக்கப்பட்டு செயல்வழிக் கற்றல், படைப்பாற்றல் கல்வி முறை ஆகியவற்றில் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் வழியில் பயிலும் குழந்தைகளுக்கு மட்டுமின்றி ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மலையாளம் மற்றும் உருது வழி பயிலும் குழந்தைகளுக்கும் பயன்படும் வகையில் செயல்வழிக் கற்றல் அட்டைகள் உருவாக்கப்பட்டு லழுங்கப்பட்டுள்ளன.



படம் – **14.** எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் வகுப்பறை

### 2.17.6.. தானே கற்றல் கணித உபகரணப்பெட்டி

தொடக்கநிலை குழந்தைகளுக்குக் கணக்கு பாடக் கருத்துகளை எளிதாகக்கற்பிக்கும் வகையில், தானே கற்றல் உபகரணப்பெட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கற்றல் உபகரணப்பெட்டியிலுள்ள உபகரணங்களைப் பயன்படுத்திக் குழந்தைகள், தாமே செய்து கற்பதனால் கணக்குப் பாடவேளைகளில் மேலும் ஆர்வமுடன் கற்கின்றனர். இவற்றைப்

பயன்படுத்திக் குழந்தைகள் எண்ணுதல், எண்களை ஒப்பு நோக்கல், குழுவாக பிரித்தல், பொருத்துதல், ஏறுவரிசை, இறங்கு வரிசை, இடமதிப்பு, வரிசைப்படுத்துதல், அடிப்படைக் கணித செயல்பாடுகள் மற்றும் வடிவமைத்தல் ஆகிய கருத்துகளைப் புரிந்துகொண்டு பயிற்சி செய்கிறார்கள். இஃது ஒரு புதுமையான அணுகுமுறையாகும். தொடக்க நிலை வகுப்பறைகளில் கணித



படம் – 15. எண்கட்டைகள்

உபகரணப்பெட்டி உதவியுடன் கணிதம் கற்பித்தலில் இலகுவாகவும், எளிமையாகவும் மகிழ்ச்சி உடையதாகவும் மாற்றப்பட்டுள்ளன.

### 2.17.7. படித்தல் திறனை மேம்படுத்துவதற்கான துணை புத்தகங்கள் – வாசிப்பதற்கான பகுதி

படித்தல் செயல்பாடு குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. இளம்பருவத்திலேயே குழந்தைகள் படிக்கத்

தொடங்கும்போது அவர்களின் பொதுஅறிவு, சொற்பெருக்கம் விரிவடைந்து, மேலும் தங்குதடையின்றி வாசிக்கும் திறனைப் பெறுகிறார்கள். எனவே, அவர்களின் படிப்புத் திறனை தூண்டும் வகையில் அனைத்து தொடக்கப் பள்ளிகளிலுள்ள வகுப்பறைகளிலும் படித்தலுக்கான புத்தகங்கள் வைப்பதற்காக ஓர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. கவனத்தை ஈர்க்கும் வண்ணம்



படம் – 16. துணைப்புத்தகங்கள் வாசித்தல்

படங்களுடன் கூடிய புத்தகங்கள் அரசு பள்ளி ஆசிரியர்களாலும் ஓவிய ஆசிரியர்களாலும் உருவாக்கப் பட்டுள்ளன. இப்புத்தகங்கள் ஒவ்வொரு வகுப்பறையிலும், கம்பிப்பந்தலில் குழந்தைகளுக்கு எட்டும் உயரத்தில் தொங்க விடப்பட்டுள்ளன. இதன்மூலம்

ஒவ்வொரு பள்ளியும் வகுப்பு வாரியான புத்தகங்கள் நிறைந்த சூழலுடையதாக மாற்றப் பட்டுள்ளது.

ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் பாடப்புத்தகம் அல்லாத பிற புத்தகங்களை படிக்கும் திறனை வளர்க்க **2015–16** ஆம் ஆண்டில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு படித்தல் திறனை மேம் படுத்துவதற்குரிய **83** துணை புத்தகங்கள் ரூபாய் **3.8** கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.





படம் – **17.** துணைப்புத்தகங்கள்

### 2.17.8. எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றலில் பள்ளிகளின் தரம்

மாதந்தோறும் ஒன்று அல்லது இரண்டு முறை ஆசிரியர் பயிற்றுநர்களால் பள்ளிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுத் தரம் வழங்கப்படுகிறது. **22** மதிப்பீட்டுக் கூற்றின் அடிப்படையில் A, B, C & D என பள்ளிகளுக்குத் தரம் வழங்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கும் தரம் வழங்கப்படுகிறது. பள்ளிக்குத்தரம் நிர்ணய

மதிப்பீடு செய்யும்பொழுது மாணவர்களின் படித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை கணிதச் செயல்பாடுகளுக்கு முதன்மை அளிக்கப் படுகிறது. இவ்வாறு தொடர்ந்து தரம் வழங்கப்படுவதனால் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட்டு பின்வரும் வரைபடம் எடுத்துக்காட்டுவது போல் தரமான கல்வி கண்காணிப்பு கருவியாக இம்முறை உள்ளது.

வரைப்படம் – 12. எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல்




ஆதாரம் : மாதந்திர ஆய்வு அறிக்கை

### 2.17.9. ஆங்கிலம் மற்றும் கணக்குப் பாடத்தில் கற்றலை மேம்படுத்துதல்

2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில அளவிலான அடைவுத்திறன் மதிப்பீட்டு (SLAS) முடிவின்படி

ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடம் கற்றுக்கொள்வதனை மாணவர்கள் கடினமாக உணர்கின்றனர் என்பதனை அறிந்து இவ்விரு பாடத்திலும் கற்றல் அடைவினை உயர்த்துவதற்காக சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.17.10. ஆங்கிலப் பாடத்திற்கான சிறப்பு முயற்சிகள்

ஆங்கிலப் பாடமானது, தொடக்க நிலை வகுப்புகளில் இரண்டாம் மொழிப்பாடமாக இருப்பதனால் மாணவர்கள் ஆங்கிலத்தில் உரையாடுதலைக் கேட்பதற்கும் இணைந்து பேசுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்துவது அவசியமாகிறது. ஆங்கிலமொழித் திறனைத் தொடக்க நிலை மாணவர்களுக்கு வளர்ப்பதற்காக 2 குறுந்தகடு (DVD) மற்றும் ஒலிப்பியல் (Phonetic) முறைகள் அடங்கிய 43 கட்டகம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆங்கில ஒலிப்பியல் பயிற்சி வழங்கப்பட்டது. இதனால் தொடக்கநிலை மாணவர்களின் அடைவுத் திறன் ஆங்கில பாடத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.

### 2.17.11. கணக்குப் பாடம் கற்றலுக்கான சிறப்பு முயற்சிகள்

கணக்குப் பாடத்தின் அடிப்படைக் கருத்துகளையும், இடமதிப்புகளையும் புரிந்து கொள்வதில், குறிப்பாகத் தொடக்க நிலையிலிருந்து நடுநிலைக்குச் செல்லும் மாணவர்கள் கடினமாக

உணர்கின்றனர்.கணித அடிப்படைக் கருத்துக்கள், தீர்வு செய்தல் மற்றும் இடமதிப்பினை சரியாக புரிந்து கொள்ளாதபோது மேலும் கடினமாக உணர்கின்றனர். கணிதத்தின் பின்னங்கள் போன்ற சில கோட்பாடுகள் மாணவர்களுக்கு கடினமானதாக உள்ளதாக மாநில அடைவுத்திறன் (SLAS) முடிவு சுட்டிக்காட்டியுள்ளது. இக்கடினப் பகுதிகளை எளிமையாகக் கற்றுக் கொள்வதற்காகவும், கணக்குப் பாடத்தில் கற்றலை வலுப்படுத்தும் விதமாகவும் 33 கணித கற்றல் உபகரணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.


## 2.17.12. செயல்பாடுகள் வாயிலாகக் கணக்குப் பாடத்தை நன்கு அறியச் செய்தல்

அரசு தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் கணக்குப் பாடக் கற்றலுக்கான வளங்கள் மற்றும் செயல்களை வலுப்படுத்துவதற்காக கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

- கணிதச் செயல்பாடுகளைச் செய்து பார்த்தல்
- கணித மேளா
- கணிதச் சுவரொட்டிகளும் அவற்றுடன் தொடர்புடைய செயல்பாடுகள்

எண் முறையினம் இயற்கணித முற்றொருமை



படம் – **18.** நடுநிலைப் பள்ளிகளுக்கான கணித உபகரணப் பொருட்கள்

## 2.17.13. நடமாடும் அறிவியல் ஊர்தியின் மூலம் அறிவியல் கற்றலை மிகுவித்தல்

குறிப்பிட்ட கால இடைவெளியில் நடைபெறும் அடைவுத் தேர்வு (PA) மற்றும் மாநில அடைவுத் தேர்வுகள் (SLAS) மூலம் அடைவுத்திறன் குறைந்த நடுநிலைப் பள்ளிகள் ஒவ்வொரு வட்டார வளமையங்களிலும் கண்டறியப்பட்டு அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவியல் மாதிரிகள் மற்றும் அறிவியல் பரிசோதனைகளை செய்முறைப்படுத்தி கற்பதற்காக ஒவ்வொரு பள்ளிக்கும் இந்த அறிவியல் ஊர்தி சுழற்சி முறையில் அனுப்பப்படுகிறது. இந்த ஊர்தி குழந்தைகளின் தேவைகளை குழுக்களாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



386-4-7

மேலும், தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் கூடிய படம் காட்டும் கருவியின் மூலம் (Projector) குறுந்தகடுகளைப் பயன்படுத்தி பல்வேறு பாடங்களை கற்பதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்கள் தாங்களே அறிவியல் பரிசோதனையைச் செய்து கற்பதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராமப்புற மாணவர்கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து அறிவியல் திறனைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாகவும் இது அமைந்துள்ளது.

### 2.17.14. அறிவியல் விழிப்புணர்வுத்திட்டம்

சமூகத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த குழந்தைகளின் சேர்க்கை அதிகரித்தலுக்கும் மற்றும் தக்க வைத்தலுக்காகவும் பல்வேறு செயல்பாடுகள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

குழந்தைகளிடையே புரிந்து கொள்ளும் திறனையும் புதுமைப் படைத்தலையும் வளர்த்தெடுக்கும் வகையில் கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பல்வேறு செயல்பாடுகளின் வாயிலாக வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. குழந்தைகளின் அறிவியல் கற்றலையும், ஆய்வு மனப்பான்மையையும் வளர்க்கும் நோக்கில், அவர்கள் நேரடி அனுபவங்களைப் பெறும் விதமாக வேளாண்

கல்லூரி, அறிவியல் ஆய்வகங்கள், கோளரங்கம், மாவட்ட அறிவியல் மையம் முதலிய இடங்களுக்குக் களப்பயணம் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### 2.17.15. ஆசிரியர் செயல்திறன் படிவம்(PINDICS)

2014–15 கல்வியாண்டிலிருந்து ஆசிரியர்களின் செயல் திறன்களை ஆய்வு செய்வதற்கும் முன்னேற்றத்தைப் பற்றி அறிந்துகொள்வதற்காகவும் ஆசிரியர் செயல்திறன் விளக்கக் குறியீட்டுப் படிவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆசிரியர்களின் கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றைப்பற்றி இப்படிவத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆசிரியரிடமும் எதிர்பார்க்கும் கீழ் குறிப்பிட்டுள்ள செயல்திறன்களுக்கான நிலைகள் வடிவமைக்கப்பட்டு அவைகள் ஆசிரியர்களிடம் சுயமதிப்பீட்டிற்காக வழங்கப்படுகிறது.

- குழந்தைகளுக்கான கற்றல் அனுபவங்களை வடிவமைத்தல்
- பாடப்பகுதியினைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் அதனைப் பற்றிய அறிவு
- கற்றல் மேம்பாட்டு உத்திகள்
- மாணவர் ஆசிரியருக்கிடையேயான உறவுமுறை

- தொழில் முன்னேற்றம்
- பள்ளி வளர்ச்சி
- ஆசிரியர் வருகை
- சுத்தம் மற்றும் சுகாதாரம்

இப்படிவமானது நால்வகைத் தரப்புள்ளி அளவீடுகளின் அடிப்படையில் ஒவ்வோர் ஆசிரியருக்கும் அவர்களுக்கான தனித் திறன்களை வளர்த்தல், புதிய உத்திகளைக் கையாண்டு மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் அடைவையும் நம்பிக்கையுடன் மேம்படுத்துவதற்கு ஏதுவாக உள்ளது.

சுயமதிப்பீட்டுப் படிவங்கள் தலைமையாசியர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களால் மதிப்பிடப்படுகிறது. இதன் மூலம் கற்பித்தலிலும் வகுப்பறை மேலாண்மைச் செயல்பாடுகளிலும் ஆசிரியர் கூடுதல் கவனம் செலுத்த முடிகிறது. மேலும், அவர்கள் பெற்ற அடைவு மேம்பாடு உள்ளங்கை நெல்லிக்கனிப்போல எடுத்துக்காட்டுகிறது.


### 2.17.6. ஆசிரியர் பணியிடைப் பயிற்சி

அனைவருக்கும் கல்வி இயக்ககமும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து பணியிடைப்

பயிற்சிகளை நன்கு திட்டமிட்டு உருவாக்கிக் குறுவள மற்றும் வட்டார வளமைய அளவில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கிவருகின்றன.


குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு கற்றல் கற்பித்தல் முறைகள், பாடப்பொருள், உடற்கல்வி, குழந்தை உளவியல், விழிப்புணர்வு முதலிய கூறுகளை உள்ளடக்கி பயிற்சிக் கட்டகங்கள் தயாரிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.பயிற்சிகள் நடைபெறும்போது ஆசிரியர்களின் புரிதலை உறுதிசெய்திடும் பொருட்டு **2016–17** ஆம் ஆண்டு முதல் அனைத்துப்பயிற்சிக் கட்டகங்களிலும் பயிற்சித்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

வரைபடம் – **13.** ஆசிரியர் பணியிடைப் பயிற்சி தொடக்க நிலை




ஆதாரம் : ஆண்டு வரைவுத் திட்டம் 2013–17
மற்றும் மாதந்திர ஆய்வு அறிக்கை

வரைபடம் – 14. ஆசிரியர் பணியிடைப் பயிற்சி நடுநிலை




ஆதாரம் : ஆண்டு வரைவுத் திட்டம் 2013–17

மற்றும் மாதந்திர ஆய்வு அறிக்கை

2016–17ஆம் கல்வி ஆண்டிலிருந்து தமிழ் ஆங்கிலப் பாடங்களில் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகப் பயிற்சிகள் நன்கு திட்டமிடப்பட்டு உருவாக்கப்படவுள்ளது. அறிவியல் மற்றும் கணக்குப் பாடங்களிலும் பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. அறிவியல் கற்பித்தலில் தன்னைச் சுற்றியுள்ள வளங்களைப் பயன்படுத்தும் வகையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. கற்பித்தல் பொருள்களை கற்றலோடு இணைப்பதற்கு பயிற்சியும் ஒரு வாய்ப்பாக உள்ளது. அதனால்,

பள்ளிகளில் வழங்கப்பட்டுள்ள கணக்கு மற்றும் அறிவியல் கருவிகளை ஆசிரியர்கள் தொடர்ந்து பயன்படுத்துமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.



படம்–19.கணித உபகரணப்பெட்டி பயன்படுத்துதல் பயிற்சி

*பள்ளி சுகாதாரம் மற்றும் குழந்தை உளவியல்*

2016–17 ஆம் கல்வி ஆண்டில் மன அழுத்த மேலாண்மை, கதைகள் மூலம் நன்னெறிக் கல்வி மற்றும் பள்ளிச் சுகாதாரம் முதலிய பயிற்சிகளும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இப்பயிற்சிக்கான கட்டகங்கள் மாநில அடைவுத்தேர்வு SLAS முடிவுகள் மற்றும் பகுப்பாய்வினையும் உள்ளடக்கியுள்ளன. மாணவர்களால் கடினமாக உணரப்படும் பகுதிகள் எவையென கண்டறியப்பட்டு, அவற்றை எளிமைப் படுத்திப் பயிற்றுவிக்கும் விதமாக ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

*<u>தலைமை ஆசிரியர் பயிற்சி :</u>*

**2015–16**ஆம் கல்வி ஆண்டில் **550** நடுநிலை தலைமை ஆசிரியர்களுக்கு NUEPA உடன் இணைந்து பள்ளித் தலைமைப்பண்பு வளர்த்தல் பயிற்சி வழங்கப்பட்டது. **2016–17** ஆம் கல்வி ஆண்டில் **3000** நடுநிலை தலைமை ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட உள்ளது.

## 2.18.பள்ளிகளில் தகவல் மற்றும் தொலைதொடர்புத் தொழில் நுட்பம்

### 2.18.1. கணினிவழிக் கற்றல்

தமிழக அரசு, பள்ளி அளவில் கணினி தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தியதன் வாயிலாக எதிர்கால சந்ததியனருக்கு கணினி பயன்பாட்டினை சிறப்புற பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நடுநிலைப் பள்ளிக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளதற்கு பயிலும் மாணவர்கள் தங்களைக் கற்றல் தொழிற்நுட்பத்துடன் ஒருங்கிணைத்துக்கொள்ள மிகப்பெரிய வளமாக உள்ளது. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கணினி சார்ந்த பயிற்சி அவர்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் பெற்ற பயிற்சியின் மூலம் பாடப்பொருளிலுள்ள சிறு கருத்துகளுக்கு மின்னனு பாடப்பொருளைத்(e-content) தயாரித்துக் கற்றல் கற்பித்தல் கருவியாகப் பயன்படுத்த ஏதுவாக அமைந்துள்ளது. தமிழகம்

முழுவதும் 4,841 நடுநிலைப் பள்ளிகளில் கணினிவழிக் கற்றல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திறன்வாய்ந்த தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, மாணவர் மையக் கற்றலை ஊக்குவிப்பதுடன் வகுப்பறை இயக்கத்தையும் மாற்றியமைத்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 2,401 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கு 7,166 கணினிகள், நாற்காலிகள் மற்றும் கணினி மேசைகள் வழங்கப்பட்டுள்ளன. 2011–12ஆம் ஆண்டில் 960 பள்ளிகளுக்கு ஒளி எறிவுக் கருவிகள் (Projector) வழங்கப்பட்டுள்ளன.



படம் – 20. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கற்பித்தல்

### 2.18.2. ஆசிரியர்களுக்கான கணினி பயிற்சி

2011–12ஆம் ஆண்டு முதல் 2015–16ஆம் ஆண்டு வரை 46,670 ஆசிரியர்களுக்கு என்ஐஐடி, லர்னிங் லிங்க்ஸ் மற்றும்

மைக்ரோசாப்ஃட் நிறுவனங்களுடன் இணைந்து கணினி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



படம் – 21. மைக்ரோசாப்ஃட் நிறுவனத்தால் அளிக்கப்படும் கணினி பயிற்சி

## 2.18.3. விழுப்புரம் மாவட்டத்தில் தகவல் தொழில் நுட்பம் (ICT) நடைமுறைப்படுத்தியதன் தாக்கம்


மாநில அளவில் கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் விழுப்புரம் மாவட்டமும் ஒன்று. விழுப்புரம் மாவட்டத்தின் கல்வித் தரத்தை மற்ற மாவட்டங்களுக்கு இணையாகக் உயர்த்தும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் விதி 110இன் கீழ், தகவல் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தார்கள்.

அதன்படி, முன்னோடித் திட்டமாக அம்மாவட்டத்திலுள்ள 1,329 தொடக்கப் பள்ளிகளில் ஒரு கணினி, LCD Projector,

தடையற்ற மின் வழங்கி (UPS) மற்றும் இன்னபிற கருவிகள் வழங்கியதனால் குழந்தைகள் அனைத்துப் பாடங்களுக்கான குறுந்தகடுகள் மூலம் தங்கள் பாடங்களை எளிதாகக் கற்றுக்கொள்ளும் வகையில் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்துப் பள்ளிகளிலும் தகவல் தொழில்நுட்பக் கருவிகள் வகுப்பறைச் சூழலை முழுமையாக மாற்றியமைத்துள்ள நிலையில், வகுப்பறைகளில் கற்றல்–கற்பித்தல் துடிப்போடு நடைபெற்று வருகிறது. இதனால், அனைத்துப் பாடங்களிலும் சிறந்த தாக்கத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

மாநில அளவிலான அடைவு ஆய்வின் (SLAS) முடிவின்படி தகவல் தொழில்நுட்பத்தின் அறிமுகத்தால் ஏற்பட்டுள்ள மாற்றம் பின்வரும் வரைபடத்தின் வாயிலாகக் காணலாம்.

வரைபடம் – 15 SLAS அடைவு ஒப்பீட்டு ஆ ய்வு




*ஆதாரம் : அடைவு ஆய்வு*

தகவல் தொழில்நுட்பத்தை நடைமுறைப் படுத்தியதன் விளைவாக ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை, விழுப்புரம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களை ஒப்பிட்டு நோக்கும்போது, அதன் முன்னேற்றத்தை தெளிவாகக் காணலாம்.

### 2.18.4. திட்டவழிக்கற்றல் (PBL)

வாழ்வியல் நிகழ்வுகளில் நாள் தோறும் ஏற்படும் இடர்பாடுகளைக் களையவும், மாணவர்களைத் தூண்டவும், பிரச்சனைக்குத் தீர்வுகாணும் சூழலைத் தெரிந்து புதிய அறிவுத் திறனை பெறவும், அதனை வெளிப்படுத்தவும் செயல்திட்டவழிக் கற்றல் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. கடந்த 5 ஆண்டுகளாக அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படும் செயல்திட்டவழிக் கற்றலுக்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்து வருகிறது. ஆசிரியர்களால் சிறப்பாகச் செய்யப்பட்ட செயல்திட்ட வழிக் கற்றல் தேசிய அளவிலான டிசைன் பார் சேஞ்ச் போட்டிக்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இச்செயல்பாடு உலகளாவிய புதுமையான மாற்றத்தினை பள்ளிகளில் ஏற்படுத்தி வருகிறது.

**2015–16**ஆம் ஆண்டு சிறப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் **100** பள்ளிகளில் **23** பள்ளிகள் தமிழ் நாட்டைச் சார்ந்தவை. இவற்றில் **5** செயல்திட்டம் தேசிய அளவில் முதல் **20** இடங்களுக்குள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றியம், ஐயப்பாநகர், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தயாரித்த "Plastic Bottles Go wild" என்னும் தலைப்பிலான செயல் திட்டம் தேசிய அளவில் முதல் **5** இடத்திற்குள் தேர்வு செய்யப்பட்டுப் பாராட்டைப் பெற்றுள்ளது.

**செயல்திட்டவழிக்கற்றல் வெற்றிக் கதை**

*தமிழகத்தில் மாணவர்கள் இச்செயல் திட்டவழிக் கற்றல் மூலம் பெற்ற மாற்றங்களில் ஒன்றைக் கீழே காண்போம்.*


***முதல் ஐந்தில் இடம் பெற்ற செயல்திட்டம்***

***"பயன்படுத்தப்படும் நெகிழிபுட்டிகள்"***

***திருவள்ளூர் மாவட்டம்***

*ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஐய்யப்பா நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெகிழிப் பொருள்களின் கழிவுகள் அப்பகுதியின் சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவிப்பதாக இருந்தது. அப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் அந்த நெகிழிப் பொருளின் கழிவுகளைத் திரட்டி, அவற்றினைத் தரம் பிரித்து,*

*அவற்றைக் கொண்டு, சுண்ணக்கட்டி வைக்கும் தாங்கி, எழுதுகோல் மற்றும் எழுதுப் பலகை, தொங்கு தோட்டம் மற்றும் பல அழகிய கண்கவர் பொருள்களைத் தயாரித்துச் செயல்வழிக் கற்றல் வகுப்பறையில் கற்பிக்கும் உபகரணப் பொருட்களாக பயன்படுத்துகின்றனர்.*




*படம் – 22 பயன்படுத்தப்படும் நெகிழி புட்டிகள்*

## 2.19. மாநில அளவிலான அடைவு ஆய்வு(SLAS)

மேலே பதிவு செய்யப்பட்டுள்ள பல்வேறு செயல் பாடுகளின் முடிவுகளை அளவிட மாநில அளவிலான அடைவு ஆய்வு வழிவகை

செய்கிறது. கற்றல் அடைவு நிலை மேம்பாட்டிற்காக செயல் படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் தாக்கத்தினை அறியும் வகையில் மாணவர்களின் கற்றல் அடைவு நிலையை அறிவியல் பூர்வமாக அளவிடவும் தொடர்ந்து கண்காணித்து தரமான கல்வி வழங்குதலை உறுதி செய்தல் மிகவும் அவசியமானதாகும். அரசால் மேற்கொள்ளப்படும் கல்வி செயல் திட்டங்களின் முழு பயன்பாட்டினை அறிந்து கொள்ள பல நிலைகளில் மேற்கொள்ளப்படும் கற்றல் அடைவு நிலை மதிப்பிடுதல் வழிவகை செய்கிறது.

2012 முதல் 2014 வரை மேற்கொள்ளப்பட்ட மாநில அடைவுத் திறனாய்வு, உருப்படி துலங்கு கொள்கையை (Item Response Theory) பின்பற்றி நடத்தப்பட்டது. இந்த ஆய்வு மாணவர்களுக்கு எந்தெந்தத் திறன்களில் முன்னேற்றம் தேவை என்பதை வெளிப்படுத்துவதாக இருந்தது. அந்தத் திறன்களை முன்னேற்றுவதற்கு ஆசிரியர்களுக்கு, எந்தவிதமான உதவியும் பயிற்சியும் தேவை என்பதை மாவட்ட மற்றும் மாநில அலுவலரால் இந்த ஆய்விற்கான கருவிகள் உருப்படி துலங்கு கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, முறையாகவும், சரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாநில அடைவுத் திறனாய்விற்கான கருவிகள் மாணவர்களின் புரிதல் திறனையும் அவர்களுக்குள் புதைந்துள்ள

ஆழ்ந்த கருத்துகளையும் எவ்வாறு மதிப்பிடுவது என்று ஆசிரியர்களுக்கு வழிகாட்டுகிறது. அனைத்து ஆசிரியர்களுக்கும் கற்பிக்கும் கருத்துகளின் அடிப்படையில் சிந்தனையைத் தூண்டும் விதமாக வினாக்கள் கேட்கும் திறன் அவசியமானது எனவே, ஆசிரியர்களுக்கு இதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 2.19.1..மாநில அடைவுத் திறனாய்வு நடத்துவதற்கான வழிமுறைகள்

ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் சீரற்ற மாதிரி மூலம் தேர்வு செய்யப்பட்டது. 413 வட்டார வளமையங்களில் இருந்து 20% மாதிரி பள்ளிகளைத் தேர்வு செய்து, மூன்று, ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பிற்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதமும் கூடுதலாக எட்டாம் வகுப்பிற்கு மட்டும் அறிவியல் பாடங்களுக்கும் தேர்வு நடத்தப்பட்டது.

மாணவர்களின் பின்வரும் தனித்திறன்கள் மற்றும் பாடத்திறன்கள் மதிப்பீடு செய்வதற்கு இந்த ஆய்வு பயன்படுகிறது.

- தங்குதடையின்றிப் படித்தல்.
- கேட்ட செய்திகளை நினைவில் நிறுத்துதல்.
- இலக்கணப்பிழையின்றி எழுதுதல்

- மற்றவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக கருத்துக்களை எடுத்துரைத்தல்.


- எழுத்துக் கூட்டிப் படித்தல்.

- அன்றாட வாழ்வில் கணிதப்பயன்பாடு மற்றும் அடிப்படைத் திறன்களைப் பயன்படுத்துதல்.


- அறிவியல் அறிவு மற்றும் மாணவர்களின் மனப்பாங்கினைச் சோதித்து அறிதல்.

### 2.19.2. இணையதளத்தில் பதிவு செய்தல்


மாணவர்களின் திறனைப் பதிவு செய்வதற்காகவும், ஆய்வு செய்வதற்காகவும், தேர்வு முடிவுகளை அறிவிப்பதற்காகவும் ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டு அதில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. பள்ளி மற்றும் ஒன்றியம் வாரியாக ஒவ்வொரு மாவட்டமும் தங்கள் மாணவர்களின் செயல்திறனை, திறன் வாரியாக மாநில அடைவுத் திறனாய்வு அறிக்கை மூலம் அறிந்து கொள்ளலாம்.





படம் – 23. தமிழ்நாடு சராசரி மதிப்பெண்




படம்–**24.**SLAS 2015-16 சராசரி மதிப்பெண்





படம்–25.SLAS 2015-16 சராசரி மதிப்பெண்





படம்–26.SLAS 2015-16 சராசரி மதிப்பெண்

வரைப்படம் – 16. 50% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் சராசரி விகிதம் வகுப்பு – 3





ஆதாரம் : அடைவு ஆய்வு அறிக்கை

வரைப்படம் – 17. 50%மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் சராசரி விகிதம் வகுப்பு – 5





ஆதாரம் : அடைவு ஆய்வு அறிக்கை

வரைப்படம் – 18. 50%மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் சராசரி விகிதம் வகுப்பு – 8




ஆதாரம் : அடைவு ஆய்வு அறிக்கை




படம் – 27 தர அளவுகோல்

மாவட்டங்களின் முழுமையான செயல்திறன், 2013–14ஆம் ஆண்டில் சராசரி மதிப்பீடு 46.29 குறைவாக பெற்ற மாவட்டம் அடுத்த கல்வியாண்டில் 60.39 ஆக உயர்ந்துள்ளதை வெளிப்படுத்துகிறது. அதேபோன்று 2013–14 ஆம் ஆண்டில் சராசரி மதிப்பீடு 74.64 அதிகம் பெற்ற மாவட்டம் அடுத்த கல்வியாண்டில் 80.79 ஆக உயர்ந்துள்ளது. இந்த முன்னேற்றம் அனைத்து மாவட்டங்களிலும் பாடம் மற்றும் வகுப்புவாரியான வளர்ச்சியைக் காட்டுகிறது.

பள்ளிகளில் ஆசிரியர்கள், மாணவர்களிடம் வெளிப்படுத்தும் செயல்திறனை விளக்கும் வண்ணம் NAS மற்றும் SLAS முடிவுகள் குறுவளமைய பயிற்சியின்போது அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது. பயிற்சியின் போது ஆசிரியர்கள் திறன் அடிப்படையில் வினாத்தாள் தயாரித்தலில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் கற்றல் மற்றும் செயல்பாடுகளைத் திட்டமிடுதல் ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

வரும் கல்வியாண்டில், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட இருக்கும் பயிற்சிகள், மாணவர்களின் தேர்ச்சி நிலை குறைவாக உள்ள திறனுக்கு முக்கியத்துவம் அளித்து அதை மேம்படுத்தும் விதமாக வடிவமைக்கப்பட்டன. இதன் மூலம் SLAS மாணவர்களின் கற்றல் வெளிப்பாடுகளில் முன்னேற்றம் காணவும், தரமான கல்வியை மேம்படுத்தவும் வழிவகை செய்துள்ளது.

## 2.20. மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி

கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் – 2009 இன் வாயிலாக 6 முதல் 14 வயதுவரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச ஆரம்பக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற இலக்கினை அடைவதற்கு மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளையும் முறையான பள்ளிகளில் சேர்ப்பதின் வாயிலாகவே அடைய முடியும். அதாவது எந்த ஒரு மாற்றுத் திறன் கொண்ட


குழந்தைக்கும் அதற்கான கல்வி உரிமையையும் மேலும் கற்பதற்கேற்ற தகுந்த சூழ்நிலையும் அமையப் பெற வேண்டும். இந்த இலக்கினை அடைவதற்காக,

1. மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான பள்ளி ஆயத்தப் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2.பள்ளிக்கு வர இயலாத மாற்றுத் திறன்கொண்ட குழந்தைகளுக்கு வீட்டிலிருந்தே கற்றுக் கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுவாரியாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது அவர்களுக்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் பயன்கள் மூலம் என எடுத்துக் காட்டுகிறது.

வரைப்படம் – 19
மாற்றுத்திறனாளி குழந்தைகளின் விபரம் – ஆண்டு வாரியாக





ஆண்டு வாரியாக சேர்க்கை விபரம்

*ஆதாரம் : U -DISE*

**2015–16**ஆம் கல்வியாண்டில் கண்டறியப் பட்டுள்ள **1,37,432** மாற்றுத் திறனுள்ள குழந்தைகளுள் **1,36,263** குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப் பட்டுள்ளனர். இவர்களில் **18,312** குழந்தைகளுக்கு கற்றல் கற்பித்தல் கருவிகளும் மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயிலும் பள்ளிகளுக்கு MR Kit box-ம் ALIMCO நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் வருகைப் பதிவை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்தில் **18,000** குழந்தைகளுக்கு போக்குவரத்து பயணப்படியும் **6,000** குழந்தைகளுக்கு வழித்துணையாளர்படியும் வழங்கப் பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று வரும் **425** பார்வையற்ற மாணவருக்கு ரூ.**8.88** இலட்சம் செலவில் பிரெய்லி புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.



படம் – **28.** பார்வையற்ற மாணவன் கணிதச் செயல்பாடுகளுக்கு Taylors Frame பயன்படுத்துதல்



படம் – 29. பார்வைத் திறன் குறைபாடுடைய மாணவன் படிப்பதற்கு உருப்பெருக்கியை பயன்படுத்துதல்

உள்ளடங்கிய கல்வியை வலுவூட்டுவதற்காக பாடத்திட்டம் சார்ந்து 5 நாள்கள் பயிற்சி, 20,000 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், 10,000 உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது. சுகாதாரத் துறை மற்றும் SMILE TRAIN நிறுவனத்துடன் இணைந்து 783 அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தில் 2015–16ம் ஆண்டில் நடத்தப்பட்ட **SLAS** தேர்வில் மாற்றுத் திறனாளி மாணவர்களும் பங்கேற்றனர். மேலும் இக்குழந்தைகளுக்காக 378 பள்ளி ஆயத்தப்பயிற்சி மையங்களும் 413 ஆதாரவள மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

| அட்டவணை – **5.** ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியும் பயன்பெற்றோர் விவரம் | | |
|---|---|---|
| ஆண்டு | பயனடைந்த மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட நிதி (கோடிகளில்) |
| 2011–12 | 136782 | 41.03 |
| 2012–13 | 146282 | 36.57 |
| 2013–14 | 149476 | 25.41 |
| 2014–15 | 126641 | 31.66 |
| 2015–16 | 132353 | 37.06 |
| 2016–17 | 136263 | 40.88 |

| அட்டவணை – **6.** உதவும் கருவிகள் மற்றும் அறுவைசிகிச்சைப் பெற்றுப் பயனடைந்தோர் விவரம் | | |
|---|---|---|
| ஆண்டு | உதவும் கருவிகள் வழங்கப்பெற்றுப் பயனடைந்தோர் எண்ணிக்கை | அறுவை சிகிச்சைமேற்கொள்ளப்பட்டவர் எண்ணிக்கை |
| 2011–12 | 15882 | 386 |
| 2012–13 | 12819 | 432 |
| 2013–14 | 15634 | 687 |
| 2014–15 | 17850 | 1201 |
| 2015–16 | 18312 | 783 |

## 2.20.1. போக்குவரத்து / வழித்துணையாளர் வசதி

மாற்றுத் திறனாளி குழந்தைகள் பள்ளி, ஆதாரவள மையம் மற்றும் பள்ளி ஆயத்தப் பயிற்சி மையங்களுக்கு எவ்வித இடர்பாடுகளின் இன்றி வந்து செல்வதற்கு ஏதுவாகவும், வருகைப் பதிவை அதிகரிப்பதற்காகவும், போக்குவரத்து மற்றும் வழித்துணையாளர் வசதி வழங்கப்பட்டு வருகிறது.



படம் 30 – மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான போக்குவரத்து வசதி

2013–14 ஆம் ஆண்டில் 7,579 ஆக இருந்த பயனாளிகளின் எண்ணிக்கை 2015–16ல் 24,000 ஆக உயர்ந்துள்ளது. இதற்காக, 2015–16 ஆம் ஆண்டில் 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.20.2. உள்ளடக்கிய கல்விக்கான மாநில ஆதார வளமையம் – சென்னை

உள்ளடக்கிய கல்விக்கான மாநில ஆதாரவள மையத்தை சென்னை சாந்தோமில் உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மாநில ஆதார வளமையம், ஆரம்ப நிலை சோதனை, ஆரம்ப நிலை செயல்பாடுகள், தனிநபர் பாடத்திட்டம் (IEP), சிறப்புக் கல்வி, உடலியக்க பயிற்சி, பேச்சுப் பயிற்சி, மொழி திறன் பயற்சி, தொழில் திறன் பயிற்சி, புலன் ஒருங்கிணைப்பு பயிற்சி,உள்ளடங்கிய கல்விக்கான வழிகாட்டல், வளங்களின் துணையுடன் கற்றல் மேம்பாட்டிற்கான வழிகாட்டல் மற்றும் தொழில்திறன் மேம்பாட்டிற்கான வழிகாட்டல் ஆகியவற்றை வழங்குகிறது.





படம் – 31. மாநில ஆதாரவள மையத்தில் நடைபெறும் செயல்பாடுகள்

மேற்காண் சேவைகள் குழந்தைகளுக்கு வழங்கப் படுவதோடு இம்மையத்திலுள்ள உள்ளடங்கிய நூலகத்தின் வசதி, நவீன தகவல் தொழில் நுட்ப நடைமுறைகள், சமவாய்ப்புடன் கற்க உகந்த கற்றல் முறைகள், போன்றவற்றின் துணையுடன் தடைகளற்ற கல்வி சூழலில் பெற்றோருக்கும் சிறப்பாசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. பிற பயனாளிகளான குழந்தைகளை கவனிப்பவர்கள் பெற்றோர் மற்றும் பிறப்பயனாளிகளான குழந்தைகளை கவனித்துக் கொள்வோர், சமூக அமைப்புகள் ஆகியோருக்கு பயிற்சி பெற்ற அனுபவமிக்க துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிகள், பணிமனை வாயிலாக ஆலோசனை மற்றும் தரமான வழிகாட்டல் வழங்கப்படுகின்றன.

### 2.20.3. மாநில ஆதார வள மையத்தில் ஆரம்ப நிலை செயல்பாடுகள்

ஆரம்ப நிலை செயல்பாடுகள் என்பது சிக்கலான சிறு வயதில் குழந்தைகள் வயதுக்கேற்ற வளர்ச்சியும் முன்னேற்றமும் பெறுவதை ஊக்குவிக்க குடும்பத்தினருடன் ஒன்றிணைந்து சேவையாற்றும் முறையாகும்.





படம் – 32. பேச்சுப் பயிற்சி படம்–33 நுண்திறன் பயிற்சி

ஆரம்ப நிலை செயல்பாடுகளின் வாயிலாக 0 முதல் 5 வயது வரையுள்ள மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு வயதிற்கேற்ற வளர்ச்சியும் மற்றும் பெற்றோர்களுக்கு சரியான வழிகாட்டுதலும் வழங்கப் படுகிறது. சிக்கலான ஆரம்ப நிலையில் 0 முதல் 5 வயது வரையுள்ள மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு UNICEF நிறுவன நிதியுதவியுடன் ஆரம்ப நிலை செயல்பாடுகள் ஒரு முன்னோட்ட திட்டமாக மாநில ஆதாரமையத்தில் ரூபாய் 15.94 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பயனாக 0 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளை ஆரம்ப நிலையில் மதிப்பீடு செய்தல், உடலியக்க பயிற்சி வழங்குதல், பெற்றோர்களுக்கான பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்கிய குழந்தைகளின் இயலா நிலையை இணைப்பதன் வாயிலாக இயன்றவரை விரைவில் குழந்தைகளை முறையான பள்ளியில் சேர்க்க ஏதுவாக அமைகிறது.

ஆரம்ப நிலை செயல்பாடுகளின் மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் தனியாக தனிநபர் பாடத்திட்டம் (IEP) மற்றும் குழந்தையின் சுயவிபர பதிவுகள் (UPANEETHA Software) மூலம் குழந்தையின் 600 வகையான திறன்கள் பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. குழந்தைகளின் பெற்றோர்களும், அனைத்து இடைப்பட்டு நிகழ்வுகள் பயிற்சிகள் சமூக மனமகிழ் செயல்பாடுகள் ஆகியவற்றில் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.



படம் 34 – தலைமையேற்று வழிநடத்துதல்



386-4-9



படம் 35 – சிறப்பு தேவையுள்ள குழந்தைகளை மதிப்பீடு செய்தல்

## 2.21. கட்டமைப்பு வசதிகள்

குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சியான பள்ளிச் சூழலை உருவாக்கி, மாணவர் வருகையை அதிகரித்து, கல்விசார் செயல் திறனை மேம்படுத்துதல் தான் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் நோக்கமாகும். கிராமப்புறங்களில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் சுயமதிப்பை மேம்படுத்துவதிலும் மாணவர்களின் இடைநிற்றலை அறவே இல்லாமல் செய்வதிலும் பள்ளிச் சுற்றுச்சூழல் பெரும் பங்கு வகிக்கிறது.சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம்

மாணவர்களின வருகை அதிகரிப்பதுடன் அப்பகுதியின் எழுத்தறிவு விகிதமும் உயருகிறது.

## 2.21.1. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள்

**2011–12**ஆம் ஆண்டு முதல் **2015–16** வரை வழங்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு

| வ. எண் | கட்டடப் பணியின் வகை | எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (கோடிகளில்) |
|---|---|---|---|
| 1. | புதிய தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் | 167 | 27.51 |
| 2. | புதியதாக உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிக் கட்டிடங்கள் | 108 | 18.65 |
| 3 | கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்கள் | 9881 | 524.55 |
| 4. | பொதுக் கழிப்பறைகள் | 6822 | 63.99 |
| 5. | மாணவிகளுக்கான கழிப்பறைகள் | 15059 | 127.12 |
| 6. | மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான கழிப்பறைகள் | 7547 | 37.74 |
| 7. | குடிநீர் வசதி | 6016 | 15.78 |
| 8. | சுற்றுச் சுவர் | 9242 | 108.51 |
| 9. | தலைமை ஆசிரியர் அறை | 1237 | 50.94 |
| 10. | பழுது பார்த்தல் | 306 | 6.21 |
| 11. | சாய்வு தளங்கள் | 6328 | 10.13 |
| 12. | உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டிடங்கள் | 5 | 3.03 |

| | | | |
|---|---|---|---|
| 13 | கஸ்தூரிபா காந்தி வித்யாலயா பள்ளிக் கட்டிடங்கள் | 15 | 6.79 |
| 14 | முழு பள்ளி வளர்ச்சி திட்டம் | 58 | 1.16 |
| | **மொத்தம்** | **62791** | **1002.11** |



படம் 36 – கூடுதல் வகுப்பறைக் கட்டடம்



படம் 37 –உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டடம்

**2.21..2. கழிவறை மற்றும் குடிநீர் வசதிகள்**

"முழு சுதாதார தமிழகம்" என்ற திட்டம் மிகுந்த பயன்பாட்டுடன் கடந்த 2 வருடங்களாக செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம் ஒவ்வொரு மாணவருக்கும் சுகாதாரம் சார்ந்த வசதிகளான கழிப்பறைகள், பாதுகாப்பான குடிநீர் வசதி மற்றும் பள்ளித் தூய்மை ஆகியவற்றிற்கு வழி வகுக்கின்றது. இத்திட்டத்தின் குறிக்கோளை அடைவதற்கு பின்வரும் தலைப்புகளான சுத்தம்

மற்றும் சுகாதாரம், திறந்த வெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் இன்னல்கள், இரசாயன மாசுகளிலிருந்து சுற்றுச்சூழலை பாதுகாத்தல், மாணவிகளுக்கிடையே தன் சுத்தம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த வழிமுறைகளை பின்பற்றுதல் தொடர்பான தலைப்புகளில் பள்ளி அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டன.




படம் 38 – கழிப்பறைகள்

மாணவ, மாணவிகளுக்குத் **11,698** தனித்தனி கழிப்பறைகள் ஏற்படுத்தப்பட்டது. மேலும் உபயோகப்படுத்த முடியாமல் இருந்த **10,776** கழிப்பறைகள் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

## 2.22. சிறப்பு முனைப்புகள்

பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை ஊரக, நகர்புற, உள்ளாட்சி துறைகள் வாயிலாகப் பராமரிப்பதில் தமிழக அரசு ஒரு முன்னோடியாக விளங்குகிறது. அனைத்துப் பள்ளிகளிலும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டாலும் அவற்றைப்

பராமரிப்பது மிகவும் கடினம். இந்த நீண்ட நாள் தேவைக்கு முதன்முறையாக தமிழக அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையால் அனைத்து அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பகுதிநேர துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒவ்வொரு பள்ளியின் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கான பொருட்கள் வாங்குவதற்கும் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவது உறுதிசெய்யப்படுகிறது. தற்சமயம் அனைத்து பள்ளிகளிலும் கழிப்பறைகளை பராமரிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. இந்தக் கூடுதல் வசதியினால் மாணவர்களை பள்ளிகளில் தக்க வைத்துக்கொள்ள முடிகிறது.

தமிழக அரசின் இந்த முயற்சி, மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையால் பெரிதும் பாராட்டப்பட்டதுடன், பிற மாநிலங்களும் தமிழ்நாட்டை உதாரணமாக கொண்டு பள்ளிக் கழிப்பறைகளைப் பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளன. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் வழங்கப்படும் பள்ளிப் பராமரிப்பு மானியத்தில் கழிப்பறைகளைப் பழுது பார்க்கப் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

## 2.22.1. சுத்தம் மற்றும் சுகாதாரம் சார்ந்த பயிற்சி – (குடிநீர், சுகாதாரம் மற்றும் சுத்தம்)

தமிழக தொலைநோக்கு 2023ல் குறிப்பிட்டுள்ள 10 கருப்பொருட்களில் ஒன்று; “தமிழ்நாடு சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், உலகளாவிய வசதியுடைய குடியிருப்புகள், குடிநீர் மற்றும் சுகாதாரம், ஆற்றல், போக்குவரத்து, பாசனம், இணைப்பு, உடல்நலம் மற்றும் கல்வி ஆகியவைகளை வழங்கும்". "**முழு சுகாதார தமிழகம்**" திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டை திறந்தவெளியில் மலம் கழிக்கும் நிலை இல்லாத மாநிலமாக மாற்றுவதுடன் அனைத்து பள்ளிகளையும் தூய்மையாகப் பராமரிப்பதும் இலக்குகளில் ஒன்றாகும். இந்தியாவில் யுனிசெப் நிறுவனத்தின் ஒத்துழைப்போடு சுத்தம் மற்றும் சுகாதாரம் சார்ந்த பயிற்சியினை – மாநில அளவு, மண்டல அளவு, மாவட்ட அளவு, வட்டார மற்றும் பள்ளி அளவில் சிறந்த முறையில் நடத்தி மாணவர்களிடையே சுத்தம் மற்றும் சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வரும் ஒரு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும்.

## 2.22.2. முழு சுகாதார தமிழக திட்டத்தின் விளைவு

முழு சுகாதார தமிழக திட்டப் பயிற்சியின் விளைவாக, **2015–16** ஆம் ஆண்டு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் கட்டப்பட்ட அனைத்து புதிய தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள், தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள் மற்றும்


 

படம் 39 – குழு கை கழுவும் நிலையம்

கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் ஆகியவற்றுள் குழுவாகக் கை கழுவும் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 2.22.3. பள்ளி கட்டிடத்தினை கற்றல் உபகரணமாக பயன்படுத்துதல் – பாலா செயல்பாடுகள்

புதிய சிந்தனை, வழக்கத்திலிருந்து சிறு மாற்றம் இவை புதுப் புதுத் திட்டங்களை வகுப்பதற்கு வழிவகை செய்கின்றன. இதன் விளைவாக புதுமையான "பாலா செயல்பாடுகள்" **2013–14** ஆம் ஆண்டிலிருந்து அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் கட்டப்படும் அனைத்துக் கூடுதல் வகுப்பறைகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் பள்ளியில் கட்டமைப்பில் உள்ள அனைத்து இடங்களையும் கற்கும் தளங்களாக மாற்றி பள்ளிக்கு ஒரு நேர்த்தியான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களின் சேர்க்கையை ஊக்கப்படுத்தி, அவர்களின் பள்ளி வருகையை அதிகரிக்கிறது.



படம் 40 – பாலா செயல்பாடுகள்

"பாலா செயல்பாடுகள்" மாணவர்களைப் பள்ளிக்கு ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை பள்ளி நேரம் தாண்டியும் ஆக்கப்பூர்வமாக கற்றல் செயல்பாடுகளில் ஈடுபட உதவுகிறது.தற்போது தமிழ்நாட்டில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் கட்டப்படும் அனைத்து புதிய வகுப்பறைக் கட்டடங்களிலும் பாலா செயல்பாடுகளுக்கு தேவைப்படும் நிதியினை பள்ளிக் கட்டிட நிதி ஒதுக்கீட்டுடன் இணைத்து சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

## 2.23. பள்ளி மானியம் மற்றும் பராமரிப்பு மானியம்

2015–16 ஆம் ஆண்டிற்கு ரூ.30.48 கோடி பள்ளி மானியம் அனுமதிக்கப்பட்டது. அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும்

பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை அலகுக்கு ரூ.5000/–மும், 6 முதல் 8 வகுப்பு வரை அலகுக்கு ரூ7000/–மும் பள்ளி மானியம் வழங்கப்படுகிறது. 1 முதல் 5 வகுப்புகள் மற்றும் 6 முதல் 8 வகுப்புகள் ஆகியவை ஒரே பள்ளியாக செயல்பட்டாலும் தனித்தனி அலகுகளாகக் கருதப்பட்டு பள்ளி மானியம் வழங்கப்படும். 1 முதல் 8 வகுப்பு வரை உள்ள பள்ளியானால் ரூ. 12000/– (ரூ 5000+ரூ 7000) பள்ளி மானியமாக வழங்கப்படும்.

வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் கற்பித்தலுக்கான பொருட்களை வாங்கவும் பள்ளி மானியம் உபயோகிக்கப்படுகிறது. தேவைக்கேற்ற பயன்பாட்டுப் பொருட்களை மாணவர்களுடைய கல்விச் செயல்கள் மற்றும் இணைச் செயல்கள் ஆகியவற்றில் திறனை அதிகரிக்க தேவைக்கேற்ற பொருள்களை வாங்கவும் பள்ளி மானியம் உதவுகிறது. மேலும் கட்டிட பராமரிப்பிற்கு உதவும் வகையில் சிறிய அளவிலான அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கவும் தேவையான கட்டிடப்பணிகளை செய்து கொள்ளவும் பள்ளி மானியம் உதவுகிறது. 2016–17 ஆம் ஆண்டு பள்ளி மானியமாக ரூ.30.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி பராமரிப்பு மானியம் அனைத்து அரசுப் பள்ளிகளில் உள்ள கற்றல் வகுப்பறைகளைக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது. 2015–16 ஆம் கல்வியாண்டில் ரூ. 27.44 கோடி பராமரிப்பு மானியமாக அனுமதிக்கப்பட்டது. அரசுப் பள்ளி வகுப்பறை மற்றும்

கழிப்பறைகளில் சிறிய அளவிலான பழுதுகளைச் செய்யவும் கட்டமைப்பு வசதிகளைப் பராமரிக்கவும் பயன் படுத்தப்படுகிறது. 2016–17 ஆம் ஆண்டு ரூ.27.50 கோடி பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**2.24 பிற செயல்பாடுகள் – தற்காப்புப் பயிற்சி**

தமிழக அரசு பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைப் பள்ளிகளில் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்களில் ஒன்றான தற்காப்புப் பயிற்சியானது அரசு நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவியருக்கு 2015–16 ஆம் கல்வி ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்பயிற்சியானது தரமான தற்காப்புக் கலை சார்ந்த பாடங்கள், தங்களுக்கு ஏற்படுகின்ற ஆபத்தை புரிந்து கொள்ளுதல், சிறிய மற்றும் பெரிய தாக்குதல்களை தன்னம்பிக்கையோடு எதிர்த்துத் தாக்குதல், பேச்சு, கராத்தே சார்ந்த உடலியல் உத்திகள், போர்க்கலை பயிற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

25 முதல் 100 பெண் குழந்தைகள் பயிலும் உயர் தொடக்கப் பள்ளிகளில் 7 மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் 1000 மாணவிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்பயிற்சிக்காக தேர்வு செய்யப்பட்டனர். இதன்மூலம் 30,000 பெண் குழந்தைகள்

பயனடைந்துள்ளனர். இப்பயிற்சியின் மூலம் தங்கள் குழந்தைகளின் மனப்பாங்கிலும் செயல்பாடுகளிலும் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பெரும்பான்மையிலான பெற்றோர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பயிற்சி பெற்ற மாணவிகள் அதிக தன்னம்பிக்கையும், மேம்பட்ட சுயமுனைப்பையும் வளர்த்துக்கொண்டனர்.

## 2.25. வழிநடத்தும் நிறுவனங்கள்

தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், மத்தியப் பல்கலைக் கழகங்கள், உயர்கல்வித்துறை நிறுவனங்கள் முதலியவை புதுமையான கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள், மாணவர் கருத்துப் பரிமாற்றம், விளக்கக் கூட்டங்கள் மாணவர்களைப் பார்வையிடுதல் போன்றவற்றின் வாயிலாக அரசுப் பள்ளிகளை வழி நடத்துகின்றன. இவை அறிவியல், கணக்குப் பாடங்களை இயல்பாகவே விரும்பிக் கற்றுக் கொள்ளும் வகையிலும் உதவுகின்றது.

மதுரை, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர், அங்குள்ள பொறியியல் கல்லூரிகளின் ஆய்வகங்களைப் பார்வையிட அழைத்துச் செல்லப்படுகின்றனர். அறிவியல் பரிசோதனைக் கருவிகளையும், நூல்களையும் பார்வையிடுவதனால், மிகுந்த மகிழ்ச்சியும் அனுபவமும் பெறுகின்றனர். அங்குள்ள பேராசிரியர்கள் செய்து

காட்டும் ஆய்வுகளைக் காணும்போது, தாங்களும் உயர்கல்விக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுகிறது. புதிய கற்றல் சூழலும் விரிவான விளக்கப்பாடங்களும் அவர்களை ஆர்வத்துடன் கற்றுக் கொள்ளத் தூண்டுகிறது.





படம் – 41. பொறியியல் கல்லூரிகள் – மாணவர்கள் பார்வை

## 2.26. சமுதாயப் பங்கேற்பு விழிப்புணர்வுத் திட்டம்

2013–14 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளான, கலாஜதா, பள்ளிக் குழந்தைகளுக்கான போட்டிகள், ஆண்டு விழா நிகழ்வுகள், சுவரொட்டி உருவாக்குதல் ஆகியன நடைபெற்று வருகின்றன. ஆண்டொன்றுக்கு 9.99 கோடி ரூபாய் செலவில் தமிழகம் முழுவதும் உள்ள குழந்தைகள், பெற்றோர், ஆசிரியர், பொதுமக்கள் ஆகியோர்க்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, 2015–16 ஆம் ஆண்டுக்கும் சமுதாய விழிப்புணர்வுத் திட்டத்திற்கென 9 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள், சட்ட சபையில் 110 விதியின் கீழ் 23.9.2015 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி கீழ்க்கண்ட சமுதாய விழிப்புணர்வுக்கான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.26.1. பள்ளிக் குழந்தைகளுக்கான போட்டிகள்

குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்விச் சட்டத்தின் உண்மையான சாரத்தை குழந்தைகளுக்கு உணர்த்தும் வகையில் 2015–16 ஆம் கல்வியாண்டில் பெண் கல்வி, மகளிர் ஆற்றல் மேம்பாடு, சுகாதாரம், போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தங்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் மாணவர்களிடையே சுமுக உறவுகளை வளர்க்கவும், வாய்ப்பளிக்கும் வகையில் ஓவியம், கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் தமிழகத்தின் 33,064 அரசு தொடக்க, உயர் தொடக்க, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் முதல் வகுப்பு தொடங்கி 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கிடைய ரூபாய் 2.2 கோடி செலவில் நடத்தப்பட்டன.



படம்–42. மாவட்ட அளவிலான பேச்சு போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி

### 2.26.2. சுவர் ஓவியங்கள்

தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் **2,184** தொடக்க, உயர் தொடக்கப்பள்ளிகளில் **2015–16** ஆம் கல்வியாண்டில் சுவரோவியங்கள் வரையப்பட்டன. குறிப்பிடத்தக்க வகையில் குழந்தைகள் விரும்பும் ஓவியங்கள், ஒலிப்பு முறையிலான எழுத்துக்கள் முதலியவை வகுப்பறைகளுக்குள் ரூபாய் **3.28** கோடி செலவில் வரையப்பட்டன. இத்தகு மனங்கவர் வண்ண ஓவியங்கள் மாணவர்களின் ஆங்கில வாசிப்பை மகிழ்வுடன் விளையாட்டு முறையிலும் கற்கத் தூண்டுதலாக இருந்ததோடு கற்றல் துணைக்கருவியாகவும் பயன்பட்டது. இவ்வாறு வரையப்பட்ட ஒலிப்பு முறையிலான எழுத்துக்களைக் கொண்ட ஓவியங்கள் மாணவர்களுக்கு சரியான உச்சரிப்பைக் கற்பிக்க ஆசிரியர்களுக்கும் வழிகாட்டுவதாக அமைந்தன.





படம் **43** – சுவர் ஓவியங்கள்

### 2.26.3. பள்ளி ஆண்டு விழா

2015–16 ஆம் கல்வியாண்டில் 5,195 அரசு தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் திறன்களை வெளிக் கொணர்ந்து சமுதாயத்திற்குத் தெரியப்படுத்தவும், குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்விச் சட்டம் 2009 பற்றிய விழிப்புணர்வை மாணவர்கள், பெற்றோர், பொதுமக்களிடையே ஏற்படுத்தவும் ரூபாய் 2.84 கோடி செலவில் ஆண்டு விழா கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் வழியாக அன்றாட பள்ளி நிகழ்வுகளில் உள்ளூர் சமுதாயத்தின் ஈடுபாட்டையும் பங்கேற்பையும் மேம்படுத்த முடிந்தது.



படம் 44 – பள்ளிகளில் ஆண்டுவிழா

### 2.27. கல்வி மேலாண்மை தகவல் முறைமை (EMIS)

கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை திட்டம் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிகள், மாணவர்கள் மற்றும்

ஆசிரியர்கள் தொடர்பான விவரங்கள் பள்ளிகளின் மூலம் சேகரிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தற்போது பள்ளிகளிலிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு எளிதாக தரவடிப்படையில் வரிசைப்படுத்தப் படுகின்றன. துறைகளுக்கிடையேயும், துறைக்குள்ளேயும் அலுவலக ரீதியான தொடர்பு கொள்ளவும் மாணவர்களுக்கான நலத்திட்டங்கள் பயனாளிகளுக்குச் சென்றடைவதை அரசு நிர்வாகம் எளிதாக கண்காணிக்கவும் மேலான்மை தகவல் முறைமை வழியாக கண்காணிக்க முடிகிறது. இத்திட்டத்தின் மூலம் மாணவர்களின் விவரங்கள் குறிப்பிட்ட கால அளவிற்கு தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யவும் கல்வி மேலாண்மை தகவல் முறைமை உதவுகிறது. இம்முறையில் பள்ளி இறுதி நிலை முடிவுறும் முன்பே இடை நிற்கும் மாணவர்களை கண்டறியவும் இயலும். இத்திட்டத்தினை பயனுள்ள வகையில் செயல்படுத்தும் விதமாக உயர்தர வழங்கிகள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய மாநில கல்வி மேலாண்மை தகவல் மையம் பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் **2014–15** ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

**2.28. பள்ளி மேலாண்மைக் குழு**

சமுதாய பங்கேற்பு கல்வி மேலாண்மையை அடிப்படையிலிருந்து பரவலாக்கவும் குழந்தைகளுக்கான கல்விசார் அரசின் செயல் திட்டங்களை அனைத்துப் பள்ளிகளிலும்

நடைமுறைபடுத்தவும் மிகவும் அவசியமாகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ல் அனுமதிக்கப்பட்டுள்ள சலுகைகளையும், கல்வி உரிமையினையும் உறுதி செய்யும் பொறுப்பு பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் உள்ளூர் அதிகாரத்துவ அமைப்புகளைச் சார்ந்ததாகும். குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் பெற்றோர்களை உள்ளடக்கிய, அதிகாரப் பகிர்வினை உறுதி செய்வதில் பள்ளி மேலாண்மைக் குழு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. 42,167 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளையும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தில் உள்ள சிறப்பம்சங்களைக் கொண்ட பள்ளிகளாக மாற்றுவதற்கான பள்ளி வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் இக்குழுவின் முக்கியப் பணியாகும்.

சமுதாயத்தினர் குறிப்பாக பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2009ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை அறியவும் பள்ளி மேலாண்மைக் குழு அமைப்பு, அதன் பங்கு ஆகியவற்றை அறியும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 2012 முதல் 2016 ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்டுள்ளன.

| அட்டவணை– பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி | | | |
|---|---|---|---|
| வ. எண் | ஆண்டு | பயிற்சி பெற்றபள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் எண்ணிக்கை | தொகை (கோடிகளில்) |
| 1 | 2011-12 | 5,83,936 | 27.06 |
| 2 | 2012-13 | 5,34,420 | 24.04 |
| 3 | 2013-14 | 1,33,605 | 4.00 |
| 4 | 2014-15 | 2,21,700 | 6.65 |
| 5 | 2015-16 | 2,22,798 | 6.68 |

**2.29. சிறந்த பள்ளிக்கான விருது**

மனிதர்கள் சிறப்பாகச் செயல்படச் சிறந்த ஊக்கிகள் பரிசுகளும் பாராட்டுகளுமே. ஆகவே, பள்ளிகளுக்கிடையே நல்லதொரு போட்டி நடத்திச் சிறந்த பள்ளிகளைக் கண்டறிந்து விருது வழங்க, 'சிறந்த பள்ளி விருது' ஏற்படுத்தப்பட்டது.

பள்ளிகளில் கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளிலும் குழந்தை நலனிலும் அக்கறை காட்டி பள்ளிச் செயல்பாடுகளை உயர்த்த இவ்விருது பெரிதும் பயன்படும். இதற்கென அமைக்கப்பட்ட குழு, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும்

மூன்று பள்ளிகள் வீதம் தெரிவு செய்யும். புதுமையான பல்வேறு கற்பித்தல் முறைகளை நடைமுறைப் படுத்தும் பள்ளிகளை இவ்விருது மேலும் ஊக்குவிக்கும்.

பல பள்ளிகள் புதுமையான கற்பித்தல் முறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவை அங்கீகரிக்கப் படுவதனால், மற்றப் பள்ளிகள் அவற்றைப் பின்பற்றிச் சிறந்த பள்ளிகளாக உருவாக வாய்பேற்படும்.

## 2.30. வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு

தொடக்கக் கல்விக்கென 2016–17இல் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.9447.27 கோடிகளாகும். அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி ரூ.2338.32 கோடிகளாகும்.

## 2.31. முடிவுரை

சரியான திட்டமிடலும் சிறப்பான நடைமுறைப் படுத்துதலும் தொடர் கண்காணிப்பும் இருந்தால், அச்செயல் அடிமட்டம் வரை ஊடுருவி எதிர்பார்த்த நற்பயனை விளைவிக்கும்.

“கல்விபெறாத குழந்தை மண்ணுள் புதைந்துள்ள பளிங்கு போன்றது. அப்பளிங்கினைப் பலவண்ணத்தோடு ஒளிரும்படி அழகுற மெருகேற்றுபவர் பட்டை தீட்டுபவரே”– எடிசன்.

தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தித் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதனாலும் கற்றலுக்கேற்ற சூழல் உருவாக்கப் பட்டுள்ளதாலும் பள்ளிச்சேர்க்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தகுதிமிக்க திறமையான ஆசிரியர்களால் தரமான கல்வி வழங்கி ஊக்குவிப்பதனால் திறன்மிக்க மாணவர்கள் உருவாக்கப் படுகிறார்கள். ஒவ்வொரு குழந்தையிடமும் பொதிந்துள்ள தனித்தன்மைகளைக் கண்டறிந்து, அவர்களின் விருப்பம், ஆர்வத்திற்கேற்ப நடத்தைகளில் மாற்றங்களைக் கொணர்வதோடு, சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் திறன்களும் வளர்க்கப்படுகின்றன. பார்போற்றும் பாரதத்தை உருவாக்கும் நோக்கில், தொடக்கக் கல்வி இயக்ககமும் அனைவருக்கும் கல்வி இயக்கமும் இணைந்து வகுப்பறைச் சவால்களை எதிர்கொள்ள பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஈடுபாடு, உழைப்பு, தொடர்முயற்சி ஆகியன என்றென்றும் நல்ல விளைவுகளையே தோற்றுவிக்கும்.

## 3. இடைநிலை, மேல்நிலைக் கல்வி மற்றும்

## அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

### 3.1 இடைநிலைக் கல்வியின் முக்கியத்துவம்

சமூக வளர்ச்சிக்கும் தனிமனித முன்னேற்றத்திற்கும் கல்வி ஒரு முக்கிய காரணி ஆகும். கல்வி சமூகப் பங்களிப்பிற்குத் தேவையான திறன்கள் மற்றும் தகுதிகள் பெறுவதற்கு இன்றியமையாத ஒரு கருவியாக விளங்குகிறது. கல்வியே சமூகத்தில் ஒருவர் பெறும் வெற்றியை தீர்மானிக்கிறது. தொடக்கக் கல்வி ஒருவரைச் சமுதாயத்திற்கு அறிமுகப் படுத்தவும், இடைநிலைக் கல்வி மதிக்கத்தக்க சமூக வாழ்க்கையை மேற்கொள்ளவும் தேவையான புதிய உத்திகளைப் பெறவும் பயிற்சி அளிக்கிறது.

இடைநிலைக் கல்வி, தொடக்கக்கல்விக்கும் உயர் கல்விக்கும் இடையே ஒரு தொடர்பினை ஏற்படுத்துகிறது. மாணவர்களின் எதிர்காலம் என்பது இடைநிலைக் கல்வி அளவில் பெறும் கல்வியின் தன்மையினைப் பொறுத்தே அமைகிறது. மாணவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு இடைநிலைக் கல்வி சிறந்த வழிகாட்டும் கருவியாக விளங்குகிறது. போட்டிகள் நிறைந்த சமூகச் சூழலில் மாணவர்கள் அனைவருக்கும் ‘தரமான இடைநிலைக் கல்வியை’ அளிப்பது மிகுந்த முக்கியத்துவம்

பெறுகிறது. மாணவர்கள் அனைவருக்கும் சமகல்வி வாய்ப்புகளை வழங்கி, அவர்கள் சமூகத்திற்கு பயனுள்ள பங்களிப்பினை அளித்திட ‘‘இடைநிலைக் கல்வி’’ சிறந்த காரணியாக விளங்குகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இடைநிலைக் கல்வியை ஊக்குவிக்கவும், தொடர்ந்து நிலை நிறுத்தவும், புதுமைகளை புகுத்தி கடந்த 5 ஆண்டுகளாக பள்ளிக் கல்வித்துறைக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளார்கள். விலையில்லாப் பாடநூல்கள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள், காலணிகள், மதிய உணவு, புத்தகப்பை, கணித உபகரணப் பெட்டி, புவியியல் வரைபடப் புத்தகம், மிதிவண்டி, மடிக்கணினி, பேருந்து பயண அனுமதிச் சீட்டு, ஊக்கத்தொகை முதலான மாணவர் நலத்திட்டங்கள் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், இடை நிற்றலைக் குறைக்கவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1 முதல் 9 ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களின் பாடப்புத்தகச் சுமையினைக் குறைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ‘‘முப்பருவக் கல்வி முறை’’யானது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கல்வி சீர்திருத்தங்களில் மிகச் சிறந்த ஒன்றாகும்.

தமிழக அரசின் மாணவர் நலத்திட்டங்கள் பள்ளிக் கல்வித் துறையின் ஒருங்கிணைந்த முயற்சிகளுடன் இணைந்து ஆக்கப்பூர்வமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளாக இடைநிலைக் கல்வியில் சீரான வளர்ச்சியையும் சிறந்த முன்னேற்றத்தையும் பதிவு செய்துள்ளது.

## 3.2. ஐந்தாண்டு சாதனைகள் (2011–12 முதல் 2015–16 வரை)

நிதி ஒதுக்கீடு

- பள்ளிகளில் தரமான கல்வி வழங்குதல், ஆசிரியர்கள் நியமனம் செய்தல், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் மாணவர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியனவற்றை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு **2011–12** முதல் **2015–16** ஆம் ஆண்டு வரையிலான **5** ஆண்டுகளுக்குப் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.**39,839.87** கோடியையும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்திற்கு ரூ.**1,795.66** கோடியையும் மாநிலத்தின் வரவு செலவு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வொதுக்கீடு பள்ளிக் கல்வித் துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் **48.30** விழுக்காடாகும். அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட

பள்ளிக் கட்டடம், கூடுதல் வகுப்பறைகள், மாணவியர் விடுதி மற்றும் மாதிரிப் பள்ளிகளின் கட்டடப் பணிகளை நிறைவு செய்திட கூடுதல் நிதி ரூ.**1,455.69** கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

<u>மாணவர் சேர்க்கையில் வளர்ச்சி நிலை</u>

- மாணவர்களின் நலத்திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதன் விளைவாக இடைநிலைக் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் (GER) **2010–11** இல் **88.52%** லிருந்து **2015–16** ஆம் ஆண்டில் **93.15%** ஆகவும், மேல்நிலைக் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் (GER) **2010–11** ஆம் ஆண்டில் **55.92%** லிருந்து **2015–16** ஆம் ஆண்டில் **77.64%** ஆகவும் உயர்ந்துள்ளது. (ஆதாரம் : ***UDISE)***

- இடைநிலைக் கல்வியில் இடைநிற்றல் விகிதம் (Dropout rate) **2010–11** ஆம் ஆண்டில் **11.21%** லிருந்து **2015–16** ஆம் ஆண்டில் **3.76%** ஆகக் குறைந்துள்ளது. (ஆதாரம் : ***UDISE)***

- மாநில அளவில் பத்தாம் வகுப்பு (SSLC) பொதுத் தேர்வு முடிவுகள் **2011–12** ஆம் ஆண்டில் **86.00%** லிருந்து **2015–16** இல் **93.60%** ஆக உயர்ந்துள்ளது. அதே போன்று

மேல்நிலைப் பொதுத் தேர்வில் (HSC) தேர்ச்சி விழுக்காடானது **2011–12** ஆம் ஆண்டில் **87.00%** லிருந்து **2015–16** ஆம் ஆண்டில் **91.40%** ஆக பாராட்டத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. (ஆதாரம்: ***DGE)***

**3.3. தொலைநோக்கு**

பொதுமக்களின் நலனுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட **"தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023",** அவருடைய தொலைநோக்குப் பார்வை, அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவற்றிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். 2023 ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தை இந்தியாவிலேயே மிகவும் வறுமையில்லா வளமான, முன்னேறிய மாநிலமாக உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழகத்தை ஒருங்கிணைந்த வளர்ச்சிப்பாதையில் வேகமாகக் கொண்டு செல்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே, இத்திட்டம் தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும் சமூகப் பொருளாதார ஏற்ற தாழ்வின்றி மிகச்சிறந்த உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதார வசதிகளை எளிதில் பெற்று மகிழ்வுடன் வாழ வழிவகுக்கிறது. மேலும் ஒவ்வொருவரையும் கல்வி கற்றவராகவும், போதுமான திறன்களைப் பெற்றவராகவும் மேம்படுத்தி அவர்களின் வாயிலாக நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சி, தூய்மையான

சுற்றுச்சூழல், சமுதாயத் தொடர்பு மற்றும் அதிக வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை உருவாக்கிடவும் இத்திட்டம் வழி வகுக்கிறது.

*அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA)* மத்திய மாநில அரசுகளால் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டமாகும். 14 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட அனைத்துப் பள்ளி வயது குழந்தைகளுக்கும், தரம் வாய்ந்த, எளிதில் பெறத்தக்க, நல்ல வாய்ப்புகளுடன் கூடிய இடைநிலைக் கல்வியினை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கல்வியின் தரத்தை உயர்த்துதல், பாலின இடைவெளியைக் குறைத்தல், சமூகப் பொருளாதார ஏற்ற தாழ்வுகளை நீக்குதல், மாற்றுத்திறனாளி மாணவர்களின் திறன்களை மேம்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் பிற நோக்கங்கள் ஆகும். 2017 ஆம் ஆண்டில் அனைவரும் இடைநிலைக் கல்வியினைப் பெற்றிடவும், 2020ஆம் ஆண்டில் அதனை நிலைநிறுத்திக் கொள்ளவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீடானது 60:40 ஆக உள்ளது.

### 3.4. குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் :

தமிழக அரசு இடைநிலைக் கல்விக்கென தொலை நோக்குடன் கூடிய வளர்ச்சிப் பார்வையை அளவுகோலாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பல ஆண்டுகளாக கல்வியில்

தொடர்ச்சியான பல புதுமைகளைப் புகுத்தி மிகுந்த முயற்சியுடன் ஆய்வுகளை ஆண்டுதோறும் மேற்கொண்டு வருகிறது. இதன் பயனாக நீண்ட கால தொலைநோக்குகளை அடையும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டும் அடையக் கூடிய குறிக்கோள்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

பள்ளிக் கல்வி இயக்ககமும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டமும் இணைந்து 2016–17 ஆம் கல்வியாண்டில் செயல்படுத்தப்பட உள்ள நோக்கங்கள்:

- 14 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை கற்கும் வகையில் அவர்களின் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகிலேயே 5 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் ஒரு உயர்நிலைப் பள்ளியும், 8 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் ஒரு மேல்நிலைப்பள்ளியும் அமைத்தல்.

- மாணவ–ஆசிரியர் விகிதத்தின்படி பள்ளிகளுக்குத் தேவையான பட்டதாரி மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தல்.

- சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வினை நீக்கவும், அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கவும் கல்வியில் பின்தங்கிய பகுதிகளில் மாதிரிப்பள்ளிகள் மற்றும் மாணவியர்

விடுதிகளை அமைத்து அவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துதல்.

- மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்கும் வகையில் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்தல்.
- அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மாணவர்களுக்கு மகிழ்ச்சியான கற்றல் சூழ்நிலையை உறுதி செய்தல்.
- பாலின பாகுபாடு, சமூக–பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் இயலாமை போன்ற காரணங்களினால் உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் கல்வி கற்க உத்தரவாதம் அளித்தல்.
- உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் மாணவர்களின் இடைநிற்றலைக் குறைத்து 100 விழுக்காடு தக்க வைத்தல்.
- வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் தரமான வாழ்க்கை சார்ந்த கல்வியுடன் தேவையான மென்திறன் மற்றும் தொழில்திறன் வளர்க்கும் கல்வியை அளித்தல்.

- மாணவர்களின் தேர்ச்சியினை உயர்த்தும் வகையில் உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

- மாணவர்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களிடம் ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை வளர்த்தல்.

- மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி அனைவருக்கும் வாய்ப்பளிப்பதின் மூலமாக மாணவர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை உருவாக்குதல்.

- அறிவியல் கருத்தரங்கு, சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் அறிவியல் கண்காட்சி ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களின் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல்.

- தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுடன் (CCE) கூடிய முப்பருவக் கல்வி முறை வாயிலாக கல்விசார் செயல்பாடுகள், கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் பாட இணைச் செயல்பாடுகளில் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி

மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர்தல்.

- 13 மாவட்டங்களில், கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் மாணவிகளுக்குத் தங்கும் விடுதிகளை ஏற்படுத்தி அவர்களுக்குத் தரமான கல்வியை அளித்தல்.

- தேவையான மாணவர்கள் அனைவருக்கும் கட்டணமில்லாப் போக்குவரத்து வசதி மற்றும் விடுதி வசதி அளிப்பதன் மூலம் 100% சேர்க்கையினை உறுதி செய்தல்.

- மாற்று திறனாளி மாணவர்களுக்கு தேவையான வசதிகளுடன் கூடிய கல்வி வழங்குதல்.

**3.5. பள்ளிக் கல்வித் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கினை அடைவதற்கான வழிமுறைகள்:**

- புவியியல் தகவல் முறைமையை பயன்படுத்தி(GIS) பள்ளி அமைவிடங்களைக் கண்டறிதல்.

- பள்ளி வசதி இல்லாத புதிய குடியிருப்புகளைக் கண்டறிதல்.

- நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துதல்.

- பள்ளி வசதி, மாணவர் சேர்க்கை, சேர்ந்த மாணவர்களை தக்க வைத்து அனைத்து மாணவர்களும் பள்ளிக் கல்வியை நிறைவு செய்வதை 100% உறுதி செய்தல்.

- அனைவருக்கும் தரமான உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை வழங்குதல்.

**செயல்பாடுகள்**

**3.6 பள்ளி வசதி / பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்**

மாநிலத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வசதிகளை ஏற்படுத்துதல் பள்ளிக் கல்வித்துறையின் முக்கிய பணியாகும். இக்குறிக்கோளை அடைவதற்காக புவியியல் தகவல் முறையை (GIS) தமிழக அரசு பயன்படுத்தி வருகிறது. இம்முறையின் மூலம் உயர்நிலை மற்றும் மேல்நிலை கல்விக்கான பள்ளி வசதிகளைப் பெறாத குடியிருப்புகளைக் கண்டறிந்து, அங்குள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் அரசு தரம் உயர்த்தியுள்ளது.

2011–12, 2013–14 மற்றும் 2014–15 ஆம் கல்வியாண்டுகளில் 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அவற்றுள் 552 பள்ளிகள் RMSA திட்டம்

மூலமாகவும் **258** பள்ளிகள் தமிழக அரசாலும் தரம் உயர்த்தப்பட்டு இதனால், **1,53,372** மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**2011–12** முதல் **2014–15** ஆம் ஆண்டு வரை **402** உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தமிழக அரசால் தரம் உயர்த்தப்பட்டு, இதனால் **48,240** மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். முன்னோடி நடவடிக்கையாக தரம் உயர்த்தப்ட்ட ஒவ்வொரு பள்ளிக்கும் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் பாடங்களுக்கான **9** முதுகலை ஆசிரியர் பணியிடங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதித்து ஆணை வழங்கியதன் விளைவாக அனைவருக்கும் தரமான மேல்நிலைக் கல்வி கிடைக்க வழிவகுக்கப்பட்டது. தரம் உயர்த்தப்பட்ட **402** மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளிக்கும் தலைமையாசிரியர்கள் பணியிடங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயரிய சிந்தனையுடன் கூடிய இந்த உயிர்ப்பான திட்டத்தின் விளைவாக **402** மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், **3618** முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் பணி நியமனம் பெற்றனர். இதன் விளைவாக தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற மாணவர்கள் அனைவரும் கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் பிரிவுகளில் பயின்று பயன்பெறுகின்றனர்.

பின்வரும் அட்டவணை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துவதில் பள்ளிக் கல்வித்துறை அடைந்துள்ள இலக்கை வெளிப்படுத்துகிறது.

| தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள் | | | |
|---|---|---|---|
| கல்வியாண்டு | நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளி | | உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளி |
| | மாநில அரசு | அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்டம் | மாநில அரசு |
| **2011–12** | **158** | **552** | **100** |
| **2012–13** | **–** | **–** | **100** |
| **2013–14** | **50** | **–** | **100** |
| **2014–15** | **50** | **–** | **102** |
| மொத்தம் | **258** | **552** | **402** |

### 3.7. மாணவர் சேர்க்கை உயர்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் கல்வித்துறையில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக மாநில அளவில் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதத்திலும், தரமான கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாடுகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மாணவர் நலத்திட்டங்கள்

- தரமான இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

- பள்ளி வசதியில்லாத குடியிருப்புப் பகுதிகளில் புதிய பள்ளிகளை ஏற்படுத்துதல்

- தற்போதுள்ள பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகளை ஏற்படுத்துதல்

- அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்விப் பிரிவுகளை விரிவுபடுத்துதல்

- பாடவாரியாக ஆசிரியர்களை நியமித்தல்


- கூடுதலாக ஆசிரியர் அல்லாத பணியாளர்களை நியமித்தல்

- அரசுப் பள்ளிகளில் பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி விழுக்காட்டினை உயர்த்துவதற்கான பல்வேறு செயல்திட்டங்கள்.

- பள்ளிகளின் வளர்ச்சிக்குச் சமுதாயத்தினரின் பங்கேற்பு


இவற்றின் விளைவாக உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகப் பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. உயர்நிலை கல்வி நிலையில் **2009–10** ஆம் ஆண்டு **21,84,077** லிருந்து **2015–16** ஆம் ஆண்டில் **22,58,095**ஆக மாணவர் சேர்க்கை உயர்ந்துள்ளது. இதே போன்று மேல்நிலைக் கல்வியில் **2009–10** ஆம் ஆண்டு **13,67,965** லிருந்து **2015–16** ஆம் ஆண்டில் **17,83,694** ஆக உயர்ந்துள்ளது

வரைபடம் –**20.** உயர்நிலை பள்ளிகளில் சேர்க்கை வளர்ச்சி நிலை




*ஆதாரம் : SEMIS, UDISE*

வரைபடம் –21. மேல்நிலை பள்ளிகளில் சேர்க்கை வளர்ச்சி நிலை




*ஆதாரம் : SEMIS, UDISE*

**3.8. கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் மாதிரிப் பள்ளிகள்**

தமிழகத்தில் 13 வருவாய் மாவட்டங்களில் உள்ள கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களிலும் இடைநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்தி உறுதி செய்யும் வகையில் கலையுணர்வுடன் கூடிய கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட மாதிரிப் பள்ளிகள் நிறுவப்பட்டன. இப்பள்ளிகளில் தான் ஆங்கில வழியில் கல்வி கற்கும் வசதி முதன் முதலாக ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இம்மாதிரிப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் பயிலும் 560 மாணவர்களின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் வகையில் 17

ஆசிரியர்களும் 7 அலுவலக பணியாளர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இம்மாதிரிப் பள்ளிகள் விசாலமான வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், கருத்தரங்குக் கூடங்கள் மற்றும் நூலகங்களைக் கொண்டுள்ளன. மேலும் இப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்குத் தனித்தனியான கழிப்பறை வசதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இதர பள்ளிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக இம்மாதிரிப் பள்ளிகள் திகழ்ந்து வருகின்றன. 2015–16 ஆம் கல்வியாண்டில் 18 பள்ளிகளுக்கு ரூ.1 இலட்சம் மதிப்பிலான உயிரி கழிப்பறைகள் (Bio Digest Toilets) கட்டித் தரப்பட்டுள்ளன.

இம்மாதிரிப் பள்ளிகள் அவை அமைந்துள்ள கல்வி மாவட்டங்களின் பின்தங்கிய ஒன்றியங்களில் மிகச் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட சிறந்த பள்ளிகளாகத் திகழ்வதோடு அவை கல்வியில் உயர்ந்த தரம் வாய்ந்த பள்ளிகளாகவும் விளங்குகின்றன. மாநிலத்தில் உள்ள 44 மாதிரிப் பள்ளிகளைக் கட்டமைக்க ரூ.132.52 கோடியை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டுள்ளது. ஆயினும் கட்டுமான பொருள்களின் விலை உயர்வினால் மத்திய அரசு ஒதுக்கிய தொகை போதுமானதாக இல்லை என்பதை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில பங்காகிய ரூ.33.13

கோடியை அளித்ததுடன் கூடுதல் செலவினமான ரூ.57.23 கோடியை மாநில நிதி ஆதாரத்திலிருந்து வழங்கி உள்ளார்.



படம் –45. மாதிரிப்பள்ளி, திருவெண்ணெய்நல்லூர்,
விழுப்புரம் மாவட்டம்

இவ்வாறாக கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் இடைநிலைக்கல்வியின் தரத்தை உயர்த்தவும் மாணவர்கள் பயன் பெறவும் மாநில அரசு இத்திட்டத்திற்கென மொத்தமாக ரூ.90.36 கோடியை தனது சொந்த நிதியிலிருந்து வழங்கியுள்ளது.

2015–16 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசானது மாதிரிப் பள்ளிகளை அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் இருந்து விடுவித்துள்ளது. இதன் காரணமாக இத்திட்டத்திற்குரிய செலவினமாக ஆண்டுதோறும் மத்திய அரசு வழங்கிவந்த ரூ.30

கோடி நிதியும் நிறுத்தப்பட்டு விட்டது. இருப்பினும் தமிழக அரசு, ஏற்கெனவே இப்பள்ளியில் சேர்ந்துள்ள மாணவர்களின் நலன்கருதி, இம்மாதிரிப் பள்ளிகளுக்கான தொடர் செலவினத்திற்காக மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து வருகிறது. மேலும் இம்மாதிரிப் பள்ளிகளுக்கான முழுத் தேவைகளையும் நிறைவு செய்யும் பொறுப்பினையும் தமிழக அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

### 3.9 கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் மாணவியர் விடுதிகள்

கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களிலும் மாணவியர் விடுதிகள் அமைப்பது என்ற முன்னோடி திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூ.61.10 கோடி நிதி இப்பணியினை நிறைவு செய்ய போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவிகளின் கல்வித்தரத்தை ஊக்குவிக்கவும், பாலின பாகுபாட்டைக் களையவும், மாநிலத்தின் 10% பங்குத் தொகையான ரூ.6.11 கோடியுடன் கூடுதலாக ரூ.45.44 கோடியையும் வழங்கி மொத்தமாக ரூ.51.55 கோடியை மாணவியர் விடுதிகளைக் கட்டி முடிக்க ஒதுக்கீடு செய்ததன் மூலம் பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள 4400 மாணவியர் இடைநிலைக் கல்வியை தடையின்றி தொடர இத்திட்டத்தின் மூலம் வழிவகை ஏற்பட்டுள்ளது.



படம் – 46. மாணவியர் விடுதி, அ.புதுார், சேலம் மாவட்டம்

விடுதிகளில் தங்கும் மாணவியர் மிகச் சிறந்த கட்டமைப்புடன் கூடிய இவ்வசதிகளை அனுபவிக்கும் வண்ணம், 4 மாணவிகளுக்கு ஓர் அறையுடன் தனித்தனி கட்டில்கள், மெத்தைகள், அலமாரிகள் மற்றும் நன்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் சூரிய எரிசக்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வெந்நீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் மாணவிகளின் உடல்நலம் மற்றும் சுகாதாரத்தைப் பேணும் வகையில் மின் எரியூட்டியும் (incenerator) பொருத்தப்பட்டுள்ளது.

இவ்விடுதிகள் மாணவிகளுக்குக் குறைபாடற்ற பாதுகாப்பு வசதிகளை வழங்கி வருகின்றன. மேலும் விடுதி வளாகம் முழுவதும்

கண்காணிப்புப் புகைப்படக்கருவி (CCTV) மூலம் கண்காணிக்கப்படுகிறது. மாணவிகளின் வருகையைக் கண்காணிக்கவும் பதிவிடவும் பயோமெட்ரிக் முறை பின்பற்றப்படுகிறது.




படம் – 47. மாணவியர் விடுதிகளில் சமையல் செய்பவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி

இவ்விடுதிகளில் பிரபல சமையல் கலை வல்லுநர்களின் வழிகாட்டுதலின்படி சத்தான உணவுப் பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது. உணவுப் பட்டியலிலுள்ள உணவுகளை சுத்தமாகவும், சுவையுள்ளதாகவும் தயாரிக்க 44 விடுதிகளில் பணிபுரியும்

சமையல்காரர்கள் அனைவருக்கும் சமையல்கலை வல்லுநர்களால் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**3.10 அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழிப்பிரிவுக்கு இணையாக ஆங்கில மொழிப்பிரிவு அறிமுகம் :**

**2012–13** ஆம் கல்வியாண்டில் தமிழக அரசு ஆறாம் வகுப்பில் ஒரு ஆங்கில மொழிவழிப் பிரிவை **165** பள்ளிகளில் அறிமுகம் செய்துள்ளதால் **3138** மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர். அரசுப் பள்ளிகளின் இத்திட்டத்திற்குப் பெற்றோர்களிடமும், மாணவர்களிடமும் பெருமளவிலான வரவேற்பும் பாராட்டும் கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து **2013–14** ஆம் ஆண்டில் கூடுதலாக **1408** ஆங்கில வழிப் பிரிவுகள் தொடங்கப் பட்டதால் **25,831** மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**2014–15** ஆம் கல்வியாண்டில் ஆங்கில வழிப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. **1,485** பள்ளிகளில் ஆங்கிலமொழி வழிப்பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டதன் வாயிலாக மாணவர் சேர்க்கை **24,699** ஆக உயர்ந்துள்ளது. **2015–16** ஆம் ஆண்டில் மேலும் **483** பள்ளிகளில் ஆங்கில வழிப்பிரிவு தொடங்கப்பெற்று **9,600** மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர். இத்திட்டத்தால் இதுவரை **63,268** மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

| ஆண்டு வாரியாக ஆங்கில வழிப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கை | | |
|---|---|---|
| கல்வியாண்டு | பிரிவுகளின் எண்ணிக்கை | மாணவர்கள் எண்ணிக்கை |
| **2012–13** | **165** | **3138** |
| **2013–14** | **1408** | **25831** |
| **2014–15** | **1485** | **24699** |
| **2015–16** | **483** | **9600** |
| மொத்தம் | **3541** | **63268** |

### 3.11. ஆசிரியர் நியமனம் :

தமிழக அரசு, அரசு பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர் பணியிடங்களை, தேசிய விதிமுறைகளுக்கு இணங்க ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரப்படி **(40:1)**ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நியமனம் செய்து வருகிறது. அரசால் அனுமதிக்கப்பட்ட **49,705** பாடவாரியான ஆசிரியர் பணியிடங்களில், **46,475** ஆசிரியர்கள் கடந்த **5** ஆண்டுகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவரை நிகழ்ந்திராத இந்த பெருமளவிலான நியமனங்களினால் மாணவர்–ஆசிரியர் விகிதாச்சாரம் **26:1** என்ற உயர்ந்த நிலையை எட்டியுள்ளது. தமிழக அரசின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் இதுவும் ஒன்றாக விளங்குகிறது. நடப்பாண்டில் மீதமுள்ள பணியிடங்களுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## 3.12.பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கிணங்க ஏற்கெனவே செயல்பட்டு வரும் அரசு பள்ளிகள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட அரசு பள்ளிகளில் உள்கட்டமைப்புத் தேவைகளான கூடுதல் வகுப்பறைகள், மேசை நாற்காலிகள், கணினி ஆய்வகம், அறிவியல் ஆய்வகம், குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் ஆகியவை மாநில அரசு, நபார்டு மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.



படம் – 48. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகள், அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லூரன்பட்டி, கரூர் மாவட்டம்

*நபார்டு திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு வசதிகள்*

தமிழக அரசு நபார்டு வங்கியின் மூலமாகக் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.1,006.26 கோடி நிதியை 1148 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த பல கட்டங்களாக ஒதுக்கியுள்ளது. கட்டங்கள் வாரியான விவரங்கள் பின்வருமாறு :

நபார்டு திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு வசதிகள்

| கட்டம் | ஒதுக்கீடு ஆண்டு | பயனடைந்த பள்ளிகளின் எண்ணிக்கை | வகுப்பறைகளின் எண்ணிக்கை | அறிவியல் ஆய்வகங்களின் எண்ணிக்கை | கழிவறைகளின் எண்ணிக்கை | குடிநீர் அலகுகளின் எண்ணிக்கை | சுற்றுச் சுவர்களின் நீளம் (மீட்டரில்) | மதிப்பு (கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டம் 11 | 2012 | 131 | 1508 | 112 | 244 | 71 | 43252 | 152.73 |
| கட்டம் 12 | 2013 | 210 | 1335 | 184 | 603 | 99 | 50110 | 247.75 |
| கட்டம் 13 | 2014 | 155 | 1303 | 127 | 324 | 80 | 44052 | 208.62 |
| கட்டம் 13 கழிப்பறைகள் | 2015 | 424 | – | – | 784 | 376 | – | 41.58 |
| கட்டம் 14 | 2016 | 228 | 2001 | 218 | 238 | 77 | 88013 | 355.58 |
| மொத்தம் | | 1148 | 6147 | 641 | 2193 | 703 | 225427 | 1006.26 |

*அரசுப் பள்ளிகளில் கழிவறை மற்றும் குடிநீர் வசதிகள்*

தமிழக அரசு “வருமுன் காப்பதே அறிவுடைமை” என்ற முதுமொழிக்கு ஏற்ப பள்ளிகளில் சுகாதாரமான குடிநீர் வசதிகள்,

மற்றும் சுத்தமான துப்புரவு வசதிகள் மேம்படுத்துவதை தன்னுடைய முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு **2193** பள்ளிகளில் புதிதாகக் கழிப்பறைகளைக் கட்டுவதற்கு ரூ.**93.94** கோடி நிதியையும், குடிநீர் மேம்பாட்டு வசதிக்காக **1148** பள்ளிகளுக்கு ரூ.**13.70** கோடி நிதியையும் கடந்த ஐந்து ஆண்டுகளில் நபார்டு திட்டத்தின் மூலம் ஒதுக்கப் பட்டுள்ளது.

***<u>அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு வசதிகள்.</u>***

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டத்தின் (RMSA) திட்ட ஒப்புதல் குழுவானது (PAB) **2009–10**ம் வருடம் **200** நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி கட்டுமான பணிக்காக ரூ.**58** இலட்சம் நிதியினை ஒவ்வொரு பள்ளிக்கும் நிர்ணயம் செய்தது. இதனைத் தொடர்ந்து பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழுவிடம் (SMDC) கட்டடங்களை கட்டுவதற்கான பணி ஒப்படைக்கப்பட்டது. கட்டுமானப் பணிக்காக ஒவ்வொரு பள்ளிக்கும் மாநில அரசின் **25** விழுக்காடு நிதியை உள்ளடக்கி ரூ.**58** இலட்சம் நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. இவ்வொதுக்கீடு தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு போதுமானதாக இல்லை.

மாணவர் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்நிதிப் பற்றாக்குறையினைப் போக்கும் வகையில் 200 புதிய பள்ளிகளின் கட்டடங்களுக்குத் தேவையான நிதி ரூ.18.02 கோடியைத் தமிழக அரசின் நிதி ஆதாரங்களிலிருந்து வழங்கியுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் நலன் கருதியும் பள்ளிகளில் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் கொண்டிருக்கும் ஆர்வத்தின் காரணமாகவும் ரூ.71.18 கோடியை மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து, கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் மற்றும் 879 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்களை ஏற்படுத்தவும் ஆவன செய்தமை முதலமைச்சர் அவர்களின் பெருந்தன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் மூலம் 2010–11ம் ஆண்டு 344 பள்ளிகளும், 2011–12ம் ஆண்டு 552 பள்ளிகளும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் மூலமாகவும், 158 பள்ளிகள் முழுவதும் தமிழக அரசாலும் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன. ஒவ்வொரு பள்ளிக்கும் மாநில அரசின் 25 விழுக்காடு நிதியை உள்ளடக்கி ரூ.58 இலட்சம் நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. இந்த ஒதுக்கீடானது பள்ளி கட்டிடங்கள் கட்டுவதற்கு போதுமானதாக இல்லை.

இதன் காரணமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் **344** பள்ளிகளுக்கு ரூ.**380** கோடியையும், **552** பள்ளிகளுக்கு ரூ.**616.30** கோடியையும் மொத்தமாக ரூ.**996.30** கோடியை மாநில அரசின் நிதியிலிருந்து கட்டடங்களைக் கட்டி முடிக்க வழங்கியுள்ளார்.

தமிழக அரசு கூடுதல் நிதியாக ரூ.**1455.69** கோடியை ஒதுக்கீடு செய்தமை தமிழகப் பள்ளிக் கல்வித்துறை வரலாற்றில் ஈடு இணையற்ற வரலாற்றுச் சாதனையாகும்.

## தமிழக அரசு ஆண்டு வாரியாக, இனம் வாரியாக ஒதுக்கிய கூடுதல் நிதி விவரம்

**ரூபாய் கோடியில்**

| கல்வி ஆண்டு | இனம் | பள்ளி களின் எண்ணி க்கை | ஏற்பளிப்பு குழு ஒப்பளிப்பு | மத்திய அரசின் பங்கு 75% | மாநில அரசின் பங்கு 25% | மாநில அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு | [illegible] பங்கு 25% + மாநில அரசின் [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| **2009–10** | புதிய பள்ளிகள் | 200 | 116.24 | 87.18 | 29.06 | 18.02 | 47.08 |
| **2010–11** | புதிய பள்ளிகள் | 344 | 510.06 | *310.52 | 103.51 | 451.18 | 554.69 |
| | வலுவூட்டப்பட்ட பள்ளிகள் | 837 | | | | | |
| **2011–12** | புதிய பள்ளிகள் | 552 | 320.71 ** | - | - | 616.30 | 616.30 |
| | மத்தியரசால் விடுவிக்கப்பட்டு | 158 | - | - | - | 267.52 | 267.52 |
| | மாதிரிப் பள்ளிகள் – கட்டம் I | 18 | 54.00 | 40.50 | 13.50 | 4.52 | 18.02 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மாதிரிப் பள்ளிகள் - கட்டம் II | 26 | 78.52 | ***29.45 | 9.81 | 52.71 | 62.52 |
| | மாணவியர் விடுதிகள் (90:10) | 44 | 61.10 | 54.99 | 6.11 | 45.44 | 51.55 |
| | Grand Total | | **1140.63** | **522.64** | **161.99** | **1455.69** | **1617.68** |

* மத்திய அரசு பங்களிப்பு 75% (ரூ.**382.54** கோடி)ல் மத்திய அரசு விடுவித்துள்ள தொகை ரூ.**310.52** கோடி

** திட்ட ஒப்பளிப்பு ரூ.**320.71** கோடி நாளது வரை விடுவிக்கப்பட வில்லை

*** மத்திய அரசு பங்களிப்பு 75% (ரூ.**59.89** கோடி)ல் மத்திய அரசு விடுவித்துள்ள தொகை ரூ.**29.45** கோடி

## 3.13.இடைநிலைக் கல்வி நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான உள்ளடங்கிய கல்வி (IEDSS) :

இத்திட்டமானது மாற்றுத் திறனாளி மாணவர்கள் அனைவரும் கல்வியில் சமவாய்ப்பினைப் பெற்றிட வழி வகுக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் கல்வியில் சமவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இத்திட்டச் செயலாக்கத்தில் சிறப்புக் கவனம் செலுத்தியதன் விளைவாக **11,433** மாற்றுத் திறனாளி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

## 3.14 இடைநிலைக் கல்வியில் கல்விக் குறியீடுகள்

மதிப்பீட்டுக் கட்டமைப்பு ஆவணம் (RFD) இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டதாகும். இது இடைநிலைக் கல்வியில் முன்னேற்ற

நிலைகளை அளவிட உதவும் சிறந்த கருவியாக விளங்குகிறது. RFD, இடைநிலைக் கல்வியின் முன்னேற்ற நிலைகளை, 7 முக்கிய வளர்ச்சிக் குறியீடுகளைக் கொண்டு அளவிடுகிறது.

1. இடைநிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கை (Secondary Enrolment)
2. இடைநிலைக் கல்வியில் ஒட்டுமொத்தச் சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio / GER)
3. பாலினச் சமக்குறியீடு (Gender Parity Index – GPI)
4. பாலின சமத்துவக் குறியீடு (Gender Equity Index – GEI)
5. பட்டியல் இனத்தோர் – சமூக சமத்துவக் குறியீடு (Social Equity Index – SEI- SC)
6. பழங்குடியினர் – சமூக சமத்துவக் குறியீடு (Social Equity Index – SEI- ST)
7. இடைநிலைக் கல்வி அடைவு விகிதம் (Secondary Graduation Rate – SGR)

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை கல்வி வளர்ச்சிக் குறியீடுகள் தமிழகம் இடைநிலைக் கல்வியில் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் விளக்குகிறது. மேற்கண்டஏழு குறியீடுகளின்

பகுப்பாய்வு முடிவுகள் தமிழகக் கல்வித்துறையின் நிலையான, மதிப்பிடத்தக்க, ஆரோக்கியமான கல்வி வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன.

### 3.15. இடைநிலைக் கல்வி வளர்ச்சி குறியீடு (RFD)

| குறியீடு | 2009–10 | 2015–16 |
|---|---|---|
| மாணவர் சேர்க்கை | 21,84,077 | 22,58,095 |
| ஒட்டுமொத்தச் சேர்க்கை விகிதம் (GER) | 85.81 | 93.15 |
| பாலினச் சமக்குறியீடு (GPI) | 1.02 | 1.04 |
| பாலின சமத்துவக் குறியீடு(GEI) | 1.010 | 1.022 |
| பட்டியல் இனத்தோர் – சமூக சமத்துவக் குறியீடு (SEI- SC) | 1.06 | 1.06 |
| பழங்குடியினர் – சமூக சமத்துவக் குறியீடு (SEI- ST) | 0.67 | 0.92 |
| இடைநிலைக் கல்வி அடைவு விகிதம் (SGR) | 86.26 | 97.66 |

*ஆதாரம்: UDISE*


### 3.15.1 இடைநிலைக் கல்வியில் சேர்க்கை நிலை

தமிழகப் பள்ளிகளில் இடைநிலை அளவில் மாணவர்களின் நிலையான சேர்க்கை வளர்ச்சியினைக் கீழ்க்காணும் வரைபடம் எடுத்துக் காட்டுகிறது.

| கல்வியாண்டு | **9** மற்றும் **10**ஆம் வகுப்பு சேர்க்கை |
|---|---|
| 2009-10 | 21,84,077 |
| 2015-16 | 22,58,095 |

*ஆதாரம் : UDISE*

வரைபடம் – **22.** இடைநிலைக் கல்வியில் சேர்க்கை நிலை




*ஆதாரம் : UDISE*

### 3.15.2 இடைநிலைக் கல்வியில் ஒட்டு மொத்தச் சேர்க்கை வீதம் (GER)

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு மாணவர் நலத்திட்டங்களின் விளைவாக இடைநிலைக் கல்வி நிலை அளவில் மாணவர் சேர்க்கையில் வருடந்தோறும் வளர்ச்சி காணப்பட்டு வருகிறது. **2009–10** ஆம் கல்வியாண்டில் **85.81** என்று


இருந்த சேர்க்கை வீதம் 2015–16 ஆம் கல்வியாண்டில் 93.15 என்ற சேர்க்கை வீதத்தை அடைந்துள்ளது. இடைநிலைக் கல்வியில் சேர்க்கை வீதம் (GER) 7.34% ஆக உயர்ந்துள்ளது. இது கல்வியின் முற்போக்கின் சீரான முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

$$GER = \frac{\text{9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் மொத்த மாணவர் சேர்க்கை}}{\text{அதே வருடத்தில் 14 முதல் 15வயது வரை உள்ள மக்கள்தொகை}} \times 100$$

| கல்வியாண்டு | இடைநிலைக் கல்வியில் சேர்க்கை வீதம் (GER) |
|---|---|
| 2009 – 10 | 85.81 |
| 2015 – 16 | 93.15 |

*ஆதாரம் : UDISE*

வரைபடம் – 23. இடைநிலைக் கல்வியில் சேர்க்கை விகிதம்





*ஆதாரம் : UDISE*

### 3.15.3 பாலினச் சமக்குறியீடு (GPI)

மாணவ மாணவிகளின் தொடர் கல்வி நடவடிக்கைகளை அறிய வடிவமைக்கப்பட்ட சமூக பொருளாதார வழிகாட்டியே பாலினச் சமக் குறியீடு (GPI) ஆகும். இது இடைநிலைக் கல்வியில் மாணவிகளின் சேர்க்கை நிலையை, மாணவர்களின் சேர்க்கை நிலையோடு ஒப்பிட்டு கணக்கிடப்படும் எளிமையான முறையாகும். மாநில அளவில் பாலினச் சமக் குறியீடு **(GPI) 2009 – 2010** ஆம் ஆண்டில் **1.02** லிருந்து **2015–16** ஆம் ஆண்டில் **1.04** ஆக உயர்ந்துள்ளது. மாநில அரசு கடந்த ஆண்டுகளில் மாணவியர் எளிதில் கல்விபெற மேற்கொண்ட செயல் திட்டங்களின் பயனை இப்புள்ளி விவரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

$$\text{GPI} = \frac{\text{இடைநிலைக் கல்வியில் மாணவிகளின் சேர்க்கை எண்ணிக்கை}}{\text{இடைநிலைக் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை}}$$

வரைபடம் –24. பாலினச் சமக்குறியீடு (GPI)





*ஆதாரம் : UDISE*

### 3.15.4 பாலினச் சமநிலைக் குறியீடு (GEI)

பாலினச் சமநிலைக் குறியீடு (GEI) மாநிலத்திலுள்ள மாணவ–மாணவியர் கல்வி வாய்ப்பினைப் பெறுவதிலுள்ள வேறுபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டும் அளவீடாகும். சமூக பொருளாதார குறியீட்டின் வாயிலாக இடைநிலைக் கல்வியில் சமநிலை சேர்க்கையை மதிப்பிட முடிகின்றது. கடந்த 5 ஆண்டுகளில் பெண்குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கைக் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளதைப் பாலின சமத்துவக் குறியீட்டு வரைபடம் காட்டுகிறது.

$$\text{பாலினச் சமநிலைக் குறியீடு} = \frac{\text{மொத்தச் சேர்க்கையில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை}}{\text{மொத்தப் பள்ளி வயது மாணவர்களில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை}}$$

வரைபடம் –25. பாலினச் சமநிலை குறியீடு





*ஆதாரம் : UDISE*

### 3.15.5 சமூகச் சமநிலைக் குறியீடு (SEI)

சமூக வேறுபாட்டின் காரணமாகக் கல்வி வாய்ப்பைப் பெறுவதிலுள்ள வேறுபாடுகளை இச்சமூக சமநிலைக் குறியீடு வெளிப்படுத்துகிறது. கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களின் சேர்க்கையில் தமிழக அரசு மாநிலமெங்கும் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி தேவையான வளர்ச்சியும் கண்டுள்ளது.

சமூகச் சமநிலைக் குறியீடு (SC) = மொத்தச் சேர்க்கையில் ஆதிதிராவிடர் குழந்தைகளின் எண்ணிக்கை / மொத்தப் பள்ளி வயது மாணவர்களில் ஆதிதிராவிடர் குழந்தைகளின் எண்ணிக்கை

வரைபடம் –26. சமூகச் சமநிலை குறியீடு – ஆதி திராவிடர்




*ஆதாரம் : UDISE*


சமூகச் சமநிலைக் குறியீடு (ST) =

மொத்தச் சேர்க்கையில் பழங்குடியின பிரிவினர் குழந்தைகளின் எண்ணிக்கை

―――――――――――――――――――――

மொத்தப் பள்ளி வயது மாணவர்களில் பழங்குடியின பிரிவினர் குழந்தைகளின் எண்ணிக்கை

வரைபடம் **–27.** சமூகச் சமநிலை குறியீடு – பழங்குடியினர்





*ஆதாரம் : UDISE*

### 3.15.6 இடைநிலைக் கல்வி அடைவு விகிதம் (SGR)

இடைநிலைக் கல்வியில் நிலையான கல்வியியல் சீர்திருத்தங்கள் மற்றும் சிறப்பான கற்றல் கற்பித்தல் பயிற்சிகள், மாணவர் நலத்திட்டங்கள், அதனோடு தோழமையுடன் கூடிய வளரிளம் பருவ கற்றல் சூழ்நிலைகள் ஆகிய அனைத்தும் இணைந்து இடைநிலைக் கல்வி அடைவு விகிதத்தை உயர்த்தியுள்ளன. இடைநிலைக் கல்வி முறையின் மேம்படுத்தப்பட்ட உள்ளாற்றலை இவ்விடைநிலைக் கல்வி அடைவு விகிதம் வெளிப்படுத்துகிறது.

$$\text{அடைவு விகிதம்} = \frac{\text{10 ஆம் வகுப்பில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை}}{\text{முந்தைய ஆண்டு 9 ஆம் வகுப்பில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை}}$$

வரைபடம் – **28.** இடைநிலைக் கல்வி அடைவு விகிதம்





*ஆதாரம் : UDISE*

கடந்த 5 ஆண்டுகளில் கல்வித் தரத்தில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றத்தின் விளைவாக 2015–16 ஆம் ஆண்டில் இடைநிலைக் கல்வி அடைவு விகிதத்தில் தமிழகம் உச்ச நிலையினை அடைந்துள்ளது. இவ்வகையில் மாநிலமானது இடைநிலைக் கல்வி அடைவு விகிதம் 11.40% ஆகக் குறிப்பிடத்தக்க உயர்வு கண்டுள்ளது.

**3.15.7 இடைநிற்றலைக் குறைத்தல், சேர்க்கையைத் தக்க வைத்து வகுப்பு நிலை மாற்றுதல்**

மாநில அரசானது கல்வி வளர்ச்சியில் பரந்த பார்வையினை கொண்டுள்ளது. மாணவர்களின் கல்வித் தேவைகளை மனதில் கொண்டு தமிழக அரசு 14 வகையான நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் விளைவாக இடைநிலைக் கல்வி அளவில் இடைநிற்றல் விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது.

வரைபடம் –29. இடைநிலைக் கல்வி நிலையில் இடைநிற்றல் விகிதம்




| | ஆண்கள் | பெண்கள் | சராசரி |
|---|---|---|---|
| 2010–11 | 11.01 | 11.4 | 11.21 |
| 2015–16 | 4.71 | 2.81 | 3.76 |


*ஆதாரம் : UDISE*

தமிழக அரசின் மாணவர் நலத்திட்டங்களின் வாயிலாக இடைநிலைக் கல்வியில் 2010–11 ஆம் ஆண்டு 11.21 ஆக இருந்த இடைநிற்றலானது 2015–16 ஆம் ஆண்டு 3.76 ஆகக் குறைந்துள்ளது.

ஐந்தாவது மத்தியக் கூட்டாய்வுக் குழு (JRM)தன்னுடைய மதிப்பீட்டு அறிக்கையில் ‘‘மாநில அரசானது இவ்வகையில் குறிப்பிடத்தக்க சாதனையைப் புரிந்துள்ளது. 2017 ஆம் ஆண்டிற்குள் இடைநிற்றலை 25 விழுக்காடு குறைத்திட வேண்டும் என்ற தேசிய இலக்கினை இம்மாநிலமானது 3.76% என்ற இடைநிற்றல் குறியீட்டை 2015 ஆம் ஆண்டிலேயே அடைந்துள்ளது’’ என்று சிறப்புற குறிப்பிட்டுள்ளது.

தமிழக அரசு இடைநிலைக் கல்வியில் சேர்க்கை விகிதத்தில்(GER) வெற்றிகரமான சாதனை படைத்ததோடன்றி தக்கவைத்தல் விகிதத்தினை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்துள்ளது. கீழ்கண்ட அட்டவணை 2010–11 முதல் ஐந்தாண்டுகளில் மாணவர்களின் தக்கவைத்தல் விகிதம் 7.49% அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது.

வரைபடம் –30. இடைநிலைக் கல்வி நிலையில் தக்கவைத்தல் விகிதம்




| | ஆண்கள் | பெண்கள் | சராசரி |
|---|---|---|---|
| 2010–11 | 88.99 | 88.6 | 88.75 |
| 2015–16 | 95.29 | 97.19 | 96.24 |

*ஆதாரம் : UDISE*


### 3.15.8 மேல்நிலைக் கல்வியில் சேர்க்கையும் மாற்றமும் சேர்க்கையில் முன்னேற்றம்

கல்வியில் அனைத்து தளங்களிலும் வேறுபாடற்ற சமநிலை காண தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களைத் துரிதமாகச் செயல்படுத்தி வருகிறது. மாணவர்கள் பயனுறும் வகையில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களால் மாணவர் சேர்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கீழ்க்காணும் அட்டவணை கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தில் மேல்நிலைக் கல்வியில் அதிகமான மாணவர் சேர்க்கை வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

| கல்விஆண்டு | 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாணவர் சேர்க்கை |
|---|---|
| 2009-10 | 13,67,965 |
| 2015-16 | 17,83,694 |

*(ஆதாரம் : SEMIS & UDISE)*

வரைபடம் –**31.** மாணவர் சேர்க்கை ஒப்பீடு (மேல்நிலை)




*ஆதாரம் : UDISE*

கடந்த ஆண்டுகளில் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் மொத்த மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது. **2009–10** ஆம் ஆண்டில் **13,67,965** ஆக இருந்த மாணவர் சேர்க்கை **2015–16** ஆம் ஆண்டில் விரும்பத்தக்க அளவில் **17,83,694** ஆக அதிகரித்துள்ளது.

### 3.15.9 வகுப்புநிலை மாற்ற விகிதத்தில் முன்னேற்றம்


மாநிலத்தின் கல்விக் கொள்கைகளும் புதிய முயற்சிகளும் மாணவர்களின் வகுப்புநிலை மாற்ற விகித முன்னேற்றத்தைக் கொண்டே அளவிடப்படுகிறது. மாநிலத்தில் உள்ள அனைவரும் மேல்நிலைக் கல்வியை நிறைவு செய்வதுடன், மேற்படிப்பினைத் தொடர்வதே தமிழக அரசின் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

தமிழக அரசின் பாராட்டத்தக்கச் செயல்திட்டங்களின் விளைவாக கடந்த 5 ஆண்டுகளில் பத்தாம் வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்பிற்குச் செல்லும் மாணவர்களின் வகுப்புநிலை மாற்ற விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. மாணவர்களின் வகுப்புநிலை மாற்ற விகிதம் 9.09% ஆகவும் மாணவிகளின் வகுப்புநிலை மாற்ற விகிதம் 10.82% ஆகவும் அதிகரித்துள்ளது.

| வகுப்புநிலை மாற்ற விகிதம் (X - XI ) | | |
|---|---|---|
| கல்வி ஆண்டு | 2010–11 | 2015–16 |
| ஆண்கள் | 70.77 | 79.86 |
| பெண்கள் | 80.76 | 91.58 |
| சராசரி | 75.77 | 85.72 |

*ஆதாரம் : UDISE*

வரைபடம் **–32.** வகுப்பு நிலை மாற்ற விகிதம் **10** முதல் **11** வரை




*ஆதாரம் : UDISE*

## 3.15.10 மொத்த சேர்க்கை விகிதம் (GER)– மேல்நிலை


மாநில அரசு, மாணவர்களுக்குக் கல்வி நலன் சார்ந்த, தொடர்ச்சியான, பயனுள்ள நிறைவான திட்டங்களை வழங்கி வருகிறது. கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகளில் உயர்ந்த தரத்துடன், கற்றலுக்கு உதவிடும் வகையில் மடிக்கணினி, மிதிவண்டி மற்றும் இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை ஆகியவற்றை வழங்குவது மேல்நிலைப் பள்ளிகளின் செயல்பாடுகளை உயர்த்தி மாணவர்களை ஈர்க்கின்றது. **2010–11** ஆம் ஆண்டிலிருந்து மாணவ



386-4-13

மாணவிகளின் சேர்க்கை விகிதம் குறிப்பிடத்தக்க வகையில் கணிசமாக உயர்ந்துள்ளது.

வரைபடம் –33. மொத்த சேர்க்கை விகிதம் – மேல்நிலை





*ஆதாரம் : UDISE*

### 3.15.11. பாலின சமக் குறியீடு ( GPI) – மேல்நிலை

**2015–16** ஆம் கல்வி ஆண்டு மேல்நிலைக் கல்வியில் பாலினச் சமக் குறியீடு **1.12** அளவில் உள்ளது. இக்குறியீடு மாநிலத்தில் அனைவரும் சிரமமின்றி மேல் நிலைக் கல்வி பெறுவதை உறுதி செய்கின்றது.

வரைபடம் – 34. பாலின சமக் குறியீடு – மேல்நிலை





*ஆதாரம் : UDISE*

### 3.15.12 மாணவர் – ஆசிரியர் விகிதம் (PTR)

தேசிய அளவில் வரையறுக்கப்பட்ட மாணவர்–ஆசிரியர் விகிதம் 40 : 1 ஆகும். மாநில அளவில் மாணவர்–ஆசிரியர் விகிதம் எதிர்காலப் போக்கைக் கருத்தில் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மாநில அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தேவைக்கேற்பப் பாடவாரியான ஆசிரியர் பணியிடங்களை நிரப்பியுள்ளது. அதன் விளைவாக மாநில அளவிலான மாணவர்–ஆசிரியர் விகிதம் 2015–16 ஆம் ஆண்டில் இடைநிலைக் கல்வி அளவில் 26 : 1 ஆகவும் மேல்நிலைக் கல்வியில்

**37:1** ஆகவும் என்ற நிலையை எட்டியுள்ளது. மாநில அளவிலான மாணவர்–ஆசிரியர் விகிதம் பின்வருமாறு :

வரைபடம் **– 35.** மாணவர் ஆசிரியர் விகிதம் இடைநிலை




*ஆதாரம் : UDISE*

## 3.16. கல்வித் தர மேம்பாடு

பள்ளிக் கல்வியில் தரமான முன்னேற்றம் காணத் இடைவிடாத முயற்சியும், புதுமையான திட்டங்களும் தொடர் ஆய்வுகளும் தேவை. புதுமையான கல்வி திட்டங்களைத் மாநில அரசு திறந்த மனதுடன் வரவேற்கிறது. உலகம் மற்றும் நாடு தழுவிய வெற்றிகரமான கல்வித்திட்டங்கள் ஆய்வு செய்து நம் கல்வி முறையில் இணைக்கப்பட்டுவருகின்றன. பல்வேறு புதுமையான

திட்டங்களுடன் கல்வித் துறை சிறந்து விளங்க உதவும் வகையில் சிந்தனையாளர்கள் கொண்ட கல்வியாளர்கள் குழு இயங்கி வருகிறது. இதன் பலனாக ஆண்டு தோறும் மாநில அரசு எண்ணற்ற புதுமையான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தில் கல்வித்தரம் உயர்ந்திட இத்தகைய முயற்சிகள் மதிப்பு மிக்க பங்காற்றிவருகின்றன.

### 3.16.1 முப்பருவக்கல்வி முறையும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையும்

தமிழக அரசு, கலைத்திட்டம் புதுப்பித்தல், பாடநூல்கள் உருவாக்குதல், மாணவர்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அதனைச் சார்ந்த செயல்பாடுகளைச் சர்வதேச அளவிற்கு உயர்த்துவதில் முன்னோடியாக விளங்குகிறது. 1 முதல் 9 ஆம் வகுப்பு வரை தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு (CCE) முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஒரு மாணவரின் கல்விசார் செயல்பாடுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடாமல், இதர இணைச் செயல்பாடுகளின் மூலமும் அம்மாணவரின் ஆளுமைப் பண்புகள் மற்றும் உளச்சார்புச் செயல்பாடுகளையும் கருத்தில் கொண்டு மதிப்பிட முடிகிறது. இம் மதிப்பீடு ஆசிரியர்களுக்கு மாணவர்களின் அடைவுநிலையில் ஏற்படும் இடைவெளியை கண்டறிவதற்கும் அவைகளைச் சீர்செய்வதற்குச் சரியான நடவடிக்கை எடுப்பதற்கும் உதவி புரிகிறது.

மேலும் முப்பருவக் கல்வி முறையில் ஒரு கல்வி ஆண்டிற்கான பாடநூல்கள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. முன்பு இருந்த பாடத்திட்டத்தினோடு ஒப்பிடுகையில் இம்முறையில் மாணவர்களின் புத்தகச்சுமை வெகுவாக குறைந்ததோடு, மாணவர்கள் தங்கள் கற்றல் செயல்பாடுகளை எளிதாகவும் மிகவும் மகிழ்ச்சியுடனும் மேற்கொள்ள வழிவகுத்துள்ளது.

### 3.16.2 ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு

தமிழக அரசு கல்வித் தரத்தை மேம்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றுவதால் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பொதுத்தேர்வில் சிறந்த தேர்ச்சியினை அடைந்துள்ளனர். அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டமும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து சிறப்புப் பயிற்சிக் கட்டகங்களை உருவாக்கிப் பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கற்றல்–கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்த பயிற்சி அளித்ததின் விளைவாக பொதுத்தேர்வுகளில் சிறப்பான முடிவுகளை ஈட்ட முடிந்தது.

| வ. எண் | கல்வியாண்டு | பயிற்சி | பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை | செலவினம் (கோடிகளில்) |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | பாடவாரியாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 40,953 | 7.31 |
| 2 | 2012–13 | பாடவாரியாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 29,176 | 1.17 |
| | | புதிய ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி | 8,556 | 0.38 |
| 3 | 2013–14 | பாடவாரியாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 24,659 | 2.54 |
| 4 | 2014–15 | பாடவாரியாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் கலை ஆசிரியர்கள் | 39,196 | 5.88 |
| 5 | 2015–16 | பாடவாரியாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 61,334 | 18.37 |
| மொத்தம் | | | | 35.65 |

ஆதாரம்: திட்டங்கள் கண்காணிப்பு அமைப்பு / அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்.

### 3.16.3 நடமாடும் உளவியல் ஆலோசனை மையங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட புதுமையான திட்டமான நடமாடும் உளவியல்

ஆலோசனை மையங்கள் பள்ளி மாணவர்களின் வயது / பருவம் சார்ந்த உளவியல் சிக்கல்களை எதிர்கொள்ளும் ஆற்றலை வழங்கி வருகிறது. அனைத்து வசதிகளுடன் கூடிய 10 உளவியல் ஆலோசனை மைய ஊர்திகள், உளவியல் ஆலோசகர்களுடன் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் சென்று ஆலோசனை வழங்கும் பணிகளை நிறைவேற்றி வருகின்றன. மாநிலத்தில் உள்ள 32 மாவட்டங்களும் 10 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. நடமாடும் உளவியல் ஆலோசனை மைய ஊர்திகள் தொலைக்காட்சிப்பெட்டி, குறுந்தகடு இயக்கி மற்றும் தேவையான அனைத்து நவீன வசதிகளுடன் வடிவமைக்கப் பட்டுள்ளன.

மாணவர்களின் நலனுக்காக நடைமுறைப் படுத்தப்பட்ட வெற்றிகரமான திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். உளவியல் ஆலோசகர்கள் மாணவர்களைத் தனித்தனியாகவும், குழுக்களாகவும் பிரித்துக் கூட்டம் நடத்தி மாணவர்களின் மனநலன் பேணும் வகையில் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். இதன் காரணமாக பொதுத்தேர்வுகளில் மாணவர்களின் தேர்ச்சியும் அதிகரித்துள்ளது. 2015–16 ஆம் கல்வியாண்டில் மாநிலத்தில் உள்ள 1909 பள்ளிகளில் 3,83,117 மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2015–16 ஆம் கல்வியாண்டில் மேலும் 7

நடமாடும் உளவியல் ஆலோசனை மைய ஊர்திகளை கூடுதலாக வழங்கியுள்ளார்.



படம் –49. தனிநபர் ஆலோசனை



படம் –50. குழு ஆலோசனை

நடமாடும் உளவியல் ஆலோசனை மையங்கள் மூலம் பயனடைந்தோர்

| கல்வி ஆண்டு | | 2013-2014 | 2014-2015 | 2015-2016 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பள்ளிகளின்எண்ணிக்கை | | 651 | 2063 | 1909 | 4623 |
| குழு ஆலோ–சனை | மாணவர் | 61252 | 177978 | 178356 | 417586 |
| | மாணவியர் | 76246 | 191539 | 186025 | 453810 |
| | மொத்தம் | **137498** | **369517** | **364381** | **871396** |
| தனிநபர் ஆலோ–சனை | மாணவர் | 2418 | 7121 | 9591 | 19130 |
| | மாணவியர் | 3373 | 7806 | 9145 | 20324 |
| | மொத்தம் | **5791** | **14927** | **18736** | **39454** |
| நிகர மொத்தம் | | **143289** | **384444** | **383117** | **910850** |

### 3.16.4 தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வு

தமிழக அரசு ஊரகத் திறனாய்வுத் தேர்வு என்னும் திட்டத்தை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் போட்டித் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு சென்னை நீங்கலாக மற்ற **31** மாவட்டங்களிலும், கிராமப்புறங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முந்தைய ஆண்டில் **8** ஆம் வகுப்பில் **50%** அல்லது அதற்கு மேலும் மதிப்பெண்களைப் பெற்று நடப்பாண்டில் **9** ஆம் வகுப்பில்

பயிலும் மாணவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் அம்மாணவர்கள் இத்தேர்வினை எழுதத் தகுதி படைத்தவர்கள் ஆவர். இத்தேர்வு அரசுத் தேர்வுத் துறை இயக்ககம் மூலம் நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 மாணவர்களுக்கு (50 மாணவர்கள், 50 மாணவிகள்) இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய மாணவர்கள், ரூ.1000 வீதம் அடுத்து வரும் நான்கு ஆண்டுகளுக்கு அவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு முடிக்கும் வரை வழங்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளாக இப்போட்டித் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்துள்ளமை மாணவர்களின் ஆர்வத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

| தமிழக ஊரகத் திறனாய்வுத் தேர்வுகள் கண்ணோட்டம் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ.) | தேர்வு எழுதிய மாணவர்கள் | பயன்பெற்ற மாணவர்கள் |
| 2012 | 1,10,32,000 | 28593 | 3100 |
| 2013 | 1,10,32,000 | 36876 | 3100 |
| 2014 | 1,10,32,000 | 38476 | 3100 |
| 2015 | 1,10,32,000 | 42169 | 3100 |

### 3.16.5 மாநிலப் பொதுக்கல்வி வாரியம்

இவ்வாரியம் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்ற புத்தகங்களின் பாடத்திட்டம், பாடத்திட்டத்தை புதுப்பித்தல், பாடத்திட்டத்தை வடிவமைத்தல், பாடபுத்தகத்தை தயாரித்தல் போன்றவற்றை ஆய்வு செய்து ஒப்புதல் வழங்குகிறது.

ஒவ்வோராண்டும் தனியார் வெளியீட்டார்களால் வெளியிடப்படும் பாடப்புத்தகங்கள் வாரியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பாடத்திட்ட நெறிமுறைகளை அடைப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டனவா என்றும் ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கி வருகிறது.

### 3.16.6.பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் தேர்ச்சியினை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

அ) கல்விச் செயல்திறன் குறித்த மண்டல ஆய்வு

மாநில பள்ளிக் கல்வி துறை அலுவலர்களால் பொதுத் தேர்வில் மாணவர்களின் தேர்ச்சியினை உயர்த்தும் நோக்கோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் கொண்ட மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொதுத்தேர்வில் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்த பள்ளிகள் பாராட்டப்படுவதோடு, வெற்றிக்கான செயல்திட்டங்கள் இக்கூட்டங்களில் பகிர்ந்து கொள்ளப்பட்டு பிற பள்ளிகளும் அவற்றை நடைமுறைப்படுத்தி, வரும் கல்வியாண்டுகளில் தேர்ச்சி விழுக்காட்டினை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

***<u>ஆ) இணை இயக்குநர்களின் மாவட்டக் கண்காணிப்புப் பணி</u>***

இணை இயக்குநர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு மாவட்டங்களில் உள்ள பள்ளிகளின் அனைத்துக் கல்விச் செயல்பாடுகளையும் கூர்ந்து கண்காணிக்கும் பணி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மாணவர் நலத்திட்டங்கள் அனைத்தும் பள்ளிகளில் செயல்படுத்தப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்வதே இப்பணியின் முக்கிய நோக்கமாகும். இணை இயக்குநர்கள் தங்கள் பார்வையின் போது பள்ளிகளில் நலத்திட்டங்கள் சிறந்த முறையில் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்தும், அவை செயல்படுத்தப்படுவதில் தடைகள் ஏதேனும் இருப்பின் அவைகளை உடனுக்குடன் களைந்து, நலத்திட்டங்கள் முழுமையாக மாணவர்களுக்குச் சென்றடைய வழிவகுக்கின்றனர். மாவட்ட அளவில் தலைமையாசிரியர்கள் கலந்து கொள்ளும் ஆய்வுக் கூட்டங்கள் குறித்த கால அளவுகளில் இணை

இயக்குநர்களால் நடத்தப்பட்டு மாணவர்களின் கல்வி முன்னேற்றம் மதிப்பிடப்படுகின்றது.

*இ) சாதனையாளர்களுக்கு ரொக்கப் பரிசுகள்*

மாநில அளவில் தமிழை முதற்பாடமாகக் கொண்டு அரசுப் பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.50,000, ரூ.30,000 மற்றும் ரூ.20,000 வீதம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் தாய்மொழி வழியில் பயிலும் பிற மாணவர்களும் பொதுத் தேர்வுகளில் சிறப்பான தேர்ச்சி பெற ஊக்கம் அளிப்பதாக அமைந்துள்ளது.

மாவட்ட அளவில் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்களின் உயர்கல்விச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது. அப்பள்ளிகள் பின்வருமாறு தெரிவு செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| அரசு மேல்நிலைப் பள்ளிகள் | 1 |
| அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் | 1 |
| ஆங்கிலோ இந்தியன் / மெட்ரிக் / சுயநிதி மேல்நிலைப் பள்ளிகள் | 1 |


இது போன்றே 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தமிழ்மொழியை முதல்பாடமாகக் கொண்டு பயின்று மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ரூ.25,000,

ரூ.20,000 மற்றும் ரூ.10,000 வீதம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

*ஈ) 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாணவர்களின் செயல்திறன்*

மாநில அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் விளைவாக பொதுத் தேர்வுகளில் மாணவர் தேர்ச்சி விழுக்காட்டில் கடந்த 5 ஆண்டுகளாகத் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி விழுக்காடு **2011–12** இல் **86.00%** லிருந்து **2015–16** இல் **93.6%** ஆக வளர்ச்சி கண்டுள்ளது.

வரைபடம் – **36. 10**ம் வகுப்பு பொதுத் தேர்வு – தேர்ச்சி விகிதம்





| | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 |
|---|---|---|---|---|---|
| மாணவர் | 83 | 86 | 88 | 90.5 | 91.3 |
| மாணவியர் | 89 | 92 | 93.6 | 95.4 | 95.9 |
| சராசரி | 86 | 89 | 90.8 | 92.9 | 93.6 |

*ஆதாரம் DGE*

**10**ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் கணிதத்தில் **18,754** பேரும் அறிவியலில் **18,642** பேரும், சமூக அறிவியலில் **39,398** பேரும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றுள்ளனர். கடந்த **5** ஆண்டுகளாகத் மாணவர்களின் செயல்திறன் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. அது போன்றே **12**ஆம் வகுப்பு அரசுத் பொதுத் தேர்வுகளில் **2011–12** இல் **87.00%** ஆக இருந்த தேர்ச்சி விகிதம் **2015–16** இல் **91.40%** ஆகவும் வளர்ச்சி கண்டுள்ளது.

வரைபடம் – **37. 12**ம் வகுப்பு பொதுத் தேர்வு – தேர்ச்சி விகிதம்




| | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 |
|---|---|---|---|---|---|
| மாணவர்கள் | 83.2 | 84.7 | 87.4 | 87.5 | 87.9 |
| மாணவிகள் | 89.7 | 91 | 93.4 | 93.4 | 94.4 |
| மொத்த தேர்ச்சி விழுக்காடு | 87 | 88.1 | 90.6 | 90.6 | 91.4 |

*ஆதாரம் DGE*

மேல்நிலைப் பொதுத் தேர்வுகளில் மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடானது ஆண்டுதோறும் அதிகரித்து வந்துள்ளது. **2011–12**ஆம் கல்வியாண்டோடு ஒப்பிடுகையில் **2015–16** இல் ஒட்டு மொத்தமாக **4.4%** அதிகரித்துள்ளது.

**3.16.7. நூறு விழுக்காடு கண்ட பள்ளிகள்**

பொதுத் தேர்வுகளில் நூறு விழுக்காடு தேர்ச்சி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை **2011–12**ஆம் கல்வியாண்டோடு ஒப்பிடுகையில் **2015–16**ஆம் கல்வியாண்டில் கணிசமாக உயர்ந்துள்ளது. பள்ளிக் கல்வித்துறை செயல்முறைப்படுத்திய பல்வேறு சீர்திருத்த செயல்திட்டங்களின் விளைவாக பொதுத் தேர்வு முடிவுகள் பெருமை கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளன. கீழ்க்கண்ட அட்டவணை நூறு விழுக்காடு தேர்ச்சி பெற்ற அரசு பள்ளிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளதை விரிவாக எடுத்துரைக்கின்றது.

| கல்வியாண்டு | அரசுப் பள்ளிகள் | |
|---|---|---|
| | 10 ஆம் வகுப்பு | 12 ஆம் வகுப்பு |
| **2011–2012** | **362** | **54** |
| **2012–2013** | **453** | **115** |
| **2013–2014** | **558** | **166** |
| **2014–2015** | **1164** | **187** |
| **2015–2016** | **1467** | **266** |

*ஆதாரம் : DGE*

### 3.16.8. மாணவ மாணவியரின் முன்னேற்றத்திற்கான சிறப்புத் திட்டங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘2023 இல் தமிழகம்’ என்ற ஆவணத்தில் தமிழகம் பெரும் அறிவு வளர்ச்சி மையமாகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்தினை கருத்தில் கொண்டு தெரிவித்துள்ளார். அந்நோக்கத்தோடு ஒருங்கமையும் வகையில் கல்வி இருவழிச் செயல்பாடு உடையதாகவும், மாணவர்களை மையப்படுத்துவதாகவும் திட்டமிட்டு செயலாக்கம் பெற்று வருகின்றது. 12–வது ஐந்தாண்டு திட்டப் பரிந்துரையின் அடிப்படையில் அரசானது ஒரு முன்னோடி திட்டமாக 300 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலப் பாடங்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்தும் நோக்கில் புதிய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகின்றது.

### 3.16.9. தமிழகம் மிளிர்கிறது (TANEXCEL)

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை மாநிலத்தில் முதலிடம் பெறும் மாணவர்களாகத் தயார் செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இது கிராமத்திலுள்ள குழந்தைகளைத் திறன் மிக்கவர்களாக உருவாக்கித் தன்னம்பிக்கையோடு பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வினை எழுதச் செய்யும் ஒரு முயற்சியாகும்.

இத்திட்டம் **2015–16** ஆம் ஆண்டு முதல், **67** கல்வி மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முழுமையான செயல்திறனை வளர்க்கும் நோக்கில் **67** மையங்களில் பயிலும் **5,611** மாணவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன.

**TANEXCEL** மாணவர்களின் தேர்ச்சி விவரம்

| வ. எண் | மதிப்பெண் வேறுபாட்டெல்லை (அதிகபட்சம் 500) | மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 400 க்கும் குறைவாக | 821 |
| 2 | 400 – 419 | 352 |
| 3 | 420 – 439 | 661 |
| 4 | 440 – 459 | 1278 |
| 5 | 460 – 479 | 1871 |
| 6 | 480 – 499 | 628 |

இத்திட்டத்தின் மூலமாக **2016** மார்ச் மாதம் நடைபெற்ற பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் பெருமைப்படத்தக்க தேர்வு முடிவுகளைப் பெற முடிந்தது.


## 3.17. கல்வி இணைச் செயல்பாடுகள்

### 3.17.1 சதுரங்க விளையாட்டு

மாணவர்களின் அறிவுத்திறன், ஒருமுகப்படுத்தும் திறன் மற்றும் பகுப்பாய்வுத் திறன்களை வளர்க்கும் தகுந்த கருவியாகச் சதுரங்க விளையாட்டு விளங்குகிறது. அன்றாட வாழ்வின் இன்றியமையாத் திறனான நினைவாற்றலை வளர்க்கும் சிறந்த 'நினைவுகூர்' பயிற்சியினை இவ்விளையாட்டு வழங்குகிறது. மாணவர்கள் தங்களின் விவாத அறிவு, சிக்கலான நிலையில் முடிவெடுக்கும் திறன், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறன், கணிதத் திறன் ஆகிய திறன்களை உயர்த்திக் கொள்ள இது உதவுகிறது. சதுரங்க விளையாட்டு மாணவர்களின் பகுத்தறிவுத்திறனை மேம்படுத்தும் ஆற்றல் கொண்டதாகும்.

எனவே இவ்விளையாட்டு அரசுப் பள்ளிகளில் 2012–13 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 7 முதல் 17 வயது வரை உள்ள மாணவர்களிடையே 2013–14 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு நிலைகளில் சதுரங்கப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக இவ்விளையாட்டுப் போட்டிகள் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளன என்பதை கீழ்க்கண்ட வரைபடம் விளக்குகிறது.

வரைபடம் – 38. சதுரங்கம், பள்ளி அளவில் பங்கு பெற்றோர் விவரம்




ஆதாரம் பகஇ

தமிழக அரசு ரூ.22 இலட்சத்தை இப்போட்டிகளை நடத்துவதற்கெனத் தொடர் செலவினமாக **2015–16** ஆம் கல்வியாண்டில் வழங்கியுள்ளது. இச்சதுரங்க போட்டிகளில் பல்வேறு பிரிவுகளில் பங்கேற்ற மாணவர்கள் எண்ணிக்கையை கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை தெரிவிக்கிறது.

**2015–16இல் சதுரங்கப் போட்டிகளில் பங்கு பெற்றோர்**

| வ.எண் | பிலை | பங்கு பெற்றோர் |
|---|---|---|
| 1 | மாநிலம் | 360 |
| 2 | மண்டலம் | 1,608 |
| 3 | மாவட்டம் | 6,728 |
| 4 | வட்டம் | 1,25,280 |
| 5 | பள்ளி | 15,32,050 |

பள்ளி அளவில் இச்சதுரங்கப் போட்டிகளில் கலந்து கொண்ட 15,32,050 போட்டியாளர்களில் 1,25,280 பேர் வட்ட அளவில் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுள் 6,728 போட்டியாளர்கள் மாவட்ட அளவில் வெற்றி பெற்று 1,608 மாணவர்கள் மண்டல அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுள் 360 மாணவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு இறுதி போட்டியில் 24 மாணவர்கள் மாநில அளவில் வெற்றியாளர்களாக திகழ்ந்தனர்.

### 3.17.2 விளையாட்டுகள் – மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள்

விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. மேலும் மாணவர்களின் முடிவெடுக்கும் ஆற்றல், ஒற்றுமையுணர்வு, குழு மனப்பான்மை, தலைமைப் பண்பு மற்றும் நேர மேலாண்மை ஆகிய பண்புகளை வளர்க்கவும் உதவுகின்றன.

பள்ளிக் கல்வித்துறை ஒவ்வோராண்டும் 'குடியரசு தின தடகள போட்டிகள்', 'குடியரசு தின குழுப்போட்டிகள்' மற்றும் 'பாரதியார் தினப் போட்டிகள்' ஆகியவற்றை குறுவட்ட அளவிலிருந்து மாநில அளவு வரை நடத்துகிறது. இப்போட்டிகளில் வெற்றி பெறும் சிறந்த சாதனையாளர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இப்போட்டிகளின் வாயிலாக

மாநில அளவில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களை இனங்கண்டு தக்க பயிற்சியளித்து, தேசிய அளவில் இந்திய பள்ளிகளுக்கான விளையாட்டுக் கூட்டமைப்பு (SGFI) நடத்தும் போட்டிகளில் பங்குபெற வாய்ப்பு அளிக்கின்றது. கடந்த 5 ஆண்டுகளாகப் பதக்கப்பட்டியலில் தமிழகம் பெருமைப்படத்தக்க சாதனை படைத்துள்ளது.

**2013–14** ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'குடியரசு தின தடகள போட்டிகள்', 'குடியரசு தின குழுப்போட்டிகள்', 'பாரதியார் தினப் போட்டிகள்' மற்றும் 'தேசிய விளையாட்டு போட்டிகள்' நடத்திட ரூ.10 கோடி நிதி வழங்கியுள்ளார். மேலும் இந்த தொகையானது மாணவர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ளவும் பயன்படுகிறது.

| ஆண்டு | தரம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **2012–13** | **12** | **21** | **36** | **70** | **127** |
| **2013–14** | **07** | **47** | **38** | **62** | **147** |
| **2014–15** | **06** | **60** | **68** | **73** | **201** |
| **2015–16** | **05** | **67** | **54** | **66** | **187** |

தமிழகத்திலுள்ள திறமையான விளையாட்டு வீரர்களுக்கு இம்மானியம் ஒரு சிறந்த வரமாக அமைந்துள்ளது. தேசிய அளவில் **2013–14** ஆம் ஆண்டில் இருந்த **12** ஆம் இடத்திலிருந்து, **2015–16** ஆம் ஆண்டில் **5** ஆம் இடத்திற்கு முன்னேறி பள்ளிக் கல்வித்துறை சாதனை புரிந்துள்ளது. மேலும் முந்தைய ஆண்டுகளை விட **2015–16** ஆம் ஆண்டில் கலந்து கொண்ட வீரர்களின் எண்ணிக்கை அதிகரிக்க இம்மானியம் துணைபுரிந்துள்ளது.

வரைபடம் **–39.** விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகள்




**2015–16** ஆம் கல்வியாண்டில் தேசிய அளவில் நடைபெற்ற பள்ளிகளுக்கான போட்டிகளில் பள்ளிக் கல்வித்துறையானது, ஸ்குவாஷ், கேரம் (சுண்டாட்டம்), பூப்பந்து, வளைபந்து மற்றும் கடற்கரை கைப்பந்து ஆகிய போட்டிகளில் ஒட்டுமொத்த வாகையர் பட்டம் வென்றுள்ளது.

தமிழ்நாடு சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளிலும் **2015–16** ஆம் ஆண்டில் உறுதியான தடம் பதித்துள்ளது. சீன நாட்டில் நடைபெற்ற சர்வதேச தடகளப் போட்டியில் தமிழகத்தின் சார்பில் கலந்து கொண்ட தடகள வீரர்கள் **1** தங்கம், **2** வெள்ளி, **3** வெண்கலப் பதக்கங்களை வென்று சரித்திரம் படைத்தமை தமிழகத்தின் தலைசிறந்த சாதனையாகும். இதேபோல் தமிழகப் பள்ளி மாணவர்கள் பிரேசில் நாட்டில் நடைபெற்ற சர்வதேச கடற்கரை கைப்பந்து போட்டியில் கலந்து கொண்டதுடன் **3** வெண்கலப் பதக்கங்களையும் வென்று சாதனை புரிந்துள்ளனர்.

### 3.17.3 யோகா

யோகா என்பது மனம், உடல் மற்றும் ஆன்மாவை ஒருநிலைப்படுத்துவதற்கான பயிற்சியாகும். மேலும் யோகப் பயிற்சி, பள்ளி மாணவர்களின் விளையாட்டு செயல்பாடுகளின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாகவும் உள்ளது. பள்ளிகளில் மதிய உணவு இடைவேளைக்கு முன்னர் இப்பயிற்சி கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

### 3.17.4 சாரண–சாரணியர் இயக்கம்

தமிழகத்தில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கம் இயங்கி வருகிறது. இவ்வியக்கம் வளரும் மாணவர்களின் உள்ளார்ந்த திறன், நன்னடத்தை, குடியுரிமை, குடிமை நலப்பண்புகள், உதவும்

மனப்பான்மை, நல்லொழுக்கம், நாட்டுப்பற்று மற்றும் தலைமைப் பண்பினை வளர்த்திட உதவுகின்றது. வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொல்லியல் நினைவுச் சின்னங்களைத் தூய்மைப் படுத்துதல், மரம் நடுதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் போன்ற சமூகச்சேவைகளில் சாரண–சாரணியர் பங்குபெற இவ்வியக்கம் ஊக்குவிக்கிறது.

தமிழ்நாடு பாரத சாரண–சாரணியர் இயக்கத்தின் பணியாளர்களின் ஊதியத்திற்கும், தலைமை அலுவலகப் பராமரிப்புச் செலவிற்கும் தமிழக அரசால் ரூ. 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறந்து விளங்கும் சாரண–சாரணியர்களுக்கு 1998–99 ஆம் ஆண்டு முதல் மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் 'இராஜ்ய புரஸ்கார்' விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தில் மாணவர்கள் கலந்து கொள்வதை ஊக்குவிக்க ஒவ்வொரு ஆண்டும் ரூ.5 இலட்சம் வழங்கப்படுகிறது. தமிழக சாரண–சாரணியர் தேசிய அளவிலான முகாம்களிலும் பங்கேற்றுள்ளனர்.

### 3.17.5 சுற்றுச்சூழல் மன்றம்

மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே சுற்றுச்சூழல் மன்றத்தின் நோக்கமாகும். இம்மன்றம் 11,460 பள்ளிகளில் செயல்பட்டு வருகிறது. பள்ளிகளில்

சுற்றுச்சூழலை மேம்படுத்த சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையால் ரூ.5,000 ஒவ்வொரு பள்ளிக்கும் வழங்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை ஆகியன ஒருங்கிணைந்து மரக்கன்றுகள் நடுதல், பள்ளிகளில் தோட்டங்களை உருவாக்கி பராமரித்தல் போன்ற செயல் பாடுகளில் ஈடுபடுகின்றன. இதற்கான செயல்திட்டங்கள் ஒவ்வோராண்டும் சுற்றுச்சூழல் மன்றங்களால் வடிவமைக்கப் பட்டு பள்ளிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

### 3.17.6 இளஞ்செஞ்சிலுவைச் சங்கம்

மாணவர்களிடையே உடல்நலம், சேவை மனப்பான்மை மற்றும் நட்புணர்வை வளர்த்தலே இளஞ்செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கைகளாகும். 6,397 அலகுகளையும் 3,19,850 மாணவர்களைக் கொண்டு இளஞ்செஞ்சிலுவைச் சங்கம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இயங்கி வருகிறது. தேசிய கல்வித் திட்டக் கட்டமைப்பு (NCF) 2005 இன் பரிந்துரைகளின்படி மாணவர்களிடையே மனிதநேயப் பண்புகளை வளர்த்திட உதவும் வகையில் பள்ளிகளில் கல்வி இணைச் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக இளஞ்செஞ்சிலுவைச் சங்கம் செயல்படுகிறது. தேசிய கல்வித் திட்டக் கட்டமைப்பு (NCF) 2005 பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குவதால்

இளஞ்செஞ்சிலுவைச் சங்கம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒருங்கிணைந்த அங்கமாக திகழ்கின்றது.

மாவட்ட ஆட்சியர் இளஞ்செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலராவார். இச்சங்கச் செயல் பாடுகளில் பயிற்சியளிக்கப் பட்ட ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும் மாணவர்கள் இளநிலையாளர்களாகவும் செயல்படுகின்றனர்.

இளநிலையாளர்களாகச் செயல்படும் மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு, முதலுதவி, தீ விபத்து பாதுகாப்பு, கண் தானம் மற்றும் இரத்த தானத்தின் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் மாசுபடுவதிலிருந்து காத்தல், காடுகள் அழிப்பைத் தடுத்தல் போன்றவற்றில் பயிற்சிகள் தரப்படுகின்றன.

### 3.17.7 இளைஞர் திறன் மேம்பாட்டுத் திட்டம்

மாணவர்களுக்குள் பொதிந்துள்ள திறமைகளை வெளிக்கொணரும் ஒரு தளமாக ‘இளைஞர் திறன் மேம்பாட்டுத் திட்டம்’ விளங்குகிறது. ஒவ்வோராண்டும் பள்ளி அளவில், கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி, வினாடிவினா, கவிதை எழுதுதல், இசை, பரதநாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகளை இசைத்தல், நடிப்புக்கலை போன்ற போட்டிகள் இத்திட்டத்தின் மூலம் நடத்தப்பட்டுவருகின்றன. 2015–16 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மாநில அளவிலான

போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

### 3.17.8 நாட்டு நலப் பணித் திட்டம்

மருத்துவ முகாம், இரத்ததான முகாம், நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு போன்ற சமூக சேவைகளில் ஈடுபடுத்துவதன் வாயிலாக மாணவர்களின் ஆளுமைத்திறனை வளர்ப்பதே நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் 1,940 மேல்நிலைப் பள்ளிகளில், 97,000 மாணவர்களைத் தன்னார்வலர்களாகக் கொண்டு இந்நாட்டு நலப் பணித்திட்ட அலகுகள் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் தொடர் செயல்பாடுகளுக்காக ரூ.2.13 கோடியும், சிறப்பு முகாம்களுக்காக ரூ.2.18 கோடியும் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 2015–16 ஆம் ஆண்டில் 1,900 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

## 3.18 இதர செயல்பாடுகள்

### 3.18.1 அறிவியல் கண்காட்சி

அறிவியல் கண்காட்சி மாணவர்களின் இயற்கையான படைப்பாற்றல் தாகத்தைத் தணிக்கவும் அவர்களின் படைப்பாற்றல் திறமையை வெளிக்கொணரவும் ஏற்ற தளமாக விளங்குகிறது. மாணவர்களின் இளம் மனதில் அறிவியல் சிந்தனையை வளர்த்து, அவர்களின் உள்ளார்ந்த படைப்பாற்றல் திறமைகளை வெளிக்கொணரவும் இது உதவுகின்றது. அறிவியல் கண்காட்சிகள் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும், கல்வி மாவட்ட

அளவிலும், வருவாய் மாவட்ட அளவிலும் இறுதியாக மாநில அளவிலும் ஒருங்கிணைந்து நடத்தப்படுகின்றன. அறிவியல் கண்காட்சிகளை ஒருங்கிணைத்து நடத்துவதற்காக ‘அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்’ மூலமாக ஆண்டுதோறும் ரூ. 32 இலட்சம் அனைத்து மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2015–16 ஆம் ஆண்டில் “ஒருங்கிணைந்த வளர்ச்சியில் அறிவியல் மற்றும் கணிதத்தின் பங்கு” என்ற பொருளில் பெரம்பலூர் மாவட்டத்தில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது. அக்கண்காட்சியில் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த காட்சிப்பொருள்கள் பெங்களூரில் நடைபெற்ற தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் பங்கு பெற்றன.




படம் –51. தென்னிந்திய அறிவியல் கண்காட்சி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேதகு முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களைக் கௌரவிக்கும் வண்ணம் அவருடைய பிறந்த நாளை "இளைஞர் எழுச்சி நாளாகக்" கொண்டாடுமாறு அறிவித்தார். அதற்கேற்ப இளைஞர் எழுச்சி நாளைக் கொண்டாடும் வகையில் அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

### 3.18.2 பள்ளிகளில் மழைநீர் சேகரிப்புத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அனைத்துப் பள்ளிகளிலும் மழைநீர் சேகரிப்புத் திட்ட கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் வரும் தலைமுறையினருக்காக நீர் சேமித்தலின் அவசியம் குறித்தும் பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டன. மழைநீர் சேகரிப்புத் திட்டம் தொடர்பாக அனைத்துப் பள்ளிகளிலும் கட்டுரைப் போட்டிகளும் ஓவியப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

மாவட்ட அளவில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சிகளில் மழைநீர் சேகரிப்புத் தொடர்பான மாணவர்களின் படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டதுடன் சிறந்த படைப்பு மாதிரிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### 3.18.3 பெற்றோர் ஆசிரியர் கழகம்

பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் பள்ளிகளில் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் இணைத்து பள்ளியில் தரமான கற்பித்தல் முறையை மேம்படுத்துவதையும் பள்ளிகளுக்குத் தேவையான வள ஆதாரங்களைப் பெற்றுத் தருவதையும் முதன்மை நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. மேலும் பள்ளி மற்றும் சமூகத்திற்கு ஒரு இணைப்புப் பாலமாகவும் இவை விளங்குகின்றன. மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம் பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் வினா வங்கிகள், கற்றல் கையேடுகள் மற்றும் மாதிரி வினாத்தாள்கள் தயார் செய்து வெளியிட உதவி புரிந்து வருகின்றது.

### 3.18.4 ஆசிரியர் இல்லம்

தமிழகத்தில் ஆசிரியர் இல்லங்கள் சென்னை மற்றும் திருச்சியில் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு காரணங்களினால் இந்நகரங்களுக்கு வரும் ஆசிரியப் பெருமக்கள் குறைந்தளவு கட்டணம் செலுத்தி தங்கிச் செல்ல இவ்வில்லங்கள் பயன்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **2015–16** ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மேலும் இரண்டு புதிய ஆசிரியர் இல்லங்கள் அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளார். ஆசிரியர் இல்லங்களைக் கட்டுவதற்காக இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் “தேசிய ஆசிரியர் நலஅமைப்பின்” (National Foundation for Teacher Welfare) உதவியுடன்

கட்டப்படுகின்றன. இந்த புதிய ஆசிரியர் இல்லங்கள் சென்னை மற்றும் திருச்சியில் உள்ள ஆசிரிய இல்லங்களுடன் இணைவதன் மூலம் ஆசிரியர் இல்லங்கள் மேலும் விரிவுபடுத்தப்படுகின்றன.

**3.19 நிதி ஒதுக்கீடு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில வரவு செலவு திட்டத்தின் வாயிலாக பள்ளிக் கல்வி இயக்ககத்துக்கு **2015–16** ஆம் கல்வியாண்டில் ரூ.**9712.31** கோடியும், **2016–17** ஆம் கல்வியாண்டில் ரூ.**10924.06** கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதேபோல் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்திற்கு **2015–16** ஆம் கல்வியாண்டில் ரூ.**816.19** கோடியும், **2016–17** ஆம் கல்வியாண்டில் ரூ.**1140.32** கோடியும் ஒதுக்கீடு செய்ள்ளார்கள்.

**3.20.முடிவுரை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு தலைமையின் கீழ், பள்ளிக் கல்வி இயக்ககம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து மாணவர் சேர்க்கையை உயர்த்திடவும், இடைநிற்றலைக் குறைத்திடவும், மாணவர்களின் தேர்ச்சி விழுக்காட்டினைக் கூட்டிடவும், தரமான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்திடவும், ஆசிரியர்களை நியமித்துத் தரமிக்க இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை அளிப்பதை உறுதி செய்ய தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றி வருகின்றது.



386-4-15

# 4. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

## 4.1. அறிமுகம்

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், குழந்தைகளின் கல்வித் தேவைகளை நிறைவேற்ற அரசு நிதியுதவி பெறாமல் தனியார் சுயநிதி அடிப்படையில் தொடங்கப்பட்ட பள்ளிகளின் செயல்பாடுகளை மாநில அரசின் முற்போக்கு கொள்கைகளுடன் இயைந்து செயல்படுவதை கண்காணிப்பதற்காக 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் விதித்தொகுப்பு, 1978இன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்ட பள்ளிகள், மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆகும்.

ஆங்கில வழி கல்வி வழங்கும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் அவற்றின் இயல்புநிலைக்கு மாற்றமின்றி தமிழகத்தில் தரமான பள்ளிக் கல்வியினை அளிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றன. தற்போது 38,04,374 குழந்தைகளுக்கு ஆங்கில வழியில் கல்வி வழங்கிவரும் 4,174 பள்ளிகளின் செயல்பாடுகளை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் ஒழுங்குபடுத்தி வருகிறது. மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நிர்வாகத்தைச் சீரமைப்பதும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளையும் தரத்தையும் நிறைவு செய்துள்ள பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தின் முக்கியப் பங்காகும்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 இன்படி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதை உறுதி செய்வதோடு இச்சட்ட விதிமுறை மீறல்கள் நடைபெறாமல் தடுப்பதையும் இவ்வியக்ககம் உறுதி செய்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு 2023இன்படி பள்ளிக் கல்வியில் தமிழகம் முன்னோடியாக விளங்க வேண்டுமென்பதை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் உணர்ந்து, அந்நிலையை அடைய உறுதியேற்றுள்ளது.

## 4.2 தொலைநோக்கு

மழலையர் வகுப்பு முதல் மேல்நிலை வகுப்பு வரை ஆங்கில வழியில் கல்வியளித்து வரும் சுயநிதி மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தரமான கல்வியை அளிப்பதற்கான திட்டம் மற்றும் உறுதிசெய்தலுடன், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல்.

## 4.3 நோக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கான தரமான கல்வியை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்யும் வகையில் கீழ்க்காணும் நோக்கங்களை நிறைவேற்ற மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் முயற்சி செய்து வருகிறது.

- ❖ தேவையான திறன்மேம்பாட்டுச் செயல்களை வழங்குவதன் வாயிலாக பள்ளி மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்தல்.

- ❖ மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்ய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்துதல்.

- ❖ விதிமுறைகளின்படி தகுதியான ஆசிரியர் நியமனத்தை உறுதி செய்தல்.

- ❖ மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பு, 1978இன்படியும் அவ்வப்போது அரசால் வழங்கப்படும் விதிமுறைகளின்படியும் மெட்ரிகுலேசன் பள்ளிகள்/ மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதியும் அங்கீகாரமும் வழங்குதல்.

❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், **2009** ஐ செயல்படுத்தும் முதன்மைத் தொடர்பு அலுவலராகச் செயல்படுதல்.

❖ அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் கற்றலுக்கு உகந்த சூழலை உருவாக்கத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

❖ அரசு அவ்வப்போது வெளியிடும் ஆணைகளை செயல்படுத்தாமல் விதி மீறல்களில் ஈடுபடும் பள்ளிகளுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

### 4.4. தர மேம்பாட்டுக்கான முன்முயற்சிகள்

#### 4.4.1. மாணவர் மதிப்பீட்டு முறை சீர்திருத்தம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் **2012–13**ஆம் கல்வியாண்டு முதல் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை **1** முதல் **8–**ஆம் வகுப்பு வரை நடைமுறைப்படுத்தியதுடன் அம்மதிப்பீட்டுமுறை **2013–14** ஆம் கல்வியாண்டிலிருந்து **9–**ஆம் வகுப்பிற்கும் நீட்டிக்கப் பட்டது. இம்முறையின் மூலம் குழந்தைகளின் கல்விச் செயல்பாடுகள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகள் ஆகியவை ஆண்டு முழுவதும்

தொடர்ந்து மதிப்பிடப்படுகிறது. இம்முறையானது கல்விச் செயல் பாடுகளையும், கல்வி இணைச் செயல்பாடுகளையும் உள்ளடக்கியிருப்பதால் மாணவர்களது முழுமையான திறனை வெளிக்கொணர உதவுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குழந்தைகளின் புத்தகச் சுமையைக் குறைக்கவும் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் பாடக் கருத்துகளைப் புரிந்து கற்கும் நிலையை மேம்படுத்தவும் முப்பருவக் கல்வி முறையை அறிமுகப்படுத்தினார்கள். மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், அனைத்து மாவட்டங்களிலும் ஆசிரியர்களுக்குத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் இரண்டு நாள் பயிற்சியை வழங்கியது. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் அச்சமற்ற மதிப்பீடு உறுதி செய்யப்படுவதுடன் மகிழ்வான கற்றலும் ஊக்குவிக்கப்படுகிறது.

### 4.4.2. புத்தகங்களின் தர மேம்பாடு

பள்ளிகளில் தரமான கல்வி வழங்குவதை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள். அதில் முக்கியமானது, பாடநூல்களைத் தரமான உள்ளடக்கம், வண்ண அமைப்பு மற்றும் அழகிய புறத்தோற்றத்துடன் வழங்குவதாகும். அனுபவம் மிக்க ஆசிரியர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால்

பாடப்புத்தகங்கள் தரம் மேம்படுத்தப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் அச்சிடப்படுகின்றன. மொத்தம் உள்ள 4,174 மெட்ரிகுலேசன் பள்ளிகளில், 4,036 பள்ளிகள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் அச்சிட்டு வெளியிடும் பாடநூல்களைப் பின்பற்றுகின்றன.

### 4.4.3. பொதுத் தேர்வுகளில் மெட்ரிக் பள்ளி மாணவர்களின் அடைவு

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் சிறப்பை மேம்படுத்தும் வகையில் எண்ணற்ற முயற்சிகளை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் முன்னெடுத்து வருகின்றது. குழந்தைகளின் கற்றல் அடைவில் வரவேற்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த 4,174 மெட்ரிகுலேசன் பள்ளி முதல்வர்களுக்குக் கல்விசார் கண்காணிப்பு மற்றும் நிர்வாகத்திறன் பயிற்சி, மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தின் மூலம் அளிக்கப்பட்டது. மேலும், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அவர்களின் கற்பித்தல் திறனை காலத்திற்கேற்ப மேம்படுத்தும் வகையில் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. பத்தாம் வகுப்பில் அறிவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு செய்முறை பரிசோதனைகளில் பொதிந்துள்ள அறிவியல் கருத்துகளை வலியுறுத்தும் வகையில் பயிற்சி வழங்கப்பட்டது.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் கல்வியில் மேம்பாடு அடையும் வகையில் கற்றல் கட்டகங்கள் தயாரித்து வழங்கப்பட்டது. இந்த கற்றல் கட்டகங்கள் மாணவர்களுக்கு ஆயத்த நூல்களாகவும் பயன்படுத்தப்படுகிறது.

மாணவர்களின் கல்வி அடைவு (அறிவுத் திறன்) மற்றும் அவர்களின் வளர்ச்சி, கல்வி இணைச்செயல்கள் போன்ற பிற களங்களில் வளர்ச்சி எவ்வாறு உள்ளது என்பதை பெற்றோர்களுக்கு அறிவிக்க வேண்டியுள்ளது. இதற்கென அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் பள்ளி வளாகத்திலேயே பெற்றோர் சந்திப்பு கூட்டங்களை நடத்தி அவர்களின் குழந்தைகள் பல்வேறு பாடங்களிலும் பெற்ற கற்றலடைவை தெரிவிக்கும் நிகழ்வை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் உறுதி செய்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் பலவற்றில் கணினி தொழில் நுட்பத்தைக் கற்றலுக்குப் பயன்படுத்த உகந்த வகையில் ஸ்மார்ட் போர்டு (Smart Board) வசதிகளை ஏற்படுத்தியுள்ளன. மேலும், கணினி உதவியுடன் கற்பது மாணவர்களின் கற்றல் நிலையைத் தக்கவைத்துக் கொள்வதை உறுதி செய்கிறது. தரமேம்பாட்டிற்கான இத்தகு முன்முயற்சிகள் அனைத்தும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் மாணவர்களின் திறன்களை மேம்பாடடையச் செய்துள்ளது. மேலும், இவ்வகை தர மேம்பாட்டிற்கான முன்முயற்சிகள் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்

தேர்வுகளில் நூறு சதவீத தேர்ச்சி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கையைத் தொடர்ச்சியாக உயர்த்தி வருகின்றன.



படம் –**52.** ஸ்மார்டு போர்டுடன் கூடிய வகுப்பறை




படம் –**53.** ஸ்மார்டு போர்டுடன் கூடிய வகுப்பறை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் பொதுத்

தேர்வுகளை எதிர்கொள்ளும் மாணவர்களை முன்னெப்போதும் இல்லாத அளவில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் உண்டான மன அழுத்தத்திலிருந்து மீட்டெடுத்து அவர்களின் ஆற்றல் மேம்பாட்டிற்காக வல்லுநர்களின் துணையோடு வழிகாட்டுதல் பயிற்சி வழங்கப்பட்டது.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை சீராக உயர்ந்து வருகிறது. அதன்படி பத்தாம் வகுப்பில் **2013–14**ஆம் கல்வியாண்டில் **1590** மெட்ரிக் பள்ளிகள் **100** சதவீத தேர்ச்சியைப் பெற்றுள்ளன. **2014–15** இல் இது **2437** ஆகவும் **2015–16** இல் **2455** ஆகவும் உயர்ந்துள்ளது.


வரைபடம் **–40. 10**ம் வகுப்பு – **100** சதவிகித தேர்ச்சி




ஆதாரம் : அதேஇ

பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வைப் பொறுத்த அளவில் **660** மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள் **2013–14** ஆம் ஆண்டில் முழுத் தேர்ச்சி பெற்றன. இவ்விகிதம் **2014–15**ஆம் ஆண்டில் **958** ஆகவும் **2015–16**இல் **1031** ஆகவும் உயர்ந்துள்ளது. **2015–16**ஆம் ஆண்டு மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் முறையே **98.66** மற்றும் **97.61** தேர்ச்சி சதவீதம் எய்தப்பட்டுள்ளது.

வரைபடம் **–41. 12**ம் வகுப்பு – **100** சதவிகித தேர்ச்சி




ஆதாரம் : அதேஇ

மேலும், 2015–16ஆம் ஆண்டு பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 3 மாணவர்கள் மாநில அளவில் முதலிடத்தையும் 2 மாணவர்கள் இரண்டாமிடத்தையும் 4 மாணவர்கள் மூன்றாமிடத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலிடத்தை இரு மாணவர்களும், இரண்டாமிடத்தை 47 மாணவர்களும், மூன்றாமிடத்தை 203 மாணவர்களும் பகிர்ந்து கொண்டனர். இச்சாதனைகள் அனைத்தும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் மேற்கொண்ட தொடர் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியினால் விளைந்த நன்மைகளாகும்.

### 4.4.4. அறிவியல் கற்றலை ஊக்குவித்தல்

அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்தவும், உயர் கல்வியில் அறிவியல் பாடத்தின் மீது ஈர்ப்பை ஏற்படுத்தவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிகளில் அறிவியல் கண்காட்சி நடத்தப்படுவதை கட்டாயமாக்கியுள்ளார்கள். பள்ளியளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இது குழந்தைகளின் உள்ளார்ந்த படைப்புத்திறனை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாக அமைகிறது. அதிக அளவிலான மெட்ரிகுலேசன் பள்ளிகள் இந்த அறிவியல் கண்காட்சிகளில் பங்குபெறுகின்றன.

### 4.4.5. நூலக வசதி

குழந்தைகளிடையே வாசிக்கும் பழக்கத்தினை ஊக்குவிக்க மெட்ரிகுலேசன் பள்ளிகளில் நூலகம் அமைக்கப்படுவது அரசால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் குறைந்தது 1500 புத்தகங்களும், மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் குறைந்தது 3000 புத்தகங்களும் நூலகத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும். இதனடிப்படையில் அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி நூலகங்களில் அவ்வப்போது புத்தகங்கள் சேர்க்கப்படுவது ஆய்வு அலுவலர்களால் உறுதி செய்யப்படுகிறது.

### 4.4.6. கல்வி இணைச் செயல்பாடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் ஒட்டுமொத்த மற்றும் முழுமையான வளர்ச்சிக்கு உயர்ந்தபட்ச முன்னுரிமை அளித்துள்ளார்கள். இந்நிலையை அடையவே சதுரங்க விளையாட்டு, யோகா, சாரண சாரணியர் இயக்கம், இலக்கிய மன்றங்கள், பாடவாரியான மன்றங்கள், நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை, இளைஞர் செஞ்சிலுவை சங்கம், செஞ்சுருள் சங்கம், நுகர்வோர் மன்றம், சாலைப் பாதுகாப்பு அணி மற்றும் பிற கலை நிகழ்வுகளான நடனம், இசை, நுண்கலைகள், பொம்மலாட்டம் போன்ற கல்வி இணைச் செயல்பாடுகள் பலவற்றில் மாணவர்கள்

பங்கேற்பதற்கான வாய்ப்பு மெட்ரிகுலேசன் பள்ளிகளில் உருவாக்கப்பட்டுள்ளது.



படம் –54 மாநில அளவிலான இளையோர் தனித்திறன் போட்டிகள்



படம் –55 மாநில அளவிலான இளையோர் தனித்திறன் போட்டிகள்

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக் கொண்டு வரும் வகையில் இணைச்செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பை உறுதி செய்கிறது. பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளையோர் தனித்திறன் திட்டத்தின் (Young Talent Scheme) கீழ் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளைப் பெறுகின்றனர். மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள், நாட்டுப்புற நடனம், தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரை எழுதுதல், வினாடி–வினா, வாய்ப்பாட்டு மற்றும் இசைக் கருவிகள் வாசித்தல், பரத நாட்டியம், தனி நடிப்பு மற்றும் ஓவியம் போன்ற போட்டிகளில் பங்கேற்கின்றனர். போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களில் பெருமளவிலானவர்கள் மாநில அளவில் பரிசுகளை வென்றெடுப்பது குறிப்பிடத்தக்கது.

**4.4.7. மாணவரிடைய விளையாட்டு மரபை கட்டமைத்தல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில, தேசிய, சர்வதேச அளவில் மாணவர்கள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் பொருட்டு ரூ.10 கோடி நிதி ஒதுக்கியுள்ளார்கள். மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி

மாணவர்கள் கலந்து கொள்வதை ஊக்குவித்து வருகிறது. 2015–16 ஆம் ஆண்டு தேசிய அளவில் பல்வேறு தனிநபர் மற்றும் குழு விளையாட்டுகளில் 91 தங்கப் பதக்கங்களையும் 84 வெள்ளிப் பதக்கங்களையும் 67 வெண்கலப் பதக்கங்களையும் மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்கள் வென்றுள்ளனர். சர்வதேச அளவில் 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்று வந்துள்ளனர்.

### 4.4.8. கழிவறை மற்றும் குடிநீர் வசதி உள்ளதை உறுதிசெய்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி மெட்ரிகுலேசன் பள்ளிகளில் குழந்தைகளுக்கு கழிவறை மற்றும் குடிநீர் வசதி செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கான வரையறைகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வரையறைகளின்படி 50 குழந்தைகளுக்கு ஒரு கழிவறையும், 20 குழந்தைகளுக்கு ஒரு சிறுநீர் கழிப்பிடமும், 20 குழந்தைகளுக்கு ஒரு குடிநீர் குழாயும், 20 குழந்தைகளுக்கு ஒரு கை கழுவும் குழாயும் அமைக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மேற்படி வசதிகளை ஒவ்வொரு மெட்ரிகுலேசன் பள்ளியும் செய்ய வேண்டும். பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு முன்பு மேற்படி வசதிகள் முழுமையாக செய்யப்பட்டுள்ளதை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் உறுதி செய்கிறது.

**4.4.9. பேருந்து பயண அட்டை வசதியினை விரிவுபடுத்துதல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விலையில்லாப் பேருந்து பயண அட்டை வழங்கும் சலுகையை மெட்ரிகுலேசன் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளார்கள். இந்தச் சலுகை 2015–16 ஆம் ஆண்டில் 2,74,116 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**4.4.10. பள்ளிகள் மூலம் வேலைவாய்ப்பு பதிவு செய்தல்**

பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களின் கல்வித் தகுதியினை வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்வதற்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் உதவியுடன் சார்ந்த பள்ளிகளிலேயே பதிவை மேற்கொள்ள அரசால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**4.4.11. இருப்பிட, சாதி மற்றும் வருமானச் சான்று வழங்குதல்**

சாதிச்சான்று, வருமானச்சான்று மற்றும் இருப்பிடச் சான்றுகளை அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே வழங்கும் திட்டம் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாநில அரசின் இத்தகு சிறப்பான செயல்பாட்டினால் மாணவர்கள் எவ்வித சிரமமும் இன்றித் தங்களுக்குத் தேவைப்படும் சான்றிதழ்களைப் பள்ளிகளிலேயே

பெற்றுக்கொள்ள முடிகிறது. இத்திட்டத்தின் கீழ் **2015–16** ஆம் கல்வியாண்டில் **2,11,697** சாதிச் சான்றிதழ்களும் **1,75,983** வருமானச் சான்றிதழ்களும் **1,84,590** இருப்பிடச் சான்றிதழ்களும் மாணவர்களுக்கு அவர்களது பள்ளிகளிலேயே வழங்கப்பட்டன.

### 4.4.12. ஆசிரியர்களுக்கான விருதுகளும் சலுகைகளும்

போற்றத்தக்க வகையில் சேவையாற்றி வரும் ஆசிரியர்களை தமிழ்நாடு அரசு அங்கீகரித்து வருகிறது. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் முனைப்பாகப் பணியாற்றிவரும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கும் தமிழ்நாடு அரசால் டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் **30** ஆசிரியர்களுக்கு இத்தகு மதிப்புமிக்க விருதுகளை தமிழ்நாடு அரசு வழங்கி கௌரவித்து வருகிறது. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது ரூ.**5000**/–த்துடன் வெள்ளிப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மாநில அளவில் விருதுகளை வென்று அவர்களின் உள்ளார்ந்த ஊக்கத்தைத் தக்கவைத்து, தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி வருபவர்கள் தேசிய அளவிலான விருதுகளுக்கும் பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

## 4.5. நிர்வாகப் பொறுப்புகள்

### 4.5.1. புதிய பள்ளிகள் தொடங்க அனுமதி அளித்தல் மற்றும் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

அரசு நிர்ணயித்துள்ள விதிகளை நிறைவு செய்யும் பள்ளிகளுக்கு புதிதாக மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்குவதற்கும், மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவதற்கும் இவ்வியக்ககம் அனுமதி வழங்கி வருகிறது. 2015–16 ஆம் கல்வியாண்டில் 128 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்குவதற்கும் 169 மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.5.2. பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்

புதிதாகப் பள்ளிகள் தொடங்க அனுமதியும், ஆரம்ப அங்கீகாரமும் பெற்ற மெட்ரிகுலேசன் பள்ளிகள், நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளை நிறைவு செய்யும் பட்சத்தில் தொடர்ந்து இயங்க மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

கடந்த நான்காண்டுகளில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் இயங்கும் மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும்


அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**மெட்ரிகுலேசன் பள்ளிகளும் மாணவர் எண்ணிக்கையும்**

| ஆண்டு | பள்ளிகள் | மாணவர்கள் |
|---|---|---|
| 2012-2013 | 3,774 | 29,47,520 |
| 2013-2014 | 3,890 | 33,39,414 |
| 2014-2015 | 4,046 | 36,56,317 |
| 2015-2016 | 4,174 | 38,04,374 |


ஆதாரம்:மெ.ப.இ

வரைபடம் **– 42.** மெட்ரிகுலேசன் பள்ளிகளின் எண்ணிக்கை




ஆதாரம் மெ.ப.இ.

வரைபடம் – **43.** மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை




ஆதாரம் மெ.ப.இ.

### 4.5.3. குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்துதல்.


மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், **2009** மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள், **2011** ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான கையேட்டினைத் தயாரித்து அனைத்து

பள்ளிகளுக்கும் வழங்கியுள்ளது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ஐ நடைமுறைப்படுத்தும் மாநில இணைப்பு முகமையாக மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் விளங்குவதால் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளி முதல்வர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பயிற்சியை வழங்கியது.

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பிரிவு 12(1)(சி) இன் கீழ் 25 சதவீத இடஒதுக்கீட்டில் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்குவதையும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுவதற்கும் மாவட்ட அளவில் உள்ள அலுவலகங்களான முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம், மெட்ரிகுலேசன் பள்ளி ஆய்வாளர் அலுவலகம், உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படுவதை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் உறுதி செய்கிறது. மேலும், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 25 சதவீத இட ஒதுக்கீட்டிற்கான இடங்கள் எண்ணிக்கை பற்றிய விவரங்களை அந்தந்த பள்ளிகளின் நுழைவு வாயிலுக்கு அருகிலும் பள்ளி தகவல் பலகையிலும் காட்சிப்படுத்த சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் வழியாக **2623** குடியிருப்புகளில் குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் சார்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதன் விளைவாக சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது கடந்த மூன்று ஆண்டுகளாக உயர்ந்து வருகிறது. இச்சேர்க்கை மேம்பாட்டு விவரம் கீழே உள்ள வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

வரைபடம் **–44.** குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், **2009**ன் கீழ் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை




ஆதாரம் மெ.ப.இ.

2013–14 ஆம் கல்வியாண்டில் சேர்க்கை 49,864 ஆகவும் 2014–15ல் 86,729 ஆகவும் 2015–16ல் 94,811 ஆகவும் உயர்ந்துள்ளது.

### 4.5.4. கல்விக் கட்டண நிர்ணயக் குழு

கல்வி வணிகமயமாவது, நன்கொடை மற்றும் கல்விக் கட்டணம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு பள்ளிகள் ( கட்டணம் வசூலித்தலை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 தமிழக அரசால் இயற்றப்பட்டது. சுயநிதிப் பள்ளிகள் அனைத்திற்குமான கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்கும் பொருட்டு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழு அமைக்கப்பட்ட பிறகு 10936 பள்ளிகளுக்கு 2013–14 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை கல்விக் கட்டணத்தை நிர்ணயித்துள்ளது.

### 4.5.5. மழைநீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பு என்பது நம் மாநிலத்தினை முன்னெடுத்துச் செல்லும் ஒரு திட்டமாகும். மாணவ சமுதாயத்தைக்கொண்டு மழைநீர் சேகரிப்பு சார்ந்து விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கீகாரம் வேண்டி விண்ணப்பிக்கும் பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படுவதை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் உறுதிசெய்கிறது.

### 4.5.6 பள்ளியில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்

அனைத்து பள்ளிகளிலும் பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதியேற்றுள்ளார்கள். இதற்கென அரசு, பாதுகாப்பான கட்டிடம், சுத்தமான குடிநீர், தூய்மையான கழிப்பறை, பாதுகாப்பான மின் இணைப்புகள், பாதுகாப்பான இருக்கை வசதிகள், முதலுதவி, பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள் மற்றும் பாதுகாப்பான ஆய்வகங்களைப் பள்ளிகளில் ஏற்படுத்தும் வகையில் விதிமுறைகளை வகுத்து ஆணை வழங்கியுள்ளது. இவ்வரசாணையின்படி ஒவ்வொரு சுயநிதி / அரசு உதவிபெறும் பள்ளிகளில் குழந்தைகளின் அன்னையர்கள் உள்ளடக்கிய 5 உறுப்பினர் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அன்னையர் குழுவினர் வாரம் ஒருமுறை பள்ளி வேலை நாளொன்றில் பள்ளியைப் பார்வையிட்டு அனைத்து வசதிகளும் கிடைக்கப்பெறுகின்றனவா என்பதை சோதனையிடுவர். உற்றுநோக்கிய விவரங்களைப் பள்ளிப் பதிவேட்டில் இக்குழுவினர் பதிவுசெய்வர். குழுவினரால் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளைப் பள்ளி நிர்வாகம் நிறைவு செய்துள்ளதா என்பதை மெட்ரிகுலேசன் பள்ளி ஆய்வாளர் தம் பள்ளிப் பார்வையின்போது உறுதி செய்வார்.

**4.6 நிதி ஒதுக்கீடு**

**2016–17** ஆண்டிற்கு மாநில அரசு, மெட்ரிகுலேசன் பள்ளி இயக்ககத்திற்கென ரூ.**5.43** கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

**4.7 முடிவுரை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு **2023**இன் வழிகாட்டலின்கீழ் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் மாணவர்களின் செயல்திறன், மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நிர்வாகம், நடைமுறைகள் ஆகியவற்றை கண்காணிப்பதுடன் வாழ்வியல் திறன்கள், குடிமையியல் கல்வி வழங்குவதன் வாயிலாகவும் மாணவர்களின் ஒட்டுமொத்த மற்றும் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்கிறது.

# 5.அரசுத் தேர்வுகள் இயக்ககம்

## 5.1 அறிமுகம்

அரசுத் தேர்வுகள் இயக்ககம், தமிழக பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் அனைத்து வகைப்பள்ளிகளில் பயின்றுவரும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களது கற்றல் அடைவினைத் துல்லியமாக அளவிடும் வகையில் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளை நடத்தி மிக முக்கிய மற்றும் நிரந்தர ஆவணமான மதிப்பெண் சான்றிதழ்களை மாணவர்களுக்கு வழங்கி உயர்கல்வி தொடர வழிவகுக்கிறது. சவாலாக உள்ள இப்பணிகளைச் செய்துவரும் அரசுத் தேர்வுகள் இயக்ககம் பள்ளிக் கல்வித்துறையின் மற்ற இயக்ககங்களிலிருந்து தனித்துவம் பெற்றுள்ளது.

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 1975 முதல் இயங்கி வந்தாலும், 2011ம் ஆண்டு முதல் தேர்வுப்பணியில் சிறப்பான முன்னேற்றத்தினையும் பல புதுமையான முறைகளையும் திறம்பட புகுத்தியதன் வாயிலாக பொதுத்தேர்வுகளை நடத்தி, தேர்வு முடிவுகள் வெளியிடுவதில் உள்ள நடைமுறைகளை மாற்றியபின், வெளிப்படைத்தன்மையுடன், துல்லியமாகவும், விரைவாகவும் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொதுத் தேர்வுகளுக்கு

தேர்வர்கள் விண்ணப்பிப்பது முதல் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்யும் வரை டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

## 5.2 தொலைநோக்கு

பொதுத் தேர்வுகள் சார்ந்த முன்னிலை மற்றும் பின்னிலைத் தேர்வுப் பணிகளை டிஜிட்டல் முறைப்படுத்தியும் எளிமையாக்கியதன் விளைவாக அதிகபட்ச பாதுகாப்பு மற்றும் மந்தணத்தன்மையுடன் கூடிய பொதுத் தேர்வுகளை நடத்தும் வழிமுறைகளை விரைவுப்படுத்துதலை உறுதிப்படுத்துதல்

## 5.3 குறிக்கோள்

- பொதுத் தேர்வுகளை நேர்மையான முறையிலும், வெளிப்படையாகவும் நடத்துதல்.
- பள்ளிக் கல்வியினை நிறைவுசெய்து செல்லும் மாணாக்கர் எதிர்காலத்தில் சந்திக்கவிருக்கும் சவால்களையும், போட்டிகளையும் எதிர் கொள்வதற்கான நம்பிக்கையை வளர்க்கும் விதமாக வினாத்தாட்கள் அமைத்தலில் புதிய சீர்திருத்தங்களைக் கொணர்வதன் வாயிலாக மாணாக்கரின் பன்முக சிந்தனைத் திறனை வளர்த்தல்.

- அதிகபட்ச வெளிப்படைத்தன்மையுடன் தேர்வுகளை நடத்துதல் மற்றும் அதே நேரம் தேர்வுகளில் முறைகேடுகளை தடுத்தல்.

- நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுவது மற்றும் மதிப்பெண் சான்றிதழ்களை விநியோகித்தல்.

## 5.4. இயக்ககத்தின் பொறுப்புகள்

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் இலட்சக்கணக்கான மாணவர்களுக்குத் தேர்வுகளை நடத்துவதுடன் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வுகள், உதவித்தொகைக்கான தேர்வுகள் உட்பட மாநில பள்ளித் தேர்வு வாரியத்தால் அனுமதிக்கப்பட்ட அனைத்துத் தேர்வுகளுக்கும் வினாத்தாள் தயாரித்து வழங்குதல், தேர்வுகளை ஒளிவு மறைவின்றி நடத்துதல், தேர்வு முடிவுகளை வெளியிடுதல், மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல் ஆகிய பணிகளில் அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஈடுபட்டுள்ளது.

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் கீழ் 7 மண்டல அலுவலகங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு மண்டல வரையறைக்குட்பட்ட தேர்வு மையங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தேர்விற்கான முன்பணங்கள் விநியோகம்

செய்தல், தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பின் மதிப்பெண் சான்றிதழ் விநியோகம் போன்ற முக்கிய பணிகள் மேற்படி மண்டல அலுவலகங்களில் நடைபெறுகிறது.

## 5.5. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் ஐந்தாண்டு சாதனைகள்

### 5.5.1. நிதி ஒதுக்கீடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தேர்வு நடத்தும் முறைகள் அனைத்தையும் கணினி மயமாக்கி மேம்படுத்துதல், மதிப்பீட்டு மையத்தில் பார்கோட் முறையில் மதிப்பெண்கள் பதிவு செய்யும் முறையினை நவீனப்படுத்துதல், பாதுகாப்புத் தன்மையுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்களை வழங்குதல் ஆகிய இனங்களுக்கான செலவினங்கள் உட்பட ரூ.**403.90** கோடி நிதியானது **2011–12** முதல் **2015–16** வரை ஐந்தாண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.5.2. இணையதள உருவாக்கம்

மாணவர் சமுதாயம் பயன்பெறும் வகையில் www.dge.tn.gov.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வுகளுக்கான கால அட்டவணை, விண்ணப்பப் படிவங்களின் மாதிரிப்படிவம், சான்றிட்ட மதிப்பெண் நகல், புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் மற்றும் மறுபிரதிச்

சான்றிதழ் பெறுதலுக்கான கட்டண விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேல்நிலைப் பொதுத் தேர்வு, இடைநிலைக் கல்வி பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வுகளுக்கான மாதிரி வினாத்தாட்கள் மற்றும் முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள் போன்றவை இந்த இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், பத்தாம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கான அறிவியல்பாட செய்முறை வகுப்பிற்கான விண்ணப்பம் மற்றும் அறிவுரைகளும் இந்த இணையதளத்தின் வாயிலாக மாணவர்கள் தெரிந்து கொள்ளலாம். இந்த இணையதள உருவாக்கத்தினால் அதிக அளவிலான தேர்வர்கள் கூட்டமாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினை அணுகுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

### 5.5.3. இணைய தளம் வாயிலாக தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களைப் பதிவிறக்கம் செய்தல்

மாணவர் பெயர், புகைப்படம், பதிவெண், தேர்வு நாள், பாடம் போன்ற விவரங்களுடன் பயின்ற பள்ளி மற்றும் தேர்வு மையத்தின் பெயரும் அச்சிடப்பட்டு, அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு இணையதளம் வாயிலாக வழங்கப்படுகின்றது. பள்ளிகள் தங்கள் மாணவர்களின் நுழைவுச் சீட்டினை இணையதளக் குறியீடு மற்றும் அடையாளக் குறியீட்டினை பயன்படுத்தி பதிவிறக்கம் செய்திட வழிவகை செய்யப்பட்டது.

தனித்தேர்வர்கள் தங்களுக்குரிய தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளைப் பெறுவதற்கு இணையதளத்தில் தங்களுடைய விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து நேரிடையாக பதிவிறக்கம் செய்துகொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் அனைத்து தனித்தேர்வர்களும் தேர்வு மையத்திற்கு நேரில் செல்லாமலேயே தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை எளிதாகப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**5.5.4. தேர்வு முடிவுகள் வெளியிடுதல்**

மாநிலத்தின் தலைமையிடத்தில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் மாணவர்களது பொதுத்தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட அடுத்த நிமிடமே மாவட்டந்தோறும் உள்ள பள்ளிகளில் அனைவரும் தங்களது தேர்வு முடிவுகளை அறிந்துகொள்ளும் வசதியினை ஏற்படுத்தி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாணவர்கள் சிரமமின்றி தேர்வு முடிவுகளை ஆன்லைன் வாயிலாக www.tnresults.nic.in, www.dge1.tn.nic.in, www.dge2.tn.nic.in இணைய தளங்களில் தெரிந்துகொள்ளச் சிறப்பான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 5.5.5. ஜூன் / ஜூலை மாதங்களில் சிறப்புத் துணைத் தேர்வு நடத்துதல்

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் மார்ச்/ஏப்ரல் மாதங்களில் நடத்தப்படும் மேல்நிலை/இடைநிலை பொதுத் தேர்வுகளில் தோல்வியுறும் மாணவர்களுக்கு ஒரு முழுகல்வியாண்டு வீணாகாமல் அதே ஆண்டிலேயே அவர்கள் உயர்கல்வியினை தொடர்வதற்கு உதவியாக உடனடி சிறப்புத் துணைத்தேர்வு ஜூன் / ஜூலை மாதத்தில் நடத்தப்படுகிறது. ஜூன் / ஜூலை **2012** முதல் மார்ச்/ஏப்ரல் பொதுத் தேர்வுகளில் அனைத்துப் பாடங்களிலும் தோல்வியுற்ற மாணவர்களும் தேர்வெழுதலாம் என அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. **2015–**ல் நடைபெற்ற உடனடி சிறப்புத் துணைத் தேர்வில், மேல்நிலை சிறப்புத் துணைத் தேர்வில் **68,941** தேர்வர்களும், இடைநிலை சிறப்புத் துணைத் தேர்வில் **64,494** தேர்வர்களும் தேர்வெழுத அனுமதிக்கப்பட்டனர். இதில் மேல்நிலை சிறப்புத் துணைப் பொதுத்தேர்வில் **13,128** எண்ணிக்கையிலான தேர்வர்களும், பத்தாம் வகுப்பு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வில் **17,613** எண்ணிக்கையிலான தேர்வர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதனால், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் அதிகப்படியான இடைநிறுத்தம் தடுக்கப்படுகிறது.



386-4-17

### 5.5.6. மேல்நிலைத் தேர்வின் விடைத்தாள் நகல் / மதிப்பெண் மறுகூட்டல் / விடைத்தாட்கள் மறுமதிப்பீடு

உயர்கல்வி, மருத்துவபடிப்பு, பொறியியல் மற்றும் தொழில்நுட்ப படிப்பிற்குச் செல்ல உள்ள அனைத்து மாணவர்களும், பெற்றோரும் ஒவ்வொரு மதிப்பெண்ணையும் மதிப்பு உள்ளதாகக் கருதுகின்ற நிலையில், அவர்களது கவலையைப் போக்கி தகுதியான மதிப்பெண்களை வழங்குவது அவசியமானதாகிறது. எனவே இதனை உறுதி செய்யும் வகையில் மாணவர்களது விடைத்தாட்கள் ஸ்கேன் செய்யப்பட்டு, இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்யும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் உடனடியாக விடைத்தாள் நகலைப் பதிவிறக்கம் செய்து, திருத்தப்பட்ட விடைத்தாட்களைச் சரிபார்த்தப் பின்னர் கூடுதலாக மதிப்பெண் பெறலாம் என்ற எண்ணம் இருப்பின், மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்திட ஏதுவாக ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறையும் நடைமுறையில் உள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் தங்களது விடைத்தாளில் மதிப்பெண்கள் கூடுதலாக வரவாய்ப்புள்ளது என்பதை அறிந்தபிறகே மாணவர்கள் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கின்றனர்.

மாணவர்களது விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் உள்ள முகாம்களிலிருந்து சேகரிக்கப்பட்ட விடைத்தாட்கள் ஸ்கேன் செய்யப்பட்ட பிறகு பதிவேற்றம்

செய்யப்பட்டு விடைத்தாள் நகல் வழங்கும் பணி சாதனையாக 15 தினங்களுக்குள் நடைப்பெற்று முடிந்தது. இதனால் மாணவர்கள் தாங்கள் விரும்பிய கல்லூரிகளில் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் சேர்க்கைப் பெற ஏதுவாயிற்று. மார்ச் 2016–ஆம் ஆண்டினில் 1,00,787 தேர்வர்கள் இந்த வசதியிளால் பயனடைந்துள்ளனர்.

### 5.5.7. அரசுத் தேர்வுகள் சேவை மையம்

தேர்விற்கு விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்க தனியார் இணையதள மையங்களுக்குச் சென்று சிரமப்பட வேண்டியிருந்தது. இந்நிலையினை அரசு பரிசீலித்து மாநிலம் முழுவதும் 211 அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் பள்ளிக்கல்வித்துறை பணியாளர்களைக் கொண்டு பள்ளிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இச்சேவை மையத்தில்அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் அனைத்துவிதமான தேர்வுகளுக்கும் தேர்வர்கள் விண்ணப்பிக்கலாம்.

### 5.5.8. தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளில் மாணவர்களுக்கான அறிவுரைகள்

சிறப்பு நிகழ்வாக மார்ச் 2016லிருந்து மேல்நிலை / இடைநிலைப் பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களது நுழைவுச் சீட்டில் தேர்வறையில் செய்யக்கூடிய / செய்யக்கூடாத செயல்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக வினாத்தாள்

மற்றும் விடைத்தாட்களில் வழக்கமாக அச்சிடப்படும் அறிவுரைகளைத் தேர்வுக்கு முன்னதாகவே தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளின் வாயிலாக அறிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டது.



DIRECTORATE OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI - 600 006.
HIGHER SECONDARY EXAMINATION - MARCH - 2016 - REGULAR CANDIDATE - HALL TICKET

Exam Roll No. : 793751    Unique ID : 1610783751

Exam Hours : 10 : 00 am to 01 : 15 pm
Exam Centre : GOVT HR SEC SCHOOL WEST MAMBLAM CHENNAI
School : GOVT HR SEC SCHOOL WEST MAMBLAM CHENNAI SOUTH
Name : MUKESH K
Date of Birth : 09/09/1999    Group Code : 308

| Exam Date | Session | Subject | Medium | Sub Code |
|---|---|---|---|---|
| 04.03.2016 | F.N | LANGUAGE PAPER I | Tamil | 001 |
| 07.03.2016 | F.N | LANGUAGE-PAPER II | Tamil | 002 |
| 09.03.2016 | F.N | ENGLISH PAPER I | English | 003 |
| 10.03.2016 | F.N | ENGLISH-PAPER II | English | 004 |
| 01.04.2016 | F.N | ECONOMICS | English | 049 |
| 17.03.2016 | F.N | COMMERCE | English | 055 |
| 14.03.2016 | F.N | ACCOUNTANCY | English | 057 |
| 28.03.2016 | F.N | BUSINESS MATHS | English | 077 |

தேர்வர்களுக்கான முக்கிய அறிவுரைகள்

இணை இயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.

**Important Instructions to Candidates**

- The candidate will be permitted to appear for the examination only on the submission of the Hall Ticket to the hall supervisor.
- Candidates are strictly instructed not to bring mobile phones or any other communicative devices inside the Examination Centre/Hall.
- All differently abled candidates including visually challenged candidates will be given concessions as per G.O.Ms.No.28, School Education (V1) Dt: 10.02.2010 and G.O.Ms.No.23, School Education (V1) Dated 11.02.2013.
- Candidates those who appear for 019-Computer science Examination should bring Black Ball point pen without fail and use only black ball point pen for shading answers in the OMR answer sheet.
- Candidates should not use sketch or colour pencils for writing/underlining etc in answer booklet.
- Candidates should not tear off or remove any pages from the answer booklet.
- Candidates should avoid involving themselves in Malpractices like Possession of bit papers, Copying from other candidates, Copying from bit papers, Substitution of Answer books, Impersonation, Fully striking all the answers written in the answer script by themselves, which may lead to punishments. Therefore, the candidates are strictly warned not to involve in those activities.

Joint Director (HSE),
D.G.E., Chennai - 6

படம் –56 தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு

மேலும் பெற்றோர்களும் மாணவர்களுக்கு அறிவுரைகள் கூறி, தவறானப் பாதையில் செல்லவேண்டாம் என எச்சரிக்கை செய்து தேர்வுக்கு அனுப்பிடவும் ஓர் அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

### 5.5.9. தேர்வரின் புகைப்படத்துடன்கூடிய முகப்புத் தாள் அறிமுகப்படுத்தப்பட்டு ஆள்மாறாட்டம் செய்தல் தவிர்க்கப்பட்டது

தேர்வறையில் ஆள்மாறாட்டத்தைத் தவிர்த்திடவும், பதிவெண்களைத் தவறாக எழுதுவதைத் தவிர்க்கும் பொருட்டும் தேர்வரின் புகைப்படம் மற்றும் மாணவரின் பதிவெண் உள்ளிட்ட விவரங்கள் மற்றும் 2D பார்குறியீடு அடங்கிய முகப்புத்தாளுடன் விடைப்புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. முகப்புத்தாளின் மேல் பகுதி பிரித்தெடுக்கும் வசதியுடன் அச்சிடப்பட்டுள்ளதால், தேர்வு முடிந்ததும் இப்பகுதி பிரித்தெடுக்கப்பட்டு, விடைப் புத்தகத்தினைத் திருத்தும் ஆசிரியருக்கு, அப்புத்தகம் எந்த மாணவருக்குரியது என்ற விவரம் முற்றிலும் மறைக்கப்படுகிறது. இதனால் விடைத்தாள் திருத்தும்பொழுது மந்தணத் தன்மை முற்றிலும் காக்கப்படுகிறது.





படம் –57 தேர்வரின் புகைப்படத்துடன்கூடிய முகப்புத் தாள்

### 5.5.10. புதிய Optical Mark Recognition (OMR) விடைத்தாள்

மார்ச் 2015 மேல்நிலைப் பொதுத்தேர்வில் தேர்வர்களின் புகைப்படத்துடன் கூடிய OMR விடைத்தாட்கள் கணினி அறிவியல் தேர்வில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் தேர்வறையில் OMR

விடைத்தாட்களை மாற்றிப் பயன்படுத்துதல் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.


DEPARTMENT OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI - 600 006

USE ONLY BLACK BALL POINT PEN FOR SHADING IN THIS PAGE

354615

CANDIDATE'S NAME : YAMINI M

EXAM ROLL NO : 745136

UNIQUE ID : 1610735136

CENTER NO. : 6303

CENTER NAME :

MEDIUM

1. TAMIL

2. ENGLISH

Do not make any Stray marks in this area

AFTER VERIFICATION OF ALL PARTICULARS

Signature of the candidate with date

Hall Supervisor

Name:

Signature with date :

படம் –58 புதிய Optical Mark Recognition (OMR) விடைத்தாள்

**5.5.11. பாடங்களுக்கேற்ப முதன்மை விடைப்புத்தகங்கள் வழங்குதல்**

மார்ச் 2014 மேல்நிலை பொதுத்தேர்வு முதல் பாடங்களுக்கேற்ப முதன்மை விடைப்புத்தகங்கள் அறிமுகப் படுத்தப்பட்டது. மார்ச் 2015 முதல் மொழிப்பாடங்களுக்கான கோடிடப்பட்ட விடைப்புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான விடைத்தாளுடன் இணைக்கப்பட வேண்டிய படிவங்கள், வரைக்கட்டத்தாள்(graph) மற்றும் வரைபடங்கள் அவ்விடைத்தாளுடனே அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. இம்முறையில் மாணவர்களது கவனக்குறைவால் சரியாகக் கட்டப்படாத விடைத்தாட்கள் காணாமல் போவது, விடைத்தாள் இடைச்செருகல்கள் தவிர்க்கப்பட்டது.

**5.5.12. விடைத்தாள் மதிப்பீடு மையங்களில் பார்கோட் ரீடர் பயன்படுத்துதல்**

விடைத்தாள் மதிப்பீடு மையங்களில் பார்கோடு ரீடர் கொண்டு விடைத்தாளுக்குரிய மாற்றெண்கள் துல்லியமாக கணினியில் மிக எளிதாக பதிவேற்றம் செய்யப்படும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, பிழைகள் முற்றிலும் தவிர்க்கப்பட்டதுடன் இப்பணிகள் மிக விரைவாகவும் முடிக்கப்பட்டது. இதனால் தகவல் தொகுப்பு விவர மையத்தில் 15 நாட்கள் நடைபெறும் data entry பணியானது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

**5.5.13. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள் (Provisional Certificate)**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாணவர்கள் உயர்கல்வி பயில ஏதுவாக முதன்முறையாக மார்ச் 2015

தேர்வுகள் முதல் மேல்நிலைப் பொதுத் தேர்வு மற்றும் இடைநிலை பொதுத் தேர்வு முடிவுகள்



STATE BOARD OF SCHOOL EXAMINATIONS,TAMILNADU

அரசுத் தேர்வுகள் துறை, சென்னை - 600 006

DEPARTMENT OF GOVERNMENT EXAMINATIONS , CHENNAI - 600 006

PROVISIONAL CERTIFICATE

தற்காலிகச் சான்றிதழ்

HIGHER SECONDARY EXAMINATION - MARCH 2016

மேல்நிலைப் பள்ளிக் கல்வி பொதுத்தேர்வு - மார்ச் 2016

ISSUED UNDER THE AUTHORITY OF THE GOVERNMENT OF TAMILNADU

தமிழ்நாடு அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு வழங்கப்படுகிறது

தேர்வர் SARANYA R MAR 2016 இல் மேல்நிலைப் பள்ளிக் கல்விப் பொதுத் தேர்வெழுதிக் கீழ்காணும் மதிப்பெண்களைப் பெற்றுள்ளார் என்று சான்றளிக்கப்படுகிறது

Certified that the above mentioned candidate appeared for the Higher Secondary Public Examination and obtained the following marks.

| பாடம் SUBJECT | கருத்தியல் THEORY (150) | செய்முறை PRACTICAL (50) | MARKS OBTAINED FOR 200 பெற்ற மதிப்பெண்கள் 200க்கு | PASS/ FAIL |
|---|---|---|---|---|
| TAMIL | | | 194 ONE NINE FOUR | P |
| ENGLISH | | | 195 ONE NINE FIVE | P |
| PHYSICS | 144 | 050 | 194 ONE NINE FOUR | P |
| CHEMISTRY | 150 | 050 | 200 TWO ZERO ZERO | P |
| BIOLOGY | 146 | 050 | 196 ONE NINE SIX | P |
| MATHEMATICS | | | 200 TWO ZERO ZERO | P |
| TOTAL MARKS | 1179 ONE ONE SEVEN NINE | | | |
| ROLL NO / தேர்வெண் 742218 | T.M.R. CODE & DATE / அமைப்பு குறியீட்டு எண் & நாள் G767947 & 17.05.2016 | | | |
| DATE OF BIRTH / பிறந்ததேதி 09/05/1999 | PERMANENT REGISTER NO/ நிரந்தர பதிவெண் 1610732218 | | MEDIUM OF INSTRUCTION / பயிற்று மொழி TAMIL | |
| GROUP CODE / பாடத்தொகுப்பு எண் 103(GENERAL) | | | | |
| NAME OF THE SCHOOL / பள்ளியின் பெயர் GOVT (G) HR SEC SCHOOL EKANAMPETTAI KANCHEEPURAM | | | | |

**NOTE :** This is Computer generated Provisional certificate. This Certificate may be used to apply for Higher Education Courses and valid for 90 Days from the date of result. The Certificate may be verified in the **http://dge.tn.nic.in** website.

குறிப்பு : இச்சான்றிதழ் கணினியின் மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது. உயர்கல்வி பயில விண்ணப்பிப்பதற்காக வழங்கப்படுகிறது. தேர்வு முடிவு வெளியான நாளிலிருந்து 90 நாட்கள் மட்டுமே செல்லத்தக்கதாகும். இச்சான்றிதழின் உண்மைத்தன்மையை **http://dge.tn.nic.in** இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

உறுப்பினர் செயலர் / MEMBER SECRETARY
மாநில பள்ளித் தேர்வுகள் குழுமம் (மேல்நிலை) தமிழ்நாடு
STATE BOARD OF SCHOOL EXAMINATIONS (HR SEC) TAMILNADU

தேர்வரின் ஒப்பம்
CANDIDATE'S SIGNATURE

படம் –59 தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்கள்

வெளியிடப்பட்டதும், தேர்வர்கள் தங்களின் பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பயன்படுத்தி அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் இணையதளமான http://www.dge.tn.nic.in வாயிலாக வழங்கப்படும் வலைதளத்தில் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களைப் (Provisional Certificate) பதிவிறக்கம் செய்து கொள்ளும் முறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக வழங்கப்படும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கு மட்டுமே செல்லத்தக்கவையாகும்.

**5.5.14. கூடுதல் பாதுகாப்புத் தன்மையுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல்**

மார்ச் 2012 முதல் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் முதல், மதிப்பெண் சான்றிதழ்களை மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய ரகசிய குறியீடு மற்றும் புகைப்படத்துடன் சேர்த்து வெளியிட அரசு சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டதால், அதன்படி மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புத் தன்மையுடனும் 2D பார்கோடிங் முறையுடனும் மதிப்பெண் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு தேர்வர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனால் ஒருவர் சான்றிதழை மற்றொருவர் பயன்படுத்துவது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.

வெளிமாநிலக் கல்வி வாரியங்களில் நமது சான்றிதழ்களை எளிதில் ஏற்றுக் கொள்ளும் வகையில் மார்ச் 2016, பொதுத் தேர்வுகள் முதல் மதிப்பெண் சான்றிதழ்கள் “State Board of

School Examinations, Tamilnadu” என்ற தலைப்பில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



11566851

STATE BOARD OF SCHOOL EXAMINATIONS, TAMILNADU

HIGHER SECONDARY COURSE CERTIFICATE

GENERAL EDUCATION

SARANYA R MAR 2016

| | | | | |
|---|---|---|---|---|
| TAMIL | | | 194 | ONE NINE FOUR (P) |
| ENGLISH | | | 195 | ONE NINE FIVE (P) |
| PHYSICS | 144 | 050 | 194 | ONE NINE FOUR (P) |
| CHEMISTRY | 150 | 050 | 200 | TWO ZERO ZERO (P) |
| BIOLOGY | 146 | 050 | 196 | ONE NINE SIX (P) |
| MATHEMATICS | | | 200 | TWO ZERO ZERO (P) |

TOTAL MARKS 1179 ONE ONE SEVEN NINE

09.05.1999 | 742218 | G767947 | 17.05.2016

TAMIL

GOVT (G) HR SEC SCHOOL EKANAMPETTAI KANCHEEPURAM

படம் **–60** கூடுதல் பாதுகாப்புத் தன்மையுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்

**5.5.15.தேர்வர்களுக்கு நிரந்தரப் பதிவெண் (Permanent Register Number)**

மேல்நிலை / இடைநிலைப் பொதுத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு ஒவ்வொரு பருவத் தேர்வின் போதும் தனித்தனி பதிவெண் வழங்கும் முறை ஏற்கனவே நடைமுறையில் இருந்தது. மார்ச் 2016 தேர்வு முதல் அந்நடைமுறையில் மாற்றம் செய்து ஒரு தேர்வருக்கு ஒரு பதிவெண் மட்டுமே வழங்கி, அப்பதிவெண்ணைக் கொண்டே பல பருவங்களிலும் தேர்வெழுதும் இப்புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டு மதிப்பெண் சான்றிதழ்களிலும் நிரந்தரப் பதிவெண் (Permanent Register Number) இடம் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் ஒருமுறை தேர்வெழுதி தோல்வியுறும் தேர்வர்கள் எவ்வித குழப்பமுமின்றி நிரந்தரப் பதிவெண்ணைக் கொண்டு அடுத்தடுத்தப் பருவங்களில் தேர்வெழுதும் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**5.5.16. ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்** (Consolidated Mark Certificate)

மார்ச் 2016 தேர்வு முதல் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வினை பல பருவங்களில் எழுதி தேர்ச்சி பெறும் தேர்வர்களுக்கு அவர்கள் தேர்ச்சி அடைந்தபின் ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழினை (Consolidated Mark Certificate) வழங்கும் திட்டம் மார்ச் 2016 தேர்வுப் பருவம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, ஜூன் 2016 தேர்வுப் பருவம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. சமீப காலங்களில் மாணவர்கள்

தங்களது மதிப்பெண் சான்றிதழ்களைத் தவறவிடுவதும் மறுபிரதிக்கு விண்ணப்பிப்பதும் அதிகரித்துள்ள நிலையில் மேற்படி ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கும் முறை பணியாளர்களுக்குப் பணிச்சுமையினை எளிதாக்குவதுடன் மாணவர்கள் விரைவில் சான்றிதழினைப் பெறவும் வசதியாக உள்ளது.

### 5.5.17. மண்டல அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்

- வேலூர் மண்டல அலுவலகத்திற்கு ரூ.60 இலட்சம் செலவில் சொந்த கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு **28.08.2014** முதல் செயல்பட்டு வருகிறது.



படம் **–61** வேலூர் மண்டல அலுவலகம்

- கடலூர் மண்டல அலுவலகத்திற்கு ரூ.80 இலட்சம் செலவில் சொந்த கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு 28.12.2015 முதல் செயல்பட்டு வருகிறது.

- திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்கு ரூ.30 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு 13.04.2016 முதல் செயல்பட்டு வருகிறது.

## 5.6. சிறைவாசிகளுக்காக சிறையிலேயே தனித் தேர்வு மையம் அமைத்தல்

சிறைவாசிகளும் கல்வியில் ஏற்றம் கண்டிட, சிறையிலேயே தேர்வு மையம் அமைக்கப்பட்டு தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. தற்போது நடைபெற்று முடிந்த மார்ச் 2016, மேல்நிலைப் பொதுத் தேர்வினை 106 சிறைவாசிகள் பாளையங்கோட்டை, திருச்சி மற்றும் புழல் மத்தியச் சிறைகளில் தேர்வெழுதியுள்ளனர். மார்ச் 2016 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பாளையங்கோட்டை, திருச்சி, கோவை மற்றும் புழல் மத்தியச் சிறைகளில் 250 சிறைவாசிகள் தேர்வெழுதியுள்ளனர்.

## 5.7. தேர்வுக் கட்டுப்பாட்டு அறை

பொதுமக்கள்/மாணவர்களது நம்பிக்கைக்குரியவாறு தேர்வுகளை நடத்திட வேண்டுமெனில் உடனுக்குடன்

மாநிலந்தோறும் நடைபெறும் சில வேண்டத்தகாத செயல்களை உடனுக்குடன் கண்டறிந்து அவற்றை அகற்றிடவும், உரிய மாற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டிய கட்டாயத்தில், தேர்வுக் காலங்களில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தேர்வுக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டது. பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் தொடங்கும் நாள் முதல் தேர்வுகள் முடியும் வரை, இக்கட்டுப்பாட்டு அறை காலை **8.00** மணி முதல் இரவு **8.00** மணி வரை செயல்படுகிறது. இதன் விளைவாக புகார்கள், கோரிக்கைகள் பெறப்பட்ட உடனேயே மாணவர்கள்/தேர்வர்கள் மற்றும் பொதுமக்களைப் பாதிக்காத வகையில் உடனடியாக செயல்பட்டு தேர்வுகள் நல்ல முறையில் நடத்தி முடிக்கப்பட்டன.

### 5.8. விடைத்தாட்களை எடுத்துச்செல்ல வாகனங்களை பயன்படுத்துதல்

ஒவ்வொரு தேர்வு நாளன்றும் வாகனங்களில் வினாத்தாட்கள் தேர்வு மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தேர்வு முடிவுற்றவுடன் விடைத்தாட்களை மீண்டும் அதே வாகனத்தினைப் பயன்படுத்தி வழித்தட அலுவலர்களால் விடைதாட்கள் கட்டுகளை விடைத்தாள் சேகரிப்பு மையங்களில் (Collection Points) சேர்த்திட பொறுப்பை வழித்தட அலுவலர்கள் மூலம் அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஏற்பாடு செய்துள்ளது. இதனால், விடைத்தாள் கட்டுக்கள் காணாமல் போதல், சேதமடைதல் போன்ற

நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடைத்தாள் கட்டுகள் அனைத்தும் பாதுகாப்பாக எடுத்துச் செல்லுதல் உறுதி செய்யப்பட்டது.

### 5.9. மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை வழங்குதல்

ஆன்லைன் வாயிலாகவும் மதிப்பெண் பதிவேடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தும் தற்சமயம் மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை குறித்த அறிக்கை வழங்கப்பட்டு வருகிறது. ஆன்லைன் வாயிலாக மட்டுமே மதிப்பெண் சான்றிதழ்கள் சரிபார்ப்புப் பணிகளைச் செயல்படுத்த அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் (GDC) மற்றும் தேசிய தகவலியல் மையத்திற்கு (NIC) பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.10 கனமழையின் காரணமாக சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் மதிப்பெண் சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு கட்டணமின்றி மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்

கனமழையின் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகிய 4 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் மதிப்பெண் சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு கட்டணமின்றி மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் வழங்குவதற்காக சிறப்பு முகாம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 20,814 எண்ணிக்கையிலான பத்தாம் வகுப்பு மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்களும், 11,282

எண்ணிக்கையிலான மேல்நிலைக் கல்வி மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்களும் சாதனையாக குறித்த காலத்தில் வழங்கப்பட்டன.

### 5.11. தமிழ்வழியில் பயிலும் மாணாக்கருக்குத் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களித்தல்

பத்தாம் வகுப்பு / மேல்நிலைப் பொதுத்தேர்வினை தமிழ் வழியில் பயின்று (Tamil Medium) தேர்வெழுதும் பள்ளி மாணாக்கருக்குத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு வருகிறது. மார்ச் 2016 மேல்நிலைப் பொதுத் தேர்வில் 5,56,498 பள்ளி மாணாக்கரும், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 6,70,814 பள்ளி மாணாக்கரும் தமிழ் வழியில் பயின்றதால் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு பெற்றுள்ளனர்.

### 5.12. மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்குத் தேர்வெழுதுவதற்கு வழங்கப்படும் சலுகைகள்

பத்தாம் வகுப்பு / மேல்நிலைப் பொதுத்தேர்வெழுதும் டிஸ்லெக்சியாவால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், கண்பார்வையற்றோர், காதுகேளாதோர் / வாய் பேசாதோர் மற்றும் இதர மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்குத் தேர்வெழுதுவதற்குக் கூடுதல் ஒரு மணி நேரம், சொல்வதை எழுதுபவர் நியமனம், மொழிப்பாட விலக்களிப்பு, எழுத்துப்பிழை மற்றும் இலக்கணப்பிழை தவிர்ப்பு, கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி போன்ற சலுகைகள் வழங்கப்படுகிறது. மார்ச் 2016, மேல்நிலைப் பொதுத் தேர்வில் 1,867 மாற்றுத்திறனாளித்

தேர்வர்களுக்கும், பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் **3,679** மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கும் உரிய சலுகைகள் வழங்கப்பட்டு தேர்வெழுத அனுமதிக்கப்பட்டனர்.

## 5.13. தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு

மாநிலத்திலுள்ள தொடக்கக் கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கு, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு நடத்தப்படுகிறது. தொடக்கக் கல்வி பட்டயத்தைப் பெறுவதனால், மாணவர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்குரிய தகுதியினைப் பெறுகின்றனர். இத்தேர்வர்கள் விடைத்தாள் ஒளிநகல் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டு, விடைத்தாள் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தின் வாயிலாக **2015** ஆம் ஆண்டில் **285** தேர்வர்கள் பயனடைந்துள்ளனர்.

## 5.14. தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு (TRUSTS Exam)

தகுதி வாய்ந்த ஊரக மாணவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி உதவிடும் நோக்கத்துடன், தமிழ்நாடு ஊரக மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு ஆண்டுதோறும் செப்டம்பர் திங்களில் நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் ஊரக மாணவர்கள், அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் மிகாமல் இருக்கும் பட்சத்தில், இத்தேர்வினை எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவியர் மற்றும் 50 மாணவர்கள் எழுத்துத் தேர்வு வாயிலாக தெரிவு செய்யப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.1000/– வீதம் நான்கு ஆண்டுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2014–15 முதல் மாணவர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்க அனுமதிக்கப் படுகின்றனர். செப்டம்பர் 2015இல் நடைபெற்ற இத்தேர்வினை 48,609 மாணவர்கள் எழுதியதில், தேர்ச்சி பெற்ற 3,100 மாணவர்கள் உதவித்தொகை பெற்றுள்ளனர்.

## 5.15. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான தேர்வு (NMMS EXAMINATION)

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால், தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை (National Means cum Merit Scholarship) பெறுவதற்கான தேர்வு நடத்தப்படுகிறது. மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மத்திய / மாநில அரசுப் பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஏழாம் வகுப்பில் தேர்ச்சிப்பெற்று எட்டாம் வகுப்பில் பயிலும் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச்சார்ந்த

மாணவர்கள் **50%** மதிப்பெண்கள் மற்றும் ஏனையோர் **55%** மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்) மாணவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.**2,50,000/–**க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், அவர்கள் தேர்வெழுதத் தகுதிபடைத்தவர்கள். தேர்வு பெற்றவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.**6000/–**(மாதந்தோறும் ரூ.**500/–** வீதம்) உதவித்தொகையாக ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ஆண்டுதோறும் **6695** மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.

**2015**இல் நடைபெற்ற இத்தேர்வினை **1,46,416** மாணவர்கள் எழுதியதில், **6,695** மாணவர்கள் ஊக்கத்தொகை பெற தகுதி பெற்றுள்ளனர்.

## 5.16. தேசிய அளவிலான திறனறித் தேர்வு (NTS Exam)

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் தேசிய அளவிலான முதல்நிலை திறனறித் தேர்வினைத் தமிழகத்தில் நடத்த, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு அங்கமாக செயல்படுகிறது. மத்திய / மாநிலப் பள்ளிக் குழுமங்களில் **10** ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுதத் தகுதிபடைத்தவர்கள் ஆவர்.

முதல்நிலைத் தேர்வுக்கான முடிவுகள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வெளியிடப்பட்டு பின்னர் தகுதியுள்ள தேர்வர்களுக்கு தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் இரண்டாம் நிலைத் தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு நேர்காணல் நடத்தப்படுகின்றது. இந்நேர்காணலில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 11 ஆம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.500/– வழங்கப் படுகிறது. இம்மாணவர்களுக்கு பட்டப்படிப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை, பல்கலைக் கழக மானியக் குழுவினால் படிப்பு உதவித் தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறது.

2015இல் நடைபெற்ற இத்தேர்வினை 1,26,964 மாணவர்கள் எழுதியதில், 236 மாணவர்கள் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் வாயிலாக 40 தமிழக மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

**5.17. புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்குதல்**

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் 10 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்று பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்களுக்குப் புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்கள் (MIGRATION CERTIFICATE),

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட 5 தினங்களுக்குள் வழங்கப்படுகின்றது. 2015–16ம் ஆண்டில் 6,609 புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. விண்ணப்பிப்போர் விண்ணப்பத்தினை இணையதளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப் பட்டுள்ளது.

## 5.18. மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் வழங்குதல்

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்களைத் தவறவிடும் தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்டமதிப்பெண் நகல்(CCM) மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் (Duplicate) நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் பெறப்பட்டு வழங்கப்படுகிறது. விண்ணப்பத்தினை இணையதளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2015–16 ஆம் ஆண்டில் 10,400 மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்களும், 5,900 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## 5.19. மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் தேர்வுகளை நடத்துதல்

ஆண்டுதோறும் மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் பல

தேர்வுகளைச் சென்னையில் நடத்திட, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகிறது.

### 5.20. ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ஒத்துழைப்பு நல்குதல்

ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் நடத்தப்படும் பணிநியமனத்திற்கான தேர்வுகளுக்கு சில மந்தணத்தன்மை வாய்ந்த பணிகளில் அரசுத் தேர்வுகள் இயக்ககம் தன் ஒத்துழைப்பை நல்குகிறது.

### 5.21. வரவு செலவு திட்ட ஒதுக்கீடு

**2016–17** ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.**88.85** கோடி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.22. முடிவுரை

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தேர்வுகள் நடத்தும் பழைய நடைமுறைகளை மாற்றியமைத்து தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியதன் விளைவாக மூலம் தேர்வுகளை துல்லியமாக நடத்தி விரைவாக தேர்வு முடிவுகளை வெளியிடுவது உறுதி செய்யப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் பள்ளி மாணவர்களது எதிர்கால நலன் காத்திடும் வகையில் பல புதிய முறைகளைக் கையாண்டு அனைத்துப் பணி நிலைகளிலும் சிறப்பான உயர்நிலையினை எய்திட கடினமாக உழைத்து வருகிறது.

# 6 பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

## 6.1. முன்னுரை

ஒரு மாநிலத்தின் பொருளாதார மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு கல்வியே முக்கிய அடித்தளமாக உள்ளது. மாநிலத்தின் மக்கள் தொகையில் பெரும்பான்மையான மக்கள் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்றனர். மாநிலத்தின் சமுதாய முன்னேற்றத்திற்கு எழுத்தறிவு பெற்றவர்கள் விழுக்காட்டின் வளர்ச்சி முக்கிய காரணிகளுள் ஒன்றாக விளங்குகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் எழுத்தறிவு பெற்றவர்களின் விழுக்காட்டினை அதிகப்படுத்த போதிய நிதி ஒதுக்கீட்டுடன் கல்வி சார் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சிறந்த தொலைநோக்கை அடைந்திடும் பொருட்டு, தமிழக அரசானது பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் வாயிலாக 15 மற்றும் அதற்குமேற்பட்ட வயதுள்ள எழுத்தறிவு பெறாதவர்களை, குறிப்பாக எழுத்தறிவு பெறாத பெண்களுக்கு அடிப்படைக் கல்வி, தொழிற் திறன் மேம்பாடு (தொழிற்கல்வி) மற்றும் சமநிலைக் கல்வி ஆகியவற்றை வழங்கி அவர்களை எழுத்தறிவு பெற்றவர்களாக்கிட வயது வந்தோர் கல்வித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## 6.2. தொலைநோக்கு

சமூக படிநிலை முன்னேற்றத்தினை உறுதிசெய்ய தமிழகத்தை நூறு விழுக்காடு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக மாற்றுதல்.

## 6.3. குறிக்கோள்கள்

- ❖ கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்தி, எழுத்தறிவுடைய சமூகத்தை தக்க வைத்தல்.
- ❖ எழுத்தறிவு விழுக்காட்டில் இரு பாலருக்கும் இடையில் உள்ள இடைவெளியை குறைத்தல்.
- ❖ பெண்கள் எழுத்தறிவில் பின்தங்கிய மாவட்டங்களிலும், புலம் பெயர்ந்து மற்றும் குடும்பத்தைப் பிரிந்து வாழும் மக்கள் உள்ள மாவட்டங்களிலும் கற்கும் பாரதம் திட்டத்தினை முன்னுரிமை அளித்து செயல்படுத்துதல்.

### 6.3.1. நோக்கங்கள்

- ❖ எழுத்தறிவு பெறாத வயது வந்த அனைவருக்கும் அடிப்படைக் கல்வி அளித்தல்.
- ❖ புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும்

முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.

❖ தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் வருவாய் திறனை மேம்படச் செய்தல்.

❖ புதிதாக எழுத்தறிவு பெற்றோர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

## 6.4. பெருமை மிகு தமிழ்நாடு – மணி மகுடத்தில் தேசிய எழுத்தறிவு விருதுகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கற்கும் பாரதம் திட்டத்தின் வாயிலாக வயது வந்தோர் அனைவரும் 100 விழுக்காடு எழுத்தறிவு பெற்றிட பல்வேறு முனைப்பான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கல்விசார் தொலைநோக்குப் பார்வை, வழிகாட்டுதல்கள் மற்றும் ஆணைகளின் படி, கடந்த 2013 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் தமிழகமானது கற்கும் பாரதம் திட்டத்தின் சிறப்பான செயல்பாடு மற்றும் பங்களிப்புகளின் காரணமாக பல்வேறு நிர்வாக நிலைகளில் தேசிய எழுத்தறிவு விருதுகளைத் தனது மகுடத்தில் சூடிக்கொண்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டில், சிறந்த மாவட்டமாக அரியலூர் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டு தேசிய எழுத்தறிவு விருது

வழங்கப்பட்டுள்ளது. இதே போல், ஈரோடு மாவட்டம் அந்தியூர் ஒன்றியத்திலுள்ள குப்பாண்டம்பாளையம் கிராமத்திற்கு பஞ்சாயத்து அளவில் கற்கும் பாரதம் திட்டத்தில் சிறந்த செயல்பாட்டுக்காக தேசிய எழுத்தறிவு விருது வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, தமிழக அரசானது கல்வி செயல்பாடுகளில் தனது தொலைநோக்குப் பார்வையினை மீண்டும் ஒரு முறை நிரூபித்து கடந்த 2015 ஆம் ஆண்டில் மூன்று நிர்வாக நிலைகளில் வழங்கப்படும் தேசிய எழுத்தறிவு விருதுகளை ஒட்டுமொத்தமாகப் பெற்று தமிழகம் சாதனை படைத்துள்ளது. கற்கும் பாரதம் திட்டத்தில் மாநில எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் சிறப்பான பங்களிப்பினை அங்கீகரித்து தேசிய எழுத்தறிவு விருது வழங்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டம் சிறந்த மாவட்டமாக தெரிவு செய்யப்பட்டு தேசிய எழுத்தறிவு விருது வழங்கப்பட்டுள்ளது. இதே போல், சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள பாலமலை கிராம பஞ்சாயத்திற்கு சிறந்த கிராம பஞ்சாயத்திற்கான தேசிய எழுத்தறிவு விருது 2015ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. கல்வி சார் திட்டங்களில் தமிழக அரசின் அளப்பரிய செயல்பாடுகள் இப்பெருமை மிகு விருதுகளைப் பெற அடித்தளமாக அமைந்தன.




படம் –62 . தேசிய எழுத்தறிவு விருது – 2015

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல்கள் மற்றும் ஆணைகளின்படி கீழ்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## 6.5. இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகள்

### 6.5.1 கற்கும் பாரதம்

கடந்த 2009ஆம் ஆண்டு தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தினால் “கற்கும் பாரதம் திட்டம்” தொடங்கப்பட்டது. 50 விழுக்காட்டிற்கும் குறைவாகப் பெண்கள் எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் பிற பின்தங்கிய மக்களுக்கு இத்திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் 9 மாவட்டங்களான முறையே தருமபுரி, சேலம், ஈரோடு, பெரம்பலூர், விழுப்புரம், அரியலூர், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகியவற்றில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தை 100% எழுத்தறிவு பெற்ற மாநிலம் என்ற நிலையை அடையச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கடந்த 2014–15ஆம் ஆண்டு வரை, ரூ. 141.90 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் 75:25 என்ற நிதிப்பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. 2015–16ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற நிதிப் பங்களிப்புடன் திருத்தி அமைக்கப்பட்டு இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. 24.57 இலட்சம் எழுத்தறிவு பெறாத வயது வந்தோரை இலக்காகக் கொண்டு அவர்கள் அனைவரையும் எழுத்தறிவு பெற்றவர்களாக்கிடும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**6.5.2.வயது வந்தோர் கல்வி மையங்கள்**

தமிழகத்தில், 9 மாவட்டங்களிலுள்ள கிராம பஞ்சாயத்து அளவில் பல்வகைத் திறன் செயல்பாடுகளைக் கொண்ட 3602 வயது வந்தோர் கல்வி மையங்களானது, நிருவாகவியல், மேலாண்மையியல், கல்வியியல் மற்றும் தொழில்நுட்ப செயல்பாடுகள்

ஆகியவற்றின் மூலம் எழுத்தறிவு மற்றும் வாழ்நாள் தொடர் கல்வியை கள அளவில் வழங்கிடும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வயது வந்தோர் கல்வி மையங்களில், அடிப்படைக் கல்வி, தொழிற் திறன் மேம்பாடு (தொழிற்கல்வி) மற்றும் சமநிலைக் கல்வி ஆகிய கல்விசார் செயல்பாடுகள் கற்போர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### 6.5.3. வயது வந்தோர் கல்வி மையங்களில் கல்வி சார் செயல்பாடுகள்

தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பாடத்திட்டத்தினைக் கொண்டு வயது வந்தோர் கல்வி மையங்களில் உள்ள கற்போர்களுக்கு கல்வி சார் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடிப்படை எழுத்தறிவுத் திட்டத்தில் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை கணக்குத் திறன்களை உள்ளடக்கியுள்ள பாடத்திட்டத்தினை அடிப்டையாகக் கொண்டு **300** மணி நேரம் பயிற்சி வழங்கி ஆண்டுதோறும் ஆகஸ்டு மற்றும் மார்ச் மாதங்களில் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு நடத்தப்படுகிறது. தமிழகத்தில், இத்திட்டத்தின் மூலமாக, இதுவரை **22.72** இலட்சம் கற்போர்கள் தங்களின் அடிப்படைக் கல்வியினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.

### 6.5.4.மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான வழிகாட்டுதல்கள் மற்றும் ஆணைகளின் படி, கடந்த 2012ஆம் ஆண்டில் அரியலூர், தருமபுரி, ஈரோடு, சேலம், பெரம்பலூர், திருவண்ணாமலை, மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் 40 வயது வந்தோர் கல்வி மையங்கள் அடையாளம் காணப்பட்டு அம்மையங்களுக்கு கணினிகள், மென் பொருட்கள், பிரின்டர், புரஜக்டர், LCD தொலைக்காட்சி, DVD இயக்கி, இன்வெர்டர், மின்விசிறி, வெண் எழுது பலகை, நீர் குளிர்விப்பான் ஆகிய பொருட்களை ரூ.1 கோடி செலவில் வழங்கி வசதிகள் செய்யப்பட்டு மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இம்மையங்களில் உள்ள கற்போருக்கு மேற் குறிப்பிட்டுள்ள தகவல் மற்றும் தொழில்நுட்பப் பொருட்களை பயன்படுத்தி கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இம்முறையானது கல்லாதோர் மத்தியில் கல்வி கற்கும் திறனை மேலும் முன்னேற்றிட உதவியாக உள்ளது. இம்மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள் வாயிலாக இது வரை 22,456 கற்போர் பயனடைந்துள்ளனர்.

படம் –**63.** மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள்

### 6.5.5.மாதிரி மையங்களில் உள்ள மைய பொறுப்பாளர்களுக்கான பயிற்சி

சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மைப் பயிற்சி, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009 ஆகிய பயிற்சிகள் மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலமாக களப் பணியாளர்களுக்கு 2015ஆம் ஆண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மேலும், திட்ட வலைதள புள்ளி விவரங்கள், நிதி மற்றும் கணக்கியல் சார்ந்த கணினிப் பயிற்சியானது மாதிரி வயது வந்தோர் கல்வி மையப் பொறுப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.





படம் –**64.** கணினி பயிற்சி சென்னை மற்றும் தருமபுரி



படம் –**65.** சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மைப் பயிற்சி – தருமபுரி

### 6.5.6 தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

அடிப்படை எழுத்தறிவுக் கல்வியோடு, தொழிற்திறன் சார்ந்த பயிற்சிகளும் கற்போருக்கு வழங்கப்பட்டுள்ளன. வயதுவந்தோர் கல்வி மையங்களில், கீழ்காணும் தொழிற்திறன் சார்ந்த பயிற்சிகள் கற்போருக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

- செயற்கை ஆபரணத் தயாரிப்பு
- பினாயில், சோப்பு எண்ணெய் மற்றும் சோப்பு பவுடர் தயாரித்தல்
- மெழுகு மற்றும் வாசனைப் பொருட்கள் தயாரித்தல்
- எம்ராய்டரி மற்றும் தையல் பயிற்சி
- பொம்மைகள் தயாரித்தல்
- தேவைகளின் அடிப்படையிலான தொழிற்பயிற்சிகள்
- சம்கி வேலைப்பாடு பயிற்சி

தொழிற்திறன் பயிற்சி உபகரணங்களான தையல் இயந்திரம், பொம்மைகள் செய்ய தேவையான செய் பொருட்கள், செயற்கை ஆபரணத் தயாரிப்பு பொருட்கள் மற்றும் பிற

தொழிற்திறன் பயிற்சி சார்ந்த உபகரணங்கள் வயது வந்தோர் கல்வி மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



படம் –**66** . ஆபரணத்தயாரிப்பு



படம் –**67** . தையல் பயிற்சி

***தொழிற்திறன் மேம்பாட்டில் ஓர் சாதனைச் சுவடு***

*திருமதி. கமலேஷ்வரி – கற்போர் – வயது **52**, கணவர் திரு.எம். செல்வராஜ், எண்.158, நாதிப்பாளையம், குள்ளம்பாளையம், கோபிசெட்டிபாளையம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்.*



*கடந்த **32** வருடங்களாக நானும் எனது குடும்பமும் நாதிப்பாளையத்தில் வசித்து வருகிறோம். நான் எழுத்தறிவு பெறாதவராக இருந்தேன். எனது வீட்டருகில் வசிப்போர் எழுத்தறிவு வகுப்புகள் அருகிலுள்ள பள்ளியில் நடத்தப்படுவதாக கூறினார்கள். மேலும், அந்த எழுத்தறிவு வகுப்பிற்கு பெரும்பாலான பெண்கள் சென்று படித்து வருவதை தொடர்ந்து கவனித்து வந்தேன். எனது தோழிகள் இவ்வகுப்பினைப் பற்றிக் கூறிய போது அங்கே சென்று பயில ஆர்வம் இருப்பினும், என்னுடைய **52** வயதில் இந்த அடிப்படை கல்வியை படிப்பதில் சற்றே தயங்கினேன். மேலும், இவ்வயதில் இதனைப் பயில்வது சாத்தியமாகுமா எனவும் தயங்கினேன். எனது தயக்கங்களைத் தாண்டி, கடந்த **2012**ஆம் ஆண்டு இந்த எழுத்தறிவு வகுப்பில் சேர்ந்தேன். ஆனால், எனது கணவர் தினக்கூலி வேலை செய்து கொண்டே இவ்வகுப்பிற்கு சென்று கற்க வேண்டும் எனக் கூறினார். நானும், தினக்கூலி வேலைக்கு சென்று கொண்டே படிக்கச் செல்வதாக அவருக்கு உறுதி கூறினேன். தற்போது, இவ்வகுப்பினால் எனக்கு படிப்பதிலும், எழுதுவதிலும் தன்னம்பிக்கை உண்டாகியுள்ளது. மேலும், நான் தையற்கலை கற்றுக் கொண்டதால் எனது துணிமணிகளை நானே தைத்துக்கொள்வதோடு, இது சார்ந்த செலவினத் தொகையையும் சேமித்து வருகிறேன். வங்கிக் கணக்கு துவங்கி எனது பணத்தை வங்கியில் சேமித்து வருகிறேன். என் வீட்டையும், சுற்றுச்சூழலையும் சுத்தமாக வைத்துக் கொள்ள இந்த எழுத்தறிவு வகுப்பில் கற்றுக் கொண்டேன். பெண்கள் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள இதுபோன்ற எழுத்தறிவு வகுப்புகளில் சேர்ந்து பயின்று பயன்பெற்றிட வலியுறுத்துவேன்.....”*

### 6.5.7. தனிநபர் ஊடக இயக்கம்

1330 வயது வந்தோர் கல்வி மையங்களில் தனிநபர் ஊடக இயக்கச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயல்பாடுகள் கீழ்கண்ட ஐந்து முக்கிய கூறுகளை உள்ளடக்கியதாகும்.

- நிதி அறிவுத்திறன் கல்வி
- சட்ட அறிவு, கடமைகள் மற்றும் உரிமைகள்
- தேர்தல் விழிப்புணர்வுக் கல்வி
- பேரிடர் மேலாண்மை மற்றும் குடிமைப் பாதுகாப்பு
- கற்கும் பாரதம் திட்டம் சார்ந்த செயல்பாடுகள்

இத்திட்டத்தின் மூலமாக 1330 வயது வந்தோர் கல்வி மைய கற்போர்கள் தனி நபர் ஊடக இயக்கத்தின் பயிற்சியினைப் பெற்றுள்ளனர். மாநில பள்ளிசாரா கல்விக் கருவூல மையத்தினால் தனிநபர் ஊடக இயக்கம் சார்ந்த மேற்கூறப்பட்டுள்ள ஐந்து உட்கூறுகளை உள்ளடக்கிய பயிற்சிக் கட்டகங்களைத் தமிழாக்கம் செய்து மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், இது சார்ந்த பயிற்சிகளைக் கற்கும் பாரதம் திட்டத்தின் கீழ் பணியாற்றி வருகின்ற ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

படம் –**68.** தனி நபர் ஊடக இயக்கப் பயிற்சி

## 6.5.8. அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு

கற்போர்களுக்கு, தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையம் மற்றும் தேசிய திறந்த நிலை பள்ளி நிறுவனம் இணைந்து அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டு தேர்வினை நடத்தி சான்றிதழ் வழங்குகிறது. மார்ச் – **2016** வரை, தமிழகத்தில் உள்ள **9** மாவட்டங்களில் மொத்தம் **22.72** இலட்சம் நபர்கள் அடிப்படை எழுத்தறிவை பெற்று தேசிய திறந்த நிலைப் பள்ளி நிறுவனத்தின் சான்றிதழைப் பெற்றுள்ளனர்.




படம் **–69.** அடிப்படை எழுத்தறிவு தேர்வு – தமிழ்நாடு



படம் **–70.** அடிப்படை எழுத்தறிவு தேர்வு – தமிழ்நாடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வலிமையான தலைமையின் கீழ், தமிழக அரசினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் மூலம், அடிப்படை எழுத்தறிவுப் பெற்று வருபவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

வரைபடம் –**45.** அடிப்படை எழுத்தறிவுத் தேர்வினை வெற்றிகரமாக முடித்துள்ளோரின் தேர்ச்சி விழுக்காடு




ஆதாரம்: பமவகஇ

| அடிப்படை எழுத்தறிவுத் தேர்வினை வெற்றிகரமாக முடித்துள்ளோரின் விவரம் | | |
|---|---|---|
| வருடம் | அடிப்படைத் தேர்வில் தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை | தேர்ச்சி விழுக்காடு |
| **2010–2011** | **267555** | **10.89** |
| **2011–2012** | **1512607** | **61.55** |
| **2012–2013** | **1726088** | **70.23** |
| **2013–2014** | **1793393** | **72.97** |
| **2014–2015** | **2136756** | **86.94** |
| **2015–2016** | **2272387** | **92.46** |

ஆதாரம்: பமவகஇ

## *அடிப்படை எழுத்தறிவில் ஓர் சாதனைச் சுவடு*

*திருமதி.கே.மெகரூனிஷா, கற்போர், வயது **38**, கணவர் திரு. எம்.காஜாமொய்தின், பள்ளிவாசல் தெரு, பெருந்தலையூர், கோபிச் செட்டிபாளையம் தாலுகா, ஈரோடு மாவட்டம்.*



*"…எனது பெற்றோர் என்னை பள்ளிக்கு அனுப்பவில்லை. எனது திருமணத்திற்குப் பிறகுதான் கல்வியின் முக்கியத்துவத்தையும், குறிப்பாக எழுதுதல் மற்றும் படிப்பதின் முக்கியத்துவத்தையும் உணர்ந்தேன். எனது கிராமத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படை எழுத்தறிவுக் கல்வித் திட்டத்தில் சேர்ந்தேன். துவக்கத்தில் எழுத்தறிவு மையத்திற்கு செல்ல தயக்கமும், வெட்கமும் அடைந்தேன். தற்போது என்னுடைய எழுத்தறிவுக் கல்வியை முடித்து நான் சான்றிதழ் பெற்றுள்ளேன். இந்த அடிப்படை எழுத்தறிவுக் கல்வியின் காரணமாக, எனது குடும்ப நிதித் தேவைகளை நானே நிர்வகித்துக் கொள்கிறேன். மேலும், என்னால் தற்போது படிக்கவும், எழுதவும் முடிகிறது…..”*

### 6.5.9. எழுத்தறிவு விழுக்காட்டில் வளர்ச்சி


தமிழக அரசு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி சார்ந்த திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதன் விளைவாக, மாநிலமானது வயது வந்தோர் எழுத்தறிவு விழுக்காட்டில் முன்னேற்றம் கண்டுள்ளது. தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது தமிழகமானது, எழுத்தறிவு விழுக்காட்டில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. கீழ்கண்டுள்ள வரைபடமானது எழுத்தறிவு விழுக்காட்டில் தமிழகத்தின் மெச்சத்தகுந்த வளர்ச்சியினைக் குறிக்கின்றது.

எழுத்தறிவு விழுக்காடு ஒப்பீடு

| வருடம் | இந்தியா | தமிழ் நாடு | பெண்கள் எழுத்தறிவு விழுக்காடு |
|---|---|---|---|
| 1961 | 28.30 | 36.39 | 21.06 |
| 1971 | 34.45 | 45.40 | 30.92 |
| 1981 | 43.57 | 54.39 | 40.43 |
| 1991 | 52.21 | 62.66 | 51.33 |
| 2001 | 64.86 | 73.45 | 64.55 |
| 2011 | 74.04 | 80.33 | 73.86 |

ஆதாரம்: Census 2011

வரைபடம் –46. *எழுத்தறிவு விழுக்காட்டில் வளர்ச்சி – ஒரு பார்வை*




| | 1961 | 1971 | 1981 | 1991 | 2001 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 28.3 | 34.45 | 43.57 | 52.21 | 64.86 | 74.04 |
| தமிழ்நாடு | 36.39 | 45.4 | 54.39 | 62.66 | 73.45 | 80.33 |

ஆதாரம்: Census 2011

### 6.6. வரவு செலவு திட்ட ஒதுக்கீடு

**2016–17** நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.**7.65** கோடி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.7. முடிவுரை

வயதுவந்தோர் கல்வி என்பது கற்போருக்கு செயல்பாட்டு எழுத்தறிவுக் கல்வியை மட்டும் வழங்குவதன்று, மாறாக அவர்களின் வாழ்வில் முழுமையான முன்னேற்றத்தை உருவாக்கிட வழங்கப்படும் ஒரு கல்வியாகும். கற்போர் வாழ்வில் சுய சார்பு மற்றும் தொழிற்திறன் பயிற்சிகள் ஆகியவற்றுடன் வேலை வாய்ப்பைப் பெறும் வகையில்

வயதுவந்தோர் கல்வித் திட்டமானது மாநிலத்தில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள உயர்வு, கல்வியறிவில் சிறந்த சமுதாய மாற்றத்திற்கான மாநில அரசின் தொலைநோக்குப் பார்வையின் அளப்பரிய பங்களிப்பாக அமைந்துள்ளது.

# 7. பொது நூலகங்கள்

## 7.1 அறிமுகம்

சமுதாய பண்பாட்டு அறநெறி சார்ந்த மனிதனின் நடவடிக்கைகளை மேம்படுத்தி சமூகத்தின் மதிப்பு மிக்க சொத்தாக மாற்றுவதில் பொது நூலகங்கள் தலையாய, முக்கியப் பங்காற்றுகின்றன. ஒரு காலத்தில் வாய்மொழியாகச் சொன்ன கருத்துக்கள் களிமண் பலகைகள், மரப்பலகைகள், கற்பாறைகள் மற்றும் ஓலைச் சுவடிகளில் எழுதிவைக்கப்பட்ட நிலை மாறி, அவைகள் காகிதங்களில் அச்சடித்து, பொருள் வாரியாகப் பகுத்து வைக்கப்பட்ட காலத்திலிருந்து பொது நூலகங்களுக்கான கருத்தாக்கம் உருப்பெற்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டலின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு மாநிலத்தில் ஒட்டுமொத்த மேம்பாட்டினை அடைவதற்கு பலனளிக்கும் வகையில் செயல் திட்டங்கள் மற்றும் சிறந்த சேவை வழங்குவதற்குரிய திட்டங்களை தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. ‘‘குறைந்த செலவில் சிறந்த நூலகச் சேவை‘‘ என்ற நோக்கத்தின் அடிப்படையில் பொது நூலகத் துறை சமூக வளர்ச்சியில் பங்கெடுப்பதோடு, நூலக இயக்கமானது கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் பொது மக்கள் இயக்கமாக வளர்ந்து, மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதன் வாயிலாக அறிவுசார் சமூக வளர்ச்சிக்கு வித்திடுகிறது.

## 7.2. குறிக்கோள்கள்

- மனிதனின் படைப்பாக்கத்திறன் மற்றும் அவனது அறிவு நுட்பங்களுக்கான ஆதார வளங்களை உருவாக்கி, அதனைக் கட்டிக்காப்பதன் மூலம் சுதந்திரமான மற்றும் கற்றறிந்த சமூகத்தைப் பேணி வளர்த்தல்.

- ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அறிவாற்றலே சக்தியாகும் என்பதால் அந்நாட்டு மக்களுக்கு போதுமான அறிவுசார் வளங்களை அளிப்பதற்கு வளமான நூலகங்களை அமைத்தல்.

- உள்ளார்ந்த வாசிப்புப் பழக்கத்தின் அவசியத்தை உணர்த்த, நூலகங்களை மக்கள் வசிப்பிடங்களுக்கு அருகாமையில் உருவாக்கி, புத்தகங்களை வாசகர்களுடன் பிணைப்பதற்கு வசதி செய்தல்.

- சுதந்திரமான, ஒருசார்பற்ற மனவளர்ச்சி, சிந்தனைச் சுதந்திரம் மற்றும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு கொள்ளல் போன்றவற்றை வளர்த்தெடுப்பதற்கு அவசியமான தகவல்களைத் தடையின்றி இலவசமாக வழங்குதல்.

- மிகப் பழமையான மற்றும் அரிய வகை நூல்களையும், ஓலைச் சுவடிகளையும் படியெடுத்து வைத்தல்.

- நவீன தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கிணையான வகையில் நூலகச் சேவையினை அளித்தல்.

## 7.3. இலக்கு

- 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் அவர்களின் அறிவுசார்ந்த தகவல் தேவையைப் பூர்த்தி செய்ய பகுதிநேர நூலகங்களைத் திறந்து செயல்படுத்துதல்.

- உலகளாவிய அறிவுத் திரட்டுகளையும், எதிர்காலச் சந்ததியருக்கான படைப்புகளையும் நிலையான முறையில் பாதுகாத்தல்.

- பொது மக்கள் மற்றும் வாசகர்களின் பயன்பாடு மற்றும் தேவைகளின் அடிப்படையில் நூலகங்களைத் தரம் உயர்த்துதல்.

- பொது மக்களின் அறிவார்ந்த தேவையை ஈடுசெய்வதற்கேற்ற நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் தரமான புதிய நூல்களை வாங்கி

வழங்குவதன் மூலம் பொது மக்களுக்குச் சிறந்த நூலகச் சேவையினை கிடைக்கச் செய்தல்.

- அடிப்படைத் தேவைகளான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் புதிய உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கச் செய்தல்.

- பொது மக்களுக்கு எளிமையாகவும், மிக விரைவாகவும் நூலகச் சேவை கிடைப்பதை உறுதிசெய்ய, வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில் நுட்பத்துடன் நூலகங்களை ஒருங்கிணைத்தல்.

- தேசிய அறிவுசார் ஆணையத்தின் பரிந்துரைக்கு இணங்க, பொது நூலகங்களை அறிவுசார் மற்றும் தகவல் மையங்களாக மாற்றியமைத்தல் மூலம் மாநிலத்திற்கு பயனுள்ள வகையில் வள ஆதாரங்கள் கிடைக்கச் செய்தல்.

- குடிமைப்பணித் தேர்வு மூலம் வேலை வாய்ப்பைத் தேடும் இளைஞர்களுக்குப் பயன்தரும் வகையில் ஏற்கனவே செயல்பட்டு வரும் குடிமைப்பணிக் கல்வி மையங்களை, கிராமப்புற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் மேலும் விரிவுபடுத்துவதன் வாயிலாக,

கிராமப்புற இளைஞர்களையும் குடிமைப்பணி மற்றும் பிற போட்டித் தேர்வுகளில் பங்கேற்கச் செய்தல்.

- பழைய மற்றும் அரிய நூல்களை எண்ணிம மயமாக்கி, பாதுகாப்பதன் மூலம் சிறந்த பாதுகாப்புக் களஞ்சியமாக செயல்படுதல்.
- புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களோடு இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சி மூலம் பொது மக்களிடையே நூலகங்களின் அவசியம் மற்றும் நூல்களின் மதிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

## 7.4. தமிழகத்தில் நூலக இயக்கம்

தமிழகத்தை இந்தியாவின் முதன்மையான அறிவுசார் மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கினை நிறைவேற்றும் வண்ணம், பொது மக்களுக்கு ''குறைந்த செலவில் நிறைந்த வாசிப்பு'' எனும் குறிக்கோளுடன், பொது நூலக இயக்ககம் வாயிலாக சிறந்த நூலகச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பொது நூலகச் சேவைகள் திறம்பட வழங்கிடும் நோக்கில், நாட்டிலேயே முதன்முறையாக 1948 ஆம் ஆண்டு ''தமிழ்நாடு பொது நூலகச் சட்டம்'' இயற்றப்பட்டது. இதற்கிணங்க பொதுநூலக இயக்ககம் 1972

ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது, இவ்வியக்ககத்தின் கீழ் தற்போது, மாநில மைய நூலகமான கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், 32 மாவட்ட மைய நூலகங்கள், 1,926 கிளை நூலகங்கள், 1,821 ஊர்ப்புற நூலகங்கள், 14 நடமாடும் நூலகங்கள் மற்றும் 780 பகுதி நேர நூலகங்கள் என மொத்தம் 4,575 நூலகங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர அரசு மானியம் பெற்று செயல்பட்டு வரும் நூலகங்களும் தமிழ்நாட்டில் உள்ளன.


## 7.5. நிதி

### 7.5.1. நூலக நிதி

பொது நூலகத் துறையின் முக்கிய வருவாய் நூலக வரியே ஆகும். தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948, பிரிவு 12(1)(a)–இன்படி, உள்ளாட்சி நிறுவனங்கள் ஒவ்வொரு குடிமகனிடமும் வசூலிக்கும் சொத்துவரியில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் வசூலிக்கப்படும் நூலக வரியிலிருந்து தான் நூலகங்களுக்குத் தேவையான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குதல், புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுதடைந்த நூலகக் கட்டடங்களைப் புதுப்பித்தல், நூலகங்களுக்குத் தேவையான அனைத்து பதிவேடுகள், எழுது பொருட்கள், படிவங்கள், நுகர் பொருட்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல், மேலும் நூலகப்

பணியாளர்களாகிய மூன்றாம் நிலை நூலகர், ஊர்புற நூலகர், பகுதிநேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் நூலக மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் நூலக நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **2014–15** ஆம் ஆண்டில் **78.56** கோடியாக இருந்த நூலகவரி **2015–16** ஆம் ஆண்டில் **91.28** கோடியாக அதிகரித்துள்ளது.

வரைபடம் –**47.** நூலக வரி வசூல்




ஆதாரம்: பொநுஇ

### 7.5.2. பொது நிதி

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், **1948** இன், தமிழ்நாடு பொது நூலகத் திருத்தச் சட்டம் **2001**, பிரிவு 14(A) மற்றும் தமிழ்நாடு

பொது நூலக விதிகள், 1950 இல் விதி 23(A)1 ஆகியவற்றின்படி, நிதிநிலையில் நலிவடைந்த நூலக ஆணைக்குழுக்களுக்கு உதவும் பொருட்டு “பொது நிதி” உருவாக்கப்பட்டு, வருவாய் உள்ள மாவட்டங்களிலிருந்து ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் நூலக வரியில் 20%க்கு மிகாமல் பெறப்படும் பொது நிதியானது, வருவாயின்றி நலிவுற்ற மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, குறிப்பிட்ட இனங்களுக்குச் செலவிடப்படுகிறது.

### 7.5.3. இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மானியம்

கொல்கொத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மத்திய அரசு நிறுவனமான “இராஜா ராம்மோகன் ராய் நூலக” அறக்கட்டளையானது, இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் செயல்பட்டு வரும் நூலகங்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் நூல்கள் வாங்குதல், தளவாடங்கள் வாங்குதல், நூலகர்களுக்கு சிறப்பு பயிற்சியளித்தல், கருத்தரங்கு நடத்துதல், நூலகக் கட்டடங்கள் கட்டுதல், நூலகங்களில் குழந்தைகள் பிரிவு உருவாக்குதல், 25 / 50 / 75 / 100 ஆண்டுகள் நிறைவடைந்த நூலகங்களுக்கு விழா கொண்டாடுதல் மற்றும் நூலகத்தின் அடிப்படை வசதியினை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கி, பொது நூலகங்களை ஊக்குவித்து வருகிறது.

இவ்வறக்கட்டளையானது ஆண்டுதோறும் இணை மானியமாக ரூ.3.00 கோடி வழங்கி வருகிறது. இத்துடன் தமிழக அரசும் தனது பங்காக ரூ.3.00 கோடி வழங்குகிறது.

2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை இணை மானியமாக மொத்தம் ரூ.31.20 கோடி பெறப்பட்டு, நூலக வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, 2015 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் பணியாற்றும் நூலகர்களுக்கு, புத்துணர்வு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.



படம் –71. நூலகர்களுக்கான பயிற்சி – கோயம்புத்தூர்

## 7.6. சாதனைகள்

### 7.6.1. நூலக வளர்ச்சியில் மடிக்கணினிகள்

ஒவ்வொரு மாவட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் நூலகங்களில் நூல் இருப்பு சரிபார்த்தல் மற்றும் தளவாடப் பொருட்கள் சரிபார்த்து சான்றளித்தல் ஆகிய பணிகளில் தாள்வழிப் பதிவு செய்யப்படும் நிலையினை மாற்றி, இப்பணிகளை மிகவும் துல்லியமாகவும், சிரமமின்றியும் செய்யும் பொருட்டு, **2012–13** ஆம் ஆண்டில் **32** நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்களுக்கு ரூ.**13.90** இலட்சம் செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் மாவட்ட நூலக அலுவலகங்களில் பணியாற்றும் மாவட்ட நூலக அலுவலர்கள் தங்களது அன்றாடப் பணிகளை மிகவும் திறமையுடன் நம்பகமாக மற்றும் விரைவாகச் செய்து, மாவட்டங்களில் செயல்படும் பொது நூலகங்களை நன்கு நிர்வகித்து, நூலக வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, **2013–14** ஆம் ஆண்டில் **32** மாவட்ட நூலக அலுவலர்களுக்கு ரூ.**15.62** இலட்சம் செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

பொது நூலகத் துறையில் நூலக வளர்ச்சிக்கு இன்றியமையாத, அனைத்துப் பணிகளையும் எளிமையாக மேற்கொள்ளும் பொருட்டு, **2015–16** ஆம் ஆண்டு வரவு–செலவுத்

திட்டத்தில் அறிவித்துள்ளவாறு, **36** கண்காணிப்பாளர்களுக்கு ரூ.**17.98** இலட்சம் செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 7.6.2. மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான பிரிவு

அ. கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகம்:

மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, **2012–13** ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகத்தில் ரூ.**50.00** இலட்சம் மதிப்பீட்டில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.




படம் –72. கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகம் – மாற்றுத்திறன் குழந்தைகள் பிரிவு

இந்நூலகத்தில் ஒலிப்புத்தகங்கள், பார்வையற்றோருக்கான புத்தகங்கள் (Braille Books), பார்வைத்திறன் குறைந்த குழந்தைகளுக்கான படிக்கும் கருவிகள், கணினிகள், செயல்வழிக் கற்றல் கருவிகள் மற்றும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவான தளவாடங்கள் இப்பரிவில் அமைந்துள்ளன.

இந்தப் பிரிவானது 5 வயது முதல் 15 வயது வரையுள்ள பார்வை குறைபாடு, செவித்திறன் மற்றும் பேச்சுத்திறன் குறைபாடு, கற்றல் குறைபாடு, மனவளர்ச்சி மற்றும் மதியிறுக்கம் போன்ற குறைபாடுகளையுடைய மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் கல்வி, சுயகற்றல் தேவைகள் மற்றும் வாழ்க்கைத்திறன் மேம்பாட்டிற்கு உதவியாக உள்ளது.

<u>ஆ. மாநில ஆதார வள மையத்தில் நூலகம்:</u>

மாற்றுதிறன் கொண்ட குழந்தைகளுக்கென சிறப்பு நூலகம் ஒன்று, மாநில ஆதார வளமையத்தில் (**State Resource Centre)** **2012–13** ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ.**17.00** இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள இந்நூலகத்தில் பல்வேறுபட்ட மாற்றுத் திறன்கள் கொண்ட குழந்தைகள் அதாவது, கண்பார்வையற்ற குழந்தைகள், கற்றல் குறைபாடுள்ள குழந்தைகள், மதியிறுக்கம் மற்றும் பிறவகையான பிறழ்வுகள் கொண்ட குழந்தைகளுக்கென

நவீன கற்றல் உபகரணங்கள், மென்பொருள்கள், தொடுகை வரைபடம் மற்றும் பார்வையற்ற குழந்தைகளுக்கான சிறப்பு விசைப் பலகைகள் அமைக்கப் பட்டுள்ளது.



படம் **–73.** மாநில ஆதார வளமையம்

இந்த மையம் ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்தல், தனிநபர் கல்வித் திட்டம் **(IEP)** அளந்தறிதல், சிறப்புக் கல்வி, உடலியங்கு சிகிச்சை, தொழில்வழி சிகிச்சை, பேச்சு மற்றும் மொழி சிகிச்சை, உணர்வு ஒருங்கிணைப்பு போன்ற துறைகளில் பணியாற்றி வருகிறது. பார்வையின்மை, பார்வை குறைபாடு, செவி மற்றும் பேச்சு குறைபாடு, உடல் உறுப்புகள் ஊனம், மனநலம் குன்றுதல், மதியிறுக்கம், கவனக்குறைவு மற்றும் கற்றல் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகளின் பெற்றோருக்கு இந்த மையம் மூலம் வழிகாட்டுதல்

மற்றும் ஆலோசனை வழங்கப்படுகிறது. குறைபாடுகளுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் அந்தந்த துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 7.6.3. மாதிரி நூலகங்கள்

நூலகப் பயன்பாட்டாளர்களின் மாறிவரும் காலச்சூழலுக்கேற்றத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாட்டில் **2013–14** ஆம் ஆண்டு அரசு அறிவிப்பின்படி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட மைய நூலகங்களை தலா ரூ.**50.00** இலட்சம் செலவில் கணினி, இணைய இணைப்பு, குளிர் சாதன வசதி செய்யப்பட்ட படிக்கும் அறைகள் மற்றும் இதர வசதிகளை மேம்படுத்தி, மாதிரி நூலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

### 7.6.4. நவீனமயமாகி வரும் குழந்தைகள் பிரிவு

குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தவும், புத்தக வாசிப்புத் திறனை அதிகரிக்கவும், கற்கும் ஆற்றலை இளம் வயதிலேயே தோற்றுவிக்கவும், முனைப்புக் காட்டுவதன் மூலம் அவர்களைச் சமூக சீர்திருத்தவாதிகளாக உருவாவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு மாவட்ட மைய நூலகங்கள், தாலுகா தலைநகரங்கள் மற்றும் சிறிய நகரங்களில் அமைந்துள்ள **287** நூலகங்களில் குழந்தைகள் பிரிவு அமைக்கப்பட்டுள்ளன.



படம் –74. நவீன குழந்தைகள் பிரிவு – திருச்சிராப்பள்ளி

இதனைத் தொடர்ந்து, 2013–14 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் அறிவித்தபடி, குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்கள், கணினிகள், உலக வரைபடங்கள், உலக உருண்டை, நில வரைபடங்கள் மற்றும் செயல்வழிக் கல்வி கற்றல் கருவிகள் ஆகிய நவீன சாதன வசதிகளுடன், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள மாவட்ட மைய நூலகங்களில் செயல்பட்டு வரும் சிறுவர் பிரிவானது தலா ரூ.5.00 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.20.00 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

மேலும், குழந்தைப் பருவப் பள்ளி மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, **2014–15** ஆம் ஆண்டு அரசு அறிவிப்பின்படி, ஒரு மாவட்டத்திற்கு ரூ.**20,000/–** வீதம் **32** மாவட்டங்களிலுள்ள மாவட்ட மைய நூலகக் குழந்தைகள் பிரிவில், **2014–15** ஆம் ஆண்டில் புதிய உறுப்பினராகச் சேர்ந்த, முதல் **100** குழந்தைகளுக்கு, அவர்களின் மனவளர்ச்சி மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்தும் நோக்கில், ரூ.**6.40** இலட்சம் மதிப்பிலான, வரை உபகரணங்கள் வண்ணப் பென்சில்கள், களிமண் பலகைகள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய **“**விலையில்லா கற்றல் உபகரணப் பெட்டிகள்“ வழங்கப்பட்டுள்ளது.

### 7.6.5. நூல்கள் பாதுகாப்பு மையம்

பொது நூலகங்களிலுள்ள பழமையான மற்றும் அரிய நூல்கள், வாசகர்களின் பயன்பாடு காரணமாக இருப்பு நீக்கம் செய்யப்படும்போது, அந்நூல்களை எதிர்காலச் சந்ததியினர் மற்றும் நூல் ஆராய்ச்சியாளர்களுக்கு பயன்படும் நோக்கில் **2014–15** ஆம் ஆண்டு அரசு அறிவிப்பின்படி, முதற்கட்டமாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகத்தில் ரூ.**1.50** இலட்சம் செலவில் ‘‘நூல்கள் பாதுகாப்பு மையம்’’ உருவாக்கப்பட்டு, அரியவகை நூல்கள் பாதுகாக்கப்படுகின்றன.

### 7.6.6. வீட்டுக்கொரு நூலகம்

கன்னிமாரா பொது நூலகத்தில் மின்மியமாக்கப்பட்டுள்ள, காப்புரிமை கோர இயலாத, நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள், அரசுப் பதிப்பு நூல்கள் மற்றும் அரிய நூல்களை, 2014–15 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளவாறு, தமிழக அரசால் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் இலவச மடிக்கணினிகளில் ரூ.6.00 இலட்சம் செலவில் பதிவேற்றம் செய்து, மாணவச் செல்வங்களுக்கு வழங்கியதன் விளைவாக அவர்தம் வீட்டிலேயே புத்தகங்களை வாசிக்கும் சூழ்நிலையை உருவாக்கி, "நூலகத்தில் புத்தகங்கள்" என்ற நிலையிலிருந்து "வீட்டிற்குள் நூலகம்" என்ற புதிய பரிமாணத்தை பொது நூலகத் துறை அடைந்துள்ளது.

### 7.6.7. மின்னணு புத்தக வாசிப்புக் கருவிகள்

அச்சடிக்கப்பட்ட புத்தக வடிவிலிருந்து எண்ணிம மயமாக்கப்பட்ட புத்தகங்களின் மீது நாட்டம் கொள்ளும் தற்கால வாசகர்களைக் கவரும் விதமாக, 2014–15 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் கன்னிமாரா பொது நூலகத்தில் 18 மின்னணு புத்தக வாசிப்புக் கருவிகள் மற்றும் 32 மாவட்ட மைய நூலகங்களில் தலா 4 மின்னணு புத்தக வாசிப்புக் கருவிகள் வீதம் 128 மின்னணு புத்தக வாசிப்புக் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

### 7.6.8. பொது நூலகத் தகவல் மேசை

**2014–15** ஆம் ஆண்டு அரசு அறிவிப்பின்படி, பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து நலத்திட்டங்கள் மற்றும் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயனுள்ள வகையிலான பிற அரசுத் துறைகளின் நலத்திட்டங்கள் குறித்த முழுமையான தகவல்களை, கன்னிமாரா பொது நூலகத்தின் இலவச தொலைபேசிச் சேவை மூலம் பொது மக்கள் எளிதாக அறியும் வகையில் ரூ.**26.00** இலட்சம் மதிப்பில் "பொது நூலகத் தகவல் மேசை" அமைக்கப்பட்டுள்ளது.

### 7.6.9. போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க நூலகங்களில் இலவச இணையதள வசதி

நூலக உறுப்பினர்கள் பொது நூலகச் சேவையினை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதோடு, நூலகங்களில் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில், கன்னிமாரா பொது நூலகம் மற்றும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் உள்ள இணையதள வசதியினைப் பயன்படுத்தி, தமிழகத்திலுள்ள எந்தவொரு பொது நூலகத்திலும் நூலக உறுப்பினர்களாக உள்ள இளைஞர்கள் அரசு மற்றும் அரசு சார்ந்த பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கு இலவசமாக விண்ணப்பிக்கும் முறையானது **2015–16** ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, **1,822** இளைஞர்கள் பயன்பெற்றதோடு, புதிய நூலக உறுப்பினர்களாக **702** பேர் இணைந்துள்ளனர்.

### 7.6.10. குடிமைப்பணி கல்வி மையத்தில் போட்டித் தேர்வு பயிற்சிகள்

தமிழக மாணவ, மாணவியர்கள் மற்றும் படித்த இளைஞர்களின் நலன் கருதி, கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள், மாவட்டத் தலைநகர், நகராட்சி மற்றும் சிறிய நகரங்களில் அமைந்துள்ள 267 நூலகங்களில் குடிமைப்பணி கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேசிய / மாநில அளவில் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளை எழுதும் இளைஞர்களின் நலனை முன்னிட்டு இம்மையங்களில் போட்டித் தேர்வுகளுக்கான நூல்கள், தினசரிகள், பருவ இதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.



படம் –75. போட்டித் தேர்வு பயிற்சி – வேலூர்

**2015–16** ஆம் ஆண்டு அரசு அறிவிப்பின்படி, படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் முதற்கட்டமாக, கோயம்புத்தூர், கரூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய **6** மாவட்ட மைய நூலகங்களிலுள்ள குடிமைப்பணிப் பிரிவில், மாவட்டத்திற்கு ரூ.**2.50** இலட்சம் வீதம் மொத்தம் ரூ.**15.00** இலட்சம் செலவில் “போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள்” தோற்றுவிக்கப் பட்டுள்ளது. இம்மையங்களின் வாயிலாக **2015–16** இல் **2,747** பயனாளிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 7.6.11. மாவட்ட மைய நூலகங்களில் “சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு”

தமிழ்நாட்டிலுள்ள பொது நூலகங்களைப் பயன்படுத்தி வரும் நகர்ப்புற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள், அவர்களுக்குச் சொந்தமான நூல்களை, நூலகங்களில் வைத்து படிப்பதற்கான சூழ்நிலையினை உருவாக்கும் பொருட்டு, **2015–16** ஆம் ஆண்டு முதல் முதற்கட்டமாக, சென்னை கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய **12** மாநகராட்சிகளில் செயல்பட்டு வரும் மாவட்ட மைய நூலகங்களில், ஒரு மாவட்டத்திற்கு ரூ.**20,000/–** வீதம் மொத்தம் ரூ.**2.40** இலட்சம் மதிப்பில் ‘‘சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு’’ தோற்றுவிக்கப்பட்டு, **58,200** பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

## 7.7. செயல்பாடுகள்

### 7.7.1. நூலகக் கட்டமைப்பு

தமிழ் நாட்டில் செயல்பட்டு வரும் **4,575** பொது நூலகங்களில் **1,725** நூலகங்கள் சொந்தக் கட்டடத்திலும், **2,535** நூலகங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடத்திலும், **301**

நூலகங்கள் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருவதோடு, **14** நடமாடும் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்திலுள்ள அனைத்து நூலகங்களையும் சொந்தக் கட்டடங்களில் செயல்படுத்துவதே பொது நூலகத்துறையின் தலையாய நோக்கமாகும்.

இத்தொலைநோக்கிற்கிணங்க, **2011–12** முதல் **2015–16** வரை பொது நூலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.**5.92** கோடி மற்றும் பொது நூலகக் கட்டடங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.**6.51** கோடி செலவிடப்பட்டுள்ளது.




படம் **–76** திருவொற்றியூர் கிளை நூலகம் – திருவள்ளூர் மாவட்டம்

**2014–15** இல், காரைக்குடி, இராசிபுரம், புதுப்புதூர் மற்றும் தூத்துக்குடி (வடக்கு) கிளை நூலகங்களுக்கான புதிய கட்டடங்கள், வேலூர் மாவட்ட மைய நூலக இணைப்புக் கட்டடம் மற்றும் **2015–16** இல் ஸ்ரீரங்கம், துறையூர், திருச்செங்கோடு, வாலாஜாபேட்டை மற்றும் திருவொற்றியூர் கிளை நூலகங்களுக்கான புதிய கட்டடங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

### 7.7.2. கணினிமயமாக்கம்

மாநில மைய நூலகமான கன்னிமாரா பொது நூலகம் மற்றும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் இராஜா ராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளையின் இணை மானிய நிதியுதவியின் அடிப்படையில் இணையதளம் மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட வசதிகளுடன் பொது நூலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. மேலும், கன்னிமாரா பொது நூலகத்துடன் மாவட்ட மைய நூலகங்கள் அனைத்தும் இணையதள இணைப்பு வாயிலாக இணைக்கப்பட்டு, அந்நூலகங்களில் உள்ள நூல்கள் பற்றிய தகவல்களை இணையதளம் வாயிலாக பொது மக்கள் அறிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



படம் –77 திருவொற்றியூர் கிளை நூலகம் – திருவள்ளூர் மாவட்டம்

### 7.7.3. வாசகர் வட்டம்

நூலகச் செயல்பாடுகளில் பொதுமக்களின் ஆதரவும், பங்களிப்பும் இருக்கும் வகையில், அனைத்து நூலகங்களிலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் முக்கிய பிரமுகர்களைக் கொண்டு “வாசகர் வட்டம்” என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது.



படம் –78 கதை சொல்லுதல் நிகழ்ச்சி – கரூர் வாசகர் வட்டம்


புதிய நூலகங்கள் உருவாவதற்கும், பொது மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தி, நூலகத்தை வாசகர்கள் முழுமையாகப் பயன்படுத்துவதற்கும், புத்தகங்களுக்கும் வாசகர்களுக்குமான பிணைப்பினை உறுதிப் படுத்துவதற்கும் பொது நூலகத் துறையுடன் கைகோர்த்து துணை நிற்கும் வாசகர் வட்டங்கள் வாயிலாக புதிய நூல்கள் மற்றும் படைப்பாளிகள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு, புத்தகக் கண்காட்சி, மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கதை சொல்லுதல், வினாடி வினா போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு இன்றியமையாத நிகழ்ச்சி நிரல்கள் மாவட்ட மைய நூலகங்கள், வட்ட நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வாசகர் வட்டம் புதிய நூலகங்களை ஏற்படுத்துவதற்கும் வாசகர்களின் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்துவதற்கும் உறுதுணையாக உள்ளது.

மேலும், தமிழகத்தில் நூலக இயக்கம் வளர மிகுந்த முனைப்பும், ஈடுபாடும் கொண்ட வாசகர் வட்டத் தலைவர்களை ஊக்குவிக்கும் வகையில், **2014–15** ஆம் ஆண்டு அரசு அறிவிப்பின்படி, ஆண்டு தோறும் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று வாசகர் வட்டத் தலைவர்களுக்கு "நூலக ஆர்வலர்" என்ற விருதானது, தலா ரூ.5,000/– மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

### 7.7.4. நூலக உறுப்பினர் மற்றும் புரவலர் சேர்க்கை

மக்களின் தேவைகளை அறிந்து, நூலகச் சேவையினை மென்மேலும் விரிவுபடுத்துவதற்கு, பொது நூலகங்களில் உறுப்பினர்கள் மற்றும் புரவலர்கள் சேர்க்கையினை துரிதப்படுத்துவது மிகவும் அத்தியாவசியமானதாகும். பொது நூலகத் துறையின் தீவிர முயற்சியின் காரணமாக, **2011–12** முதல் தற்போது வரை புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை **19,82,980** மற்றும் புரவலர்கள் எண்ணிக்கை **53,784** ஆகும். குறிப்பாக, **2015–16** ஆம் ஆண்டில் **3,93,959** உறுப்பினர்களும் **7,654** புரவலர்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.


வரைபடம் – 48. நூலக உறுப்பினர் சேர்க்கை




| | 2011–12 வரை | 2012–13 வரை | 2013–14 வரை | 2014–15 வரை | 2015–16 வரை |
|---|---|---|---|---|---|
| உறுப்பினர் சேர்க்கை | 5294478 | 5515465 | 6527601 | 6883499 | 7277458 |

ஆதாரம் : பொநுஇ

வரைபடம் – 49. நூலக புரவலர் சேர்க்கை




| | 2011–12 வரை | 2012–13 வரை | 2013–14 வரை | 2014–15 வரை | 2015–16 வரை |
|---|---|---|---|---|---|
| புரவலர் சேர்க்கை | 61030 | 65282 | 98287 | 107160 | 114814 |

ஆதாரம் : பொநுஇ

### 7.7.5. நூல்கள் வாங்குதல்

மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் நூலக வரியில் 25 சதவிகிதத்திற்கு மிகாமல், அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் நிதிநிலைக்கேற்ப, நூல் தேர்வுக் குழுவினரால் தேர்வு செய்யப்படும் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் பொது நூலகங்களுக்கு வாங்கப்பட்டு வருகின்றன. தமிழ் நூல்களில் அதிகபட்சமாக தலைப்பு ஒன்றிற்கு 1,000 படிகள் வீதம் மற்றும் ஆங்கில நூல்களில் மாவட்டத்திற்கு 3 படிகள் வீதம் 96 படிகள் வாங்கப்படுகின்றன. மேலும், கொல்கத்தாவிலுள்ள இராஜா ராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவியின் மூலம் பெறப்படும் இணை

மானியத்திலும் புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தமிழகத்திலுள்ள அனைத்து நூலக வாசகர்களும் பயனடைந்து வருகின்றனர்.

## 7.8. விழாக்கள்

### 7.8.1. பொது நூலக தினம்

பல சமூக சீர்திருத்தங்கள் செய்து, கல்வியில் பெருநாட்டம் கொண்ட புகழ்பெற்ற சமூக சீர்திருத்தவாதி இராஜா ராம்மோகன் ராய் அவர்களின் பெருமையினை இவ்வுலகிற்கு உணர்த்தும் வண்ணம், அவர் பிறந்த நாளான மே 22 ஆம் நாளில் தமிழகத்தின் அனைத்து நூலகங்களிலும் ‘‘பொது நூலக தினம்’’ கொண்டாடப்படுகிறது.

### 7.8.2. நூலகர் தினம்

1948 இல் பொது நூலகச் சட்டத்தை இயற்றுவதற்கு வழிவகுத்தவரும், நூலகவியலின் விதிகள் மற்றும் “கோலன் நூற்பகுப்பாக்க” முறையை அறிமுகப்படுத்தியவரும், “இந்திய நூலக இயலின் தந்தை” என்று போற்றப்படுபவருமான முனைவர். சீர்காழி இராமாமிருதம் அரங்கநாதன் அவர்களைப் போற்றி, பெருமைப்படுத்தும் வகையில், அவர் பிறந்த நாளான ஆகஸ்டு 12 ஆம் நாள் ‘‘நூலகர் தினமாக’’ தமிழ் நாட்டின் அனைத்து

நூலகங்களிலும் மிகவும் பெருமிதத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

### 7.8.3. தேசிய நூலக வார விழா

நமது அன்றாட வாழ்க்கையோடு ஒட்டி, உறவாடும் நூல்களையும், அதனைப் பாதுகாக்கும் நூலகங்களையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், நூலகங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் நவம்பர் 14 ஆம் நாள் முதல் 20 ஆம் நாள் வரை ‘‘தேசிய நூலக வார விழா’’ கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் இசையரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், விழிப்புணர்வுப் பேரணி, கலை நிகழ்ச்சிகள், புத்தகக் கண்காட்சி, கருத்தரங்கம், நூல் அறிமுகங்கள், படைப்பாளிகள் அறிமுகம் போன்ற நிகழ்சிகள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.



படம் – 79 தேசிய நூலக வார விழா – 2015

### 7.8.4. உலக புத்தக உரிமை தினம்

உலகப் புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர் திரு.வில்லியம் ஷேக்ஸ்பியர் அவர்களின் பெருமையினை இன்றைய தலைமுறையினர் நினைவு கூர்ந்து போற்றத்தக்க வகையில், 1995 ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, திரு.வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்த நாளான ஏப்ரல் 23 ஆம் நாளினை ‘‘உலக புத்தக உரிமை தினமாக’’ ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நூலகங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.



படம் – 80 உலக புத்தக உரிமை தினம்
கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்

## 7.9. விருதுகள்

### 7.9.1. முனைவர் எஸ். ஆர் அரங்கநாதன் விருது

நூலகங்களில் நூல்களை பாதுகாப்பதுடன் வாசகர்களுக்கான வசதியினையும் அளிப்பதற்கு அர்பணிப்புடன் செயலாற்றும் நூலகர்களின் பணியை அங்கீகரிக்கும் விதமாக ஆண்டுதோரும் நூலகர்களுக்கு ரூ.2,000/– பணமுடிப்புடன் வெள்ளிப் பதக்கம் அடங்கிய ‘‘முனைவர் எஸ். ஆர் அரங்கநாதன் விருது’’ வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

### 7.9.2. சிறந்த நூலகங்களுக்கு நினைவுப் பரிசு

உறுப்பினர் சேர்க்கையினை அதிகரித்தல், புரவலர் சேர்க்கை மற்றும் இலவச காலிமனைகள், கட்டடங்கள் மற்றும் தளவாடங்கள் போன்ற நன்கொடைகள் பெறும் மாவட்ட மைய நூலகங்கள், கிளை நூலகங்கள் மற்றும் ஊர்ப்புற நூலகங்களின் சிறப்பான சேவையினை அங்கீகரித்து அந்நூலகங்களுக்கு 2012–13 முதல் ஆண்டுதோறும் நினைவுப் பரிசாக “கேடயங்கள்” வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

### 7.9.3. கொடையாளர் / பெரும்புரவலர் / புரவலர்களுக்குப் பட்டயங்கள்

தமிழகத்திலுள்ள பொது நூலகங்களின் வளர்ச்சியில் பொது மக்களும் பங்குகொள்ளும் வகையில், நூலகங்களுக்கு ரூ.1,000/–, ரூ.5,000/– மற்றும் ரூ.10,000/– நன்கொடையாக அளிப்பவருக்கு, முறையே புரவலர், பெரும் புரவலர் மற்றும் கொடையாளர் சான்றிதழ்

(பட்டயம்) வழங்கப்படுகிறது. இந்த நன்கொடைகள் வங்கிகளில் வைப்பு நிதியில் வைக்கப்பட்டு, அதன் வட்டியானது, நூலகங்களுக்கு பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மாநிலம் முழுவதும் உள்ள நூலகங்களில் தற்போது வரை 1,14,814 புரவலர்கள் இணைந்துள்ளனர்.

## 7.10. வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு

2016–17 நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.92.52 கோடி பொது நூலக இயக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7.11. முடிவுரை

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று கல்வி எனில், அக்கல்வியின் மூலம் ஏற்படும் அறிவுத் தாகத்தின் காரணமாக புத்தகங்கள் மீது நாட்டம் கொள்வதால் உருவாவது நூல்கள் வாசிப்புப் பழக்கமாகும். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப, வாசகர்களின் நூலகச் சேவையிலும் நவீன மாற்றங்கள் புகுத்தப்பட்டு, மனிதனும் புத்தகமும் ஒன்றுதான் எனும் நோக்கில், மனிதர்களைப் பாதுகாப்பது போல் நூல்களை மிகச்சிறப்பாக பேணிக்காப்பது நமது தலையாய கடமை என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சூளுரைக்கேற்ப "தமிழ்நாடு தொலை நோக்குப் பார்வை 2023"–ஐ நிறைவேற்றி, தமிழகத்தை தலைசிறந்த முன்னோடி மாநிலமாக மாற்றுவதில் பொது நூலகத் துறையும் பெரும்பங்கு வகிக்கிறது.

# 8. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 8.1. முன்னுரை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் கல்வித் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தை 2012ஆம் ஆண்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகத் தரம் உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். கடந்த ஐந்தாண்டுகளாக இந்நிறுவனம், ஆசிரியர்களின் திறன் மேம்பாடு, மொழி, கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடங்களில் கற்பித்தல் உத்திகளை உட்புகுத்திக் கற்றலை வளப்படுத்துதல், நடைமுறையில் பின்பற்றப்படும் பாடத்திட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களைப் பரிந்துரைத்தல், பாடநூல்களைச் செறிவூட்டல் பாடங்களை நடைமுறைத் தேவைக்கேற்ப மாற்றியமைத்தல், பள்ளிக் கல்வியின் முழுமையான வளர்ச்சியினை உறுதி செய்திடும் வகையில், மதிப்பீடு மற்றும் கல்வி ஆய்வுகள் நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. தரம் உயர்த்தப்பட்ட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியர்களின் பணிமேம்பாடு மற்றும் மாணவர்களின் தரமான கற்றலை உறுதிப்படுத்துவதோடு மட்டுமின்றி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு 2023இன்படி தமிழகத்தை இந்தியாவின் அறிவுசார் தலைநகரமாகவும் சமூகப்

பொருளாதார நிலையில் முன்மாதிரி மாநிலமாகவும் உருவாக்கும் இலக்கு நோக்கி இயங்கி வருகிறது.

## 8.2. இலக்கு

தமிழகப் பள்ளிக்கல்வித்துறையை இந்தியாவில் முதன்மை இடத்தில் நிலைநிறுத்துவதற்கென மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கணினிவழிக் கற்றல் எனும் தளத்திலிருந்து மெய்நிகர் வகுப்பறைகள், கருத்துப் பரிமாற்ற அடிப்படையிலான ஆசிரியர் பயிற்சி, கணினிசார் கற்றல் வளங்கள் கொண்ட வகுப்பறை மேம்பாடு போன்ற தொழில்நுட்ப அடிப்படையில் தரம் உயர்த்தி நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்து மாணவர்கள் புரிந்து கற்றுக்கொள்ளுமாறு தமது இலக்கினை மறுவரையறை செய்துள்ளது.

## 8.3. நோக்கங்கள்

- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகள், பின்பற்றப்படும் பாடப்பொருள், கல்வியாளர்கள் குறித்து அடிநிலை ஆய்வின் வழியாக அளந்தறிதல் மற்றும் மதிப்பிடல்

- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் கணினி சார் தளத்தில் கற்பித்தலை வழங்கி பயிற்சியளிப்பதற்கு ஏற்ற வகையில் தேவைக்கேற்ப உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

- பயிற்சியளிக்கத் தேவையான பாடப்பொருளைக் கணினிமயமாக்கி, ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுவிப்போர் அனைவருக்கும் தருதல்.

- மாநிலம் முதல் ஒன்றியம் வரையிலும், தொடக்கப்பள்ளி முதல் மேனிலை பள்ளி வரையிலும் பயிற்சியளிக்கத் தேவையான பெட்டகங்களைத் திட்டமிட்டு உருவாக்குதல்.

- கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களைக் கணினிவழிக் கற்பித்தலுக்கு உகந்ததாக வடிவமைத்தல்.

- தேசிய கல்விஅமைப்புகள் எதிர்பார்க்கும் தரஅளவுகளுக்கு நிகராகக் கற்றல் அடைவுகளைத் தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் மேம்படுத்த அனைவருக்கும் கல்வித் திட்ட இயக்ககத்தின் பங்களிப்போடு முயற்சி செய்தல்.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தொலைநோக்கு 2023இன் இலக்கை அடைய அடைவுத் தேர்வுகளின் அடிப்படையில் அனைவருக்கும் இடைநிலைக்கல்வி இயக்ககத்தின் பங்களிப்புடன் இடைநிலை மற்றும் மேனிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்திப் பாடத்திட்டத்தையும் பாடநூல்களையும் மறுசீரமைத்தல்.

- அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணித்திறன் மேம்படத் தேவையான பணியிடைப் பயிற்சிகளை வழங்குதல்.

- ஆசிரியர்களது புதுமையான கற்றல் கற்பித்தல் உத்திகளை அடையாளங்கண்டு அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவற்றைப் பொது வலைத்தளம் மூலம் பரவலாக்குதல்.

- தொடர் பள்ளிப் பார்வைகளின் வாயிலாக ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டிற்கு உதவுதல்.

- மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் வாயிலாகப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் பயிற்சி நிகழ்வுகளை மேற்பார்வை செய்தல்.

- கல்வி ஆய்வுகளை மேற்கொண்டு அதனடிப்படையில் குழந்தைகள் நலனுக்கேற்ற கொள்கை முடிவுகளை எடுக்க அரசுக்குத் துணைபுரிதல்.

- தரமான கல்வியை வழங்கிட சர்வதேச, தேசிய அமைப்புகளான ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிதியம், தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசியக் கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மைப் பல்கலைக்கழகம், கலை மற்றும் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மைய நிறுவனம், மண்டல ஆசிரியர் கல்வி நிறுவனம்–மைசூரு, மண்டல ஆங்கில நிறுவனம், தென்னிந்தியா–பெங்களூரு மற்றும் பிற அரசு நிறுவனங்களின் உதவியோடு பணிபுரிதல்.

## 8.4. தரமான பணிமுன் பயிற்சி

### 8.4.1 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் தரமான ஆசிரியர்களை உருவாக்குதல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சிறந்த கற்றல் சூழலை உருவாக்கிப் பயிற்சி ஆசிரியர்களது ஆற்றலை மேம்படுத்தும் வண்ணம், மொழி ஆய்வகம், இடைவினை புரியும் வெண்பலகை போன்ற தொழில்நுட்பம் உட்புகுத்தப்பட்ட கட்டமைப்பு வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. பயிற்சி


ஆசிரியர்கள், கற்பித்தல் வழிமுறைகளில் நிகழ்ந்துவரும் மாற்றங்களையும், குழந்தை மைய அணுகுமுறைகளையும், கணினிசார் பாடப்பகுதிகளையும் புரிந்துகொள்ளும் வண்ணம் பயிற்சியளிக்கப்படுகின்றனர். மேலும், கல்வி முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் களப்பயணம் மேற்கொண்டு வாழ்க்கையோடு தொடர்புடைய பல அனுபவங்கள், பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதால் கற்றலை வலுவூட்ட முடிகிறது.

பயிற்சிக் காலத்தில், பயிற்சி ஆசிரியர்களை மருத்துவ முகாம் மற்றும் யோகா பயிற்சிகளில் ஈடுபடச்செய்தல் மூலம் அவர்களை நல்ல உடல்தகுதியுடனும் மனஆரோக்கியத்துடனும் இருக்க வழிவகை செய்யப்படுகிறது. மரம் நடுதல், தூய்மையான சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதன் மூலம் பயிற்சி ஆசிரியர்கள் தங்களது நிறுவனம் குறித்த பெருமித உணர்வைப் பெறுகின்றனர். அறிவியல் வாரம் கொண்டாடுவதால் பயிற்சி ஆசிரியர்கள் மட்டுமின்றி, அருகில் உள்ள பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் புதுமையான அறிவியல் கற்பித்தல் வழிமுறைகளை அறிந்துகொள்கின்றனர். இது பயிற்சி ஆசிரியர்களின் அறிவியல் மனப்பான்மையையும் மேம்படுத்துகிறது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கீழ் தமிழ்நாட்டில் 32 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், 7 ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனங்கள், 9

அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், **34** அரசுதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் **321** தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் என மொத்தம் **403** ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் தொடக்கக்கல்வி பட்டயப் படிப்பை வழங்கி வருகின்றன.

வரைபடம் – **50** தொடக்கக்கல்வி பட்டயப் படிப்பை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை – (2016–17)




### 8.4.2 ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை

தமிழகத்தின் இலக்கான மின்ஆளுகையைச் செயல்படுத்தும் நோக்கில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், **2013–14** முதல் தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இணையவழி ஒற்றைச்சாளர முறை மாணவர் சேர்க்கையை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்நடைமுறை,

தொலை தூரத்திலிருந்து தலைநகருக்கு மாணவர்கள் வந்து செல்ல வேண்டிய சிரமத்தைத் தவிர்த்துள்ளது. மாணவர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள கலந்தாய்வு மையங்களுக்குச் சென்று தாங்கள் பயில விரும்பும் நிறுவனத்தைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வரும் இப்புதுமையான நடைமுறையின் மூலம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பெற்றோருக்கு எவ்வித நிதிச்சுமையும் இன்றி இதுவரை 8000 மாணவர்கள் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

**8.5 வகுப்பறையோடு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கின்படி வகுப்பறைகளில் தொழில்நுட்பத்துடன் கூடிய கற்பித்தலை இணைத்து, கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளில் தரத்தினை மேம்படுத்தி, ஒட்டுமொத்த கல்விமுறையினைக் கணினிவழிக் கற்றல் தளமாக மாற்ற அரசு திட்டமிட்டுள்ளது. இத்தகைய தொழில்நுட்பத்தோடு இணைந்த கற்றலை மேம்படுத்தும் பொருட்டு, பள்ளிகளில் நடைபெறும் கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் அனைத்துக் கூறுகளையும் உட்புகுத்த பல திட்டங்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வகுத்துள்ளது.



386-4-22a

### 8.5.1. ஒலிக்குறுந்தகடுகள் வழியாகக் கற்றல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள மனப்பாடச் செய்யுள்களை மாணவர்கள் அடிக்கடி கேட்டு, புரிந்துகொண்டு நினைவில் கொள்ள ஏதுவாக ஒலிக்குறுந்தகடுகளை உருவாக்கியுள்ளது. அனைத்து அரசுப் பள்ளிகளிலும் டிவிடி இயக்கு கருவி வழங்கப்பட்டுள்ளதால், ஒலிக் குறுந்தகடுகளைப் பயன்படுத்தி மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலப் பாட மனப்பாடச் செய்யுள்களை எளிதில் நினைவிலிருத்த உதவுகிறது. இவ்வொலிக்குறுந்தகடுகள் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் வழியாக வழங்கப்பட்டுள்ளன. இப்புது முயற்சியினால் அரசுப் பள்ளிகளில் பயிலும் **15** இலட்சம் மாணவர்கள் மனப்பாடச் செய்யுள்களை எளிதாகவும் மனமகிழ்வுடனும் கற்றுப் பயன்பெற்றுள்ளனர்.

### 8.5.2. ஆங்கிலம் வாசிக்கும் திறனை மேம்படுத்துவதற்கான ஒலிநூல்கள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மொழிப்புலம் மூன்றாவது வகுப்பில் இருந்து எட்டாவது வகுப்பு வரை உள்ள ஆங்கிலப் பாடநூல்களை ஒலிநூல்களாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்நூல்கள்

மாணவர்கள் ஆங்கிலப் பாடப்புத்தகத்தை உரிய ஒலிப்புடன் எளிதாக வாசிக்க உதவும். மேலும், தற்போது மூன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கான ஒலிநூல்கள் தயாராக உள்ளன.

### 8.5.3. காணொலி வழிக் கற்றல்

கணினிப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் நிபுணத்துவத்தைக் கொண்டு நடைமுறையில் உள்ள கற்றல் வளங்களை மேம்படுத்துவதற்காக மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கல்விக்கான 500 காணொலிகளை நடுநிலை மற்றும் உயர்நிலை வகுப்புகளுக்கெனத் தயாரித்துள்ளது. இதற்கென ரூ.10இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், கருத்துச் செறிவுள்ள 400ஆங்கிலக் காணொலிகளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 240 அரசுப்பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு தமிழாக்கம் செய்துள்ளது.

### 8.5.4. தொடக்க வகுப்புகளுக்கான தமிழ் காணொலிப் பாடல்கள்

தொடக்க நிலையில், மகிழ்வுடன், உடல் இயக்கத்துடன், ஆர்வத்துடன் ஈடுபாட்டுடன், மாணவர்கள் தாமாகக் கற்கத் துணை செய்பவை பாடல்கள். எனவே ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையிலான தமிழ்ப் பாட நூல்களில் உள்ள பாடல்கள், செய்யுள்கள் போன்றவை அனைத்தும் இசைக்கோர்ப்பு செய்யப்பட்டு தமிழக அரசுப்பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கேற்புடன்

ஒலிக் குறுந்தகடாகவும் காணொலிக் குறுந்தகடாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் விரும்பும் வகையில் எளிய சந்த நயங்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ள இப்பாடல்கள், தமிழக அரசுப்பள்ளி மாணவர்கள் பாடல்கள், செய்யுள்களை ஏற்ற முறையில் உச்சரிக்கவும், பொருளறிந்து பாடலைக் கற்றுக் கொள்ளவும் கற்றலில் ஆர்வத்தை மிகுவித்து மகிழ்வுடன் கற்கவும், கற்றதை எப்போதும் நினைவில் வைத்திருக்கவும், அரசுப் பள்ளிகளில் அவர்களைத் தக்க வைக்கவும் துணை செய்யும்.

### 8.5.5. சைகை வழியாகக் கற்பித்தல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன மொழிப்புலப் பணிகளுள் ஒன்றாகத் திண்டுக்கல் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து தமிழ்மொழி எழுத்துகளைத் தெளிவாகவும் முறையாகவும் உச்சரிக்கும் திறனைச் சைகை வாயிலாக மாணவர்களிடம் மேம்படுத்துவதற்கென ஆய்வு ஒன்றை நிகழ்த்தியது. மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் சைகை வாயிலாக எழுத்தொலிகளை உணர்ந்து விரைவில் உச்சரிப்புத் திறனை மேம்படுத்திக் கொண்டதுடன் கற்றதை நீண்ட நாள்கள் நினைவில் வைத்திருப்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டது. இக்காணொலிப்பதிவு, கற்றல் செயல்பாட்டில் மாணவர்கள் நேரடியாக ஈடுபடும்போது மகிழ்வுடன் மிகச்சிறப்பாகக் கற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துகிறது. இக்காணொலி, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு எழுத்துகளை எப்படி உச்சரிப்பது என்பதைக் கற்றுக் கொடுப்பதற்கும், அதனை எவ்வாறு மதிப்பிடுவது

என வழிகாட்டுவதற்கும் உதவும். சைகை வாயிலாகத் தமிழ் எழுத்துகளைக் கற்பித்தல் என்னும் புதுமையான, வெற்றிகரமான உத்தி அனைத்து ஆசிரியர்களுக்கும் பரவலாக்கப்பட உள்ளது.

### 8.5.6. புதுமையான உத்திகளைக் காணொலிப்படுத்துதல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தமிழக அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைகளில் செயல்படுத்தும் புதுமையான கற்றல் கற்பித்தல் உத்திகளை அடையாளம் கண்டுள்ளது. 1520 ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட கற்பித்தல் உத்திகளில் சிறந்த 50 உத்திகள் தெரிந்தெடுக்கப்பட்டன. ஆசிரியர்களின் அத்தகு புதுமையான, சிறப்பு வாய்ந்த கற்பித்தல் முறைகள் காணொலிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு பரவலாக்கப்பட உள்ளன.




படம் – 81. புதுமையான உத்திகளைக் காணொலிப்படுத்துதல்

### 8.5.7 ஆங்கில ஒலியன்களுக்கான காணொலி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆங்கில ஒலியன்களைக் காணொலி மூலம் கற்பிக்கும் முறைக்கான குறுந்தகடு வெளியிடப்பட்டது. ஆங்கில மொழியில் எழுத்திற்கும், உச்சரிப்பிற்கும் நேரடித் தொடர்பு இல்லை. ஆங்கில மொழிக்கற்றலானது ஒலியன்களை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும். மொழியை உச்சரிக்கும் முறையை மாணவர்கள் சரியாக அறிந்துகொண்டால் சிறப்பான தகவல் தொடர்புத் திறனை பெறமுடியும். ஆங்கில மொழித்திறன்மிக்க அரசுப் பள்ளி ஆசிரியர்களால் 43 அலகுகள் அடங்கிய இரண்டு குறுந்தகடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இதற்காகத் தொடர் பணிமனைகளை நடத்தித் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்காகக் கட்டகம் ஒன்றையும் உருவாக்கியது. இதன் தொடர்ச்சியாக அனைத்து மாணவர்களும் ஆங்கிலத்தை ஒலியன்களின் அடிப்படையில் கற்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்த இரண்டு குறுந்தகடுகளும் உருவாக்கப்பட்டு அனைத்து அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டன.

**8.5.8 விளையாட்டுப் பயிற்சிக்கான காணொலி**

மாணவர்கள் விளையாட்டுத் திறன்களைக் கற்று, தொடர்ந்து அவற்றை மேம்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் முத்திரைப் பதிக்க வேண்டும். களத்தில் தகுதியான பயிற்சியாளரின் வழிகாட்டுதலுடனும் உரிய அறிவியல் உத்திகளுடனும் மாணவர்கள் தங்கள் திறமையைக் வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். எனவே, மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை உறுதி செய்ய வேண்டிய அரசின் பொறுப்பை முன்னெடுத்துச் செல்லும் விதமாக சர்வதேச விளையாட்டான கைப்பந்து, இந்திய விளையாட்டான கோ–கோ, ஆகிய இரண்டையும் தலா ஒருமணிநேரம் விளக்கும் வகையில் குறுந்தகடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசுப் பள்ளிகளில், மேற்குறிப்பிட்ட விளையாட்டுகளில் திறன்பெற்ற, தகுதிவாய்ந்த பயிற்சியாளர்களின் உதவியுடன், உரிய முறையில், அசைவூட்டுப்படங்களின் (Animated) வழியாக விளையாட்டின் அடிப்படைத் திறன்கள் விளக்கப்பட்டுள்ளன. தமிழில், விளையாட்டுப் பயிற்சிக்கென குறுந்தகடு வெளிவருவது இதுவே முதல் முறையாகும். இதன் வழியாக 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 60 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவர்.


### 8.5.9. பள்ளிகளில் கணினி உதவியுடன் கற்றல்

தொழில்நுட்ப உதவியுடன் கற்றலை மேம்படுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் விதமாக 822 நவீன கணினிகள் மற்றும் கணினிசார்ந்த உபகரணங்களுடன் கூடிய கணினி உதவியுடன் கற்கும் மையங்களை அனைவருக்கும் கல்வி இயக்கம் நிறுவியுள்ளது. இந்த மையங்கள் அனைத்து வளங்களையும் கற்போருக்கு அளித்து இளம் வயதிலேயே கணினியைத் திறமையுடன் பயன்படுத்துபவர்களாக அவர்களை உருவாக்குகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பாடம் சார்ந்த கேட்பொலி, காணொலிக் குறுந்தகடுகள் மற்றும் ஆங்கில ஒலியன்களைக் கற்பிக்கும் குறுந்தகடுகளைப் பயன்படுத்தி மாணவர்கள் திறமையாகக் கற்கின்றனர். நடுநிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் கற்கும் மையங்களை உருவாக்குவதற்கென அரசு ரூ9.48 கோடி வழங்கியுள்ளது.

### 8.5.10. பட உட்கிரகிப்பு தொழில்நுட்ப செயலி (Image Recognition Application Technology)

பட உட்கிரகிப்பு தொழில்நுட்ப செயலி, அலைபேசி தொழில்நுட்பத்தில் நவீன பயன்பாடாகவும் வளர்ந்துவரும் தொழில்நுட்பமாகவும் உள்ளது. இதனை, கல்வியுடன்

இணைக்கும்போது, கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் அனைத்து மாணவர்களையும் கவரும் வண்ணம் சிறப்பாக அமையும். மாணவர்கள் கற்கும் முறையில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12 மற்றும் 10ஆம் வகுப்பு பாடப்பகுதிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட உட்கிரகிப்பு தொழில்நுட்ப செயலியினை மாணவர்களுக்காகத் தொடக்கி வைத்தார். மாணவர்கள் இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தங்களின் பாடப்புத்தகங்களிலுள்ள பாடப் பொருளைக் கற்கலாம். பட உட்கிரகிப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் படங்கள் வாயிலாகப், பாடப்பொருள் சார்ந்த முப்பரிமாண படங்கள் / இரு பரிமாண பாடப்பொருள், பதிவு செய்யப்பட்ட ஆசிரியரின் வகுப்பறை செயல்பாடுகள் போன்றவற்றை எந்த இடத்திலும், எந்நேரத்திலும் பெறஇயலும். கற்றல் பாடப்பொருளானது, தற்போது நடைமுறையிலுள்ள முறையினைப் பாதிக்காத வகையில், பாடப்புத்தகங்களுடன் இணைக்கப்பட உள்ளது. இந்த கணினிப் பாடப்பொருளினை மாணவர்கள் தேவைப்படும்போது, புதுப்பித்துக் கொள்ள இயலும்.



படம் – **82.** பட உட்கிரகிப்பு தொழில்நுட்ப செயலி

### 8.5.11. கல்விச் செயற்கைகோள் வழியாகப் பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநிலம் முழுவதும் காணொலிக் கலந்துரையாடலுக்கு உதவும் வகையிலான **58** கல்விச் செயற்கைகோள் அலகுகளை உருவாக்கி அனைவருக்கும் கல்வி இயக்ககத்தில் தகவல் பரிமாற்ற மையத்தை நிறுவியுள்ளது. இம்மையம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கவும், கற்றல் கற்பித்தலுக்கு உதவவும், ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவிலான கல்வி நிகழ்வுகளை மேற்பார்வை மற்றும் மீளாய்வு செய்யவும் கல்வி அலுவலர்களுக்குத் துணை நிற்கிறது. இதனால் தரமானகல்வி மேம்படுத்தப்பட்டு நிலைநிறுத்தப்படுகிறது. இதன்

மூலம் மனிதஆற்றல் சேமிக்கப்படுவதோடு தகவல் பரிமாற்றத்தில் ஏற்படும் இழப்புகளும் தவிர்க்கப்படுகின்றன. இந்தக் கல்விச் செயற்கைக்கோள்வழி கற்கும் வசதிகள் 2.54 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

## 8.5.12. தகவல் தொழில்நுட்ப உதவியுடன் ஆசிரியர்களின் திறனை மேம்படுத்துதல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநிலம் முழுவதும் உள்ள 1 முதல் 12 வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்குத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சியினை வழங்கியது. ஆசிரியர்கள் தகவல் தொழில்நுட்பத்திறனைத் தங்கள் வகுப்பறையில் பயன்படுத்த இப்பயிற்சி உதவியது. கணினி வன்பொருள் பயன்பாடு மற்றும் கல்விசார் மென்பொருள் செயலிகள் குறித்து இப்பயிற்சியில் விளக்கப்படுகிறது. இப்பயிற்சியின் விளைவாக 1650 ஆசிரியர்கள் கணினிசார் கற்றல் வளங்களைத் தாங்களே உருவாக்குவதற்கும், திருத்தம் மற்றும் பதிவேற்றம் செய்வதற்குமான திறனைப் பெற்றுள்ளனர்.



படம் – 83. ஆசிரியர்களுக்கான பயிற்சி

## 8.5.13. தமிழ் விக்கிப்பீடியாவில் ஆசிரியர்களின் பங்களிப்பு

இணையம் மூலம் தகவல் திரட்டுபவர்களுக்குக் கட்டற்ற கலைக் களஞ்சியமாக விக்கிப்பீடியா விளங்கிவருகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து 1650 அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு இணையத்தில் தமிழ் கட்டுரைகளை எழுதும் திறனை வளர்க்க 3 நாள் பயிற்சியினை அளித்தது. விக்கிப்பீடியா இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான தலைப்புகள் தமிழ் இணையக் கல்வி கழகத்தால் வழங்கப்பட்டன. பழமையான தமிழ் பண்பாட்டிலிருந்து 21–ஆம் நூற்றாண்டு அறிவியல் காலம் வரையிலான பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய 400 தமிழ்

கட்டுரைகள் ஆசிரியர்களால் எழுதப்பட்டு தமிழ் விக்கிப்பீடியா இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 8.6 கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் மறுசீரமைப்பு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் வகையில் இணையவழிக் கற்றலைப் பயன்படுத்தி, பாடக்கருத்துகளைப் புரிந்துகொள்வதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம், பள்ளி முன்பருவக் கல்வி பெறும் குழந்தைகள், அனைத்துக் கற்றல் களங்களிலும் வளர்ச்சி பெறும் வகையிலும் பள்ளிக் கற்றலுக்கு அவர்களைத் தயார் செய்யும் வகையிலும் வயதுக்கேற்ற, பொருத்தமான திறன் மேம்பாட்டுச் செயல்களை உள்ளடக்கிய, மழலையர் பள்ளிப் பாடத்திட்டத்தை வடிவமைத்துள்ளது.

மேலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள பாடநூல்களை வாழ்வியல் சூழலோடு இணைத்துப் பயனுள்ளதாக்கும் வகையில் தொடர்ந்து சீரமைத்து மேம்படுத்தி வருகிறது. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுச் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த ஆசிரியர்களை ஊக்கப் படுத்தும் வகையில் பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நாட்டின் சமூக மற்றும் சுற்றுப்புற மாறுதல்கள் குறித்த கருத்துகள் பாடநூல்களில்

சேர்க்கப்பட்டுள்ளன. எதிர்வரும் தொழில் நுட்பவழிக் கற்றல் முறைகளை ஏற்றுப் பின்பற்றக் கூடியவர்களாக ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் ஆசிரியப் பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டமும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

### 8.6.1 மழலையர்க்கல்வி பாடத்திட்டம்

மழலை முன்பருவமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இப்பருவம் வாழ்க்கை முழுவதற்குமான திறன்களை வளர்ப்பதற்கான அடித்தளத்தைக் கட்டமைக்க வேண்டிய காலகட்டமாகும். மனப்பான்மைகள் மற்றும் விழுமியங்களுடன் கற்கும் ஆர்வமும் இப்பருவத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது. இளம்வயது குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு, வாய்ப்புகள் மற்றும் அனுபவங்களே உடல், மன, சமூக, மனவெழுச்சி மற்றும் பள்ளிக்கு ஆயத்தப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்தும். இவர்களது உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்துத் தேவையானது உள–சமூக, கல்விவளர்ச்சியுடன் ஒருங்கிணைந்து உள்ளது. இக்குழந்தைகளுக்கான கலைத்திட்டமும் கற்பித்தல் முறைகளும் குழந்தைகளின் தேவைகள், பண்புநலன்கள், பல்வேறு கற்றல் களங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். இவற்றை அடையும் நோக்கில் மழலையர் பாடத்திட்டத்தை வடிவமைக்கக் கல்வியாளர்கள், சமூகநல ஆர்வலர்கள், குழந்தை உளவியலாளர்கள் மற்றும்

மழலையர் பள்ளிகளைச் சார்ந்த வல்லுநர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினரால் வரைவுப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது. இவ்வரைவுப் பாடத்திட்டம், www.tn.gov.in/schooleducation என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**8.6.2 பாடநூல்களைத் தரம் உயர்த்துதல் மற்றும் புதுப்பித்தல்**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான பாடத்திட்டத்தையும் பாடநூல்களையும் உருவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் தரம் உயர்த்துதல் போன்றவற்றைத் தொடர்ந்து செய்து வருகிறது. இச்செயல்முறை, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மேற்கொள்ளப்பட்டு ஒன்று முதல் ஒன்பது வகுப்பு வரையிலான பாடநூல்கள் மூன்று பருவங்களுக்கும் திருத்தம் செய்யப்பட்டு, சீரமைக்கப்பட்டு வருகின்றன. மக்களிடையே செல்வாக்குபெரும் தற்கால நிகழ்வுகள் குழந்தைகளின் அடிப்படை அறிவை மேம்படுத்தும் வகையில் முப்பருவப் பாடநூல்களில் சேர்க்கப்படுகின்றன. அரசால் வழங்கப்பட்டுள்ள மடிக்கணினிகளையும் நவீன தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி இணையதளங்கள்வழி மாணவர்களின் கற்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பாடநூல்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

வளர்ந்துவரும் சமூகத் தேவைகளுக்கேற்ப மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வருவாய்த் துறையின் நிதி உதவியுடன் பேரிடர் விழிப்புணர்வு தொடர்பான கருத்துகளை 7 முதல் 10ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடநூல்களில் இணைத்துள்ளது. இது, பேரிடர் மற்றும் நெருக்கடி காலங்களில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள மாணவர்களுக்கு உதவும்.

### 8.6.3 சிறப்புப் பாடங்களுக்கான பாடத்திட்டம்

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுடன் கூடிய பள்ளிப்பாடநூல்களில் கல்வி இணைச்செயல்பாட்டுப் பகுதிகளான ஓவியம், உடல்நலம் மற்றும் உடற்கல்வி போன்றவை இணைக்கப்பட்டுள்ளன. அழகுணர்ச்சியும் பணி அனுபவமும் வளரும் மாணவர்களின் படைப்பாற்றலுக்கு முதன்மைத் தளங்களாகவுள்ளதால் கல்விச் செயல்களத்தில் கலைத் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும், ஒவ்வொரு களத்திலும் மாணவர்களின் திறன்களைத் தனித்து அடையாளம் காணும் வகையிலும் கற்றலின் ஒவ்வொரு நிலையிலும் கலைப்பாடக் கருத்துகளை உட்புகுத்த வேண்டியது அவசியமாகிறது. இவற்றை நிறைவேற்றும் நோக்கில் தற்காலத்திற்கு ஏற்றவாறு உடற்கல்வி, இசை, ஓவியம் மற்றும் தையல் போன்றவற்றில் பள்ளி மாணவர்களின் தனித் திறன்களை மேம்படுத்தும் சிறப்புப் பாடத்திட்டத்தை, சார்ந்த

வல்லுநர்களின் உதவியோடு மாற்றியமைத்து வரைவுப் பாடத்திட்டத்தை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,உருவாக்கியுள்ளது. இது மாணவர்களின் படைப்பாற்றலை வளர்ப்பதோடல்லாமல், ஒய்வு நேரத்தை அவர்கள் மனமகிழ்ச்சியுடனும் பயனுள்ள வகையிலும் செலவிட உதவும்.

### 8.6.4 கல்வியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு, தொடக்கக்கல்வி முதல் மேனிலைக்கல்வி வரை, கணினிவழிக் கற்றல்முறைகளை உள்ளடக்கிய கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தொடர்ந்து மேம்படுத்தி, சீரமைத்து வருகிறது. இச்சீரமைப்பு வகுப்பறைச் சூழலில் கணினிவழிக் கற்றலுக்கு இடமளித்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றுக் கற்கும் வாய்ப்புகளைப் பரவலாக்கும். இக்குழுவின் கூட்டத்தில் தற்போதைய பள்ளிக்கல்வி முறையை மேம்படுத்திட முடிவெடுக்கப்பட்டு, இதற்கென தமிழ்நாடு பள்ளிக் கலைத்திட்ட வடிவமைப்பு மேம்பாட்டுக்குழு, மேனிலைக் கல்விப் பாடத்திட்ட சீரமைப்புக்குழு மற்றும் தேர்வுச் சீர்திருத்த மேம்பாட்டுக்குழு ஆகிய மூன்று துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 8.6.5 தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சிக்கான பாடத்திட்டம்

பள்ளிக் கல்வியில் ஏற்படும் மாற்றங்களை ஆய்ந்தறிந்து மாணவர்களது பல்வகையான கற்றல் பாங்குகளினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வருங்கால ஆசிரியர்களை உருவாக்கிடும் வகையில் ஆசிரியர் கல்வி இருத்தல் வேண்டும். ஆசிரியர்களை, இன்றைய சமூகச் சூழலுக்கு ஏற்பப் பணிபுரிய ஆயத்தப்படுத்த வேண்டும். இதற்கென அரசு, செயல்வழிக்கற்றல், படைப்பாற்றல்வழிக் கற்றல், முப்பருவமுறை, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு போன்ற தரமேம்பாட்டிற்கான முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது. ஆசிரியர், அறிவைக் கொடுப்பவர் என்ற நிலையிலிருந்து, மாணவர்களின் அறிவைக் கட்டமைக்க உதவும் ஏதுவாளர் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கற்பிக்கும் முறையில் உலகெங்கிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பள்ளிகளிலும் நிகழ்த்தக் கணினி, இணையம் வாயிலாகக் கற்பிக்க ஆசிரியர்களை ஆயத்தப்படுத்த வேண்டியுள்ளது. இவ்விலக்கினை அடைய, தொடக்கக்கல்வி பட்டயப் பயிற்சி பாடத்திட்டத் தயாரிப்புக்குழு அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட புதிய பாடத்திட்டம், கற்பித்தல் உத்திகளில் தொழில்நுட்ப உள்ளீடுகளுடன் கல்விச் செயல்களை மேற்கொள்வதற்கான மகத்தான வாய்ப்பை ஆசிரியர் பயிற்றுநர்களுக்கும், மாணவ ஆசிரியர்களுக்கும் அளிக்கிறது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வரையறுக்கப்பட்ட தொலைநோக்கை அடையும் வகையில் தொடக்கக்கல்விப் பட்டயப் பயிற்சிப் பாடத்திட்டத்தை இந்நிறுவனம் சீரமைத்துள்ளது.

### 8.6.6 தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கான பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள்

தமிழ் மொழிக்கற்றலை மேம்படுத்தும் வகையில் அயல் நாடுகளில் வசிக்கும் தமிழ் கற்கும் ஆர்வமுள்ளவர்களுக்காகப் பல்வேறு முன்முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. கருத்துச் செறிவுமிக்க தகவல் பரிமாற்றச்சூழல், மொழி கற்பதற்கான அடிப்படைத் தேவையாகும். இக்கருத்துச் செறிவு என்பது பாடநூல்கள், கற்போர் தேர்ந்தெடுக்கும் உரைகள் மற்றும் இணையவழி கற்றல் வளங்கள் ஆகியவற்றைக் குறிக்கும். மாணவர் விரும்பக்கூடிய, வளர்ச்சி நிலையிலான, ஆர்வத்தைத் தூண்டக்கூடிய கற்றல் பொருள்கள் போதுமான அளவில் இல்லை. இத்தேவையை உணர்ந்து, தமிழ் இணையக் கல்விக்கழகத்துடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இணைந்து உலகெங்கிலும் உள்ள தமிழ் கற்போரின் தேவைகளை ஈடுசெய்யும் வகையில் பாடத்திட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. இந்நோக்கத்தை நிறைவேற்ற உலகளவில் தற்போது மொழிகற்கப் பயன்படுத்தப்பட்டுவரும் கற்றல்முறைகள், மாணவரின் கற்றல் நிலை, தேவை, ஆர்வம் போன்றவை குறித்த

புரிதல் அவசியமாகிறது. எனவே, அமெரிக்க ஐக்கிய நாடுகள்(USA), மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் தமிழ் மொழிப் பாடத்திட்டங்கள் ஒப்பாய்வு செய்யப்பட்டு தமிழ் கற்கத் தரமான மின்மிய பாடத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 8.6.7 அனைவருக்கும் கல்வி இயக்கப் பயிற்சிகளுக்கான கையேடுகள் தயாரித்தல்.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் உரிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி பள்ளிப் பாடங்களைக் கற்பிக்கும் திறனை மேம்படுத்தும் பொருட்டு அனைவருக்கும் கல்வி இயக்கம் நடத்தவுள்ள பயிற்சிகளுக்கான கையேடுகளைத் தயாரித்து வழங்கும் பணியில் உறுதுணை புரிகிறது. இந்நிறுவனம், மாநில அளவிலான அடைவுத்தேர்வு முடிவுகளின் அடிப்படையில் தேவைகளுக்கேற்ப 2016–17ஆம் கல்வி ஆண்டிற்கான தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கான பணியிடைப் பயிற்சிகளைத் திட்டமிட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஆசிரியர்களின் பணித்திறன் தரமேம்பாட்டிற்கென தொடக்க நிலை வகுப்புகளுக்கு 7 பயிற்சி கட்டகங்களும், தொடக்க, நடுநிலை வகுப்புகளுக்கு ஒருங்கிணைந்த 2 பயிற்சி கட்டகங்களும், நடுநிலை வகுப்புகளுக்கென 7 பயிற்சி கட்டகங்களுமாக மொத்தம் 16

பயிற்சிக் கட்டகங்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது. இக்கட்டகங்கள், பாடப்பொருளைப் புரிந்துகொள்ளத் தேவையான கூடுதல் தகவல்களையும், அவற்றை அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்திப் புரிந்து கொள்வதற்கான வழிமுறைகளையும் தருகின்றன. பயிற்சிகளில் வழங்கப்படும் புதுமையான கற்பித்தல் உத்திகள் வகுப்பறைகளில் எதிரொலித்தால் மட்டுமே கற்பித்தலில் தரமும் மாணவர்களின் கற்றல் அடைவும் உயரும். இந்நிகழ்வை நோக்கி நகரும் வகையில் பயிற்சியின்போது கையாளும் கருத்துகளை நன்கு புரிந்துகொண்டு உடனுக்குடன் சுயஆய்வு செய்து கொள்ளும்வகையில் ஒவ்வொரு கற்றல் பகுதியின் இறுதியிலும் பயிற்சித்தாள்கள் தயாரிக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன. இது பயிற்சிக் கருத்துகளில் பங்கேற்பாளர்களின் கவனத்தைக் குவித்து ஈடுபடச் செய்வதாகவும் பயிற்சிநிகழ்வுகளில் பங்கேற்புத்தன்மை, இடைவினை, ஆர்வம் இவற்றை மேம்படுத்துவதாகவும் அமையும்.

## 8.7 ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு

### 8.7. 1 பயிற்சி முறைகளில் முழுமையான மாற்றம்


மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், நவீன தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்றவாறும் மாணவர்கள் விரும்பிக் கற்கும் பாங்கிற்கேற்றவாறும் பணியிடைப் பயிற்சித்

திட்டங்களை உருவாக்குவதில் முழுமையான மாற்றங்களை உட்புகுத்தி உள்ளது. மாநில அளவிலான அடைவுத்தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பயிற்சித் திட்டங்கள், பயிற்றுநர் மற்றும் பாடமைய நிலைகளில் இருந்து கற்போர் மைய நிலைக்குப் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இதனிடையே கற்பிக்கும் உத்திகளிலும் அதிக அளவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. காணொலிக்காட்சிகள், இடைவினையாற்றக்கூடிய வகையிலான வெண்பலகைகளினால் பயிற்சிகள் செறிவூட்டப்படுகின்றன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பயிற்சிகளைக் கல்விச் செயற்கைகோள் வழியாக நடத்தும் வகையில் **58** இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்விச்செயற்கைகோள் முனையங்களின் துணைக்கொண்டு வல்லுநர்களுடன் நேரடியாக இடைவினையாற்ற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

### 8.7.2 மாணவர் நலவாழ்வில் அக்கறை

மாநில அரசின் கொள்கைகளும் நலத்திட்ட முயற்சிகளும் குழந்தைகளின் நலன், குழந்தை உரிமை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் அரசு ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளமைக்குச் சிறந்த சான்றாகும். குழந்தைகளுக்கு எதிரான வன்முறை நிகழ்வுகளை யாரிடம் தாக்கல் செய்ய வேண்டும், எவ்வாறு படிநிலைகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்

என்பதற்கான படிவங்கள் உருவாக்கப்பட்டு வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன. குழந்தை உரிமை மற்றும் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்களுக்குக் கூர்ந்துணர் பயிற்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்தது. இப்பயிற்சியில் மாவட்ட ஆசிரியர்கல்வி பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்த 192 கல்வியாளர்களும் 45,000 ஆசிரியர்களும் கலந்துகொண்டு குழந்தைகளின் உரிமைகள் பற்றியும் குழந்தைகளுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றியும் அதைத் தவிர்க்கக் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றியும் விழிப்புணர்வு பெற்றனர். இதனைத் தொடர்ந்து, குழந்தைநேயக் கற்றல்சூழல், பாதுகாப்பிற்குத் தேவையான உள்கட்டமைப்பு, வகுப்பறை நிகழ்வுகளில் ஜனநாயக முறையில் பங்கேற்கும் வாய்ப்பு, விளையாட்டுமுறை கற்றலைக் கையாளல், குழந்தை மைய மதிப்பீட்டு முறை ஆகியவற்றை உள்ளடக்கிய குழந்தைநேயப் பள்ளிகளை உருவாக்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிதியத்துடன் (UNICEF) இணைந்து வரையறைகளை உருவாக்கி பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சியால் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்கள், வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள் ஆகிய 96 பேர் பயனடைந்துள்ளனர்.






படம் – **84.** குழந்தை உரிமைகள் மற்றும் பாதுகாப்பு

### 8.7.3 வகுப்பறை கூர்ந்து நோக்கல்

வகுப்பறை நிகழ்வுகளை கூர்ந்து நோக்கி ஆய்வு செய்வதால் மட்டுமே புதுமையான கற்பித்தலுக்கான உத்திகளையும், மாணவர்களின் கற்றலடைவு நிலையையும் கண்டறிய முடியும். ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல நிதியம் மற்றும் அஜிம் பிரேம்ஜி நிறுவனத்தின் ஆதரவுடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வகுப்பறை கூர்ந்து நோக்கல் பயிற்சியை ஏற்பாடு செய்தது. வகுப்பறை கூர்ந்து நோக்கலை மீளாய்வு செய்யவும், மேம்பட்ட பணித்திறனுடன் கற்பிக்கும் ஆசிரியர்களை உருவாக்கவும் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர்களுக்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இப்பயிற்சியினால் **64** கல்வியாளர்கள் பயனடைந்தனர்.

### 8.7.4 அச்சமற்ற மதிப்பீட்டு முறை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கற்பதற்கு உகந்த சூழலை நிலைநிறுத்தவும் பருவ மற்றும் தொடர் மதிப்பீடுகளில் அச்சமற்ற வகையில் மாணவர்கள் கல்வி பயில்வதற்கு

ஏற்றவாறு பள்ளிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இத்தகு உயர்ந்த நோக்கத்தை அடைய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை மாநிலஅரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் புத்தகச்சுமையைக் குறைக்கவும், கற்றலை மகிழ்வான அனுபவமாக்கவும் முப்பருவக் கல்வி முறையையும் அறிமுகப்படுத்தியுள்ளது. குழந்தைகள் தாமே ஆக்கப்பூர்வமாக அறிவைக் கட்டமைக்க உதவும் விதத்தில் வழிமுறைகள் வகுக்கப்பட்டுத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் மாணவர் நேயமிக்க மதிப்பீடு செய்ய ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. கடந்த நான்காண்டுகளில் இப்பயிற்சியின் மூலம் **2,64,949** தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் **3,08,386** நடுநிலை வகுப்பு ஆசிரியர்களும் **1,28,588** உயர்நிலை வகுப்பு ஆசிரியர்களும் பயனடைந்தனர்.

### 8.7.5 செயல்திட்டவழிக் கற்றல்

அறிவுத்துடிப்புடன் தேடிக் கற்கும் மாணவர்களின் ஈடுபாட்டைக் கற்றலில் பயன்படுத்த பள்ளிகள் செயல் திட்டங்களை நாட வேண்டியது அவசியமாகிறது. செயல் திட்டங்கள், மாணவர்களின் ஆராய்தல் மற்றும் கூர்ந்து நோக்கல் திறன்களை வலுப்படுத்துகின்றன. இதற்கென மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனப் பாட வல்லுநர்களைக் கொண்டு தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளுக்குத் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல் மற்றும் சமூகஅறிவியல் பாடங்களில் கட்டகங்களை உருவாக்கியுள்ளது. இக்கட்டகங்களில் பாடவாரியான **500** செயல்திட்டங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இச்செயல்திட்டங்கள், பாடங்களின் புரிதலுக்கேற்ற, அறிவுசார்ந்த அனுபவங்களை வழங்குகின்றன. இதன் முதல்படியாக ஆசிரியர்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் முதன்மைக் கருத்தாளர் பயிற்சி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் 150 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் 60 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயனடைவர்.




படம் – **85.** செயல்திட்டவழிக் கற்றல்

### 8.7.6 அனைவருக்கும் கல்வி இயக்ககத்திற்கு ஒத்துழைப்பு நல்குதல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அனைவருக்கும் கல்வி இயக்ககத்திற்குத் (SSA) தொடக்க மற்றும் நடுநிலை வகுப்பு ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கட்டகங்கள் தயாரிப்பதிலும் பயிற்சியை வழங்குவதிலும் உதவி வருகிறது. இந்நிறுவனம், அனைவருக்கும் கல்வி இயக்ககத்துடன் இணைந்து மாநில அளவில் முதன்மைக் கருத்தாளர் பயிற்சியை வழங்குகிறது. மாநில அளவில் பயிற்சி பெற்ற முதன்மைக் கருத்தாளர்கள், வட்டார வளமைய அளவிலும் குறுவள மைய அளவிலும் பயிற்சிகளை வழங்குகின்றனர். தொடக்கப் பள்ளிகளில் பயிலும் **21,57,926** குழந்தைகளும் நடுநிலை வகுப்பு பயிலும் **17,70,019** குழந்தைகளும் இப்பயிற்சியின் மூலம் பயனடைவர். அனைவருக்கும் கல்வி இயக்கத்தால் நடத்தப்படும் இத்தகு பயிற்சிகளின் விளைவாகக் கடந்த மூன்றாண்டுகளாக மாநில அடைவுத் தேர்வுகளில் மாணவர்களின் செயல்திறன் தொடர்ந்து உயர்ந்து வருகின்றது.

### 8.7.7 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பாடப்பொருள் பயிற்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககமானது **2012**ஆம் ஆண்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகத் தரம்

உயர்த்தப்பட்டது. இதனால் ஆசிரியர்களின் முழுமையான பணித்திறன் மேம்படும் வகையில் முதுகலைப் பட்டதாரி ஆசியர்களுக்கும் பயிற்சிவழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மேனிலைப்பள்ளி மாணவர்களின் கற்றலடைவு, தேர்ச்சி விகிதத்தினை மேம்படுத்துவதற்கான பாடப்பொருள் மற்றும் கற்பித்தல் திறன் ஆகியவற்றில் உள்ள தற்கால வளர்ச்சி குறித்து முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அறியும் வண்ணம் ஆங்கிலம், கணக்கு, இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், கணினி அறிவியல், பொருளியல், வணிகவியல், கணக்குப்பதிவியல், வரலாறு மற்றும் புவியியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் முதுகலை ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக, கல்லூரிப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் கற்பித்தலில் சிறந்து விளங்கும் அனுபவமிக்க முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு திறன்வளர் பயிற்சியினை (Content Enrichment) வழங்கியது. இப்பயிற்சி மூலம், கடந்த மூன்று ஆண்டுகளில் 64,771 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

### 8.7.8 வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் மனஅழுத்த மேலாண்மை/ மீட்டெழுச்சித் திட்டம்

கடந்த 2015 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவு நிகழ்வாகிய வெள்ளத்தில் சென்னை,

காஞ்சிபுரம் மற்றும் கடலூார் மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. இந்த எதிர்பாராத வெள்ளம் மக்களின் இயல்பு வாழ்க்கையையே முடக்கிப்போட்டது. ஒருமாத காலத்திற்கும் மேலாகப் பள்ளிகள் மூடப்பட்டுவிட்டதால் ஏற்பட்ட மனஇறுக்கம், மனஅதிர்ச்சியினால் பொதுத்தேர்வு எழுதத்தயாராகும் மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க அவர்களை ஊக்கப்படுத்தி, பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் விதமாக மீட்டெழுச்சிப் பயிற்சியொன்றை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மேற்கண்ட மாவட்டங்களில் ஏற்பாடு செய்திருந்தது. அரசு, அரசு உதவி பெறும், மாநகராட்சி, நகராட்சி, ஆதிதிராவிட நல, உயர் மற்றும் மேனிலைப் பள்ளிகளைச் சார்ந்த தலா இரண்டு ஆசிரியர்களுக்கு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி நடத்தப்பட்டது.

குழுவிவாதம், கருத்துப் பரிமாற்ற இடைவினை நிகழ்வுகள், பங்கேற்று நடித்தல் போன்ற வழிமுறைகளில் வெள்ளத்தால் ஏற்பட்ட தாங்கொணாத் துயரையும் தேர்வு அச்சத்தையும் தணிக்கும் வகையில் பங்கேற்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன. இப்பயிற்சியினால், 1020 ஆசிரியர்கள் பயனடைந்தனர். மேலும், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தங்கள் மாணவர்கள் அச்சமின்றித் தேர்வெழுத அவர்களுக்கு ஊக்கமூட்டினர்.

### 8.7.9 வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தல் பயிற்சி

மாநில அரசு, மாணவர் நலன்களைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களால் மாணவர்கள் வழிநடத்தப்படவும், அவர்களுக்கு

ஆலோசனை வழங்கவும் அவர்களின் கல்வி மற்றும் மனவெழுச்சியின் சமநிலையைப் பேணவும் வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தலில் பயிற்சி அளிக்க உள்ளது.



படம் – **86.** வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தல் பயிற்சி

இதற்கென மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வழிகாட்டி அறிவுரை பகர்தலில் வல்லுநர்கள், குழந்தை மருத்துவர்கள், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கொண்டு பயிற்சிக் கட்டகத்தை வடிவமைத்தது. இப்பயிற்சிக் கட்டகம், மனித வளர்ச்சியின் படிநிலைகள், குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகள், அறிவுரை பகர்தல் நிலைகள், நெருக்கடிகால வழிகாட்டல் முறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. வழிகாட்டும் ஆசிரியர்களுக்கான கையேடு, ஆசிரியர்களை ஆலோசனை வழங்கும் செயல்முறைகளில் திறன் மிக்கவர்களாகவும் மாணவர்கள்

தங்களின் வளரிளம் பருவ நடத்தைசார் சிக்கல்களுக்குத் தாங்களே தீர்வுகாணும் ஆற்றல் பெற்றவர்களாகவும் உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், **2016–17**ஆம் ஆண்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் பள்ளிக்கு இருவர் வீதம் அழைத்து அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும்திறனை மேம்படுத்தப் பயிற்சியளிக்க உள்ளது. இப்பயிற்சியினால் **20,000** ஆசிரியர்கள் மற்றும் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்பது முதல் பன்னிரண்டு வகுப்பு வரை பயிலும் **25** இலட்சம் மாணவர்கள் பயனடைவர்.

### 8.7.10 பயிற்சிகளின் விளைவு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியர்களுக்குப் பாடப்பொருள் மேம்பாட்டு பயிற்சியினை வழங்கியது. பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் பொதுத்தேர்வினை எதிர்கொள்ளும் வகையில் அவர்களுக்கு மனஅழுத்த மேலாண்மைப்பயிற்சியும் வழங்கியது. மேலும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கற்றல் கையேடுகள் மிகவும் பயனுள்ள வகையில் அமைந்தன. தேவைப்படும்போதெல்லாம்

பயன்படுத்தத்தக்க வகையில் இக்கற்றல் கையேடுகள் அமைந்திருந்ததால் மாணவர்கள் சிறப்பான முறையில் தங்களைத் தேர்வுக்குத் தயார்படுத்திக்கொள்ள முடிந்தது. மாணவர்களுக்கு வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல் மற்றும் உயர்கல்விக்கான வழிகாட்டுதல் பயிற்சிகள் அளித்ததன் விளைவாக 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பெருமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த வடமாவட்ட பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் தேர்வில் நன்மதிப்பெண்களைப் பெற்றனர். இதனைப் பின்வரும் அட்டவணை மற்றும் ஒப்பீட்டு வரைபடங்கள் வெளிப்படுத்துகின்றன.


பொதுத்தேர்வு தேர்ச்சி விழுக்காடு – ஓர் ஒப்பீடு

| வ.எண் | மாவட்டம் | 10ஆம் வகுப்பு தேர்ச்சி விழுக்காடு | | 12ஆம் வகுப்பு தேர்ச்சி விழுக்காடு | |
|---|---|---|---|---|---|
| | | **2014–15** | **2015–16** | **2014–15** | **2015–16** |
| **1.** | சென்னை | **94.04** | **94.25** | **91.54** | **91.81** |
| **2.** | கடலூர் | **86.65** | **89.13** | **84.69** | **84.63** |
| **3.** | திருவள்ளூர் | **90.50** | **90.84** | **87.32** | **87.44** |
| **4.** | காஞ்சிபுரம் | **92.79** | **92.77** | **90.68** | **90.72** |
| **5.** | விழுப்புரம் | **87.52** | **88.07** | **83.96** | **89.47** |
| **6.** | அரியலூர் | **90.70** | **92.52** | **80.92** | **90.53** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | திருவண்ணாமலை | 85.42 | 89.03 | 83.43 | 90.67 |
| 8. | நாகப்பட்டினம் | 89.27 | 89.43 | 86.45 | 86.80 |
| 9. | திருவாரூர் | 83.78 | 89.33 | 83.08 | 84.18 |
| 10. | நீலகிரி | 94.09 | 93.25 | 86.74 | 91.29 |
| 11. | வேலூார் | 88.68 | 86.49 | 81.39 | 83.13 |

ஆதாரம்: DGE

வரைபடம் –51. 10ஆம் வகுப்பு தேர்ச்சி விழுக்காடு





ஆதாரம் : DGE



386-4-24a

வரைபடம் –52. 12ஆம் வகுப்பு தேர்ச்சி விழுக்காடு




ஆதாரம் : DGE

### 8.7.11 நற்பண்புகளை இணைத்துக் கற்பித்தலும் கற்றலும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், நடுநிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்குப் பாடப்பகுதியுடன் இணைத்து நற்பண்புகளைக் கற்பிக்கவும் ஒழுக்கத்தை நிலைநாட்டவும் பயிற்சிக் கையேட்டினை உருவாக்கியுள்ளது. இக்கட்டகத்தில் உள்ள கருத்துகள் பெருமளவில் பாடத்துடன் இணைத்துக் கற்பிக்கும் வகையில் உள்ளன. மேலும், மாணவர்களுக்குத் தூண்டுதலாகவுள்ள, நடைமுறை வாழ்வில் எதிர்கொள்ளும் நிகழ்வுகள் வழியாகவே குறிப்பிட்ட நற்பண்புகளை

ஆசிரியர்கள் மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 100 ஆசிரியர்களுக்கு மாநில அளவில் முதன்மைக் கருத்தாளர் பயிற்சியை அளித்தது. இதன்மூலம், நடுநிலைப் பள்ளிகளைச் சார்ந்த 9598 ஆசிரியர்களும் சுமார் 14 இலட்சம் மாணவர்களும் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சியின் தாக்கம் குறித்த ஆய்வினை இரண்டு மாவட்டங்களில் நடத்த மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக, இந்த ஆண்டு 3675 உயர்நிலை மற்றும் 4005 மேனிலைப்பள்ளியில் பணிபுரியும் ஆறு முதல் எட்டு வகுப்பு வரை கையாளும் 15,300 ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் 9 மற்றும் 10ஆம் வகுப்பிற்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள், 30 இலட்சம் மாணவர்களுக்கு 60 வகையான நன்னெறிகளைக் கற்பிக்கவும், குறிப்பாக மாணவர்களின் நடத்தைசார் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் வகையிலான சுமார் 40 நற்பண்புகளைக் கற்பிக்கவும் இயலும். மேலும், இதற்கான ஆசிரியர் கட்டகம் ஒன்று தயாரிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட உள்ளது.

### 8.7.12 பேரிடர் மேலாண்மை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மாநிலம் முழுவதும் உள்ள ஆசிரியர்களுக்குப் பேரிடர்

மேலாண்மைக்கான பயிற்சிக்கட்டகத்தை உருவாக்கிப் பயிற்சி அளித்தது. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்கள், வட்டாரவளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி மாணவர்கள், அரசு/அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளி



படம் **–87 .** பேரிடர் விழிப்புணர்வு பயிற்சி

ஆசிரியர்கள் ஆகியோர் பேரிடர் மேலாண்மையில் பயிற்சி பெற்றனர். இப்பயிற்சியின் வாயிலாக **3659** ஆசிரியப் பயிற்றுநர்கள், **6084** ஆசிரியர்கள், **4635** ஆசிரிய மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

### 8.7.13 கழிவு மேலாண்மை

சுத்தமான சுற்றுப்புறச் சூழ்நிலை, தூய்மையான சமூகத்தை உருவாக்கும். மாணவர்கள் மத்தியில் சுத்தமான சுற்றுப்புறச்சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்ற ஆர்வம் வளர்க்கப்பட வேண்டும். இதைக்கருத்தில் கொண்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநிலம் முழுவதும் உள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கழிவு மேலாண்மைப் பயிற்சியினை இரண்டுநாள் வழங்கியது. இப்பயிற்சியின் தாக்கத்தினால் மாநிலம் முழுமையும் உள்ள **28,981** பள்ளிகளின் கற்றல் கற்பித்தல், பள்ளிச் சூழ்நிலை போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு வளாகங்கள் பசுமையாகவும் தூய்மையாகவும் பேணப்படுகின்றன.

## 8.8 ஆராய்ச்சிச் செயல்பாடுகள்

புதுமையைக் கொண்டுவருவதும், தேவை அடிப்படையிலான பயிற்சி மற்றும் மதிப்பீட்டினை நிர்ணயிப்பதும் ஆராய்ச்சியின் முக்கியப்பங்கு ஆகும். ஆராய்ச்சியானது, போட்டிகளுக்கிடையில் ஒரு நிறுவனம் முன்னேறிச் செல்வதற்கான புதிய கருத்துகளையும் வழிமுறைகளையும் அளிப்பதாகும். இது, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் புதிய கோணத்தில் அறிவியல் அடிப்படையில் பிரச்சினையை அணுகுவதற்கும் ஆக்கப்பூர்வமான வழிகளைக் காட்டுகிறது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டிற்குத் துணைபுரிவதோடு பள்ளிக்கல்வியின் தரத்தை உயர்த்தும் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகிறது. வகுப்பறைச் செயல்பாடு, கற்றல் வளங்கள், கற்றல் பிரச்சினைகள், ஆசிரியர் நிலை, மாணவர்களின் கற்றல் அடைவு, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு போன்ற பல்வேறு காரணிகள் மீதான ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளை ஆசிரியர்களுக்கு எடுத்துரைக்கும் பணியில் கவனம்செலுத்தி வருகிறது.

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், 2015–16ஆம் கல்வியாண்டில் வகுப்பறைச் செயல்பாடு மற்றும் பள்ளியின் ஒட்டுமொத்தத் தர மேம்பாட்டிற்கான 275 செயலாராய்ச்சிகளை மேற்கொண்டன. இச்செயலாராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் பயிற்சி வடிவமைப்பிலும் வகுப்பறைக் கற்பித்தல் உத்திகளிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

### 8.8.1 பள்ளித்தரம் மற்றும் மதிப்பீடு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளித்தர மேம்பாட்டிற்கான திட்டவரைவினைத் தேசியக் கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மைப் பல்கலைக்கழகத்துடன்

இணைந்து உருவாக்கியுள்ளது. இத்திட்டவரைவு, வேறுபட்ட புவியியல் பகுதிகளில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி, சேலம், திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய நான்கு மாவட்டங்களில் 40 பள்ளிகளில் களஆய்வு செய்யப்பட்டது. மேம்பட்ட இவ்விழிப்புணர்வின் தாக்கத்தினால் இப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகளுக்குரிய மேம்பாட்டுத் திட்டத்தினையும் பள்ளி அடையவேண்டிய எதிர்கால இலக்குகளையும் நிர்ணயித்தனர். இனங்காணப்பட்ட நிலைகளில் படிப்படியான முன்னேற்றத்தினை இப்பள்ளிகள் அடைந்துள்ளன. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் பள்ளித்தரம் மற்றும் மதிப்பீடு சார்ந்த திட்ட வரைவினை வரவேற்றுள்ளனர். இது சார்ந்த பயிற்சி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் 510 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 8.8.2 தேசிய அடைவு ஆய்வுகள்

தமிழக அரசு, தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்துடன் இணைந்து தொடக்க, நடுநிலை மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் நிலையை அளவீடு செய்வதற்கெனத் தொடர்ந்து தேசிய அடைவுத் தேர்வுகளை நடத்தி வருகிறது. இவ்வாய்வு முடிவுகள், பிற மாநிலங்களில் அதே வகுப்பு நிலையில் பயிலும் மாணவர்களின் கற்றல் நிலையுடன் ஒப்பிடப்படுகிறது. இவ்வாய்வு முடிவுகளின்

அடிப்படையில் மாணவர்களுக்கான கல்வித் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், **3, 5, 8**ஆம் வகுப்புகளுக்கு **2011–12, 2012–13, 2013–14** ஆகிய ஆண்டுகளிலும், **3** மற்றும் **8**ஆம் வகுப்புகளுக்கு **2015–16**ஆம் ஆண்டிலும் தேர்வுகளை நடத்தியது. மேலும், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்துடன் இணைந்து வினாத்தாள் மொழிபெயர்ப்பையும் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் தேர்வுகளையும் நடத்தியது.

**2015–16**ஆம் கல்வியாண்டில் மூன்றாம் வகுப்பிற்கு, நான்காவது சுற்றாக **32** மாவட்டங்களில் இருந்து **260** பள்ளிகளில் தேசிய அடைவுத்தேர்வு நடத்தப்பட்டது. இதில் **4630** மாணவர்கள் பங்கு பெற்றனர். எட்டாம் வகுப்பிற்கு நான்காவது சுற்றாக **32** மாவட்டங்களில் இருந்து **260** பள்ளிகளில் தேசிய அடைவுத் தேர்வு நடத்தப்பட்டது. இதில் **4380** மாணவர்கள் பங்கு பெற்றனர். இத்தேர்வில் மாணவர்கள் தங்கள் விடைகளை ஒளிவழிக் குறியீட்டு உணர்தாள் (OMR) மூலம் அளித்தனர்.

### 8.8.3 மாநில அளவிலான அடைவுத்தேர்வு

மாநில அளவிலான அடைவுத்தேர்வு, தொடக்கநிலை மாணவர்களின் கற்றல் திறன்களை அறியவும் பல்வேறு பாடங்களைக் கற்றலில் அவர்கள் எதிர்கொள்ளும் கடினப்பகுதிகளைக் கண்டறியவும் நடத்தப்படுகிறது. மாநில அளவிலான அடைவுத் தேர்வுகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இத்தகைய அடைவுத்

தேர்வினை மாநிலஅளவில் நடத்திவரும் அனைவருக்கும் கல்வி இயக்ககத்திற்கு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பல்வேறு நிலையிலான கல்வியாளர்களைக்கொண்டு மேற்கொள்ளும் வினாத்தாள் தயாரிப்புப் பணிமனைக்குத் தேவையான அனைத்து வளங்களையும் வழங்கிவருகிறது. இந்நிறுவனம், **2015–16**ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வி இயக்கம் நடத்திய **3,5,8** ஆம் வகுப்புகளுக்கான அடைவுத்தேர்வில் பங்கேற்ற மாணவர்களின் விடைகளைப் பகுப்பாய்வு செய்யும் பணிக்கான ஒத்துழைப்பை நல்கியது. இந்த முடிவுகளின் அடிப்படையில் குறைந்த அளவில் விடையளித்த மாணவர்கள் மற்றும் கடினப்பகுதிகளைப் பாடவாரியாக அடையாளம் கண்டு அதற்குரிய குறைதீர் வழிமுறைகள் வகுக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை மேம்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 8.9 விரிவாக்கப் பணிகள்

### 8.9.1 தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்துடன் இணைந்து ஆற்றும் பணி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்துடன் இணைந்து **9** மற்றும் **11**ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், பயிலும் மாணவர்களுக்கும் வாழ்வியல் திறன் கல்வி பயிற்சியினை அளித்து வருகிறது. தற்காலச் சூழலில் நவீன கல்விச்சமூகத்தின் உடனான இடைவினைக்கு மென்திறன்கள் மிகவும் அவசியம். எனவே,

வாழ்வியல் திறன்களை மேம்படுத்த மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்துடன் இணைந்து செயல்படுகிறது. இப்பயிற்சிக்கு உரிய கட்டகம் மாணவர்களுக்குப் பிடித்தமான எளிய செயல்பாடுகளுடன் உருவாக்கப்பட்டு அனைத்து உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்கும் வழங்கப்படுகிறது. கட்டுரை எழுதுதல், வண்ணம் தீட்டுதல், பேச்சு, வினாடிவினா போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வளரிளம்பருவ மாணவர்களின் வாழ்வியல் திறன்கள் அளவிடப்படுகின்றன.



படம் –88 . ஓவியப் போட்டியில் மாணவர் பங்கேற்பு

உலக எய்ட்ஸ் தினத்தைக் கடைபிடிக்கும் வகையில் டிசம்பர் 1 இல் அனைத்து மாவட்டங்களிலும் மனிதச்சங்கிலி மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது. 2015–16 ஆம் கல்வியாண்டில் மாநிலம் முழுவதும் உள்ள உயர்நிலை மற்றும்

மேனிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வாழ்வியல்திறன் சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் பெருந்திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

### 8.9.2 கல்லூரி கல்வி இயக்ககத்துடன் இணைந்து ஆற்றும் பணி

மாணவர்கள் எவ்விதச் குடும்பச் சூழலிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர் என்பது குறித்த நேரடி அனுபவத்தைப் பயிற்சி ஆசிரியர்கள் அறிய வேண்டியது அவசியம். கலைத்திட்டம் மட்டுமின்றி சமூகத்திறன்களையும் மாணவர்கள் பெறும்வகையில் நாட்டுநலப்பணித் திட்டச்செயல்பாடுகளை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சிநிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. நாட்டு நலப்பணித் திட்டத்தில் உள்ள **35** அலகுகளில் **1594** பயிற்சி ஆசிரியர்கள் ஈடுபட்டு சிறப்பு முகாம் நடத்துதல், ரத்ததானம் செய்தல், மருத்துவ முகாம், பள்ளி வளாகம் மற்றும் கோவில் வளாகம் தூய்மை செய்தல் போன்ற சமூகப் பணிகளை ஆற்றிவருகின்றனர். மாநிலத்தில் உள்ள தொலைதூரக் குக்கிராமங்களிலும் மகிழ்வுடன் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கும் வகையில் பயிற்சி ஆசிரியர் சமூகம் உருவாக்கப்படுகிறது. கல்லூரிக்கல்வி இயக்ககத்தின் உதவியுடன் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அரசு

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 35 நாட்டுநலப் பணித்திட்ட அலகுகள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 8.9.3 மனித உரிமைக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து ஆற்றும் பணி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இரண்டு நாள் மனித உரிமைக் கல்வி சார்ந்த பயிற்சியினை ஆசிரியப் பயிற்றுநர்களுக்கு அளித்தது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பல்கலைக்கழகங்கள், கல்வியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் இருந்து 14 கல்வியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மனித உரிமைகள் கல்வி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் நிறுவனத்தைப் பற்றிய கருத்துகளைப் பகிர்ந்து கொண்டதோடு, தமிழ்நாட்டில் நிறுவனம் செயல்படும் முறை, பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி ஆகியன குறித்த கருத்துகளையும் பகிர்ந்து கொண்டார்.

தமிழ்நாட்டில் ஆசிரியப் பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம், மனித உரிமைகள் கல்வி நிறுவனத்துடன் இணைந்து நிறைவேற்றப்பட்டது. நான்கு மண்டலங்களாக நடத்தப்பட்ட பயிற்சியில் 30 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 8 அரசு ஆசிரியர் பயிற்சி

நிறுவனங்களிலிருந்து **300** கல்வியாளர்களும் **5000** பயிற்சி ஆசிரியர்களும் மனித உரிமைக்கல்வி பயிற்சி பெற்றனர்.

### 8.9.4 தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து ஆற்றும் பணி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசிய ஆசிரியக் கல்விக் குழுமத்தின் நிதிஉதவியுடன் தேசிய மக்கள்தொகை கல்வித்திட்டப் பணிகளைத் தமிழ்நாட்டில் மனிதவளங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் நிறைவேற்றுகிறது. தேசிய மக்கள் தொகைக் கல்வித் திட்டமானது நிலையான வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு **2011**, பாலின விகிதாச்சாரம், பாலின வேறுபாடு, பெண்கள் மேம்பாடு, பெண்கல்வி, ஊட்டச்சத்து, உடல்நலம் மற்றும் சுகாதாரம், வளரிளம்பருவ நடத்தைப் பிரச்சினைகள், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகிறது.

**2015–16**ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் **9** மற்றும் **11**ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பங்கேற்று நடித்தல் மற்றும் நாட்டுப்புற நடனப் போட்டிகள் நடத்தப்பட்டன. இத்துடன் பள்ளி, கல்வி மாவட்டம், மாவட்டம், மாநிலம் மற்றும் தென்மண்டல அளவில் **8** முதல் **11**ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மக்கள்தொகை சார்ந்த கருத்துகள் அடங்கிய சுவரொட்டி

தயாரிக்கும் போட்டியும் நடத்தப்பட்டது. ஒவ்வொரு நிலையிலும் வெற்றிபெற்றவர்கள் பணப்பரிசு கொடுத்துக் கௌரவிக்கப் பட்டனர். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆசிரியப் பயிற்றுநர்களுக்கான மக்கள்தொகைக் கல்வி சார்ந்த துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்து அளித்துள்ளது. மக்கள்தொகைக் கல்வி சார்ந்து மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களால் இரண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 2016–17ஆம் கல்வியாண்டில் சுவரொட்டி தயாரித்தல், பங்கேற்று நடித்தல், பேச்சுப்போட்டி, மாதிரிப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் மூன்று ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது.

### 8.9.5 ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல நிதியத்துடன் இணைந்து ஆற்றும் பணி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல நிதியத்துடன் (UNICEF) இணைந்து வளரிளம்பருவ பெண் குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாடான இரத்தசோகையைக் குறைப்பதற்காக விழிப்புணர்வுப் பயிற்சித் திட்டங்களையும் மற்றும் இரும்புச்சத்து மற்றும் போலிக் அமிலம் அடங்கிய ஊட்டச்சத்து மாத்திரைகளையும் இரத்த சோகையினால் அதிகம் பாதிக்கப்பட்ட கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில் வழங்கியுள்ளது. 8776

தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்கள், **1136** பெற்றோர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு, வளரிளம்பருவக் குழந்தைகளிடையே நிலவும் இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நீக்க தமிழக அரசு வாரந்தோறும் போலிக் அமிலம் அடங்கிய இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டத்தினை (Weekly Iron Folic Acid Supplementaion-WIFS) அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தியுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் **15540** அரசு மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலை, உயர்நிலை, மேனிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் **56** இலட்சம் வளரிளம்பருவ மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.



படம் –**89** . இரத்தசோகை தடுப்பு நிகழ்ச்சித் திட்ட பயனாளிகள்

### 8.9.6 அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்துடன் இணைந்து ஆற்றும் பணி

மாணவர்களிடையே முழுமையான ஆளுமையை ஊக்குவிப்பதே கல்வியின் நோக்கமாகும். எனவே, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கிராமியக் கலைகள் மற்றும் உள்ளூர் வளங்களை அடையாளம் காணுவதற்கும் பயன்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்தது. இதனடிப்படையில், உள்ளூர் மற்றும் பாரம்பரியக் கலைகள் அடையாளம் காணப்பட்டு மாணவர்கள் மூலம் அவற்றை வளர்க்கும் வகையில் பிரம்மாண்டமான அளவில் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இசை, நாட்டியம், நாடகம் மற்றும் காண்கலைப் போட்டிகள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் மற்றும் தேசிய அளவிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்பது முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களிடையே நடத்தப்பட்டன.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இப்போட்டி குறித்து அறிமுகப் பயிற்சியினை மாவட்ட அளவிலான அலுவலர்கள், அனைத்து மாவட்ட ஓவிய ஆசிரியர்கள் மற்றும் இசை ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளது. பயிற்சியின்போது, கலா உத்சவ் நிகழ்ச்சியின் நோக்கங்களையும் மற்றும் நடைமுறைகளையும் அரசு இசைக்கல்லூரி–சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரி–சென்னை மற்றும் அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக் கல்லூரி–

மாமல்லபுரத்தைச் சார்ந்த சிறப்பு வல்லுநர்களைக் கொண்டு தேர்ந்தெடுத்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தது.



படம் –90 கண்காட்சி

மாநில அளவிலான போட்டிகள் நாமக்கல்லில் நடத்தப்பட்டன. இசை, நாட்டியம், நாடகம் மற்றும் காண்கலை போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் பாராட்டப்பட்டனர். மாநில அளவில் வெற்றிபெற்ற போட்டியாளர்கள் புதுடெல்லி, தேசிய பாலபவனில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு கொண்டனர். இதில் தேசிய அளவில் காண்கலைப் பிரிவில் தமிழக அணி சார்பில் பங்கு பெற்ற திருச்சி மாணவர்கள் மூன்றாம் பரிசு பெற்றனர்.

### 8.9.7 புதுச்சேரி, கல்வித்துறையுடன் இணைந்து ஆற்றும் பணி

புதுச்சேரி, கல்வித்துறையின் வேண்டுகோளின்படி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் **2015–16**ஆம் கல்வியாண்டில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான

பாடப்பொருள் மேம்படுத்தும் பயிற்சிக்கெனப் பாட வல்லுநர்களைப் பயிற்சிக் கருத்தாளர்களாக ஈடுபடுத்தியது. இப்பயிற்சியின் மூலம் 419 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். புதுச்சேரி கல்வித்துறை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் பாடப்பொருள் மேம்பாட்டுப் பயிற்சி குறித்துப் பாராட்டு தெரிவித்துள்ளது.

## 8.10 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

2016–17ஆம் நிதியாண்டிற்கு ரூ.75.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8.11 முடிவுரை

தமிழக அரசின் முழுமையான தொலை நோக்கினை அடைய, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது பள்ளிக்கல்வித் துறையில் உள்ள அனைத்து இயக்குநரகங்களுக்கும் தேவையான வளங்களை வழங்கிப் பள்ளிகளில் தரமான கல்வியை வழங்க வழிவகை செய்து வருகிறது.

# 9. ஆசிரியர் தேர்வு வாரியம்

## 9.1 முன்னுரை

1987–ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டு சிறந்த திறமையும், பணிக்கேற்ற தகுதிகளையும், மதிப்புகளையும் கொண்ட ஆசிரியர்களைத் தெரிவு செய்து வருகிறது. பள்ளிக் கல்வித்துறை மற்றும் உயர்கல்வித் துறைக்குத் தேவையான ஆசிரியர்களை சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெறப்படும் தேவைகளுக்கேற்ப தேர்ந்தெடுக்கும் நடைமுறை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் ஆளுகைக்கும், எல்லைக்கும் உட்பட்டதாகும். ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் இதுவரை 1,56,270 பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், ஆசிரியர் தேர்வு வாரியமானது இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கான தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை (TNTET) நடத்தும் மாநில இணைப்பு முகமை (Nodal Agency)யாகவும் செயல்பட்டு வருகிறது. பணிநாடுநர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை மற்றும் வழிமுறை பற்றிய விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அலுவலக இணையதளமான (http://trb.tn.nic.in) என்ற முகவரியின் வழியாக வெளிப்படைத் தன்மையுடன் எளிதாகவும், நம்பிக்கையுடனும் அணுகப்பட்டு வருகிறது.

## 9.2 குறிக்கோள்

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அடிப்படை நோக்கம் பணிநாடுநர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளை மேம்படுத்துவதும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியப் பணிநாடுநர்களின் வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த இயற்கையான திறமைகளைக் கண்டறிவதும் ஆகும். இதன் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் கீழ்க்கண்ட நடைமுறைத் தொழில்நுட்ப உத்திகளைக் கையாள்கிறது.

- அனைத்துப் பணித்தேர்வு நடைமுறைகளையும் மின்மியமாக்குதல் மற்றும் இணையத்தில் ஒருங்கிணைத்தல்
- ஆசிரியரைத் தேர்வு செய்வதற்கான அறிவிக்கை வெளியிடுவதில் தொடங்கி, முடிவுகளைப் பதிவேற்றம் செய்வது வரையுள்ள அனைத்திற்கும் மின் ஆளுமை வளங்களைப் பயன்படுத்துதல்.
- ஒளியூடு மதிப்பெண் கணிப்பான் (Optical Mark Reader-OMR) வழியாக தேர்வர்களின் விடைத் தாட்களை மென்பொருள் மற்றும் கணினி மூலம் மதிப்பிடுதல்.

## 9.3 தேர்வு நடைமுறையின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் புனிதத் தன்மையை நிலைநிறுத்துதல்

தேர்வு நடைமுறைகளில் உள்ள மந்தணத் தன்மையைக் கருதி முறைகேடான செயல்கள் நடைபெறாமல் உரிய கடுமையான

பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிகவும் மந்தணத்தன்மைவாய்ந்த பகுதிகளான வினாத்தாள் பாதுகாப்பு மையங்கள், தேர்வு மையங்கள் மற்றும் தேர்வு அறைகள், பயன்படுத்தப்பட்ட OMR விடைத்தாள்களை ஸ்கேன் செய்யும் அறை ஆகிய அனைத்தும் நெருங்கிச் சுழலும் நிழற்படக் கருவி (Closed Circuit Television-CCTV) மூலம் கண்காணிக்கப்படுவதோடு, அனைத்துச் செயல்களும் வீடியோப் பதிவும் செய்யப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளுக்கும் மேலாக, எவ்விதச் சிறுதவறு கூட ஏற்படாதவகையில் 20 OMR விடைத்தாள்கள் வைத்திடும்வகையில் சிறப்பு ஒளி ஊடுருவா உறைகள் (Special opaque covers) அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

**9.4 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தலில் வெளிப்படைத் தன்மை மற்றும் நவீன முறைகளைப் பின்பற்றுதல்.**

ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் நடைமுறைகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடனும் துல்லியமாகவும் இருப்பதற்காகப் பல்வேறு நிலைகளில் திருப்திகரமாகக் குறிப்பிடும் வகையில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. ஒளியூடு மதிப்பெண் கணிப்பான் (Optical Mark Reader - OMR) வழியாகப் பணிநாடுநர்களின் விண்ணப்பங்களை மின்னணு ஒளிக்கதிர் கொண்டு ஊடுருவல் (Scan) செய்வதன் மூலம் அவர்களின்

அனைத்துத் தரவுகளும் குறுகிய கால அளவில் பிரித்தெடுக்கப்படுகின்றன. மேலும், பணிநாடுநர்களின் விடைத்தாள்கள் இருமைத் தொழில்நுட்ப (Dual Technology) நடைமுறையின் வாயிலாக ஸ்கேன் செய்யப்படுவதால், தேர்வு முடிவுகள் துல்லியமாகத் தயாரிக்கப்பட்டு விரைவாக வெளியிடப்படுகின்றன.

2013–14 ஆம் ஆண்டு முதல், பணிநாடுநர்கள் தங்களது OMR விடைத்தாளின் படிவம் மற்றும் மதிப்பெண்களைக் கணினி வாயிலாக நேரடியாகக் கண்டு சரிபார்த்துக்கொள்ளவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**9.5 தகவல் மையச் செயல்பாடு**

ஆசிரியர் தேர்வு வாரியத்தில் 2015 ஆம் ஆண்டு முதல், சென்னை–6ல் உள்ள ஈ.வெ.கி.சம்பத் மாளிகையின் தரைதளத்தில் பணிநாடுநர்களுக்கு முழுமையான தகவல்களை வழங்குவதற்காகக் கணினிமயமாக்கப்பட்ட தகவல் மையப் பிரிவு செயல்பட்டு வருகிறது. தங்களது ஐயப்பாடுகளைத் தெளிவு படுத்திக்கொள்ள விரும்பும் பணிநாடுநர்களுக்கு இத்தகவல் மையம் சிறந்த முறையில் துரிதமாக பணிசெய்து வருகின்றது.

### 9.6. 2011–12ம் ஆண்டு முதல் 2015–16ம் ஆண்டு வரையிலான சாதனைகள்

ஆசிரியர் தேர்வு வாரியமானது மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் பல்வேறு வகைகளின்கீழ் **42,651** ஆசிரியர்களைத் தெரிவுசெய்து பல்வேறு துறைகளுக்கு வழங்கியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வி மற்றும் தொடக்கக் கல்வித் துறையில் **40,316** ஆசிரியர்களும், பிற்படுத்தப்பட்டோர், மிகபிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை, ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் போன்ற பிற துறைகளில் **994** ஆசிரியர்களும், உயர்கல்வித் துறையில் **1341** விரிவுரையாளர்களும், உதவிப் பேராசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், **2009**ன் வழிகாட்டுதல்படி ஆசிரியர் தேர்வு வாரியமானது முதன்முறையாக தமிழ் நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை (TNTET) **2012–13**ல் வெற்றிகரமாக நடத்தி முடித்தது. **12.07.2012** அன்று நடைபெற்ற தேர்வில் மொத்தம் **7,14,526** தேர்வர்கள் பங்கேற்றனர். தொடர்ந்து ஆசிரியர் தேர்வு வாரியம் **14.10.2012** அன்று ஆசிரியர் தகுதித் தேர்விற்கு துணைத் தேர்வு நடத்தியது. அதில் **6,43,095** தேர்வர்கள் பங்கேற்றனர். மூன்றாவது முறையாக தகுதித் தேர்வு மாநிலம் முழுமையும் **17.8.2013** மற்றும்

18.8.2013 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இத்தேர்வுகளில் மொத்தம் 6,62,498 தேர்வர்கள் பங்கேற்றனர். அரசாணை (நிலை) எண்.25, பள்ளிக் கல்வி (ஆசிரியர் தேர்வு வாரியம்) துறை நாள் 06.02.2014ன்படி 2013ம் ஆண்டு தேர்வின் தகுதி மதிப்பெண்ணில் 5% தளர்வு வழங்கப்பட்டது. மூன்று தகுதித் தேர்வுகளிலும் சேர்த்து 94,410 தேர்வர்கள் தகுதியடைந்தனர்.

### 9.7.மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கான சிறப்புத் தகுதித் தேர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் மற்றும் பிற மாற்றுத் திறனாளிகளுக்காக ‘சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு’ ஒன்றினை அறிவித்து அரசாணை வெளியிட்டார்கள். அரசாணை (நிலை) எண்.260, பள்ளிக் கல்வி (ஆசிரியர் தேர்வு வாரியம்) துறை நாள் 17.12.2013–ன்படி 21.05.2014 அன்று நடைபெற்ற சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் 1180 பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளும், 3,297 உடற்குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளும் ஆக மொத்தத்தில் 4,477 தேர்வர்கள் பங்கேற்றனர். இத்தேர்வின் மூலம் 264 பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளும், 670 உடற்குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளும் வெற்றிகரமாகத் தகுதி அடைந்தனர். சான்றிதழ் சரிபார்த்தலுக்குப் பின் 201 பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளும், 335

உடற்குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளும் 2014–15ம் ஆண்டில் பட்டதாரி ஆசிரியர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

### 9.8 2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16ஆம் ஆண்டு வரை பள்ளிக் கல்வித் துறை மற்றும் பிற துறைகளில் நியமனம்

இக்குறிப்பிட்ட காலத்தில், 7,557 முதுகலை ஆசிரியர்கள், 19,580 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 11,459 இடைநிலை ஆசிரியர்கள் போன்றோர் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சிறப்புத்தேர்வின் மூலம் சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களில் பணியாற்றும் பணியாளர்களிலிருந்து 136 பட்டதாரி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இதே காலங்களில் 34 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களும், 885 சிறப்பாசிரியர்கள் மற்றும் 643 கணினிப் பயிற்றுநர்களும் பள்ளிக் கல்வித் துறைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவை தவிர, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்காக 22 முதுநிலை விரிவுரையாளர்களும், ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறைக்காக 33 முதுகலை ஆசிரியர்களும், 46 பட்டதாரி ஆசிரியர்களும் மற்றும் 468 இடைநிலை ஆசிரியர்களும், பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்காக 61 முதுகலை ஆசிரியர்களும், 236 பட்டதாரி ஆசிரியர்களும் மற்றும் 49 இடைநிலை ஆசிரியர்களும், தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும்,

ஆசிரியர் தேர்வு வாரியமானது சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பள்ளிகளுக்காக 23 முதுகலை ஆசிரியர்களையும், 60 பட்டதாரி ஆசிரியர்களையும் தெரிவு செய்துள்ளது. இத்துடன் கூடுதலாக சமூகப் பாதுகாப்புத் துறைக்காக 18 இடைநிலை ஆசிரியர்களையும் தெரிவு செய்துள்ளது.

### 9.9 2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை உயர்கல்வித் துறைக்காக விரிவுரையாளர்களையும், உதவிப் பேராசிரியர்களையும் தெரிவு செய்தல்

இக்குறிப்பிட்ட ஐந்தாண்டுகளில் ஆசிரியர் தேர்வு வாரியமானது உயர்கல்வித்துறைக்கும் தனது பணியினை பங்களிப்பு செய்துள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1016 உதவிப் பேராசிரியர்களும், அரசு சட்டக் கல்லூரிகளில் 43 விரிவுரையாளர்களும், அரசு பொறியியல் கல்லூரிகளில் 151 உதவிப் பேராசிரியர்களும், அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 131 விரிவுரையாளர்களும் இவ்வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 9.10 2016–17ஆம் ஆண்டிற்கானச் செயல் திட்டம்

நடப்புக் கல்வியாண்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்காக 38 முதுநிலை விரிவுரையாளர்கள், 166 விரிவுரையாளர்கள் மற்றும் 68 இளநிலை விரிவுரையாளர் காலிப் பணியிடங்களையும், தொடக்கக் கல்வித் துறையில் உதவித்

தொடக்கல்வி அலுவலர்கள், பள்ளிக் கல்வித் துறையில் முதுகலையாசிரியர்கள் மற்றும் உடற்கல்வி, ஓவியம், தையல், இசை போன்ற சிறப்பாசிரியர் காலிப் பணியிடங்களையும் நேரடித் தேர்வின் மூலம் நிரப்புவதற்கு இவ்வாரியத்தால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் ஒரே கல்வித் தகுதியும் பாடத்திட்டமும் கொண்ட முதுநிலை விரிவுரையாளர், விரிவுரையாளர் மற்றும் இளநிலை விரிவுரையாளர் ஆகிய பணியிடங்களுக்குத் தனித்தனியாகத் தேர்வு நடத்தாமல் மூன்றையும் ஒருங்கிணைத்து ஒரே தேர்வாக நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. கூடுதலாக தரப்பட்ட பணியிடங்களையும் சேர்த்து 272 காலிப்பணியிடங்களுக்கான விரிவான அறிவிக்கை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 28.06.2016ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இக்கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1883 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசுப் பொறியியல் கல்லூரிகளில் 192 உதவிப் பேராசிரியர் காலிப்பணியிடங்களை நேரடித் தேர்வின் வழியாக நிரப்புவதற்கான பணிகள் இக்கல்வியாண்டில் தொடங்கப்பட உள்ளது.

## 9.11 நிதி நிலை அறிக்கை

**2016–17**க்கான நிதியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.**3.10** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.12 முடிவுரை

ஆசிரியர் தேர்வு வாரியம் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கு உரிய காலக்கெடுவுக்குள் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதன் மூலம் பள்ளிகளில் தேவையான எண்ணிக்கையில் ஆசிரியர்களை பணியமர்த்துவதை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் புதுமையான தொழில்நுட்பங்களை கணினிமூலம் பயன்படுத்தி ஆசிரியர் தெரிவுப்பணி வெளிப்படையாக நடைபெற தனது பணியினை தொடர்ந்து மேம்படுத்திக்கொண்டு வருகிறது.

# 10. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 10.1. அறிமுகம்

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், இலக்கியம், அறிவியல், தொழில் நுட்பம், கலை மற்றும் பிறதுறை சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, வெளியிடுதல் மற்றும் தமிழ்நாடு அரசு பாடதிட்டத் தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பாடபுத்தகங்களை அச்சிட்டு, விநியோகம் மற்றும் விற்பனை செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள **1970**ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

**1993**ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு பாடநூல் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பாடநூல்களும், சுயநிதி பள்ளிகளுக்கு விற்பனை பாடநூல்களும் அச்சிட்டு, இருப்புவைத்து விற்பனை மற்றும் விநியோகிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ஆசிரியர் பயிற்சி குறிப்புகள் எளிய செயல்வழி கற்றலுக்கான அட்டைகள் மற்றும் பிற அரசு துறைகளுக்கான கையேடுகள் அச்சிடும் பணியும் இக்கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இக்கழகம் விற்பனை பிரதிகளுக்கான விலை நிர்ணயம் செய்து விற்பனைப் பாடநூல்களை சுயநிதிப் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்கு நேரடியாகவும் இக்கழக

விற்பனை நிலையம் மற்றும் முகவர்கள் மூலமாகவும் முறையாக விற்பனை செய்து வருகிறது.

**10.2 பணிகளின் வரம்பு**

பாடநூல் அச்சு, விற்பனை மற்றும் விநியோகப்பணிகளை முதன்மையாக மேற்கொண்டு வந்த தமிழ்நாடு பாடநூல் கழகம் **15.05.2013**ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பள்ளி மாணவர்களுக்கான விலையில்லா கல்வி உபகரணப் பொருட்களை தரமாக கொள்முதல் செய்து உரிய காலத்திற்குள் வழங்கும் உன்னதப் பணிக்கான ஒருங்கிணைப்பு மையமாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறே தமிழ்நாடு பாடநூல் கழகம், ‘‘தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்’’ என **06.9.2013** முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. **2014–15**ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் விலையில்லா கல்வி உபகரணப் பொருட்களை கொள்முதல் செய்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. **2014 – 15**ஆம் கல்வியாண்டு முதல் சுமார் ரூ.**500** கோடி மதிப்பு உள்ள விலையில்லா கல்வி உபகரணப் பொருட்களை இக்கழகம் இதுவரை கொள்முதல் செய்துள்ளது.

### 10.3 முப்பருவமுறை அறிமுகம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் வருடம் முழுவதும் எதிர்கொள்ளும் புத்தக சுமையினை குறைக்கும் பொருட்டு 1 முதல் 9ம் வகுப்பு வரையிலான பாடநூல்களை முப்பருவ முறையில் வெளியிடுவதற்கான ஆணை பிறப்பித்தார்கள். அதனடிப்படையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் புத்தகம் அச்சிடும் முறையை மாற்றி 1 முதல் 9ம் வகுப்பு வரை உள்ள பாடநூல்கள் முப்பருவ முறையிலும் 10, 11 , 12ஆம் வகுப்பு பாடநூல்கள் வருடாந்திர நூல்களாகவும் அச்சிட்டு வழங்கி வருகிறது. இந்நூல்களின் எண்ணிக்கை இதுகாறும் வழங்கி வந்த நூல்களை விட மும்மடங்காகும்.

| பள்ளி கல்வித்துறைக்கான பாடநூல்கள் (2015 – 2016) | | |
|---|---|---|
| வகுப்பு | விலையில்லா பிரதிகள் (கோடியில்) | விற்பனை பிரதிகள் (கோடியில்) |
| பருவம் I (1–9) | 1.34 | 0.73 |
| பருவம் II (1–9) | 1.33 | 0.82 |
| பருவம் III (1–9) | 1.25 | 0.82 |
| வருடாந்திர பாடநூல்கள் (வகுப்பு 10–12) | 1.92 | 0.67 |

### 10.4 பிற துறைகளுக்கு ஆற்றும் பணிகள்

பாடநூல்கழகம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் நிர்வாகத்தில் இயங்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், அரசுத்தேர்வுகளை எதிர் கொள்ள ஏதுவாக துறைகள் மூலம் வழங்கப்படும் தேவைக்கேற்ப சிறப்பு வழிகாட்டி கையேடுகளை அச்சிட்டு வழங்குகின்றது. தொழில் நுட்ப கல்வி இயக்ககம், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, வருவாய் துறை மற்றும் தேசிய பங்கு சந்தை ஆகிய துறைகளுக்கும் முகமைகளுக்கும் பாடத்திட்டங்கள் தொடர்புடைய புத்தகங்கள் தரமானவையாக காலத்தே அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

ஆகமொத்தம் வருடத்திற்கு சுமார் 10 கோடி புத்தகங்கள் பள்ளி கல்வித்துறைக்கும், பிற துறைகளுக்கும் அச்சிட்டு வழங்கப்படுகிறது.

பாடநூல்கள் 80 / 60 ஜிஎஸ்எம் ஹைடெக் மேப்லித்தோ என்னும் முதல் தரமான தாளில் அச்சடிக்கப்படுகிறது. இவை தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. பாடபுத்தகத்தின் மேலட்டைகள் 230 ஜிஎஸ்எம் மல்டி லேயர் கோட்டட் போர்டுகள் உபயோகப்படுத்தி அச்சிடப்படுகிறது. மேலட்டைகளை தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும்

காகித நிறுவனத்தின் மொண்டிப்பட்டி அலகிலிருந்து **2016–17** முதல் கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் தாள் மற்றும் மேலட்டைகளுக்கான விலையை அரசு அளவிலான உயர்மட்ட பேச்சுவார்த்தை குழு நிர்ணயம் செய்கின்றது. நடப்பாண்டில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் தாள் கொள்முதல் விவரம் :

| பொருள் | 2016 - 2017 | |
|---|---|---|
| | எண்ணிக்கை (மெட்ரிக் டன்) | மதிப்பு (ரூ.கோடியில்) |
| தாள் | 34000.00 | 202.00 |
| மேலட்டை | 2800.00 | 13.07 |

**10.5 பணியாளர்களின் அதிகரிப்பு**

பாடநூல்களின் அச்சுப்பணியை உரிய காலத்தில் செவ்வனே செய்திட தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் பிற அலுவலர்கள் செயல்படுகின்றனர். மேலும் கொள்முதல், பணியாளர் நலன் மற்றும் சட்ட விவகாரங்கள் தொடர்பான பணிகளுக்கு

அனுபவமிக்க நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**2012–13** ஆம் கல்வியாண்டு முதல் இக்கழக பணிவரையறை பன்மடங்கு விரிவான வளர்ச்சி அடைந்துள்ளதால், இக்கழகத்திற்கு தேவையான **48** தொழில்நுட்ப மற்றும் பொது பணியாளர்களை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலம் பணி அமர்த்திக்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பணியாளர்களை அதிகரிக்கும் முயற்சியில் முதற்படியாக **2015–16** ஆம் கல்வியாண்டில் கருணை அடிப்படையில் **12** இளநிலை உதவியாளர்கள் இக்கழகத்தில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பள்ளிகளுக்கு சிறந்த முறையில் பணியாற்ற முடியும் என்பது திண்ணம்.

## 10.6 தர ஆய்வு

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் கொள்முதல் செய்யும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகள் தரத்துடன் விளங்கிட நிர்ணயிக்கப்பட்ட தர அளவீடுகளை முறையாக பின்பற்றி வருகிறது.

புத்தகப்பை, காலணி, வண்ணப் பென்சில், வண்ணம் தீட்டும் குச்சி, கணித உபகரணப் பெட்டி, கம்பளிச் சட்டை ஆகிய

பொருட்களை கொள்முதல் செய்வதற்கு என உரிய தர அளவீடுகள் மத்திய அரசின் பல்வேறு துறையின் கீழ் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஆய்வுக்கூடங்கள் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. உற்பத்தியின் போதும் பின்னர் விநியோகம் செய்யப்பட்ட பின்னரும் பிரத்தியேக ஆய்வுக்கூடங்கள் மூலம் தர ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் தொழில் நுட்பம் மற்றும் தர அளவீடுகளை செம்மைபடுத்தி தெளிவாக்கிட அவ்வப்போது உரிய நிபுணர்களை கொண்டு மறு ஆய்வும் செய்யப்படுகிறது. இதைப்போன்றே பாடப்புத்தக அச்சுப் பணிகளும் நிர்ணயிக்கப்பட்ட தரம் பேணப்படுவதை தொழில்நுட்ப பணியாளர்களால் சரிபார்க்கப்படுகிறது. தரக் குறைபாடுகளிருப்பின் அபராதங்கள் விதிக்கப்படுகின்றன.

## 10.7 பிற மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் தமிழ்ப் பாடநூல்கள் விநியோகம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ் மொழிப் பாடநூல்களை பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் பிற வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் தமிழ்மொழியை இரண்டாம் பாடமாக பயிலும் மாணவர்களுக்கும் வழங்குகிறது.

மகாராஷ்டிரா, புதுதில்லி, குஜராத், கேரளா, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் உள்ளிட்ட பிற மாநிலங்களில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கொண்டு பயிலும் மாணவர்களுக்கு தமிழ் பாடநூல்கள் விலையில்லாமல் விநியோகம் செய்யப்படுகிறது. அவ்வகையில் 2015 – 2016 ஆம் ஆண்டில் 29,000 பாடநூல்கள் பிற மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மலேசிய தூதகரத்தின் கோரிக்கையின்படி 500 தமிழ்ப் பாடநூல்கள் மலேசியா நாட்டிற்கும் 2015– 2016 ஆம் கல்வி ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் இணைப்புப் பெற்ற பள்ளிகளில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாடு பாட திட்டத்தின்படி தமிழ் மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. ஆகவே மேற்படி பள்ளிகளின் கோரிக்கைகளின்படி 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ்ப்பாட நூல்கள் ஆண்டு பதிப்பாக ஒரே புத்தகமாக அச்சிடப்பட்டது. இவ்வகையில் 7.47 இலட்சம் விற்பனைப் பிரதிகள் 2016–17 ஆம் கல்வியாண்டில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### 10.8 தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் 2006

தமிழ்நாடு கற்றல் சட்டம், அரசு அறிவிக்கை நாள் 18.09.2014ன் படி தமிழ் மொழி பாடம், தமிழ்நாட்டில் உள்ள மாநில

வாரியம் மட்டுமல்லாமல் பிற வாரியங்களின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகளிலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான தமிழ் மொழி பாடநூல்கள் கீழ்கண்டவாறு அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பாடநூல் விற்பனை

| வருடம் | விற்பனை |
|---|---|
| 2014– 2015 | 3,84,000 |
| 2015 –2016 | 5,95,200 |
| 2016–2017 | 7,47,000 |

### 10.9 இணையத்தில் கட்டணமின்றி புத்தகங்களை பெறும் வசதி

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் அச்சிடப்படும் அனைத்து பாடநூல்களும் மாணவர்களுக்கு கிடைக்கப் பெறும் வகையில் www.textbooksonline.tn.nic.in இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் விலையின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளதால் மாணவர்கள் தேவைப்படும்பொழுது தடையின்றி புத்தகங்களை பெற்றுக் கொள்ள இயலும்.

**10.10 பள்ளிகளுக்கு பாடநூல் விற்பனை மற்றும் விநியோகம்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சுயநிதி பள்ளிகளுக்கான விற்பனை நூல்களுடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான இலவச புத்தகங்களையும் சேர்த்து பெரும் அளவிலான பாடப் புத்தகங்களை கையாளுகின்றது.

விற்பனைப் புத்தகங்களை உரிய காலத்தில் மாணவர்களுக்கு வழங்கிட ஏதுவாக, தொன்றுதொட்டு நடைமுறையில் உள்ள தரமான விநியோக முறை கடைபிடிக்கப்படுகிறது. இலவச பாடநூல்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு காலத்தே வழங்கிட ஏதுவாக அச்சகத்தாரிடமிருந்து நேரடியாக 67 மாவட்டக் கல்வி மையங்களுக்கும் கொண்டு சேர்க்கப்படுகின்றன. 2015 –16 ஆம் ஆண்டில், 5.84 கோடி புத்தகங்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு உரிய காலத்தில் சிறப்பு விநியோக முறை மூலம் வழங்கப்பட்டது.

அரசு உதவிபெறா சுயநிதி கல்வி நிறுவனங்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திடமிருந்து புத்தகங்களை மொத்தமாக கொள்முதல் செய்து மாணவர்களுக்கு விநியோகிக்கின்றனர். இணையதளம் மூலம் புத்தக விநியோக முறை இப்பள்ளிகளுக்கு புத்தக கொள்முதலை எளிமைபடுத்தியுள்ளது. இம்முறை முன்னோடியாக சென்னை, காஞ்சிபுரம் மற்றும்

திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மே மாதம் **2015**ல் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்களது அனுபவம் மற்றும் கருத்துகளுக்கு ஏற்ப இணையதள விற்பனை மாநிலம் முழுவதும் ஆகஸ்ட் **2015** முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து சுயநிதிப் பள்ளிகளும் தம்முடைய தனி அடையாள (UDISE) எண்ணை பயன்படுத்தி இணையத்தில் பதிவு மேற்கொண்டு தமது புத்தக தேவையை பதிவிடுகின்றனர். இந்திய அஞ்சல் துறை மூலமாக தங்களுடைய இடத்திலேயே புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளும் கூடுதல் வசதியும் பள்ளிகளுக்கு செய்து தரப்பட்டுள்ளது. இதன் மூலம் சுயநிதி பள்ளிகளுக்கு புத்தக கொள்முதல் எளிமைபடுத்தப்பட்டுள்ளது.

## 10.11 இணையதள சில்லரை விற்பனை

பாட புத்தகங்களை தனி நபர்கள் மற்றும் மாணவர்கள் எவ்வித சிரமமுமின்றி பெறும் பொருட்டு இணைய விற்பனை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்சேவையை மேலும் மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் அமைந்துள்ள அரசு கேபிள் டி.வியின் பொதுச்சேவை மையங்கள், புத்தகத் தேவையை பதிவு செய்து கட்டணம் செலுத்தும் மையங்களாக மார்ச் 2016 முதல் நியமிக்கப்பட்டுள்ளன. மேலும் பதிவு செய்பவர்கள் அனைவருக்கும் தங்கள் இருப்பிடத்திலேயே புத்தகங்களை பெறும் வசதி கூரியர் சேவை நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

தனிநபர், மாணவர்கள் பதிவிட்ட புத்தகங்களின் வரவினை கண்காணிக்கும் (Tracking) வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

## 10.12 இணையதள விற்பனையின் பயன்கள்

இணையதள விற்பனை சேவை செயல்படுவதன் மூலம் மாணவர்கள் மற்றும் பள்ளிகள் பெறும் பயன்கள் பின்வருமாறு:

- பள்ளிகளின் விற்பனை பிரதிகளின் தேவை துல்லியமாக கணக்கிடப்பட்டு அச்சிடப்படுகிறது. தேவைக்கு அதிகமான புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் தேவையற்ற இருப்பு வைத்தல் தவிர்க்கப்படுகிறது.

- இணையதளம் மூலம் இருப்பினை பதிவேற்றுவதால் வெளிப்படையான மற்றும் பொறுப்பான செயல்பாடு ஏதுவாகிறது.

- இணையதளம் மூலம் பாடநூல் இருப்பிற்கேற்ப தனிநபர்களும் பள்ளிகளும் தங்கள் தேவையை பதியலாம். தேவைகளை இருப்பிற்கேற்ப பதிவு செய்து பணம் செலுத்துவதால் தொகை பெறப்பட்டவுடன் அவர்களின் கேட்பு இருப்பிலிருந்து கழிக்கப்பட்டு முன்பதிவு செய்யப்படுகிறது. இதன் மூலம் மிகையான தொகை பெறுவது தவிர்க்கப்படுகிறது.

- இணையதளம் மூலம் பாடநூல்கள் தேவை பதிவு செய்யப்படுவதால் அதற்கான தொகை கால விரயமின்றி இக்கழக கணக்கில் உடன் வரவு வைக்கப்படுகிறது. இதனால் வரைவோலை செலுத்தி பாடநூல் பெறும் முறை நிறுத்தம் செய்யப்பட்டது.

- முகவர்களிடம் அதிக விலை கொடுத்து வாங்கிய நிலையும் வழக்கொழிந்த புத்தகங்களை வாங்கிடும் நிலையும் தவிர்க்கப்படுகிறது.

## 10.13 தணிக்கை

இக்கழகம் மேற்கொள்ளும் அனைத்து பணிகள் மற்றும் பரிமாற்றங்களிலும் வெளிப்படைத்தன்மை இருப்பதை கண்காணிக்க உள்தணிக்கைக்குழு உருவாக்கப்பட்டு உடனுக்குடனான கண்காணிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு மாநில கணக்காயர் அலுவலக அலுவலர் ஒருவர் அயற் பணியில் தலைமை வகிக்கிறார். மேற்படி உள்தணிக்கையானது தற்பொழுதுள்ள அரசு துறை தணிக்கை குழு மேற்கொள்ளும் தலைமையக கணக்குகள் மற்றும் வட்டார அலுவலக கிடங்குகளுக்கான தணிக்கைகளுடன் கூடுதல் கண்காணிப்பை நல்குகிறது. இத்தணிக்கைகள் தவிர சிறப்பு ஆய்வுகளும் அவ்வப்பொழுது அரசு துறை மூலம்

மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மேற்பார்வையை சிறப்பாக்கி நடைமுறையில் உள்ள குறைகளை கண்டுபிடிக்கவும், களையவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின் மூலம் கீழ்காணும் இடங்களில் நடைமுறை விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- புத்தகங்களை வழக்கொழிந்தவையாக ஒதுக்கிடுதல்.
- வழக்கொழிந்த புத்தகங்களை அப்புறப்படுத்துதல்.
- தரையிருப்பு சரிபார்த்தல்.
- அச்சாணை மற்றும் பட்டியல் தொகை வழங்கும் பணி முறைபடுத்துதல்.
- தரக் குறைபாடு மற்றும் தாமதித்து பாட நூல்கள் வழங்கும் அச்சகதாரர்களுக்கு அபராதம் விதித்தல் .
- கோப்புகளை வழிமுறையாக சமர்பிப்பதற்கு நெறிகள் வகுத்தல்.
- பொது நிர்வாகம், கொள்முதல், கணக்கு, விற்பனை மற்றும் அச்சு ஆகிய பிரிவுகளுக்கு அதிகார பகிர்வு வரன்முறை செய்தல்.

### 10.14 கிடங்கு மற்றும் பராமரிப்பு

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் 22 வட்டார அலுவலக கிடங்குகளை கொண்டு புத்தகங்கள் இருப்பு வைத்தல், விநியோகித்தல், பள்ளிகளுக்கு மொத்த விற்பனை செய்தல் மற்றும் பிற துறைகளுக்கு வழங்குதல் போன்ற பணிகளை செய்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.09.2015 அன்று தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் சொந்த கிடங்குகளான சென்னை, காஞ்சிபுரம், வேலூர், பர்கூர், தஞ்சாவூர் மற்றும் சிவகாசி கிடங்குகளை ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் நவீனமாக்கிட அறிவித்தார்கள். பள்ளிகளுக்கு வழங்கப்படும் புத்தகங்கள் மற்றும் விலையில்லா பொருட்களை நேரத்துடனும் நல்ல தரத்துடனும் வழங்கிடும் மைய நிறுவனமான தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தனது பணிகளை செவ்வனே மேற்கொள்ள ஏதுவாக வெளியிடப்பட்ட இவ்வறிவிப்பின் அடிப்படையில் இக்கழகம் உடனடியாக இதனை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதனடிப்படையில் தானியியங்கி முறையில் இருப்புவைத்து வெளிவழங்கும் நவீன முறை கிடங்குகளை அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைமை அலுவலகம், டி.பி.ஐ வளாகத்திலுள்ள சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதனை ரூ.2.56 கோடி மதிப்பிட்டில் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 10.15 பயிற்சிகள்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக பணியாளர்களுக்கு மேலாண்மை திறத்தை உயர்த்தி பணிகளின் தரத்தை மேம்படுத்திட சிறப்பு திறன் வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அனுபமிக்க வல்லுநர்களைக் கொண்டும் இக்கழக பணியாளர்களுக்கு சிறந்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. நிகழ்கால மற்றும் நீண்ட காலத் தேவைக்கேற்ப பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. புதிதாக பணியில் சேர்பவர்களுக்கு அறிமுகப்பயிற்சி (Induction), வேலையிலிருந்தபடியே பயிற்சி (on job training) மற்றும் வகுப்பறை (theory) பயிற்சிகள் 30 நாட்களுக்கு அளிக்கப்பட்டன. பணியில் உள்ளோருக்கு கணினிப் பயிற்சி, தலைமைப் பண்புகள், நுகர்வோர் சேவை போன்ற பணியிடைப் பயிற்சிகள் படிப்படியாக அளிக்கப்படுகின்றது. மேலும் யாவரும் விடுபடா வண்ணம் பயிற்சிகள் அளிப்பதற்கேற்ப பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறது.

## 10.16 பணியாளர்களுக்கான நலத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்திய புதிய காப்பீட்டு திட்டம் 2012, இக்கழக பணியாளர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கிடங்கில் பணிபுரியும் பணியாளர்களின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மிகை நேரப் பணி ஊதியம் வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. தலைமை அலுவலகம் மற்றும் வட்டார அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அனைத்து வேலை நாட்களிலும் தேநீர்ப்படி வழங்கப்படுகிறது.

இக்கழக முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் அலுவலக ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கான உணவுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு குளிர்சாதனப்பெட்டி நுண்ணலை அடுப்பு (Microwave oven) மற்றும் மின் காந்த அடுப்பு ஆகியவைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 10.17 உயர் கல்வி நூல்களை மின்மியமாக்குதல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தினால் ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட சுமார் 1000 உயர் கல்வி மற்றும் கல்லூரி நூல்களுக்கு எப்பொழுதும் தேவை இருப்பதால் புதிய தொழில்நுட்ப முறையில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும்

பிறருக்கு பயன்படும் வகையில் மின்மியமாக்கவும், மறுஅச்சு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.18 முடிவுரை**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பொது மற்றும் தொழில்நுட்ப கல்வியின் தரத்தினை உயர்திடுவதற்காக மிக உன்னத நோக்கங்களைக் கொண்டுள்ளது. அந்நோக்கங்களுக்கு ஏற்றவாறு செயல்பாடுகள் உருவாக்கப்பட்டு இக்கழகம் உன்னத வளர்ச்சியை அடைந்து வருகிறது.

**பா.பென்ஜமின்**
பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத் துறை அமைச்சர்